# ஆண்டறிக்கை
# 2018





இலங்கை துறைமுக அதிகாரசபை

## தொலைநோக்கு

### "பட்டுப்பாதையின் கடல்சார் சேவை வழங்கலின் தலைசிறந்தவர் எனும் நிலையினை பெறுதல்"

இலங்கை துறைமுகங்களின் எதிர்காலம் தொடர்பில் கவனம் செலுத்தி சவால்கள் மற்றும் சந்தர்ப்பங்களை விரிவுபடுத்தும் சர்வதேச வர்த்தக உருவாக்கத்தை எதிர்பார்த்து இலங்கை துறைமுக அதிகாரசபை அதன் உன்னத கொள்கலன் கேந்திரத்தளம் எனும் கருத்திலிருந்து விசேட உலக சேவை வழங்கலின் கேந்திரத் தளமாக நகர்த்திச் செல்கின்றது. இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதாரம் அபிவிருத்தி செய்யப்படுதலிலான தேசிய மற்றும் சர்வதேச சிறந்த அனைத்து துறைகளினது செயற்பாடுகளை மேலும் முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு சகல தகவலும் உடனுக்குடன் பெற்றுக்கொள்ளும் சிக்கலான வழங்கல் சேவையை வலுப்படுத்துவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை எதிர்பார்க்கின்றது.

## பணிக்கூற்று

### "நிலைபேறான சூழலினுள் சர்வதேச மட்டத்திலான கடல்சார் சேவைகளை வழங்குதல்"

இலங்கையில் உலக வினியோக கேந்திரத் துறைமுகம் உருவாக்கும் நோக்கில் விசேட கடலக பிரவேசம் கொண்ட ஆழமான கடல் துறைமுகமொன்றை ஏற்படுத்தி வழங்கல் சேவைகளை ஒன்றிணைக்கும் பல்பரிமாண வழங்கல் தொகுதியொன்றினையும் ஏற்படுத்துவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை எதிர்பார்க்கின்றது.

துறைமுகம் மற்றும் வலயம் எனும் இரு பகுதியினதும் சர்வதேச மட்டத்திலான அபிவிருத்தியினை எதிர்பார்த்து எதிர்கால வளர்ச்சிக்கான சாத்தியத் தன்மை மற்றும் பரப்பெல்லை கொண்ட நகர மட்டுப்படுத்தல்களிலிருந்து விடுபட்ட புதியதொரு துறைமுகமொன்றாக துறைமுகம், கப்பலோட்டம், கைத்தொழில் மற்றும் சேவைகள் வழங்கல் போன்ற துறைகளில் முன்னணியில் உள்ளவர்களுக்கு சேவைகள் வழங்குவதற்கான தளம் அமைப்பதற்கும் முகாமைத்துவம் செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தேசத்துக்கு உன்னத சொத்தாக துறைமுகங்கள் மற்றும் முனையங்களின் வசதிகளில் நிறைவானதும் பொளாதார ரீதியில் செயற்திறனாகவும் சுற்றாடல் நேய துறைமுகமொன்றாக கையாளப்படுவதன் மூலம் எம்மால் சேவைகள் வழங்கப்படும் ஆயிரக்கணக்கான பங்காளர்களுக்கு உன்னத நிலையிலான சேவைகள் வழங்கப்படுதலின் ஊடாக துறைமுக அதிகாரசபை தான் பிரகடனம் செய்திருக்கும் நிலைபேறான தன்மை தொடர்ந்தும் பேணிச் செல்லப்படும்.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| நோக்கங்கள் | 3 |
| நிறுவனத்தினூடான நோக்கங்கள் | 4 |
| இலங்கை துறைமுக அதிகாரசபை என்பது | 5 |
| இயக்க முக்கிய விடயங்கள் | 6 |
| நிதிசார் முக்கிய விடயங்கள் | 9 |
| எங்கள் அமைச்சர் | 10 |
| தலைவரின் மீளாய்வு | 11 |
| பணிப்பாளர் சபை | 13 |
| முகாமைக்குழுவும் கணக்காய்வுக் குழுவும் | 18 |
| வர்த்தக அபிவிருத்தி | 20 |
| முக்கிய நிகழ்வுகள் | 22 |
| இயக்க மீளாய்வு | 28 |
| நிதி மீளாய்வு | 78 |
| மனித மூலதனம் | 82 |
| ஒன்றிணைந்த சமூக பொறுப்புக்கள் | 83 |
| ஒன்றிணைந்த நிர்வாக அறிக்கை | 84 |
| துறைமுக புள்ளி விபரங்கள் | 89 |
| நிதி அறிக்கைகள் | 94 |
| பணிப்பாளர் சபையின் அறிக்கை | 95 |
| நிதி அறிக்கை வெளியிடல் தொடர்பான பணிப்பாளர் சபையின் அறிக்கை | 97 |
| கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 98 |
| சட்டபூர்வ இணக்கப்பாட்டு அறிக்கை | 99 |
| இயக்க முக்கிய விடயங்கள் | 100 |
| நிதி நிலைமை தொடர்பான அறிக்கை | 101 |
| விபரமான வருமான அறிக்கை | 102 |
| திணிவு மாற்றம் மீதான அறிக்கை | 103 |
| காசுப் பாய்ச்சல் அறிக்கை | 104 |
| பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள் | 105 |
| நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் | 120 |
| வரைபட மீளாய்வு | 142 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 144 |
| அமைப்பு விதி தொடர்பான தகவல்கள் | 151 |

## 2020 ல் அடையும் நோக்கு

- தலைசிறந்த கடல்சார் சேவைகள் வழங்கும் மத்திய நிலையம்.
- 200 மில்லியன் தொன் கப்பற்சரக்குகளைக் கையாளும் இலக்கு.
- அமெரிக்க டொலர் 01 பில்லியன் வருமானம் பெறுதல்.
- துறைமுகங்களினுள் அமெரிக்க டொலர் 10 பில்லியனுக்கான முதலீடுகளுக்கு வழி வகுத்தல்.
- தேசிய வருமானத்தின் பிரதான பங்காளியாகுதல்.
- ‘‘பசுமை மிகு’’ சூழல்நேய துறைமுக இயக்குனராகுதல்.

## அடைந்து கொள்ளலிலான மூலோபாயங்கள்

- கொழும்பு துறைமுகத்தின் உட்கட்டமைப்பு மற்றும் சிறப்பு அமைப்புகளினது வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- கடல்சார் சிறப்பு மத்திய நிலயமெனும் கொழும்பு துறைமுகத்தின் நிலைப்பாட்டினை உறுதிப்படுத்துதல்.
- துறைமுகம் சார்ந்த துறைகளுக்கான விசேட சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.
- மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தை சர்வதேச நிலையிலான சேவைகள் வழங்கும் நிலையமாகவும் கைத்தொழில் மற்றும் கொள்கலன் கையாளல் துறைமுகமாகவும் அபிவிருத்தி செய்தல்.
- கப்பற்சரக்குகள் போன்று துறைமுக பாவனையாளர்களினது ஆபத்தற்ற தன்மையையும் பாதுகாப்பையும் மேம்படுத்துதல்.
- முக்கிய மூலோபாய அமைவிடமாக உலகில் இலங்கை துறைமுக அதிகாரசபையினை பிரபல்யம் பெறும்வாறு அடையாளப்படுத்துதல்.
- திட்டமிடப்பட்ட மீளமைப்பு மற்றும் நிர்வாக நடைமுறைகளை மீள் திட்டமிடுதல்.
- உயர் நிலையிலான நிதி முகாமைத் தொகுதிகளை நடைமுறைப்படுத்துல்.
- சூழலிற்கு விடுவிக்கப்படும் காபன் பரிமாணத்தை குறைத்தல்.
- கொண்டுள்ள வளம் மற்றும் போட்டி மிகுந்த பயன்தகு நிலைமைகளுக்கேற்ப ஏனைய பிராந்திய துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல்.
- வர்த்தக நடவடிக்கைகளை பன்முகப்படுத்துதல்.
- எண்ணெய் மற்றும் வாயு வசதிகளுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.
- கப்பலோட்டத்தை நோக்கமாகக் கொண்ட செயற்திறன்மிகு சேவைகளை வழங்குதல .
- கூட்டிணைந்த சமூகப் பொறுப்புக்கள் (CSR) தொடர்பில் கூடிய கவனம் செலுத்துதல்.

- இலங்கையின் வர்த்தக துறைமுகங்களில் மிகவும் புதிய இயக்க வசதிகளை அபிவிருத்தி செய்தலும், இடைவிடாது முன்னெடுத்துச் செல்லலும்.

- பயனான வகையிலும் வினைத்திறனுடனும் துறைமுக சேவைகளை முன்னெடுத்துச் செல்லுதல்.

- ஆகுசெலவு பயனளிக்கக் கூடிய வினைத்திறனுடனும் மற்றும் நம்பிக்கை மிகு சேவைகள் வழங்குவதன் மூலமும் போட்டித்தன்மையூடாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளர்களுக்கு மிகவும் சிறந்த நற்பயன்களை பெற்றுக்கொடுத்தல்.

- கப்பல்கள், கப்பல் சரக்குகள், துறைமுக பாவனையாளர்கள் மற்றும் துறைமுக உட்கட்டமைப்பு வசதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.

- துறைமுக வர்த்தக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அனைவருக்கும் உற்சாகமூட்டும் சிறந்த சேவை சூழலை உருவாக்குதல்.

- அரசாங்கத்தின் நடைமுறை மற்றும் மூலதன செலவினங்களுக்கு பொது திறைசேரியின் ஒன்றிணைந்த நிதியத்துக்கு பங்களிப்பு வழங்குதல்.

- கப்பல்களை தாமதப்படுத்தாது நடவடிக்கைகளை உடனுக்குடன் மேற்கொண்டு உயர் வினைத்திறன் பேணல்.

- அதிகளவிலான தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் பொருட்டு கடல்சார் நடவடிக்கைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துணைச் சேவைகளை மேம்படுத்துதல்.

- துறைமுக பாவனையாளர்களுக்கு உயர் சேவைகளை வழங்கி இலங்கையின் வர்த்தக துறைமுகங்களில் இலாபகரமான இயக்கச் செயற்பாட்டு முறையை முன்னெடுத்துச் செல்லுதல். இதனூடாக நம்பிக்கைமிகு வினைத்திறனுடன் கூடிய இயக்குனர் என்ற நற்பெயரை வளர்த்துக் கொள்தல்.

- துறைமுக வர்த்தகம் மற்றும் சுங்கப் பிணை நடவடிக்கைகள், கப்பல்களுக்கு தேவையான சாதனங்கள் உட்பட மீள் ஏற்றுமதி சந்தர்ப்பங்களை மேலும் அதிகரித்துக் கொள்ளும் பொருட்டு கொள்கலன் கையாளுதலுடன் தொடர்புபடும் போட்டிமிகு உயர் சேவைகளை வழங்குதல்.

- கடலை அண்மித்த பிரதேசங்களில் அபிவிருத்திக்கு உந்து சக்தியாக தேவைப்படும் துறைமுக வசதிகளை ஏற்படுத்துவதன் ஊடாக இலங்கையின் பிராந்திய அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

- மனித வலு தேவைப்பாடுகள் மற்றும் ஆளணி மதிப்பிடுதல் உட்பட இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிர்வாக மற்றும் அமைப்பு ரீதியான விடயங்களை விரிவுபடுத்துதல்,வெளிநாட்டு வேலை வாய்ப்புகளில் தேசிய பொருளாதாரத்திற்கு பெற்றுக் கொடுக்கப்படும் பங்களிப்பை கவனத்திற்கொண்டு இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணியாளர்கள் சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாட்டு வேலைகளுக்கு செல்வதற்கு மேலும் ஊக்குவித்தல், இலங்கை துறைமுக அதிகாரசபையின் மஹபொல பயிற்சி நிலையம் ஊடாகவும் ஆட்சேர்ப்பு செயற்பாட்டின் தேவைப்பாட்டுத் தரங்களுக்கு ஏற்பவாறும் ஊழியர்களை பயிற்றுவித்தல்.

- நீரில் மேற்கொள்ளப்படும் சேவைகள் எண்ணெய் பாய்ச்சும் நடவடிக்கைகள், நன்னீர் வழங்குதல் மற்றும் கொள்கலன் புதுப்பித்தல் போன்ற துறைமுக செயற்பாடுகளுடன் தொடர்புடைய பணிகளை வழங்குவதன் ஊடாக பன்முகப்படுத்துதல்.

- வினைத்திறன் மிகு வரி மீதான திருத்தங்கள், மிகவும் சிறந்த முதலீட்டு முகாமைத்துவம் மற்றும் மிகவும் உறுதியான ஆகு செலவு கட்டுப்பாடு.

# இலங்கை துறைமுக அதிகாரசபை என்பது

இலங்கை துறைமுக அதிகாரசபை 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் ஏற்பாடுகளின் மீது 1979.08.01 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டு பின்னர் 1984 இன் இல. 07 மற்றும் 35 ஆம் சட்டங்களின் ஊடாக திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் 6 (1) பிரிவில் அதன் நோக்கங்கள் மற்றம் செயற்பாடுகள் பின்வருமாறு வரைவிலக்கணம் அளிக்கப்பட்டுள்ளன.

- ♦ கப்பல் சுமை நடவடிக்கைகள், கப்பல்களில் ஏற்றல் இறக்கல் மற்றும் மீள் ஏற்றல், பயணிகள் தரையிறக்கல், குதங்களிடுதல், வாப்பு நடவடிக்கைகள், கலங்களுக்குத் தேவையான நீர், எரிபொருள் மற்றும் மின்சாரம் வழங்கல், பெற்றோலிய எண்ணெய் உற்பத்திகள், உராய்வு நீக்கிகள், கலங்களுக்கும் கலங்களில் இருந்து வத்தைகளுக்கும் களஞ்சியங்களுக்கும் இடையில் போக்குவரத்து செய்தல், கலங்களின் வழிகாட்டிப் பணிகள், நங்கூரமிடப்படுதல், நீர் மூழ்குதல் மற்றும் நீருக்கடியிலான கப்பல் பழுதுபார்த்தல் தொடர்பில் திறன்மிகு தொடர்ச்சியான சேவை மற்றும் அதற்கான துணை சேவைகளை வழங்கல்.

- ♦ திறன்மிகு நிலையான ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவை வழங்கல்.

- ♦ துறைமுக எல்லைகளினுள்ளும் துறைமுகங்களினது உட்புகு வழிகளிலும் கப்பலோட்டம் ஒழுங்குபடுத்தல் மற்றும் நிர்வாகம்.

- ♦ துறைமுக நிறுவுதல்களைப் பராமரித்தல் மற்றும் அவைகளின் பாவனைகளை மேம்படுத்தல் குறிப்பிட்ட துறைமுகங்களினுள் மேம்படுத்தலும் விருத்தி செய்தலும்

- ♦ ஏதாவது விசேட துறைமுகமொன்றினுள் சுங்க திணைக்களப் பணிகள் தவிர்ந்த ஏனைய சகல நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தலும் முறைப்படுத்தலும்.

- ♦ விசேட துறைமுகங்களினுள்ளும் அதன் வெளியேயும் கப்பலோட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கலங்களுக்கு வழிகாட்டலும் பாதுகாப்புக்குத் தேவையான வெளிச்சங்கள் மற்றும் வேறு தேவைப்பாடுகளை இலங்கை கடற்கரையில் மற்றும் அதற்கப்பால் நிறுவுதலும் பராமரித்தலும்.

- ♦ துறைமுக அதிகாரசபை சட்டத்தின் மீது ஒப்படைக்கப்படும் வேறோதாவது அலுவல்களை நிறைவேற்றுதல்.

- ♦ சொத்துக்கள் மீள் முதலீடு செய்யப்படுவதற்கும் புதிய முதலீடுகள் ஏற்படுத்தப்படுவதற்கும் போதுமான பொது சேமிப்பு நிதியமொன்றை ஏற்படுத்தி,பராமரித்து செல்லப்படுவதற்காகவும்,அதிகாரசபையின் வருமானத்திற்கு கொடுக்கப்படுவதற்கான தகுந்த கட்டணம் செலுத்தப்படுவதற்கும்,போதுமான வருமானத்துக்கு குறையாத வருமானம் அதிகாரசபைக்கு கிடைக்கும் வண்ணம் அதிகாரசபையின் பணிகளை நடாத்திச் செல்லல். மேற்கூறப்பட்டுள்ளவாறு அதிகாரசபையினால் வழங்கப்படும் சேவை தொடர்பிலான கட்டணங்களை சம்பந்தப்பட்ட சட்டத்திற்கேற்றவாறு அறவிட்டுக்கொள்ளுதல்.

- ♦ சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக குறிப்பிட்ட துறைமுகங்கள் மற்றும் ஒவ்வொரு துறைமுகமும் நிதி அடிப்படையில் தன்நிறைவான திட்டமொன்றை முகாமைத்துவம் செய்வதற்கு முயற்சித்தல்

இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் 5 (1) பிரிவின் பிரகாரம் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்படும் 09 பணிப்பாளர்கள் துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபையில் உள்ளடங்கப்பட்டிருப்பர்.

தலைவர், பிரதான நிறைவேற்றுனராக இருப்பதுடன் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முழு நிர்வாகத்திற்கும் பொறுப்பாக இருப்பார்.

### கப்பல்களின் வருகை (சகல துறைமுகங்களினதும்)

| விபரம் | 2017 | 2018 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொழும்பு துறைமுகம் | 4,329 | 4,331 | 0.0 |
| காலி துறைமுகம் | 87 | 84 | -3.4 |
| திருகோணமலை துறைமுகம் | 233 | 189 | -18.9 |
| காங்கேசன்துறை, மயிலிட்டி, பருத்தித்துறை, காரைநகர் | 63 | 59 | -6.3 |
| ஹம்பாந்தோட்டை துறைமுகம் | 230 | 270 | 17.4 |
| **மொத்தம்** | **4,942** | **4,933** | **-0.2** |

### கொள்கலன் கையாளல் (இருபது சம அலகுகள்) கொழும்பு துறைமுகம்

| விபரம் | 2017 | 2018 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| **இலங்கை துறைமுக அதிகாரசபை (SLPA)** | | | |
| இறக்குமதி | 208,948 | 174,671 | -16.4 |
| ஏற்றுமதி | 179,334 | 154,142 | -14.0 |
| மாற்றியேற்றல் | 1,609,114 | 1,965,987 | 22.2 |
| மீள் அடுக்குதல் | 13,306 | 9,734 | -26.8 |
| **மொத்தம்** | **2,010,702** | **2,304,534** | **14.6** |
| **சவுத் ஏசியா கேட்வே டர்மினல்ஸ் (SAGT)** | | | |
| இறக்குமதி | 179,321 | 190,018 | 6.0 |
| ஏற்றுமதி | 196,623 | 189.921 | -3.4 |
| மாற்றியேற்றல் | 1,406,265 | 1,644,336 | 16.9 |
| மீள் அடுக்குதல் | 27,626 | 42,483 | 53.8 |
| **மொத்தம்** | **1,809,835** | **2,066,758** | **14.2** |
| **கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையம் (CICT)** | | | |
| இறக்குமதி | 300,903 | 303,713 | 0.9 |
| ஏற்றுமதி | 318,422 | 330,784 | 3.9 |
| மாற்றியேற்றல் | 1,726,203 | 1,992,035 | 15.4 |
| மீள் அடுக்குதல் | 43,003 | 49,662 | 15.5 |
| **மொத்தம்** | **2,388,531** | **2,676,194** | **12.0** |
| **கொழும்பு துறைமுகம்** | | | |
| இறக்குமதி | 689,172 | 668,402 | -3.0 |
| ஏற்றுமதி | 694,379 | 674,847 | -2.8 |
| மாற்றியேற்றல் | 4,741,582 | 5,602,358 | 18.2 |
| மீள் அடுக்குதல் | 83,935 | 101,879 | 21.4 |
| **மொத்தம்** | **6,209,068** | **7,047,486** | **13.5** |

**கப்பற்சரக்குகள் கையாளல் (சகல துறைமுகங்களினதும்)**

| விபரம் | 2017 | 2018 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| மொத்த கப்பற்சரக்கு கையாளல் பரிமாணம் (மெ.தொ.மி) | 93.9 | 105.0 | 11.8 |

**கொழும்பு துறைமுகத்தில் இறக்கப்பட்ட கப்பற்சரக்குகள்- இலங்கை துறைமுக அதிகாரசபை (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2017 | 2018 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொள்கலனிலிடப்பட்டவை | 14,167 | 15,533 | 9.6 |
| பிரித்த மொத்தம் | 814 | 679 | -16.6 |
| உலர் மொத்தம் | 2,501 | 2,826 | 13.0 |
| திரவ மொத்தம் | 5,759 | 5,929 | 3.0 |
| **மொத்தம்** | **23,241** | **24,967** | **7.4** |

**கொழும்பு துறைமுகத்தில் ஏற்றப்பட்ட கப்பற்சரக்குகள்- இலங்கை துறைமுக அதிகாரசபை (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2017 | 2018 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொள்கலனிலிடப்பட்டவை | 11,625 | 13,547 | 16.5 |
| பிரித்த மொத்தம் | 29 | 13 | -55.2 |
| உலர் மொத்தம் | 0 | 0 | - |
| திரவ மொத்தம் | 106 | 690 | 550.9 |
| **மொத்தம்** | **11,760** | **14,250** | **21.2** |

**கொழும்பு துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த கப்பற்சரக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபை (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2017 | 2018 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொள்கலனிலிடப்பட்டவை | 25,792 | 29,080 | 12.7 |
| பிரித்த மொத்தம் | 843 | 692 | -17.9 |
| உலர் மொத்தம் | 2,501 | 2,825 | 13.0 |
| திரவ மொத்தம் | 5,865 | 6,619 | 12.9 |
| **மொத்தம்** | **35,001** | **39,216** | **12.0** |

**திருகோணமலை துறைமுகத்தில் கையாளப்பட்ட கப்பற்சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2017 | 2018 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | 3,119 | 2,951 | -5.4 |
| ஏற்றப்பட்டது | 778 | 609 | -21.7 |
| **மொத்தம்** | **3,897** | **3,560** | **-8.6** |

**காலி துறைமுகத்தில் கையாளப்பட்ட கப்பற்சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2017 | 2018 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | 712 | 729 | 2.4 |
| ஏற்றப்பட்டது | 0 | 0 | - |
| **மொத்தம்** | **712** | **729** | **2.4** |

**காங்கேசன்துறை, மயிலிட்டி, பருத்தித்துறை மற்றும் காரைநகர் துறைமுகங்களில் கையாளப்பட்ட கப்பற்சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2017 | 2018 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | 23 | 18 | -21.7 |
| ஏற்றப்பட்டது | 0 | 0 | - |
| **மொத்தம்** | **23** | **18** | **-21.7** |

**ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் கையாளப்பட்ட கப்பற்சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2017 | 2018 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | 156 | 344 | 120.5 |
| ஏற்றப்பட்டது | 57 | 150 | 163.2 |
| **மொத்தம்** | **213** | **494** | **131.9** |

**மொத்த ஊழியர் தொகை**

| விபரம் | 2017 | 2018 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொழும்பு துறைமுகம் | 8,625 | 8,948 | 3.7 |
| திருகோணமலை துறைமுகம் | 401 | 400 | -0.2 |
| காலி துறைமுகம் | 351 | 362 | 3.1 |
| **மொத்தம்** | **9,377** | **9,710** | **3.6** |

**சகல துறைமுகங்களும்**

(ரூபா மில்லியன்)

| விபரம் | ★ 2017 | 2018 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| **வருமானம் மற்றும் செலவினம்** | | | |
| மொத்த வருமானம் | 43,963.0 | 52,282.9 | 18.9 |
| செலவினம் | (27,967.7) | (30,013.4) | (7.3) |
| **வெளிநாட்டு கடன் மீதான வட்டி மற்றும் அந்நிய செலாவணி கிடைக்கப்பெறுதல்/(நட்டத்துக்கு) முன்னரான (இலாப/(நட்டம்)** | **15,995.3** | **22,269.5** | **39.2** |
| வெளிநாட்டுக் கடன் மீதான வட்டி | (1,808.1) | (2,256.6) | (24.8) |
| அந்நிய செலாவணி கிடைக்கப்பெறுதல்/(நட்டம்) | (2,193.7) | (11,316.8) | (415.9) |
| **வரிக்கு முன்னராக மற்றும் அந்நிய செலாவணி கிடைக்கப்பெறுதல்/(நட்டம்) பின்னரான இலாப /(நட்டம்)** | **11,993.5** | **8,696.1** | **(27.5)** |
| **வரிகள்** | | | |
| வருமான வரி | - | - | - |
| கருதும் பங்கிலாப வரி | - | - | - |
| மாறுபடும் வரி | 102.0 | (4,448.9) | **(4,461.3)** |
| சமூக பொறுப்பு சார்ந்த கட்டணம் | - | - | - |
| **வரி ஏற்பாடுகளின் பின்னரான தூய இலாப/(நட்டம்)** | **12,095.5** | **4,247.2** | **(64.9)** |
| **ஐந்தொகை** | | | |
| நடைமுறை சாராத சொத்துக்கள் | 388,451.8 | 383,737.3 | (1.2) |
| நடைமுறை சொத்துக்கள் | 144,978.5 | 57,639.5 | (60.2) |
| நடைமுறை பொறுப்புக்கள் | 119,212.1 | 17,519.2 | 85.3 |
| திணிவு மற்றும் ஏனைய மூலதனம் | 7,591.4 | 7,591.4 | 0.0 |
| ஒதுக்கீடும் ஏற்பாடுகளும் | 302,654.8 | 302,629.6 | (0.0) |
| நடைமுறை சாராத பொறுப்புக்கள் | 103,972.1 | 113,636.6 | (9.3) |
| **விகிதம்** | | | |
| வருமானத்திற்கான இயக்க இலாபம் | 34.0 | 40.0 | |
| வருடாந்த வருமான வளர்ச்சி | 4.3 | 18.9 | |
| மூலதனமிடலின் மீதான இலாபம் | 1.9 | 2.6 | |

★ ஒப்பிட்டுப் பார்க்கும் தேவைப்பாடுகளுக்காக 2017 ஆண்டின் உண்மை பெறுமதியிலிருந்து ஹம்பாந்தோட்டை துறைமுகம் விடுவிக்கப்பட்டுள்ளது.

# சாகல ரத்நாயக்க
# கௌரவ துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்

**விளக்கம்**

பல குறிப்பிடத்தக்க வெற்றிகள் அடையப் பெற்று இலங்கை துறைமுக அதிகாரசபையின் 2018 ஆண்டறிக்கையினை முன்வைக்க கிடைத்தமையினையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். மீள் ஏற்றுமதியின் கேந்திர நிலையமாக தனது நிலையை வலுப்படுத்திக் கொண்டு 2018 ட்ருவரி கடல்சார் ஆய்வின் உலக கொள்கன் தொடர்புபடும் சாத்தியத் தரப்படுத்தும் சுட்டியின் 11 ஆம் இடம் வரை முன்னோக்கி வருவதற்கு கொழும்பு துறைமுகத்திற்கு முடிந்துள்ளது வருடாந்த கொள்கலன் கையாளல் பரிமாணம் தொடர்பில் அவதானம் செலுத்தப்படும் போது கொழும்பு துறைமுகம் முதல் தடவையாக 07 மில்லியன் இருபது சம அலகுகளாக (TEUs) கையாண்டு உலக தரப்படுத்தும் 22 ஆம் இடம் முன்னோக்கி வந்துள்ளதுடன் சர்வதேச அல்பா லைனர் அளவீட்டு அறிக்கையின் வளர்ச்சி விகிதத்திற்கேற்ப கொழும்பு துறைமுகம் முதலாவது இடத்துக்கு தரப்படுத்தப்பட்டுள்ளது. வலய சேவை வழங்கும் கேந்திரத்தளமொன்றாக துறைமுக பணிகள் நிறைவேற்றப்படுகின்றதென்பதை உறுதிப்படுத்முத் இந்த வெற்றிகள் விசேடமாக குறிப்பிடத்தக்க திருப்புமுனையாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**நிதிசார்ந்த செயலாற்றுகை**

2017 ஆண்டில் வதிவாகியிருந்த ரூபா 15 பில்லியன் இலாபத்துடன் ஒப்பிடும் போது 2018 ஆண்டில் ரூபா 22 பில்லியன் இயக்க இலாபம் பதிவாகி இருந்தது. 2017 ஆண்டின் தேறிய வருமானமான ரூபா 44 பில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 08 பில்லியன் அதிகரிப்புடன் ரூபா 52 பில்லியன் தேறிய வருமானம் 2018 ஆண்டில் ஈட்ட முடிந்துள்ளது. 2018 ஆண்டில் வரி, வெளிநாட்டுக் கடன் மீதான வட்டியும், வெளிநாட்டு செலாவணி இலாப/நட்டத்துக்கு முன்னரான மொத்த செலவீனம் ரூபா 30 பில்லியன் ஆவதோடு 2017 ஆம் ஆண்டில் அது 28 பில்லியனாக இருந்தது. இது 7% ஆல் அதிகரித்துள்ளது. 2018 ஆண்டின் வெளிநாட்டு கடன் மீது வட்டி 24.8% னால் உயர்வடைந்துள்ளது. 2017 ஆண்டின் வெளிநாட்டு செலாவணி ஏற்றத்தாழ்வின் (நட்டம்) ரூபா 02 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2018 ஆண்டில் இது ரூபா 11 பில்லியனாக இருந்தது. வரிகளுக்கான ஏற்பாடுகள் அளிக்கப்பட்டதன் பின்னர் இருக்கும் ரூபா 4.2 பில்லியன் ஆண்டிறுதியிலான தூய இலாபத்துக்கு இதன் மூலம் குறிப்பிடத்தக்க தாக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**துறைமுக இயக்கம் மற்றும் சேவைகள் வழங்கல்**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் முனையங்கள் வசுத் ஏசியா கேட்வே டேர்மினல்ஸ் கம்பனி (SAGT) மற்றும் களம்பு இன்டநெஷனல் கன்டேனர் கம்பனி (CICT) போன்றவற்றினால் நற்போக்கிலான வளர்ச்சி பதிவு செய்யப்பட்டிருந்தன. உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பொதுவான பணிகளின் வசதிகள் அபிவிருத்தி மூலம் அடையப்பெற்ற அனுகூலங்களை எதிர்காலத்தில் பேணிச் செல்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. விடுமுறை ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபை 05 முனைய உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டு 04 பிரதான கப்பல் சேவைகள் மற்றும் ஒரு ஊட்டக் சேவையும் கவரக் கூடியதாக இருந்தன. இதனோடு உயர் செயற்திறனுடன் இயக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் மூலம் இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய முனைய யைாளல் பரிமாணம் அதிகரிக்கப்படுவதற்கு பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது வர்த்தக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்கு இலத்திரனியல் ஊடகத்தில் ஆவணமிடப்படுவதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளதோடு CFS – 1 ஆம் களஞ்சியத்தில் முன்னோடி செய்திட்டமாக களஞ்சிய முகாமைத்துவத் தொகுதி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**தேசிய துறைமுக பிரதான திட்டம்**

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரனையின் கீழ் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் தேசிய துறைமுக பிரதான திட்டத் தயாரிப்பு நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் திருகோணமலை, காலி மற்றும் கொழும்பு போன்ற துறைமுகங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேலுள்ள கட்டங்கள் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது எதிர்காலத்தில் நீண்டகால வேலைத்திட்டத்தினுள் காலி துறைமுகம் உல்லாசத்துறையுடன் தொடர்புடைய மேலதிக வசதிகள் மற்றும் பொதுப் பணியின் அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்தப்படும் திருகோணமலையினை அபிவிருத்தி செய்வதற்கு வலுச்சக்தி கைத்தொழில் உல்லாசத் துறை உள்ளடங்கலான பல துறைமுக உள்ளன. இப்பணிகள் நடைமுறைப்படுத்தும்

ஒழுங்குகள் எதிர்காலத்தில் வெளிக்காட்டப்படும் நங்கூரத்தளங்கள் / பரிமாண விரிவாக்கம் அதிவேக பாதை வலையமைப்புடன் மிகவும் சிறந்த வகையிலும் துரிதமாக தொடர்புபடுத்துவதற்கும் கப்பற்சரக்கு பரிமாணம் உயர்த்தப்படக்கூடிய உலர் துறைமுக சேவைகள் வழங்கும் மத்திய நிலையமொன்றை எற்படுத்துதல் மற்றும் பிரதான கப்பல் கம்பனிகளினதும் சேவைகள் வழங்கும் இயக்குனர்களுக்கு கொழும்பு துறைமுகம் கவரப்படுதலை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்படும்.

**கிழக்கு கொள்கலன் முனையம் - கொழும்பு துறைமுகம் விரிசாக்கம் செய்திட்டம்**

அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய ஆற்றலை கவனத்தில் கொள்ளும் போது இயக்க பரிமானத்தை அதிகரிப்பது திருப்பு முனையான காரணியொன்றாகும். 2.4 மில்லியன் இருபது சம அலகுகளின் வருடாந்த பரிமாணத்துடன் 1350 மீட்டர் நீளம் கொண்டதும் 18 மீட்டர் ஆழமான நீர்த்தடாகமுடைய தெற்கு துறைமுகத்தின் ஆழத்தில் கூடிய இரண்டாவது கொள்கலன் முனையமாக கிழக்கு கொள்கலன் முனையம் அபிவிருத்தி செய்யப்படும். குறித்த முனையம் இயக்கப்படும் அடுத்த படிமுறையாக இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஏற்கனவே துறைமேடையின் 440 மீட்டர் அண்மித்த முனையப் பிரதேசம் மற்றும் கிழக்க கொள்கலன் முனையத்துடன் தொடர்புபட்ட வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

**துறைமுகத்தின் உட்பிரவேச வசதிகளை அதிகரித்தல்**

தெற்கு துறைமுக அபிவிருத்தியோடு துறைமுக வளாகத்தினுள் ஏற்படுமென எதிர்பார்க்கப்படும் வாகன நெரிசல்களுக்கு முகம் கொடுப்பதற்கு இங்குருக் கடைச் சந்தியிலிருந்து வாயில் இல: 01 வரையிலான 04 நிரல்களின் உள்ளக துறைமுக பாதையை 06 நிரல்களாக விரிவுபடுத்தப்பட வேண்டியுள்ளது. குறித்த பாதையின் விரிவாக்க செய்திட்டத்தோடு கொழும்பு கோட்டை பிரதேசத்தினுள் 02 பாலங்களையும் துறைமுக உட்பிரவேச பாதையின் புளுமென்டல் பாதையூடாக இருக்கும் பாலத்தையும் விரிவாக்குதல் வேண்டும் உள்ளக துறைமுக பாதையின் விரிவாக்கப் பணிகள் அடங்கலாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2018 ஆண்டில் ரூபா 81.79 மில்லியன் தொகைகயில் வேலைகள் (நிதிசார் முன்னேற்றம்) நிறைவு செய்யப்பட்டன. 2018 ஆண்டின் டிசெம்பர் மாதம் வரையிலான செய்திட்டத்தின் ஒட்டுமொத்த நிதிசார்ந்த முன்னேற்றம் ரூபா 847.89 மில்லியன் ஆகும்.

**முடிவுரை**

காலத்திற்கேற்ற செயற்பாடுகள் வர்ததக அபிவிருத்தி மற்றும் உயர் செயற்திறன் ஊடாக இலங்கை துறைமுக அதிகாரசபை வர்த்தக வளர்ச்சியை அடைந்து கொண்டுள்ளது. சிறந்த நிதிசார்ந்த செயலாற்றுகை மற்றும் இலாபத்தன்மை இந்த படிமுறைகளின் பெறுபேறாக அமைந்துள்ளன. மொதுமக்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொழில்நுட்பம் போன்ற விடயங்ள் மீது மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான முதலீடுகளோடு இந்த வளர்ச்சியினை மேற்கொண்டும் பேணிச் செல்வதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை தயாராக உள்ளதென நான் நம்புகின்றேன்.

கௌரவ துறைமுகங்கள் கப்பற்றுறை மற்றும் தெற்க அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பிரதியமைச்சர் அமைச்சின் செயலாளர் அமைச்சு அதிகாரிகள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர்கள் சவுத் ஏசியா கேட்வே டேர்மினல்ஸ் கம்பனியினதும் களம்பு இன்டர்நெஷனல் கன்டேனர் டேர்மினஸ் கம்பனியினதும் ஊழியர்கள் எமது வாடிக்கையாளர்கள் மற்றும் அனைத்து பங்காளர்களுக்கும் வழங்கப்பட்ட ஊக்குவிப்பு மற்றும் ஒத்துழைப்பு தொடர்பில் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது பங்காளர்கள் மற்றும் ஒட்டுமொத்த துறைமுக சமூகத்தோடு ஒத்துழைப்புடன் செயற்படுவதன் மூலம் தேசிய பொருளாதாரத்துக்கு மேற்கொண்டும் பங்களிப்புச் செய்வதாகும் எமக்கு ஆற்றல் கிடைக்கப்பெறும்.



**காவன் ரத்னாயக்க**
**தலைவர்**

## கலாநிதி பராக்கிரம திசாநாயக்க
## தலைவர்

கலாநிதி பராக்கிரம திசாநாயக்க, ஓர் கடற்பொருளியலாளராவார். 2017 ஜுன் 1, ஆம் திகதியிலிருந்து இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் 2002 ஜனவரி தொடக்கம் 2004 வரை இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவராகக் கடமையாற்றியிருந்தார். இவரது காலத்தில் இங்கிலாந்தின் டன் அண்ட் பிறைட்சீப் கம்பனியினால் (Dun & Bradstreet (UK) தரப்படுத்தப்பட்டுள்ளவாறு இலங்கையிலுள்ள அரச மற்றும் தனியார் கம்பனிகளில் மிகவும் இலாபகரமான நிறுவனமாக இலங்கை துறைமுக அதிகாரசபையினை பதிவுசெய்துள்ளது.

1911 இல் தாபிக்கப்பட்ட, 1913 இல் அரச பட்டயம் வழங்கப்பட்ட ஐக்கிய இராச்சிய பட்டயக் கப்பல்தரகர்கள் நிறுவகத்தின் முதலாவது பிரித்தானியரற்ற சர்வதேசத் தலைவராக இவர் அண்மையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பதவியினைப் பொறுப்பேற்க முன்னர், இவர் ஏட்கன் ஸ்பென்ஸ் கம்பனி, துறைமுகங்கள் மற்றும் சேவை வழங்கல்களின் தலைவர்/நிறைவேற்று அதிகாரியாகவும் ஏட்கன் ஸ்பென்ஸ் பி.எல்.சி (Aitken Spence PLC) கம்பனியின் பிரதான சபைப் பணிப்பாளராகவும் கடமையாற்றினார். துறைமுக முகாமைத்துவ நடவடிக்கைகளை வெளிநாட்டில் முதலில் தொடங்கிய இலங்கைக் கம்பனியும் வெளிநாட்டுத் துறைமுகங்களில் அரச தனியார் பங்குடமையினைக் கொண்டுள்ள முதலாவது இலங்கைக் கம்பனியுமான ஏட்கன் ஸ்பென்ஸ் போட்ஸ் இன்நெஷனல் கம்பனியில் (Aitken Spence Ports International) தலைமைத்துவத்தினை வகித்தார்.

துறை சம்பந்தமாக இவர் வகித்த தலைமைப்பதவிகளுள், இலங்கை சேவை வழங்கல் மற்றும் போக்குவரத்து பட்டயக் கல்வி நிறுவனத்தின் தலைவர், இலங்கை பட்டயக் கப்பல்தரகர்கள் நிறுவகத்தின் தலைவர், இலங்கை போக்குவரத்துச் சபை ஆலோசனைக்குழுவின் தலைவர், இலங்கை வர்த்தக சபையின் துறைமுக, விமானப் போக்குவரத்து, சேவை வழங்கல் பிரிவின் தலைவர் போன்றவையும் அடங்கும்.

அவற்றோடு இவர் பொது மற்றும் வணிக முகாமைத்துவத்தில் பல கல்வித் தகைமைகளையும் பெற்றுள்ளார். இவர் கப்பற்றுறையின் அதியுயர் தகைமையான இங்கிலாந்தின் கப்பற்றுறை தொடர்பான (FICS) UK, இங்கிலாந்தின் சேவை வழங்கல்/ போக்குவரத்து (FCILT( UK) வியாபாரத்தில் (FCIM(UK) போன்ற தகைமைகளைப் பெற்று நோர்வே கப்பற்றுறை கல்வியகத்திலும் (ஒஸ்லோ) பட்டம் பெற்றுள்ளார்.

இவர் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தின் முன்னாள் வணிக மாணவரும் ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவருமாவார். ஹார்வட் வர்த்தகக் கல்லூரி, பொஸ்டன் (ஐக்கிய அமெரிக்கா), நொராட் மற்றும் ஜயிக்கா போன்றவற்றின் அங்கத்தவரும் ஆவார்.

## திரு. பி ஜி தசநாயக்க
## உப தலைவர்

திரு. தசநாயக்க இலங்கை துறைமுக அதிகாரசபையின் உப தலைவராகக் கடமையாற்றும் அதேவேளை சீ.ஐ.சீ.ரீ, எஸ்.ஏ.ஜீ.ரீ மற்றும் ஜய கொள்கலன் முனைய தனியார் கம்பனியின் பணிப்பாளர் சபை உறுப்பினராவும் பதவி வகிக்கிறார்.

இவர் தோட்டத்துறையில் அனுபவமுள்ளவர் என்பதுடன் இலங்கை அரசாங்க பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை போன்ற பல அரசாங்க தோட்ட நிறுவகங்களில் உயர் பதவிகளை வகித்தார். மேலும், தோட்டத்துறை அமைச்சின் தலைவராகக் கடமையாற்றியதன் மூலம் இவரது அறிவினையும் அனுபவத்தினையும் பரப்புவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அதன் பின்னர், கால்நடை மற்றும் விவசாயக் கம்பனியின் தலைவராக அமர்த்தப்பட்டார். இதன் போது அக்கம்பனியின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அவராற்றிய சேவை அனைவராலும் பாராட்டப்பட்டது.

பின்னர், திரு. தசநாயக்க தேசியக் கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் மற்றும் அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தினதும் தலைவராகச் செயற்பட்டார், இவை இவரது அறிவினை மாறுபட்ட அனுபவமாக மாற்றியது.

பின்னர், இவர் சுயாதீனத் தொலைக்காட்சிச் சேவையில் (ITN) தொழிற்படு பணிப்பாளராக இணைந்தார், தேசிய பயிலுனர் தொழில்பயிற்சி அதிகாரசபையின் (NAITA) உபதலைவராகவும் பணியாற்றினார். அவரின் சிறப்புமிக்க தொழில்களிலிருந்து பெற்ற அறிவும் அனுபவமும் நிறுவனத்தின் மேம்பாட்டிற்குப் பெரிதும் பங்களிப்புச் செய்தது. அவரது பதவிக்காலத்தில், வேறுபட்ட துறைகளிலிலும் நிறுவனம் பங்குகொள்ளக் கூடியதாக இருந்ததுடன் இதனால் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் இது முக்கிய பங்களிப்பாக அமைந்தது.

## கெப்டன் அத்துல ஹேவாவிதாரண
## முகாமைத்துவப் பணிப்பாளர்

கெப்டன் அத்துல ஹேவாவிதாரண அவர்கள் இலங்கை துறைமுக அதிகார சபையின் காலித்துறைமுகத்தில் உதவி ஹாபர்மாஸ்டர் ஆகவும் / கப்பலோட்ட மாலுமியாகவும் 1997 ஆம் ஆண்டு சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். 2004 ஆம் ஆண்டு அப்பதவிக்கு மேலதிகமாக இவர் காலித்துறைமுகத்தின் பதில் கடமையாற்றும் வதிவிட முகாமையாளராகவும் நியமிக்கப்பட்டார்.

2007 ஆம் ஆண்டில் இவர் சிரேஷ்ட பிரதி ஹாபர் மாஸ்டராக நியமிக்கப்பட்டு அதன் பின் 2017 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதத்தில் இலங்கை துறைமுக அதிகார சபையின் ஹாபர்மாஸ்டர் பதவிக்கு உயர்த்தப்பட்டார். 2018 ஆண்டு திசெம்பர் மாதத்தில் இவர் இலங்கை துறைமுக அதிகார சபையின் முகாமைத்துவப் பணிப்பாளர் பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

இவர் க.பொ.த உயரதரப் பரீட்சையின் பின்னர் கல்ப் ஈஸ்ட் சிப் மெனேஜ்மன்ட் (Gulf East Ship Management) நிறுவனத்திற்குரிய “ Eastern Academy” எனப்படும் பயிற்சிக் கப்பலில் சேர்ந்ததோடு அங்கு இவர் 18 மாத பயிற்சியையும் பெற்றுக் கொண்டார். 1984 ஆம் ஆண்டில் இவர் இரண்டாவது மாலூமி உத்தியோகத்தர் பதவியை (Second Mates) இந்தியாவின் பொம்ளளபாய் நகரில் பெற்றுக்கொண்டதோடு 1991 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் முதலாவது வகுப்பின் கப்பல் அதிபதி பதவியையும் (Master Class- I) பெற்றுக்கொண்டார்.

இவர் 1983 ஆம் ஆண்டில் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தில் இணைந்த பின்னர் ஜேர்மன் கம்பனியொன்றான “நோர்ட்” (Nord) நிறுவனத்திலும், மேர்கன்டைல் சிப்பிங் (Mercantile Shipping) கம்பனியின் கப்பல்களில் சேவையில் ஈடுபட்டார். 1997 ஆம் ஆண்டில் இலங்கை துறைமுக அதிகார சபையில் சேர்வதற்கு முன்னர் சொற்ப காலம் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் மூவரிங் மாஸ்டராக (Mooring Master) ஆக சேவையில் ஈடுபட்டிருந்தார்.

கெப்டன் அத்துல ஹேவாவிதாரண அவர்கள் ஐக்கிய இராஜ்ஜிய கடலக கலாசாலையின் (National Institute of UK) தொழில்சார் இணைந்த அங்கத்துவம் (Associate Fellow Nautical Institute) பெற்ற ஒருவராவார்.

## திரு. நிலான் விக்ரமசிங்ஹ
## நிறைவேற்றுப் பணிப்பாளர்

விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத்துறையில் 30 வருடங்களுக்கு மேற்பட்ட கால அனுபவம் பெற்றுள்ள திரு நிலான் விக்ரமசிங்ஹ அவர்கள் துறையிலுள்ள உயர் கிராக்கிகளுக்குத் தீர்வாக 1999 ஆண்டில் “சிறியளவிலிருந்து பெரிய அளவிற்கு” எனும் தொனிப் பொருளின் கீழ் லயன் ரோயல் டுவரிசம் அல்லது “அரச சிங்க சுற்றுலாத்துறை வர்த்தகத்தை” கம்பனியாக உருவாக்கினார். பிரான்ஸ் மற்றும் ஜப்பான் சுற்றுலா வர்த்தகம் தொடர்பிலான நிபுணத்துவமிக்க இக்கம்பனி இன்று விக்ரமசிங்ஹ அவர்களை தலைவராகக் கொண்ட

விருது பெற்ற வர்த்தகமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஓய்வு விடுமுறையின் மரபுரீதியான கருத்துக்கு புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தி ‘‘நியாய விலையின் நட்சத்திர வகுப்பு சுற்றுலாத்துறையின்’’ லயன் விடுமுறை விடுதிகள் மற்றும் நலனோம்பு நிலையங்களையும் இவர் ஆரம்பித்துள்ளார்.

இலங்கையின் சுற்றுலாத்துறையின் பொருளாதார விருத்திக்கு திரு. விக்ரமசிங்ஹ அவர்களின் பங்களிப்பை பாராட்டும் வகையில் இவர் தேசிய ரீதியாகவும் சர்வதேச மட்டத்திலும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதோடு திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சின் விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா வர்த்தகத்துக்குப் பொறுப்பான பணிப்பாளராக அதன் பணிப்பாளர் சபையில் நியமிக்கப்படடுள்ளார். குறித்த உத்தியோகபூர்வ காலப்பகுதியில் 2016 ஆண்டில் வெனிசியூலா பொலிபேரியன் குடியரசின் மாகரீட்டா தீவில் நடைபெற்ற அணிசேரா மாநாட்டிலும் விசேட பிரதிநிதியாக இவர் கலந்து கொண்டார்.

திரு. விக்ரமசிங்ஹ அவர்கள் தற்போது இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபை உறுப்பினரொருவராகவும் ஜய கொள்கலன் முனைய பணிப்பாளர் சபை உறுப்பினரொருவராகவும் ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினரொருவராகவும் ஹம்பாந்தோட்டை இன்டநெஷனல் போர்ட் சேர்விசஸ் கம்பனி (HIPS) மற்றும் ஹம்பாந்தோட்டை இன்டநெஷனல் போர்ட் குரூப் கம்பனி (HIPG) போன்றவற்றின் பணிப்பாளர் சபைகளின் உறுப்பினரொருவராகவும் நியமிக்கப்பட்டுள்ளதோடு மாகம்புர போர்ட் மனேஜ்மன்ட் கன்ஸல்டன்சி சேர்விசஸ் நிறுவனத்தின் (MPMC) முகாமைப்பணிப்பாளராகவும் கடமையாற்றுகின்றார்.

## திருமதி பி எஸ் எம் சார்ள்ஸ்
## பணிப்பாளர்

இலங்கை நிர்வாகச் சேவை அதிகாரியான திருமதி சார்ள்ஸ் தற்போது இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றுகிறார்.

1983 இல் கலைமாணிப்பட்டத்தில் முதல் வகுப்பில் சித்தியடைந்த இவர் தொடர்ந்து முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா, விஞ்ஞான முதுமாணிப்பட்டம் மற்றும் வணிக முகாமைத்துவத்தில் முதுமாணிப்பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

1992 இல் இலங்கை நிர்வாக சேவையில் இணைந்த இவர் வவுனியா மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் அரசாங்க அதிபராகவும் கடமைபுரிந்தார்.

வவுனியாவில் இவர் அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் நாட்டின் வறுமை ஒழிப்புத்திட்டத்தில் இந்த மாவட்டம் உயர் மட்டத்தினை அடைந்திருந்தது. (2.3%)

திருமதி சார்ள்ஸ் உலகளாவிய அனர்த்த நிலைமை தலைமைத்துவ வலையமைப்பின் அங்கத்தவராகவும் இருந்தார்.

இவர் மாவட்ட அதிகாரியாகவும் பேரிடர் முகாமையாளராகவும் கடமை புரிந்தார், வடக்கில் இறுதிக்கட்ட உள்நாட்டு போரின் போதும் அதன் பின்னரும் உள்நாட்டில் இடம்பெயர்வுகளுக்குள்ளான மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யவென மனிதாபிமான ஒருங்கிணைப்பாளராகவும் கடமையாற்றினார்.

இவர் போரின் பின்னர் ஆதரவற்ற மற்றும் பிரிந்த சிறுவர்களை யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் குடும்பங்களைக் கண்டுபிடித்து ஒருங்கிணைக்கும் செயற்பாட்டினை உருவாக்கினார், இதன் காரணமாகப் பல குடும்பங்கள் வெற்றிகரமாக ஒருங்கிணைக்கப்பட்டன.

இவர் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறைகளை முன்னேற்றுவதற்கு செயற்பட்டுள்ளதோடு கண்காணித்தும் வழிகாட்டியும் வந்தார். மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண்கள் முயற்சியாண்மையினை முன்னேற்றும் குறிக்கோளுடன் பெண்கள் சுய-அபிவிருத்தி மையங்களையும் உருவாக்கினார்.

இவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் நகர அழகுபடுத்தும் செயற்திட்டங்கள், கோட்டையை அழகுபடுத்தும் செயற்திட்டங்கள், வேறுபட்ட ஏனைய அபிவிருத்தி செயற்திட்டங்களையும் ஏற்படுத்தியதோடு மட்டக்களப்பு மாவட்டத்தில் இயற்கை அனர்த்தத்தினால் ஏற்படும் விளைவுகளைத் தடுப்பதற்கான செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி செயற்பாடுகளிலும் திருமதி சார்ள்ஸ் ஈடுபட்டிருந்தார்.

முகாமைத்துவத்திலுள்ள பெண்கள் நிறுவகத்தின் இலங்கை முழுவதற்குமான வருடாந்த விருது வழங்கும் விழாவில் 2012/2013 ஆம் ஆண்டிற்கான ஊக்கமான பெண் என்ற விருதினையும் இவர் பெற்றுக் கொண்டார்.

### திரு. எச் ஜீ சுமணசிங்க
### பணிப்பாளர்

திரு சுமணசிங்க கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ நிதியியல் பீடத்தில் வணிகமாணிப் பட்டத்தினையும் அவுஸ்திரேலிய பிலின்டர்ஸ் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ முதுமாணிப்பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

இவர் 2015 இல் பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் பகுதியின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டிருந்தார். 2015 இலிருந்து திரு சுமணசிங்க இலங்கை துறைமுக அதிகாரசபையின் திறைசேரிப் பிரதிநிதியாகவும் நியமிக்கப்பட்டிருந்தார். பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் பகுதியின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட முன்னர் இவர் நிதி அமைச்சின் பணிப்பாளர் நாயகமாக (மனிதவள அபிவிருத்தி) கடமையாற்றினார்.

இதற்கு முன்னர், திரு சுமணசிங்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதிப் பிரிவின் ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டாளர் நாயகமாக பணிபுரிந்தார். அதற்கு முன்னர், இவர் பொதுத் திறைசேரியில் வேறுபட்ட பதவிகளையும் வகித்தார். பொது நிதியியல் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாகவும் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களப் பணிப்பாளராகவும் வெளியக வளங்கள் திணைக்களம் மற்றும் நிதியியல் அமைச்சின் உதவிப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

### திரு. நிஷாந்த விக்ரமசிங்ஹ
### பணிப்பாளர்

தற்போது மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் மேலதிகச் செயலாளராக (அபிவிருத்தி) பதவி வகிக்கும் திரு. நிஷாந்த விக்ரமசிங்ஹ அவர்கள் துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

### திரு. சுரங்க பீ ஹிதல்லஆராச்சி
### பணிப்பாளர்

திரு. சுரங்க பீ. ஹிதெல்லாராச்சி அவர்கள் இலங்கை நிருவாக மற்றும் அபிவிருத்திப் பிரிவுகளில் நிறைவேற்றுப் பணிகளில் ஈடுபட்டிருந்ததில் பெற்ற அனுபவத்துடன் 2002 ஆண்டு முதல் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்ஹ அவர்களின் கீழ் சேவையாற்றியுள்ளதோடு இவர் தொழில் மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்புகள், இடர் முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள, பெருந்தோட்டக் கைத்தொழில், நிதி, தொழிற்திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி, துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு உட்பட அரச நிறுவனங்களின் இணைப்புச் செயலாளர், ஊடகச் செயலாளர, அந்தரங்கச் செயலாளர, தலைவர் மற்றும் பணிப்பாளர் போன்ற பதவிகளில் சேவையாற்றியுள்ளார்.

திரு. சுரங்க அவர்கள் 2011 முதல் 2012 வரை பெருந்தோட்டத் கைத்தொழில் அமைச்சின் ''துருசவிய'' நிதியத்தின் தலைவராக சேவையாற்றியுள்ளதோடு அக்காலப் பகுதியில் சிறிய

இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு இலங்கையில் முதன் முறையாக கடன் வழங்கும் முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு இவரால் முடிந்ததோடு இறப்பரின் விலை மற்றும் உற்பத்தியின் தரத்தை அதிகரிப்பதற்கு பகுதிகளாக இறப்பர் பதனிடும் நிலையங்கள் நிறுவப்பட்டன. இவர் தேசிய பெருந்தோட்ட முகாமைத்தவ நிறுவனத்தின தலைவராகவும் (NIPM) வர்த்தக முகாமைத்துவம் தொடர்பான தேசிய கல்லூரியின் (NSBM) பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

**திரு. ராஜ் ஒபேசேகர**
**பணிப்பாளர்**

திரு. ஒபேசேகர அவர்கள் ஸ்டசன (Stassen) கம்பனிக் குழுமத்தின் ஆரம்ப பணிப்பாளராக கடமையாற்றியுள்ளார்.

வர்த்தக, வாணிப மற்றும் மூலோபாய முகாமைத்துவம் மற்றும் நிறுவன அபிவிருத்தியின் இயக்க தலைவராக 35 வருடத்துக்கு மேற்பட்ட கால அனுபவம் இவருக்கு உண்டு. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் முன்னாள் தலைவராகவும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் பிரதித் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

**திருமதி எஸ் ஏ எஸ் கே ஜயசேகர**
**பணிப்பாளர் சபையின் செயலாளர்**

## முகாமைத்துவக் குழு

கலாநிதி பராக்கிரம திசாநாயக்க
**தலைவர்**

திரு. பீ.ஜீ. தசநாயக்க
**உப தலைவர்**

கெப்டன் அத்துல ஹேவாவிதாரன
**முகாமைத்துவப் பணிப்பாளர்**

திரு. நிலான் விக்ரமசிங்ஹ
**நிறைவேற்றுப் பணிப்பாளர்**

திரு. டி.யூ.டப்ளியூ.டி. சொய்ஸா
**மேலதிக முகாமைத்துவப் பணிப்பாளர்**

திருமதி. சிராணி வன்னியாரச்சி
**பணிப்பாளர் (நிதி)**

திரு. பீ.ஏ.ஏ. ஹேவாகீகன
**பணிப்பாளர் (தென் துறைமுக அபிவிருத்தி)**

திரு. டி.ஏ.ஜே.ஐ. பேரேரா
**பணிப்பாளர் (துறைமுக இயக்கம்)**

கலாநிதி திரு. டி.பீ.எஸ். லொக்குகே
**பணிப்பாளர் (தகவல் முறைமை)**

மேஜர் ஜெனரல் காமினி ஹெட்டியாரச்சி
**பணிப்பாளர் (பாதுகாப்பு)**

திருமதி டி.ஜி.ஐ.சி. லோக்குஹேவகே
**பணிப்பாளர் (தொழில்நுட்பம்)**

திரு.பீ.ரணதுங்க
**பணிப்பாளர் (மனித வள அபிவிருத்தி)**

திரு. எல். பிரேமசிறி டி.சில்வா
**பிரதான உள்ளக கணக்காய்வாளர்**

டாக்டர் திருமதி.டி. ராஜகாந்தன்
**பிரதான மருத்துவ அலுவலர்**

திரு. ஏ.ஏ.எஸ்.ஆர். அபேசிறிவர்தன
**பிரதான பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)**

திரு. ஆர்.எம்.ஏ.எஸ். ரத்னாயக்க
**பிரதான முகாமையாளர் (நிர்வாகம்)**

திரு. உபுல் ஜயதிஸ்ஸ
**பிரதான முகாமையாளர் (சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி )**

திரு. எச்.ஏ.என்.எஸ். பர்னாந்து
**பிரதான பொறியியலாளர் (மின்சாரம் - II)**

திரு. டப்ளியூ.எம்.டி.பி. விஜேகோன்
**பிரதான பொறியியலாளர் (மின்சாரம் - I)**

திரு. டப்ளியூ.என். ஜயதிஸ்ஸ
**பிரதான முகாமையாளர் (மரபு ரீதியான கப்பற் சரக்குகள்)**

திரு. ஜீ.வி.ரி. நாணாயக்கார
**பிரதான பொறியியலாளர் (கடலகம்)**

திருமதி அபர்னா திலகரத்ன
**பிரதான சட்ட அலுவலர்**

எயார் கொமடோர். டி.சீ. ப்ரேமரத்ன
**பிரதான பாதுகாப்பு முகாமையாளர்**

செல்வி காந்தி குணவர்த்தன
**பிரதான நிதி முகாமையாளர்**

திரு. ஐ.கே. ஞானதிலக்க
**பிரதான முகாமையாளர் (கொள்கலன் இயக்கம்)**

திரு. எச்.எம்.பிரபாத் ஜயந்த
**பிரதான முகாமையாளர் (சேவை வழங்கல்)**

திரு. நிர்மால் டி. பொன்சேக்கா
**பிரதான மனிதவள முகாமையாளர்**

திரு. ஜே.ஏ. சந்திரரத்ன
**பிரதான பொறியியலாளர் (இயந்திர வேலைகள்)**

திரு.டி.எல்.ஆர் வீரசிங்ஹ
**பிரதான முகாமையாளர் (நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள)**

திரு. எம்.எஸ் ஏ. பத்திரகே
**பிரதான பொறியியலாளர் (இயந்திர பொறி)**

திரு. டப்.எம் நளின் அபோன்சு
**பிரதான முகாமையாளர் (தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள்)**

திரு. பி.ஏ.ஆர்.டி. பதிராஜ
**பிரதான முகாமையாளர (வழங்கல் மற்றும் பொருள் முகாமைத்துவம்)**

திரு. டி.ஜி.ஆர்.எம். பத்திவில
**பிரதான பொறியியலாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு)**

திரு.எஸ.எஸ். தேவப்பிரிய
**பிரதான பொறியியலாளர் (சிவில்)**

திரு.கே.ஜீ.எஸ் தயானந்த
**பிரதான பயிற்சி முகாமையாளர்**

# முகாமைக்குழுவும் கணக்காய்வுக் குழுவும்

திரு.தர்சக பேரேரா
**பிரதான முகாமையாளர் (தகவல் முறைமை)**

கெப்டன் கே.எம்.என்.பீ.சில்வா
**ஹாபர் மாஸ்டர்**

திரு. எச்.ஜீ. சுமனசிங்ஹ
**தலைவர்**

திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ்
**அங்கத்தவர்**

திரு. கே.பீ.ஜீ. ஹேமரத்ன
**அங்கத்தவர்**

திருமதி சிராணி வன்னியாரச்சி
**அங்கத்தவர்**

திரு. டி.யூ.டப்ளியூ.டி. சொய்ஸா
**அங்கத்தவர்**

திரு டி. ஏ.ஜே.ஐ. பெரேரா
**அங்கத்தவர்**

திரு. எல். பிரேமசிறி டி சில்வா
**செயலாளர்**

## கணக்காய்வுக் குழு

**2018 ஆம் ஆண்டில் சிரேஷ்ட முகாமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்**

**ஓய்வு பெறுதல்**

**திரு. எச். டி. எஸ் பிரேமச்சந்திர** முகாமைப்பணிப்பாளர் இலங்கை துறைமுக அதிகாரசபையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்

**திரு. ஏ. டி. ரீ. குணசேகர** மேலதிக முகாமைப்பணிப்பாளர் இலங்கை துறைமுக அதிகாரசபையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்

**திரு. எச்.எம்.யூ.பி. கலகொட** பிரதான முகாமையாளர் (தகவல் முறைமை) இலங்கை துறைமுக அதிகாரசபையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

**நியமனங்கள்**

**கெப்டன் அத்துல் ஹேவாவிதாரன** முகாமைத்துவ பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்

**திரு. டி.யூ.டப்ளியூ.த. சொய்சா** மேலதிக முகாமைத்துவப் பணிப்பளராக நியமிக்கப்பட்டுள்ளார்

**திரு. பீ. ரணதுங்க பணிப்பாளராக** (மனிதவள அபிவிருத்தி) நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு. டி.எல்.ஆர். வீரசிங்ஹ** பிரதான முகாமையாளராக (நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் நியமிக்கப்பட்டுள்ளார்

**திரு. எஸ்.எஸ். தேவப்பிரிய** பிரதான பொறியியலாளராக (சிவில்) நியமிக்கப்பட்டுள்ளார்

**திரு. டி.ஜி.ஆர்.எம். பத்திவில** பிரதான பொறியியலாளராக (ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு) நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு. கே. ஜி.எஸ். தயானந்த** பிரதான பயிற்சி முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்

**திரு. தர்சக பேரேரா** பிரதான முகாமையாளராக (தகவல் முறைமை) நியமிக்கப்பட்டுள்ளார்

**கெப்டன் கே.எம்.என்.பீ. சில்வா** ஹாபார் மாஸ்டராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**சர்வதேச வெற்றிகள் - கொழும்பு துறைமுகம்**

♦ **2018 ஆம் ஆண்டில் மிகவும் துரிதமான வளர்ச்சியுடன் கூடி துறைமுகம்**

2018 ஆண்டினுள் உலகில் அதிசிறந்த 30 கொள்கலன் கையாளும் துறைமுகங்களுக்கிடையில் மிகவும் வேகமாக அபிவிருத்தியடையும் துறைமுகமாக கொழும்பு துறைமுகம் தரப்படுத்தப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் சாதனைகளையும் தாண்டி கொழும்பு துறைமுகத்தினுடாக இருபதின் சம அலகுகள் 07 மில்லியன்கள் கையாளப்பட்டுள்ளதோடு இது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 13.5% அதிகரிப்பாகும். 2017 அம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ஜய கொள்கலன் முனையத்தினால் அதிகூடிய அபிவிருத்தி விகிதமான 14.6% ஆக பதிவுச்செய்யப்பட்டுள்ளதோடு, சவுத் ஏசிய கேட்வே டேர்மினல் (SAGT) கம்பனியினால் 14.2% உம், கொழும்பு இன்டநெஷனல் கன்டெயினர் டர்மினல் (CICT) கம்பனியினால் 12.0% உம் அதிகரிப்பொன்று காட்டப்பட்டுள்ளது. ஜய கொள்கலன் முனையத்தின் மீள் ஏற்றுமதி செய்தலின் அதிகரிப்பு 22.2% ஆல் சிறப்பு எண்ணிக்கையொன்று காட்டப்பட்டுள்ளது. அல்பலைனர் தரப்படுத்தலுக்கு ஏற்ப வரலாற்றில் முதல் தடவையாக கொழும்பு துறைமுகம் முதலாம் இடத்துக்கு தரப்படுத்தப்பட்டுள்ளது.

♦ **துறைமுக தொடர்பு படுத்தும் சுட்டி (Port Connectivity Index)**

ட்ருவரி கடலக ஆராட்சி (Drewry Maritime Reseach) மூலம் 2018 ஆம் ஆண்டில் மூன்றாவது காலாண்டிற்காக தயாரிக்கப்ட்ட உலகளாவிய கொள்கலன் துறைமுக சுட்டியில் கொழும்பு துறைமுகம் 11 ஆவது இடத்துக்கு தரப்படுத்தப்பட்டுள்ளது. 2017 ஆம் அண்டுடன் ஒப்பிடும்போது இது இரண்டு தரங்களுக்கான முன்னேற்றமாகும்.

♦ **உலகளாவிய துறைமுக ஒன்றியம் (Global Port Forum) மூலம் வழங்கப்பட்ட வருடத்தின் துறைமுக அதிகாரசபைக்குரிய விருது வழங்கப்பட்டது**

அர்பணிப்புடன் நிறைவேற்றிய சேவைகளுக்காக கொழும்பு துறைமுகத்தை உலகளாவிய கடலக வரைபடத்தில் உயர்த்துவதற்காக உலகளாவிய துறைமுக ஒன்றியத்தினால் இலங்கை "துறைமுக அதிகாரசபைக்கு வருடத்தின் துறைமுக அதிகாரசபை" க்கு உரிய விருது வழங்கப்பட்டது.

**ஏனைய துறைமுகங்களின் செயலாற்றுகை**

♦ 17.4% விகித அபிவிருத்தியொன்றை பெற்று ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு 270 கப்பல்கள் வந்துள்ளதோடு 2017 அம் ஆண்டுடன் ஒப்பிடும் போது கப்பற்சரக்குகள் கையாழும் பிரமாணம் 131.6% அதிகரித்துள்ளது.

♦ ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் மோட்டார் வாகனங்கள் கையாழுதல் 115.9% அதிகரிப்பை காட்டுகின்றது.

♦ 2017 ஆண்டுடன் ஒப்பிடும் போது காலி துறைமுகத்துக்கு வருகைதந்த கப்பல்களின் எண்ணிக்கை -3.4% இனால் குறைந்தாலும் அங்கு கையாளப்பட்ட கப்பற் சரக்குகளின் பிரமாணம் 2.5% இனால் அதிகரித்துள்ளது.

♦ திருகோணமலை துறைமுகத்துக்கு வருகைதந்த கப்பல்களின் எண்ணிக்கை -8.9% இனால் குறைவடைந்துள்ளதோடு, கையாளப்பட்ட கப்பற்சரக்குகளின் எண்ணிக்கை -8.7% இனால் குறைவடைந்துள்ளது.

**வர்த்தக அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப செயற்பாடுகள்**

- **புரிந்துணர்வு உடன்படிக்கை – 2018 மார்ச்**

2018 மார்ச் மாதத்தில் கொழும்பு துறைமுகத்தில் மூன்று கையாளல் முனையங்களான ஜய கொள்கலன முனையம் (JCT), சவுத் ஏசிய கோட்வே டேர்மினல் (SAGT) மற்றும் கொழும்பு சர்வதேச கன்டெயினர் டேர்மினல் (CICT) ஆகிய நிறுவனங்களினால் கொழும்பு துறைமுக அபிவிருத்தி தொடர்பாக ஒன்றிணைந்து இயக்கங்களை மேற்கொள்வதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று செய்துகொள்ளப்பட்டது. மேலும், புதிய உடன்படிக்கை மூலம் அனைத்து கொள்கலன் கப்பல்கள் கையாழும் நடவடிக்கைகளுக்கு துறைமுகத்தில் தங்கியிருக்கும் கப்பல்களை நிறுத்தி வைக்கப்படும் காலம் (Total Turnaround Time) குறைப்பத்ற்கு எதிர்பாக்கப்படுகின்றது.

- **கொழும்பு துறைமுகத்தில் விருது வழங்கும் இரவு – 2018 ஜூலை**

2018 ஆம் ஆண்டில் கொழும்பு துறைமுகத்துக்கு வருகை தருகின்ற பிரதான கப்பல் சேவைகளின் உயர்மட்டத்திலான வெளிநாட்டு உத்தியோகத்தர்கள் 30 பேருக்கு அதிகமானவர்களை பாராட்டுவதற்குாக முன்னெடுக்கப்பட்ட ஆரம்பமாகும். அதன் பலனாக ‘‘கொழும்பு துறைமுக விருது வழங்கும் இரவு’’ ஜயகொள்கலன் முனையம் (JCT) சவுத் ஏசியா கோட்வே டேர்மினல் (SAGT) மற்றும் கொழும்பு சர்வதேச கெண்டெயினர் டேர்மினல் (CICT) ஆகிய நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஒழுங்கு செய்யப்பட்டது. கொள்கலன் கையாளலின் போது கொழும்புத்துறைமுகத்துடன் தொடர்புடைய பிரதான கப்பல் சேவைகள் 22 உம் ஊட்டக்கப்பல் சேவைகள் 08 இனாலும் பெற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த சேவைகள் இவ்விருது வழங்கும் விழாவின் இரவில் பாராட்டப்பட்டதோடு பிரதான கப்பல் சேவைகள் 05 உம் பிரதான ஊட்டக் கப்பல் சேவைகள் 05 க்கு விருது வழங்கப்பட்டது. இலங்கை பிராந்தியத்தில் பாரிய கேந்திர துறைமுகமாக ஆக்கப்படுவதற்கான பாதையில் கொழும்பு துறைமுகத்தில் கையாளல்களை அதிகரிப்பதற்கு ஊக்கமூட்டுவதள்கான ‘‘கொழும்பு துறைமுக விருது வழங்கும் விழா 2018 இவ்விழாவை குறிப்பிடப்பட முடியும்.

1505 போர்த்துக்கேயரினால் கடற்படைத்தளமாக / துறைமுகமாக உபயோகித்த ஆரம்பிக்கப்பட்டதுடன் மேற்கு உலகில் கொழும்பு பற்றித் தெரிந்து கொள்ளக் கிடைத்தமை

1875 7 ஆம் எட்வெட் மன்னரினால் டிசெம்பர் 09 ஆம் திகதி தென்மேற்கு அலைதாங்கிக்கான அடிக்கல் நாட்டப்படல்

1882 கொழும்பு துறைமுகத்தின் நிர்வாகப் பணிக்காக "ஹாபர் போர்ட்" என்னும் பெயரில் சபையொன்று நிறுவப்படல்

1885 1285 மீட்டர் நீளமான தென்மேற்கு அலைதாங்கியின் வேலைகள் பூர்த்தியாகக்கப்படல்

1898 335 மீட்டர் நீளமான வடகிழக்கு அலைதாங்கியின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல்

1899 உலர் துறைமேடையின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படல்

1906 814 மீட்டர் நீளமான "ஐலன்ட்" அலைதாங்கியின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல்

1906 உலர் துறைமேடையின் நிர்மாணப்பணிகள் பூர்த்தியாக்கப்படல்

1909 உலர் துறைமேடைக்கான 250 மீட்டர் நீளமான வழிகாட்டிப் பாலத்தின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல் (ஆழமான நீரில் அமைந்த முதல் கரையோர நங்கூரத்தளம் இதுவாகும்.)

1912 தற்போது ஜய கொள்கலன் முனையம் அமைந்திருக்கும் பிரதேசத்தில் நிலக்கரி இறக்கும் 18 துறைமேடைகளின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல்

1912 தென்மேற்கு அலைதாங்கியின் பகுதி 550 மீற்றர் வரை நீடிக்கப்படல்

1913 துறைமுக அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக துறைமுக ஆணைக்குழு அமைக்கப்படல்

1922 பெற்றோலிய எண்ணெய் வழங்குவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்படல்

1950 9 முதல் 11 மீட்டர் ஆழத்துடன் கூடிய 15 கரையோர நங்கூரத்தளங்கள் 7.5 மீட்டர் ஆழமான நீரில் 02 நங்கூரத்தளங்கள், 55,800 சதுர மீற்றர் கொண்ட அண்மித்த களஞ்சியங்கள் மூலம் மேலும் குத வசதிகள் ஏற்படுத்தப்படுவதற்கான வசதிகள் வழங்கப்படுவதற்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்

1954 தென்மேற்கு அலைதாங்கியின் கரையோர நங்கூரத்தளத்தின் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு 02 ஆம் எலிசபெத் இராணியினால் அங்குரார்ப்பணம் செய்து வைப்பப்பட்டதனால் அது "எலிசபெத் இராணி இறங்குதுறை" எனப் பெயரிடப்பட்டது. அதில் நங்கூரமிடப்பட்ட முதல் கலம் இங்கிலாந்து அரசுக்குரிய "கோதிக்" எனும் கப்பலாகும்.

1956 17 கரையோர நங்கூரத்தளங்கள், அண்மித்த களஞ்சியங்கள் மற்றும் குதங்கள் நிர்மாணிக்கப்படல்

1958 கொழும்புத் துறைமுகத்தின் கப்பற்சரக்கு கையாளும் நடவடிக்கைகள் அரசமயமாக்கப்பட்டு துறைமுக கப்பற்சரக்கு கூட்டுச்சபை ஸ்தாபிக்கப்படல்

| | |
|---|---|
| 1964 | காலி துறைமுகத்தில் கப்பற்சரக்கு கையாளும் நடவடிக்கைகள் அரசமயமாக்கப்படல் |
| 1967 | துறைமுக ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவைக் கூட்டுத்தாபனம் நிறுவப்படல் |
| 1967 | திருகோணமலை துறைமுகத்தில் கப்பற்சரக்கு கையாளும் நடவடிக்கைகள் அரசமயமாக்கப்படல் |
| 1979 | துறைமுக ஆணைக்குழு துறைமுக கப்பற்சரக்கு கூட்டுச்சபை மற்றும் துறைமுக ஒத்துப்பார்த்தலும் பாதுகாப்புக்குமான சேவைகள் கூட்டுத்தாபனம் போன்றவற்றினை ஒன்றிணைத்து இலங்கை இலங்கை துறைமுக அதிகாரசபை நிறுவப்படல் |
| 1980 | ஜப்பான் நாட்டின் உதவியுடன் கொழும்பு துறைமுகத்திற்கான பாரிய திட்டமொன்று தயாரிக்கப்படல் |
| 1980 | எலிசபெத் இராணி இறங்குதுறையின் புதிய முனையம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல் |
| 1982 | முதலாவது "கென்ட்ரி" பாரம்தூக்கியான "டன்கோ 80" சேவையில் ஈடுபடுத்தப்படல் |
| 1982 | ஜப்பானிய வ/ப "பென்றாஓசன் வக்கச்சிக்கு" ஒன்றிணைந்த கம்பனியுடன் புதிய கொள்கலன் முனையமொன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடல் |
| 1983 | சகல அங்கங்களுடன் கூடிய கொளகலன் முனையத்தின் 1 ஆம் கட்ட நிர்மாணப் பணிகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல் |
| 1984 | சகல அங்கங்களுடன் கூடிய கொள்கலன் முனையத்தின் ii ஆம் கட்ட நிர்மாணப் பணிகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல் |
| 1984 | ஹிற்றாச்சி வகையின் 04 றான்ஸ்பர் பாரம்தூக்கிகள் எலிசபெத் இராணி கொள்கலன் முனையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படல் |
| 1985 | ஜய கொள்கலன் முனையத்தின் 01 ஆம் கட்ட வேலைகள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படல் |
| 1987 | இலங்கை துறைமுக அதிகார சபையின் மஹபொல பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்படுதல். |
| 1987 | ஜய கொள்கலன் முனையத்தின் II ஆம் கட்ட வேலைகள் ஆரம்பித்து வைக்கப்படல் |
| 1988 | கப்பல்களைக் கட்டிவைப்பதற்கு கரைக்கு அப்பால் அமைந்துள்ள ஒருமுனை மிதவை நங்கூரத்தளத்தை அமைத்து சேவையில் ஈடுபடுத்தப்படல் |
| 1994 | புதிய துறைமுக உட்புகு பாதையின் வேலைகள் பூர்த்தி செய்யப்படல். |
| 1995 | ஜய கொள்கலன் முனையத்தின் III ஆம் கட்ட பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல். |
| 1996 | ஜய கொள்கலன் முனையத்தின் IV ஆம் கட்ட பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல். |
| 1998 | ஐக்கிய கொள்கலன் முனையத்தின் வேலைகள் ஆரம்பித்து வைக்கப்படல். |

| | |
|---|---|
| 1998 | இணைந்த துறைமுகங்கள் (அபிலயேற்றட் போட்ஸ்) சம்மேளனம் நிறுவப்படல் |
| 1999 | கிழக்கு கடற்கரையின் ஒலுவில் வெளிச்ச வீட்டை சேவையில் ஈடுபடுத்துதல் அத்தோடு ஒலுவில் கடல்சார் பயிற்சி நிலையத்தையும் திறந்து வைத்தல் |
| 1999 | இராணி இறங்குதுறையில் சவுத் ஏசியா கேட்வே டேர்மினலின் (எஸ்.ஏ.ஜீ.ரீ) அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்படல் |
| 1999 | திருகோணமலை துறைமுகத்தில் கரையோர நங்கூரத்தளங்களை நிர்மாணிக்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படல் |
| 2000 | கொழும்பு தென் துறைமுகத்தின் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படல் |
| 2000 | காலி துறைமுகத்தில் புதிய நங்கூரத்தளம் நிர்மாணிக்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படல் |
| 2000 | பேலியகொடை கொள்கலன் கப்பற்சரக்கு நிலையம் ஆரம்பித்து வைக்கப்படல். |
| 2000 | காலி துறைமுகம் பிராந்திய துறைமுகமாக அபிவிருத்தி செய்யப்படும் குறிப்பிட்ட திட்டத்தின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் |
| 2000 | வட பாலத்தின் 11 ஆம் கட்ட அபிவிருத்திப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல் |
| 2000 | ஒரே இடத்திலான ஆவணமாக்கல் நிலையம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படல் |
| 2001 | காலி துறைமுகத்தின் புதிய துறைமேடை திறந்து வைக்கப்படல் |
| 2003 | ஒலுவில் துறைமுக உட்புகு பாதையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல் |
| 2003 | குறைகொள்கலன் (எல்.சி.எல்) மற்றும் பிரித்த மொத்த கப்பற் சரக்குகளுக்கான சேவைகள் வழங்கும் நிலையம் ஆரம்பித்து வைக்கப்படல் |
| 2003 | இலங்கை துறைமுக அதிகாரசபையின் கடலக நூதனசாலை திறந்து வைக்கப்படல் |
| 2003 | சிவில் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டதன் பின்னர் ஐக்கிய கொள்கலன் முனையம் திறந்து வைத்தல் |
| 2004 | ஐக்கிய கொள்கலன் முனையத்தின் கொள்கலன் கையாளும் பணிகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தல் |
| 2004 | இலங்கை துறைமுக அதிகாரசபையின் வெள்ளிவிழா கொண்டாடப்பட்டது. |
| 2004 | பாரிய அளவிலான சேவைப் பிரிவான ஜய கொள்கலன் முனையம் தேசிய உற்பத்தித் திறனுக்கான விருதை பெற்றுக்கொள்ளல் |
| 2004 | கொழும்பு துறைமுகத்தினால் 02 மில்லியன் கொள்கலன் கையாளப்படுதல் |
| 2005 | ஒலுவில் துறைமுகம் மற்றும் வீடமைப்புத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல் |
| 2005 | தேசிய உற்பத்தித் திறன் தொடர்பான செயலகத்தினால் மத்திய தர சேவை பிரிவிற்கான திறன் சான்றிதழ் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மஹபொல பயிற்சி நிலையத்துக்கு வழங்கப்படல் |

| | |
|---|---|
| 2006 | கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன் பாதுகாப்பு மற்றும் மெகா போர்ட் உபகரணங்கள் அறிமுகம் செய்து வைக்கப்படல் |
| 2006 | கொழும்பு தென் துறைமுக நிர்மாணம் தொடர்பிலான உத்தேச கொழும்புத் துறைமுக விரிவாக்கல் செய்திட்டத்தின் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடல் |
| 2006 | ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் (முதலாம் கட்டம்) விபரமான வடிவமைப்பு வேலைகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடல். |
| 2007 | ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைத்தல் மற்றும் நிதி ஒப்பந்தம் கைச்சாத்திடல். |
| 2008 | ஒலுவில் துறைமுக திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுதல் |
| 2008 | கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுதல். |
| 2008 | ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் கப்பல்களுக்கு எண்ணெய் வழங்கும் வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் எண்ணெய்த் தாங்கித் தொகுதிகளின் நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பான உடன்பாடு கைச்சாத்திடல் |
| 2009 | ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் கப்பல்களுக்கு எண்ணெய் வழங்கும் வசதிகள்,எண்ணெய்த் தாங்கித் தொகுதி மற்றும் நிர்வாக கட்டட நிர்மாணப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டுதல் |
| 2009 | ஜய கொள்கலன் முனைய முகாமைத்துவத் தொகுதி "NAVIS" வரை தரமுயர்த்துதல் |
| 2010 | 2010.08.15 ஆம் திகதி ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுக நீர்த்தடாகத்துக்கு கடல் நீர் பரப்பும் வைபவம் |
| 2010 | 2010.11.18 ஆம் திகதி ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படல் |
| 2010 | ஜய கொள்கலன் முனையத்தில் 02 மில்லியன் கொள்கலன் கையாளப்படுதல் |
| 2010 | கொழும்பு துறைமுகத்தில் 04 மில்லியன் கொள்கலன் கையாளப்படுதல். |
| 2011 | 06 புதிய கென்ட்ரி பாரம்தூக்கிகளும் 30 றான்ஸ்பர் பாரமுயர்த்திகளும் துறைமுகத்துக்கு கிடைக்கப்பெறுதல். |
| 2011 | இலங்கை துறைமுக அதிகாரசபையின் கொழும்பு எண்ணெய் முனையத்தின் கொள்ளளவு அதிகரிக்கப்படுதல். |
| 2011 | 50 முனைய டிரக்டர்கள் துறைமுகத்துக்கு கிடைக்கப்பெறல் |
| 2011 | கொழும்பு துறைமுக விரிவாக்கல் திட்டத்தின் கீழ் தென் கொள்கலன் முனைய ஒப்பந்தம் கைச்சாத்திடல் |
| 2011 | ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் புதிய வர்த்தகங்கள் ஆரம்பிக்கப்படுவதனைக் குறிக்கும் நிலம் தோண்டும் வைபவம் |
| 2011 | தென் கொள்கலன் முனையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுவதனைக் குறிக்கும் நிலம் தோண்டும் வைபவம். |

| | |
|---|---|
| 2012 | ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் ரோ ரோ கப்பல்களின் கையாளல் ஆரம்பிக்கப்படல். |
| 2012 | கொழும்பு துறைமுக புளுமெண்டல் எண்ணெய் களஞ்சியத்தில் பழுதடைந்திருந்த எண்ணெய்க் குழாய் வழி மீள் மாற்றம் செய்யப்படல். |
| 2013 | 6.8 கி. மீட்டர் கொண்ட பாரிய அலைதாங்கி மற்றும் தெற்கு கொள்கலன் முனையத்துடனான கொழும்பு துறைமுகம் விரிவாக்கும் செய்திடடம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல். |
| 2013 | ஒலுவில் துறைமுகம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல். |
| 2013 | கொள்கலன் முனையத் தொகுதியின் இறக்குமதி செய்யப்படும் நிறைவான கொள்கலன்களை ஏற்றும் மொடியூல் நடைமுறைப்படுத்தப்படல். |
| 2013 | ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் நிர்வாகக் கட்டடம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல். |
| 2014 | ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் கப்பல்களுக்கான எண்ணெய் வழங்கும் வசதிகள் மற்றும் எண்ணெய்த் தாங்கித் தொகுதி வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தல் |
| 2014 | கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி செய்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைத்தல் |
| 2015 | கிழக்கு கொள்கலன் முனையம் வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தல் |
| 2015 | தர முகாமைத்துவ முறைமை தொடர்பிலான ISO 9001 – 2008 தரச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளல். |
| 2015 | மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் கட்டம் II இன் நீர்த்தடாகத்துக்கு கடல் நீர் நிரப்பும் வைபவம் |
| 2015 | கொழும்பு துறைமுகத்தில் இருபது சம அலகு கொள்கலன் 05 மில்லியன் கையாளல். |
| 2016 | கொள்கலன் கப்பற்சரக்கு நிலையத்தை(CFS 1) மீள் நிறுவுதல் (2016.08.10) |
| 2016 | இயந்திர உபகரண பொறியியல் பகுதியினால் ஜய கொள்கலன் முனையத்தில் உயரத்தில் குறைந்த புதிய டிரேலர் ஒன்றை நிர்மாணித்தல் (2016.08.31) |
| 2016 | பாரிய கொள்கலன் கப்பலான MSC Maya கொழும்பு துறைமுகத்தின் கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையத்துக்கு (CICT) வருகை தரல் (2016.09.16) |
| 2017 | பூரணமாக மீள் நிர்மாணிக்கப்பட்ட கொள்கலன் கப்பற்சரக்கு நிலையத்தின் (CFS 1) கையாளல் பணிகள் ஆரம்பிக்கப்படுதல். (2017.05.31) |
| 2017 | ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் துறைமுக கையாளல் தொடர்பில் சீனா மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கிடையில் சலுகைக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்படுதல். (2017.07.29) |
| 2017 | இணைந்த துறைமுகங்களின் சர்வதேச வலையமைப்பு தொடர்பிலான 19 ஆவது (International Network of Affiliated Ports (INAP) Conference (2017-11-07,08) மாநாடு இலங்கையில் ஆரம்பிக்கப்படுதல். |

2017 ஹம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான பங்காளர்களின் உடன்படிக்கை (Shareholders Agreement) மற்றும் காணி குத்தகைக்கு வழங்கும் உடன்படிக்கை. (Land Lease Agreement) (2017/12/08)

2017 இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் சைனா மேர்சன்ட் ஹோல்டிங்ஸ் கம்பனிக்கிடையில் ஹம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான சலுகை உடன்படிக்கையின் கீழ் முதலாவது கொடுப்பனவு மேற்கொள்ளப்படுதல். (2017.12.09)

2017 கொழும்பு துறைமுகத்தில் 6 மில்லியன் இருபது சம அலகு கொள்கலன் கையாளப்படுதல். (2017.12.20)

**2018 இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் வ/ப சைனை மேர்ச்சன்ட் போர்ட் ஹேல்டிங்ஸ் கம்பனிகளுக்கிடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஹம்பாந்தோட்டை துமைமுக சலுகைக்கான ஒப்பந்தத்தின் கீழ் 02 ஆவது கொடுப்பனவை ஏற்படுத்துதல்.**

**2018 கொழும்பு துறைமுகம் ஒத்துழைப்புடன் அபிவிருத்தி செய்வதற்காக சவுத்ஏசியா கேட்வே டர்மினல் (SAGT) மற்றும் கொழும்பு இன்டநெஷனல் கன்டெயினர் டேர்மினல் (CICT) கம்பனிகளுக்களுடன் இலங்கை துறைமுக அதிகாரசபை புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு உட்படுதல்.**

**2018 2018 ஆம் ஆண்டில் சிறந்த துறைமுகத்திற்கன விருதை இலங்கை துறைமுக அதிகாரசபையினால் சர்வசே துறைமுகங்கள் ஒன்றியத் (Global Ports Forum) திலிருந்து பெற்றுக்கொள்ளல்.**

**2018 இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் சைனா மர்ச்சன்ட் போர்ட் ஹோல்ட்டிங்ஸ் கம்பனிகளுக்கிடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஹம்பாந்தோட்டை துறைமுக சலுகைக்கான ஒப்பந்தத்தின் கீழ் செலுத்த வேண்டிய இறுதிப்பங்கை (last franche) ஏற்பாடு செய்தல்.**

**2018 கொழும்பு துறைமுகத்தினால் முதன்முறையாக நடாத்தப்பட்ட "Colombo Port Award" விருது வழங்கும் விழாவை ஏற்பாடு செய்தல்**

**2018 2018 முதலாவது அரையாண்டில் உலகில் அதிகூடிய கொள்கலன்களைக் கையாழும் துறைமுகமாக கொழும்பு துறைமுகம் தரப்படுத்தில் ஒப்படல் அல்பாலைனர் தரப்படுத்தலுக்கு ஏற்ப**

**2018 கொழும்பு துறைமுகம் இருபதின் சம அலகுகள் 7 மில்லியன் கொள்கலன்களை கையாழ்வதற்கு சக்தி பெற்றமை.**



# இயக்க மீளாய்வு
# ஆண்டறிக்கை 2018

## பகுதிகளின் செயலாற்றுகை

## இயக்க சேவைகள்

### இயக்க பகுதி

2018 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகார சபையின் இயக்கப் பகுதியினால் அடையப் பெற்ற உற்பத்தித்திறன் மட்டத்தை அதிகரிப்பதற்கும் ஜய கொள்கலன் முனையத்தினால் கையாளப்பட்டுள்ள கொள்கலன் பரிமாணத்தை மேற்கொண்டும் உயர்த்துவதற்கும் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- 2017 ஆண்டில் கையாளப்பட்டுள்ள 2,010,702 இருபது சம அலகுகளுடன் ஒப்பிடும் போது 2018 ஆண்டின் இறுதியில் இலங்கை துறைமுக அதிகார சபைக்குரிய முனையங்கள் (JCT/UCT) மூலம் 2,304,534 இருபது சம அலகுகள் கையாளப்பட்டுள்ளன. இது கொழும்பு துறைமுகத்தின் கொள்கலன் முனையங்களுக்கிடையிலான 14.6% ஆகக் கூடிய பரிமாண அதிகரிப்பாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மீள் ஏற்றுமதி கொள்கலன்கள் தொடர்பில் இலங்கை துறைமுக அதிகார சபையின் முனையங்களில் 22.2% வளர்ச்சி விகிதம் பெறப்பட்டுள்ளது.

- 2017 ஆண்டில் 27.2 ஆக பதிவாகியிருந்த பிரதான கப்பல் கம்பனிகளினது கப்பல்கள் தொடர்பிலான பாரம்தூக்கிகளினது சுமாரான உற்பத்தித்திறனானது 2018 ஆண்டில் 26.63 மான (மணித்தியாலமொன்றிற்கான கையாளல்) 2.1% சிறிய வீழ்ச்சி பதிவாகியிருந்தது. 2017 ஆண்டின் 24.28 உடன் ஒப்பிடும் போது ஊட்டக் கப்பல் கம்பனிகள் தொடர்பிலான பாரம்தூக்கிகளினது சுமாரான உற்பத்தித்திறன் 23.09 மான 4.9% சிறிய வீழ்ச்சி விகிதமும் பதிவாகியிருந்தது. ஒட்டுமொத்த வருடாந்த கொள்கலன் பரிமாணம் 14.6%னால் அதிகரித்திருக்கையில் பதிவாகியுள்ள குறைவடைவைப் பார்க்கும் போது குறைவாக எடை போடப்பட முடியாது. பழைய உபகரணங்களைப் பயன்படுத்துவதினால் எதிர்பாராத உற்பத்தித்திறன் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்துள்ளதோடு ஒழுங்காக முறையாக்கப்படாத துணைத் தொகுதிகள் மூலம் கையாளப்படும் உபகரணப் பாவனையும் இந்த நிலைமையை உக்கிரமடைய செய்துள்ளது.

- மரபுரீதியான கப்பற்சரக்கு கையாளும் முனையங்களில் கையாளப்பட்டுள்ள ஒட்டுமொத்த உலர் தொகை கப்பற்சரக்குகளின் தொன் அளவானது 2017 ஆண்டில் 2,501,363 இருந்து 2018 ஆண்டில் 2,825,454 வரை அதிகரித்து இது 13% வளர்ச்சியாக பதிவாகியுள்ளது. மேலும் கையாளப்பட்டுள்ள ஒட்டுமொத்த திரவ தொகை தொன் அளவானது 2017 ஆண்டில் 5,865,240 இருந்து 2018 ஆண்டில் 6,618,328 வரை அதிகரித்து இது 12.8% வளர்ச்சியாகவும் பதிவாகி இருக்கின்றது.

- கொழும்பு துறைமுகத்தினால் கையாளப்பட்டுள்ள ஒட்டுமொத்த கப்பற்சரக்கு தொன் அளவானது (கொள்கலன்,தொகைபிரிப்பு, உலர் மற்றும் திரவ தொகை) 2017 ஆண்டில் 89,034,541 இருந்து 2018 ஆண்டினுள் 100,151,715 வரை அதிகரித்து இதுவும் 12.5% வளர்ச்சியாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

- சர்வதேச கப்பல் சேவைகள் எதிர்பார்க்கும் முறையிலான உயர் மட்டத்தில் சேவைகள் வழங்கும் விதம் மற்றும் போட்டிமிகு வர்த்தக சூழலை சிறப்பாக வெற்றிகொள்ளும் முறைகள் தொடர்பில் ஊழியர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டன. 2018 ஆண்டில் போன்று எதிர்கால ஆண்டுகளிலும் ஜய கொள்கலன் முனையம் உள்வாரியாகவும் வெளிவாரியாகவும் முகம் கொடுக்கும் சவால்களை வெற்றிகொள்ளும் முறை தொடர்பிலும் மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டங்களின் போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

- முனையங்கள் கையாளலிலான பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் பல்வேறு ஊழியர் பிரிவுகளுடன் தொடர்புபடும் நிர்வாகம் சார்ந்த விடயங்களோடு செயற்திறனை தொடர்ச்சியாக விருத்தி செய்து முன்னெடுத்துச் செல்வதற்கு ஜய கொள்கலன்/ ஐக்கிய கொள்கலன் முனையங்களின் இயக்க ஆளணிகளை நோக்காகக் கொண்டு குறிப்பாக திட்டமிடப்பட்ட அறிவூட்டல்களும் புத்தூக்க நிகழ்ச்சித்திட்டங்களும் உயர் முகாமைத்துவத்தினதும் ஜய கொள்கலன் முனையத்தினது பணிப்பொறுப்பு முகாமையாளரினதும் சம்பந்தப்பட்ட நிறைவேற்று அலுவலர்களினதும் வழிகாட்டல்களோடு வெற்றிகரமாக நடாத்தப்பட்டு அனைத்து இயக்க பிரிவுகளினதும் ஆளணியினர் குறித்த வேலைத்திட்டங்களில் முழுமையாக கலந்துகொண்டு இறுதியாகும் வரை தொடர்ச்சியாக நடாத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

- பயன்படுத்தப்படாமலிருக்கும் கால விரயத்தைக் குறைக்கும் நோக்கில் அதிகாரிகளின் நேரடி மேற்பார்வையின் கீழ் உபகரண கையாளல் முனையத்தில், துறைமேடையில் மாத்திரம் நடைபெறுவதனையும் கொள்கலன் கையாளும் உபகரணங்கள் இயக்குபவர்களினால் இது மேற்கொள்ளப்படுவதனையும் உறுதிசெய்வதற்கான செயற்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த செயற்பாடு தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்படுவதோடு அதன் உற்பத்தித்திறனையும் பரிமாணத்தையும் அதிகரிப்பது ஆண்டு பூராகவும் நடைமுறைப்படுத்தப்படும்.

- முனையங்களுக்கிடையிலான பொருள் போக்குவரத்து செயற்பாடு (Inter Terminal Trucking) முறையாக்கப்படுவதற்கும் மீள்ஏற்றுமதி செய்வதற்கும் உள்நாட்டு கப்பற்சரக்கு கையாளல்களுக்கு முனையத்தை உச்ச முறையில் பயன்படுத்துவதற்கும் முனையத்தை ஒரே அலகாகக் கருதி செயற்திறனாகவும் பயனான முனைய முகாமைத்துவம் மேற்கொள்வதன் மூலமும் 2018 ஆண்டின் முதல் காலாண்டினுள் முனைய திட்டம் தொடர்பில் பாரிய மாற்றத்தை முனையத்தில் மேற்கொண்டு முனைய பாரம்தூக்கிகளை உரிய நேரத்தில் ஈடுபடுத்தியதன் மூலம் முனைய வீச்சு வேகம் (Terminal Velocity) தேவையான மட்டத்தல் பேணப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- முனையங்களுக்கிடையிலான பொருள் போக்குவரத்து செயற்பாட்டை செயற்திறனாக்குவதற்கும் முறையாக ஒழுங்குபடுத்துவதற்கும் அனைத்து பங்காளர்களையும் தொடர்புபடுத்தி இறுதியில் எதிர்பாராதிருக்கும் போது சடுதியான திட்டங்களை தயாரித்து அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு மூன்று முனையங்களையும் சேர்ந்த பிரதிநிதிகளைக் கொண்ட விசேட குழுவொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குழுக் கூட்டங்கள் நாளாந்தம் ஜய கொள்கலன் முனைய வளாகத்தில் நடாத்தப்படும்.

- 2018 ஆண்டின் ஆரம்பத்திலிருந்து முனையங்களினது வெற்றிகரமான முன்னேற்ற செயற்திறனை அதிகரிப்பதில் பங்காற்றிய பிறைம்மூவர் வண்டிகள் மற்றும் இறப்பர் டயர்கள் பொருத்தப்பட்ட கென்ட்ரி பாரம்தூக்கிகளை இலகுவாக இயக்கக் கூடிய வகையில் முனையத்தில் இருக்கும் அடுக்கும் (வெற்று/பூரண கொள்கலன்) பிரதேசமும் அடங்கலாக துறைமேடைப் பிரதேசத்தின் பாதைகள் மற்றும் நிரல் வழிகள் மேற்கொண்டும் புனரமைக்கப்பட்டன.

- பிரதான கப்பல் சேவைகளின் கம்பனிகளினது (MSC/EMC/ ZIM/ HHM/ KMTC/ COSCO/ OOCL) பல்வேறு பிரிவுகளினது செயற்திறனான தொடர்புகளை பெற்றுக்கொள்வதன் மூலம் மேலதிக வருமானம் ஈட்டப்படும் நோக்கில் 2018 ஆண்டில் புதிய பாகங்கள் T/S,Export, ECR) அறிமுகப்படுத்தப்பட்டு வெற்றுக் கொள்கலன்களுக்கான துறைமேடை கையாளல்களும் விரிவுபடுத்தப்பட்டன.

- 2018 நவம்பர் மாதம் 10 ஆம் திகதி வருகை தந்த MV.ARBATAX கப்பலில் 7450 கொள்கலன்களைக் கையாண்டு இலங்கை துறைமுக அதிகார சபை வரலாற்றில் ஒரு கப்பலில் கையாளப்பட்ட உயர் பரிமாணத்தை 2018 நவம்பர் மாதத்தில் பதிவு செய்துள்ளது.

- ஐய கொள்கலன் முனையத்தினால் வெற்றி கொள்ளப்பட்ட ISO–9001/2015 தரச்சான்றிதழை மேற்கொண்டும் தக்க வைத்துக் கொள்வதற்கான செயற்திறனான அவதானிப்பு ஆய்வு (Surveillance Audit) சென்ற ஆண்டின் நவம்பர் மாத நடுப்பகுதியில் நடாத்தப்பட்டு அடுத்த வருடத்திற்கும் இது பரிந்துரைக்கப்பட்டு ஆய்வு வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது.

## சேவை வழங்கல் பகுதி

துறைமுகத்தில் தரையிறக்கப்படும் நிறை கொள்கலன்கள் (FCL), குறை கொள்கலன்கள் (LCL), தொகை பிரிப்பு, மொத்தப் பொதி, மோட்டார் வாகனங்கள் மற்றும் செய்திட்ட பொருட்களைக் கொண்ட கப்பற்சரக்குகள் உள்ளடங்கலான அனைத்து கப்பற்சரக்குகளையும் செயற்திறனாக வினியோகிப்பதும் சேவைகளை நாடுவோருக்கு கப்பற்சரக்குகளுடன் தொடர்புபடும் சேவைகளை வழங்கும் பணிகளைக் கையாள்வதும் சேவைகள் வழங்கும் பகுதியின் தலையாய கடமையாகும்.

முன்னர் மேற்கொண்டவாறு 2018 ஆண்டிலும் 24 மணி பூராகவும் சேவைகள் வழங்கியதன் ஊடாக 160,470 இருபது சம அலகுகள் நேரடியாக வினியோகம் செய்யப்பட்டு பாவனையாளர் சேவை நிலையம் மூலம் ரூபா 1,884.80 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. சேவைகளை நாடுவோருக்கு வழங்கப்படும் சேவைகளை விரிவுபடுத்துவதற்கும் ஆவண நடவடிக்கைகளுக்கு செலவாகும் காலத்தை குறைப்பதற்கும் கப்பற்சரக்கு முகாமைத்துவத் தொகுதி பயனான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நிறை கொள்கலனகள் 31,025 இருபது சம அலகுகளும் மீள் ஏற்றுமதி நிறை கொள்கலன்கள் 704 இருபது சம அலகுகளும் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கையாளப்பட்டுள்ளன. (பொதுவான/ஆபத்தான சரக்குகள்) 8,676 இருபது சம அலகுகளும் தனிப்பட்ட கப்பற்சரக்குகள் 1,076 இருபது சம அலகுகளும் கொள்கலன் கப்பற்சரக்குகள் களஞ்சியங்களில் இடப்படும் பணிகள் பேலியகொட கொள்கலன் நிலையத்தில் கையாளப்பட்டதோடு உள்நாட்டு கப்பற்சரக்குகள், மீள் ஏற்றுமதி கப்பற்சரக்குகள், பல்நாட்டு கப்பற்சரக்குகளின் ஒன்றதிரட்டல் மற்றும் விசேட கப்பற்சரக்குகளின் கையாளல்களின் மூலம் ரூபா 257.94 மில்லியன் தொகையும் அதேபோன்று துறைமுகத்தினுள் களஞ்சிய வசதிகளை வழங்கி குறை கொள்கலன் கப்பற்சரக்குகள் களஞ்சியப்படுத்தலின் மூலம் ரூபா 1,883.3 மில்லியன் தொகையும் ஈட்டப்பட்டுள்ளன. அதேபோன்று பல்நாட்டு கப்பற்சரக்குகள் ஒன்றுதிரட்டலின் மூலம் ரூபா 207.46 மில்லியன் தொகையும் இதற்கு மேலதிகமாக வெற்றுக் கொள்கலன்களுக்கான தாமத மற்றும் கொள்கலன்களின் நிலைகள் மாற்றப்படுதலிலான (Change of Status of Containers) கட்டணங்களாக ரூபா 21.61 மில்லியன் வருமானமும் ஈட்டப்பட்டுள்ளன.

கொள்கலன் கையாளல் நிலையத்தின் V ஆம் களஞ்சியம் (CFS-V) புதுப்பித்ததன் காரணமாக பிணையிடப்படும் கப்பற்சரக்குகளுக்கான களஞ்சிய வசதிகள் அதிகரிக்கப்பட்டு பிணையிடப்படும் வர்த்தகத்திற்கான கிராக்கியும் அதிகரித்து அதன் மூலம் ரூபா 82.21 மில்லியன் மொத்த வருமானமும் ஈட்டப்பட்டுள்ளது.

கைவிடப்பட்ட கப்பற்சரக்குகள் விலைகோரலின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்டதன் காரணமாக ரூபா 197.72 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதோடு வ/ப இலங்கை துறைமுக முகாமைத்துவ ஆலோசனைச் சேவைகள் கம்பனி மூலம் கழிவு இரும்புகள் விற்பனை செய்யப்பட்டதன் மேலதிக வருமானமாக ரூபா 6.94 மில்லியன் தொகையும் ஈட்டப்பட முடிந்துள்ளது.

ஆண்டினுள் சரக்குகள் அகற்றிச் செல்லும் முகவர் நிறுவனங்களுக்கு மொத்தமாக 1,268 அனுமதிப்பத்திரங்கள் அதாவது 168 புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுதலின் மூலமும் வழங்கப்பட்டிருந்த 1,100 அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டதன் மூலமும் ரூபா 26.83 மில்லியன் வருமானம் பெறப்பட்டுள்ளது. ‘‘ஏ’’ மற்றும் ‘‘பீ’‘ வகுப்பு வாப்பு இலிகிதர்களுக்கான அடையாள அட்டை வழங்குதல் மற்றும் புதுப்பித்தலின் மூலம் ரூபா 8.90 மில்லியன் வருமானமும் பெறப்பட்டுள்ளது. ஆண்டினுள் வழங்கப்பட்ட மற்றும் புதுப்பிக்கப்பட்ட ‘‘ஏ’’ மற்றும் ‘‘பீ’’ அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கைகள் முறையே 2,752 மற்றும் 304 ஆகும்.

2018 ஆண்டினுள் சேவைகள் வழங்கும் பகுதியினால் பெற்றுக்கொடுக்கப்பட்ட சேவைகள் மூலம் ஈட்டப்பட்டுள்ள ஒட்டுமொத்த வருமானம் ரூபா 4,831.1 மில்லியன் ஆகும்.

சரக்கு உரிமையாளர்களின் கட்டண சலுகைகள் தொடர்பில் 2018 ஆண்டில் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சில் முன்வைக்கப்பட்ட 19 விண்ணப்பங்களில் 08 பரிந்துரைக்கப்பட்டு 09 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. எஞ்சிய விண்ணப்பங்கள் தொடர்பான பணிகள் அமைச்சின் தீர்மானத்திற்கேற்ப மேற்கொள்ளப்படும்.

குறை கொள்கலன் கப்பற்சரக்குகள் மற்றும் நேரடியாக பொறுப்பளிக்கப்படும் கப்பற்சரக்குகளுக்குரிய ஆவணங்கள், இலத்திரனியல் முறையில் வழங்கும் வசதிகள் 2018 ஆண்டினுள் விரிவுபடுத்தப்படுவதற்கான பணிகள் இடம்பெற்று வருகின்றன. 2019 ஆண்டினுள் இது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

**2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள மேம்படுத்தல்கள் மற்றும் அபிவிருத்திப்பணிகள்**

- CFS- I களஞ்சியம் தொடர்பில் குறை கொள்கலன் முகாமைத்துவ தொகுதி (CMS) அறிமுகப்படுத்தப்பட்டு சேவைகளை நாடுவோரின் வசதி கருதி நேரடியாக கொள்கலன்களிலான பொருட்களை களஞ்சியப்படுத்தும் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்தும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- அனைத்து குறை கொள்கலன்கள் தொடர்பில் நேரடியாக கப்பற்சரக்கு பட்டியல் ஆவண காட்சிப்படுத்துதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- இலங்கை சுங்கத்தின் நேவிஸ் மற்றும் ஆசிகுடா கணனித் தொகுதிகள் ஒருங்கிணைத்தலின் மூலம் நிறை கொள்கலனகளின் வினியோக செயற்பாடு இலகுபடுத்தப்பட்டுள்ளது.
- கொள்கலன் கப்பற்சரக்கு நிலையம் 1 இன் களஞ்சியசாலையினுள் பாதுகாப்பு அவதானிப்பு கமெரா (CCTV) தொகுதி பொருத்தப்பட்டுள்ளதோடு கப்பற்சரக்குகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பண்டாரநாயக்க துறைமேடையின் களஞ்சியசாலையினுள்ளும் பாதுகாப்பு அவதானிப்பு கமெரா தொகுதி பொருத்துவதற்கான பணிகள் இடம்பெற்று வருகின்றன.
- ஐக்கியகொள்கலன் முனையத்துக்கு சமீபமாக அனைத்து முழுமையான வசதிகளையும் கொண்ட வழங்கும் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.
- விற்பனைப் பிரிவின் செயற்திறன் உயர்வடைந்ததன் காரணமாக அகற்றப்படும் கப்பற்சரக்குகள் அற்ற களஞ்சியசாலைகளாக பேணிச் செல்ல முடிந்துள்ளன.
- தனிப்பட்ட கப்பற்சரக்கு கையாளும் பிரதேசமும் அதன் சேவைகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன. (பேலியகொட)

## கப்பலோட்டப் பகுதி

**வழிகாட்டிச் சேவை**

மீளாய்வாண்டினுள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த எல்லா வகையிலான கப்பல்களுக்கும் 24 மணித்தியாலங்கள் பூராக வழிகாட்டிச் சேவைகள் வழங்கப்பட்டன.

| கப்பல்களின் வகை | கப்பல்களின் எண்ணிக்கை | வருகை தந்த நோக்கம் | கப்பல்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கொள்கலன் | 3,739 | எண்ணெய் பெறுதல | 33 |
| மரபு முறையான | 51 | பழுதுபார்த்தல் | 50 |
| உலர் மொத்தம் | 153 | பயணிகள் | 55 |
| திரவ மொத்தம | 210 | ஏனைய சேவைகள | 08 |
| றோல் ஒன் றோல் ஒப் | 31 | | |
| ஏனைய கப்பற்சரக்குகள | 01 | | |
| **மொத்தம்** | | | **4,331** |

**பிரதான இழுவைக் கல அதிபர் பிரிவு (CMT)**

பிரதான இழுவைக் கல அதிபர் பிரிவினால் மீளாய்வாண்டினுள் கப்பல்களுக்கு செயற்திறனான தொடர்ச்சியான இழுவைக்கல சேவைகள் வழங்கி சிறப்பான பணியாற்றப்பட்டது. இதற்கு மேலதிகமாக பின்வரும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

- ♦ பயணிக்கும் சந்தர்ப்பங்களில் கப்பல்களுக்கு இயக்க இழுவைக்கலங்களை வழங்குதல்
- ♦ இழுவைக் கலங்களின் தட்டுக்களினது (DECK) புதுப்பிப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளை நிறைவேற்றுதல்.
- ♦ கப்பல்களை கட்டி வைப்பதற்கு பயன்படுத்தப்பட்டு அகற்றப்பட்ட பாரிய கயிறுகளினால் இழுவைக் கலங்களுக்கான கயிறுகளும் விரிப்புகளும் செய்தல், இழுவைக் கலங்களுக்கும் வேறு பிரிவுகளுக்கும் கென்வஸிலான திரைகள் தயாரிக்கும் நடவடிக்கைகள்.

கப்பல்களின் நகர்வுகளுக்காக போதுமானளவு இழுவைக் கலங்கள் நாளாந்தம் ஈடுபடுத்தப்பட்டதோடு அவசர சந்தர்ப்பங்களுக்காக ஒரு இழுவைக் கலம் எதிர்பார்ப்பு சேவையில் வைக்கப்பட்டது.

**இழுவைக் கலங்களின் உதவியுடன் கையாளப்பட்ட மொத்த கப்பல்களின் எண்ணிக்கை**

நங்கூரமிடும் இழுவைக் கலங்களினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த கையாயளல் எண்ணிக்கை 17,194 என்பதுடன், அதன் விபரங்கள் பின்வருமாறு

| **கலத்தின் பெயர்** | **கையாளல் எண்ணிக்கை** |
|---|---|
| எம்ரீ ராஜா | 05 |
| எம்ரீ நந்தமித்ர (55B) | 2,553 |
| எம்ரீ சுரணிமல (65B) | 3,036 |
| எம்ரீ கொட்டையிம்பர (65BP) | 2,433 |
| எம்ரீவிஜயபாகு | 1,783 |
| எம்ரீ பரண – II | 43 |
| எம்ரீ ஐராவண | 1,315 |
| எம் ரீ ராவன | 3,013 |
| எம் ரீ பண்டுகாபய | 3,013 |
| **மொத்தம்** | **17,194** |

**கொழும்பு துறைமுகத்தில் வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ள இழுவைக் கலங்கள்**

- ♦ Tug Herculers
- ♦ Tug Push Hardy
- ♦ Tug Push Husky

**திருகோணமலை துறைமுகம்**

- ♦ சிங்கபாகு மோட்டார் கலம்
- ♦ நீலமஹ மோட்டார் கலம்
- ♦ மஹாசேன் மோட்டார் கலம்

**காலி துறைமுகம்**

- ♦ கஞ்சதேவ மோட்டார் கலம்

**காங்கேசன்துறை துறைமுகம்**

- எம் ரீ இந்திரா கலம்

**வருமான விபரம் – இழுவைக் கல சேவைகள் (கொழும்பு துறைமுகம்)**

| ஆண்டு | ரூ.மில் |
|---|---|
| 2017 உண்மையான வருமானம் | 872.33 |
| 2018 திருத்தப்பட்ட வருமானம் | 998.03 |
| 2019 திட்டமிடப்பட்ட வருமானம் | 1,092.70 |

**பிரதான பொறியியல் அலுவலர் பிரிவு**

**ஆளணியினர்**

அனைத்து இழுவைக் கலங்கள், வழிகாட்டி மற்றும் நங்கூரக் கலங்களின் இயக்கம் மற்றும் பழுதுபார்ப்பு தேவைப்பாடுகளை மேறகொள்வதற்கு 2018 ஆம் ஆண்டில் இப்பிரிவினால் போதிய பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

கலங்களின் நகர்த்தல்களுக்கு வழிகாட்டி மற்றும் இயக்கங்களுக்குத் தேவையான கலங்களின் அன்றாட ஈடுபடுத்தல்களுக்கு மேலதிகமாக இப்பிரிவின் ஆளணியினரால் வழமையான பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

முகாமைத்துவத்தின் சிபாரிசு மீது பிரதான பொறியியல் அலுவலர் பிரிவுக்கு தேவையான இயந்திர சாதனங்கள் வழங்குவதோடு இழுவைக் கலங்களினது வழமையான பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு பிரதான பொறியியல் அலுவலகர் பிரிவு தயாரான நிலையில் உள்ளது.

**துறைமுக தீயணைப்பு படைப் பிரிவு (PFB)**

இப்பிரிவினால் உள்நாட்டு தீகாப்பு நியமங்கள் அனுசரிக்கப்பட்டு பேணப்படுவதோடு அவசர சந்தர்ப்பங்களின் போது ஏற்படும் விளைவுகளை குறைத்து 2018 ஆம் ஆண்டில் தீயணைப்பு பிரிவினால் மிகவும் செயற்திறனாக அவசர சேவைகளை நிறைவேற்றியுள்ளது.

**மீளாய்வுக்குட்படும் ஆண்டினுள் துறைமுக தீயணைப்புப் பிரிவினால் பின்வரும் சேவைகள் வழங்கப்பட்டன**

| | |
|---|---|
| தீயணைப்பு தொடர்பான பதிலளிப்பு | 21 |
| கடற்படையின் பரீட்சார்ந்த பயிற்சி ஒத்திகைகள் அழைப்பு | 02 |
| எண்ணெய் தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை | 190 |
| வாயு தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை | 38 |
| கப்பல்களின் வெப்ப வேலைகளுக்கான காத்திருத்தல் சேவை | 580 |
| ஆபத்தான கப்பற்சரக்குகளின் கையாளல்களுக்கான காத்திருத்தல் சேவை | 06 |
| பாலங்கள்/ குதங்கள் போன்றவை கழுவுவதற்கான நீர் வினியோகம் | 46 |
| தண்ணீரை வெளியேற்றுதல் | 02 |
| எண்ணெய் மூலம் மாசடைதலின் கட்டுப்பாட்டுப் பணிகள் | 18 |
| எண்ணெய் தாங்கிகளுக்கான பரீட்சிப்பு விஜயம் | 660 |
| இழுவைக் கலங்களுக்கு தீயணைப்பு நீர் பவுசர்கள் வழங்குதல் | 192 |
| அவசர சந்தர்ப்பங்களில் இடத்திலிருந்து ஆட்களை வெளியேற்றும் பயிற்சிகள் | 13 |
| அவசர அழைப்புக்கள் | 31 |

**தீ காப்பு நடவடிக்கைகள்**

- சகல கட்டடங்கள்/பாரம்தூக்கிகள்/கலங்கள்/கப்பல்கள் வண்டிகள் தொடர்பான தீ காப்பு பரிட்சிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- ♦ கொழும்பு மற்றும் காலி துறைமுகங்களின் தீயணைப்பு உபகரணங்களை வருடத்தில் இரு தடவைகளிலும் ஏனைய துறைமுகங்களின் தீயணைப்பு உபகரணங்களை வருடத்தில் ஒரு தடவையும் பரீட்சித்துப்பார்க்கப்பட்டன.
- ♦ ஆண்டினுள் பரீட்சிக்கப்பட்ட தீயணைப்பு உபகரணங்களின் எண்ணிக்கை 3,002 ஆகும்
- ♦ எண்ணை வங்கியில் (OIL BANK) மாதிரி தியொன்று ஏற்படுத்தி கொழும்பு தீயணைப்பு படையின் உதவியுடன் இணைந்த தீயணைக்கும் பயிற்சியொன்று நிகழ்த்தப்பட்டது.
- ♦ SAGT இல் மாதிரி தியொன்றை ஏற்படுத்தி அதன் பணியளார்களுடன் இணைந்து தியணைக்கும் பயிற்சியொன்று நடாத்தப்பட்டது.
- ♦ CICT யில் மாதிரி தீயொன்று ஏற்படுத்தி அதன் பணியாளர்களுடன் இணைந்து தீயணைக்கும் பயிற்சியொன்று நடாத்தப்பட்டது.

**வருமானம்**

**2018 ஆம் ஆண்டில் துறைமுக தீயணைப்புப் பிரிவினால் ஈட்டப்பட்ட வருமானம் பின்வருமாறு**

| **விபரம்** | **அ.டொலர்** | **ரூபா** |
|---|---|---|
| தீயணைப்புகளுக்கான அழைப்புகள் | 12,950 | 91,500.00 |
| வாயு தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை | 54,840.00 | |
| எண்ணெய் தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை | 283,372.00 | |
| வெப்ப வேலைகளுக்கான காத்திருத்தல் சேவை | 32,190.50 | |
| ஆபத்தான கப்பற்சரக்குகளுக்கான காத்திருத்தல் சேவை | 2,540.00 | 30,000.00 |
| பரீட்சிப்பு விஜயங்களுக்கான கட்டணங்கள் | 8,300.00 | |
| எண்ணெய் மாசடைவு கட்டுப்பாட்டிற்கான அறவீடுகள் | 4,700.00 | 1,010,375.00 |
| அவசர சந்தர்ப்பங்கள் | 540,00 | 10,000.00 |
| **மொத்த வருமானம்** | **399,432.50** | **141,875.00** |
| **அமெரிக்க டொல். 399.4333.50x183.00** | **73,096,330.00** | **141,875.00** |

**மொத்த வருமானம் 74,238.205**

**துறைமுக காப்பு பிரிவு**

துறைமுகத்தினுள் மேற்கொள்ளப்படும் அனைத்து வகையிலான ஆபத்தான கப்பற்சரக்குகள் கையாளப்படுகையிலான பாதுகாப்பு அணுகு முறைகளை சகல நேரங்களிலும் அவதானித்து உரிய முறையில் பேணி உறுதிப்படுத்துவது துறைமுக காப்பு பிரிவாகும்.

துறைமுக தீயணைப்புப் படையின் உதவியோடு சில இரசாயன பொருட்களின் சிதறல்கள் மற்றும் தீ விபத்துக்கள் கட்டுப்படுத்தப்பட்டன. அதேபோன்று ஆபத்தான சரக்குக் குதங்கள் மற்றும் கொள்கலன் அடங்கலான குதங்களின் பரீட்சிப்புகள் அடிக்கடி காலங்களில் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

வெப்ப வேலைகளுக்கான அனுமதி வழங்கப்படுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட தளங்களில் பரீட்சிப்புக்கள் நடாத்தப்பட்டு அனுமதி வழங்கப்படாத வெப்ப வேலைகள் தடுத்து நிறுத்தப்பட்டன. கடல் மாசடைதல் தொடர்பிலான பரீட்சிப்புகளும் மேற் கொள்ளப்பட்டன தனிநபர் மற்றும் கடல்சார் விபத்துக்கள் தொடர்பில் ஆராயப்பட்டு பகுப்பாய்வுகள் செய்யப்பட்டன.

- ♦ கொழும்பு துறைமுகத்தில் 5,5808 கப்பல்கள் வந்துள்ளதோடு அதில் ஆபத்தான கப்பல் சரக்குகள் மற்றும் தேசிய கப்பற் சரக்குகள் 445,382.145 மெட்ரிக் தொன் தரையிறக்கப்பட்டதோடு மீள் ஏற்றுமதி கப்பற் சரக்குகளாக 891,186.319 மெட்ரிக் தொன் தரையிற்க்கப்பட்டது.
- ♦ ஆபத்தான மீள் ஏற்றுமதி கப்பற்சரக்குகளைக் கொண்ட 28,602 கொள்கலன்களின் மாற்றியேற்றல்கள் மேற்கொள்ளப்பட்டன.

- மிகவும் ஆபத்தான (GPIE) பொருட்கள் 8,715 மெ.தொன்னும் வெடிக்கக் கூடிய தன்மையுடைய பொருட்கள் (GP IAE/ ITE) 6,774,742 மெ. தோன் கையாளப்பட்டது.
- ஆபத்தான கப்பற்சரக்குக் களஞ்சியங்கள் உட்பட ஏனைய களஞ்சியங்களின் பரிசோதனை உதவி துறைமுக காப்புப் பரிதோதகரின் ஒத்துழைப்புடன் காலத்துக்கேற்ப நடைபெறும்.
- வெப்ப வேலைகளுக்காக அனுமதி பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான பரிசோதனை மெற்கொள்வதற்கும், கடல் மாசடைதலை பரிசீலிப்பறதகும் கடல் மாசடைதலை தடுப்பதற்குமான வழிகாடட்டல் மற்றும் அது தொடர்பான பணிகளுக்கான அவதானிப்புகள் மேற்கொள்ளுதல்.
- இயக்கப் பகுதியின் ஊழியர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சி அமர்வுகளின் மூலம் துறைமுகத்தினுள் ஆபத்தான கப்பல் சரக்குகளைக் கையாளல், களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து செய்தல் ஆகியவற்றுடன் அதனுடன் தொடர்புபட்ட பாதுகாப்பு முறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.
- துறைமுக உதவி காப்பு பரீட்சகர்களின் உதவியோடு ஜய கொள்கலன் முனையத்தில் மற்றும் ஐக்கிய கொள்கலன் முனையத்தில் இணைக்கப்பட்டுள்ள ஊழியர்களினதும் மற்றும் மூவரின் குழுக்களுக்கு (Mooring Gangs) தனியார் பாதுகாப்பு போன்று விசேடமாக தனியார் பாதுகாப்பு உபகரணங்களை பாவித்தல் மேற்பார்வை செய்யப்பட்டது.
- துறைமுக உதவி காப்பு பரீட்சகர்களின் உதவியோடு திரவ பெற்றோலிய வாயு மற்றும் பெற்றோலியம் தரையிறக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்பார்வை செய்யப்பட்டது.
- கடல் மாசடைதல் அதிகாரசபை (MEPA) யின் அனுமதியுடன் ஒப்பந்தக்காரரினால் செய்யப்படுகின் குப்பைகள் மற்றும் மாசடைந்த எண்ணெய் (Sludge oil) அகற்றும் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்பார்வை செய்யப்பட்டது.
- துறைமுக உதவி காப்பு பரீட்சகர்களின் உதவியுடன் ஜய கொள்கலன் முனையம் மற்றும் ஐக்கிய கொள்கலன் முனைய துறைமேடைகளில் கப்பற் சரக்குகள் அடுக்கி வைக்கும் (Stacking) தொடர்ச்சியாக பரீசிலனைக்கு உட்படுத்தப்பட்டது. ஆபத்தான கப்பற் சரக்குகள் பற்றி அறிவிக்காமை தொடர்பில் கப்பல் முகவர்களுக்கு எரிதாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- சர்வதேச கடல் அபாயகரமான பொருட்கள் (IMDG) தொடர்பான சட்ட விதிமுறை 37–2014 திருத்தத்திற்கேற்ப இலங்கை துறைமுக அதிகாரசபையின் அபாயகரமான கப்பற்சரக்கு உப அட்டவணை (Scheduled Of Dangerous Goods) உரிய காலத்தில் வெளிப்படுத்துவதற்கு தயாரிக்கப்பட்டுள்ளது.
- துறைமுக காப்புப் பிவிரின் உதவியுடன் மஹபொல துறைமுக மற்றும் கடலசார் கலாசாலையினால் சர்வதேச கடலக நிறுவனத்தின் கணக்காய்வு (விடயம் 111) க்கு தேவையானவாறு துறைமுகத்தினுள் அபாயகரமான கப்பற் சரக்குகளை கையாளுதல் களஞ்சியப்படுத்துதல் மற்றும் எடுத்துச் செல்லல் தொடர்பாகவும் அதை ஒத்ததாக காப்பு பிரிவு தொடர்பான பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.

பல்வேறு வகையிலான 308 எண்ணெய் தாங்கிக் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தந்ததோடு இறக்கப்பட்ட கப்பற் சரக்குகள் விபரம் பின்வருமாறு.

| **கப்பற் சரக்கு வகை** | **அளவு (மெ.தொ)** |
|---|---|
| திரவ பெற்றோலிய வாயு | 407,763.577 |
| வாயு எண்ணெய்/ ஜெட்யு1/ கெஸொலைன் / மண்ணென்ணெய் | 3,111,037.538 |
| மசகு எண்ணெய் | 1,529,550.000 |
| எரிபொருள் | 904,323.053 |
| உராய்வு நீக்கி எண்ணெய் | 6,170.000 |

**கரையோர வெளிச்ச வீட்டு பிரிவு**

சர்வதேச கப்பல் வழிகளை நோக்கிய மேற்கு மற்றும் தெற்கு கரையோரங்களில் அமைந்துள்ள வெளிச்சவீடுகள் முறையாக பராமரிக்கப்பட்டன.

**கால்வாய்களில் அமைந்துள்ள வெளிச்ச மிதப்பிகள்**

வெளிச்ச மிதப்பிகள் அடிக்கடி பரீட்சிக்கப்பட்டு பராமரிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன வெளிச்ச மிதப்பிகள் ஒழுங்காக செயற்படாத சந்தர்ப்பங்களில் மாலுமிகளுக்கு அவை தொடர்பாக இலங்கை கப்பல் முகவர்களின் சங்கம் (CASA) கப்பல் இயக்கனர்களின் சங்கம் (SALVO) இலங்கை கப்பல் இயக்குனர்களின் சங்கம் (LSAO) மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் நீரியல் ஆயுவுப் பகுதிக்கு சுற்றுநிருபத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

**வருமானம் வெளிச்சவீட்டுக் கட்டணங்கள் (அனைத்து துறைமுகங்களினதும்)**

| | 2016<br>உண்மையான | 2017<br>உண்மையான<br>ரூ.மில்லியன் | 2018<br>திரட்டப்பட்ட<br>ரூ.மில்லியன<br>(திருத்திய) |
|---|---|---|---|
| வருமனம்/<br>வெளிச்சவீட்டுக் கட்டணங்கள் | 1,073.23 | 1,164.89 | 1,372.10 |

**துறைமுக கலப் பிரிவு**

பிரதானமாக கொழும்பு துறைமுகத்துக்கு வருகை தரும் கப்பல்களை பாதுகாப்பாக கட்டி வைத்தல்/ விடுவித்தல் போன்றவற்றுக்கு உதவுவதற்காக வழிகாட்டிக் கலங்களுக்கு கப்பல்களைக் கட்டி வைக்கும் பணியில் குழுக்களை ஈடுபடுத்துதல், தீவு மற்றும் தென் மேற்கு அலைதாங்கிகளுக்கு பல்வேறு வேலைக் குழுக்களை போக்குவரத்து செய்தல், துறைமுக நீர்ப் பகுதியை சுத்தமாக வைத்திருத்தல், ஜிராப் மிதவை பாரமுயர்த்திகளினால் அதிக பாரம்தூக்குவதும் துறைமுக கலப் பிரிவின் முக்கிய பணியாகும். வழிகாட்டி மற்றும் நங்கூரக் கலங்களின் அன்றாட பராமரிப்புகளும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

**நீரியல் அளவைப் பிரிவு**

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்படும் சகல துறைமுகங்களினதும் நீரியல் ஆய்வுகள் போன்று துறைமுகத்தின் சம்பந்தப்பட்ட பகுதிகளினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளுக்கமைய அனைத்து காணிகளின் அளவீட்டுப் பணிகளும் நில அளவையாளர்களினால் பின்வருமாறு செய்து முடிக்கப்பட்டன.

**கொழும்பு துறைமுகம்**

- ♦ உட்புகு கால்வாயின் ஆழம் அளவீடு செய்தல்
- ♦ தெற்கு துறைமுகத்தின் ஆழம் அளவீடு செய்தல்
- ♦ பிரதான நுழைவாயிலின் ஆழம் அளவீடு செய்தல்
- ♦ உள்ளக துறைமுகத் தடாகத்தினதும் நங்கூரத்தளங்களினதும் ஆழம் அளவீடு செய்தல்
- ♦ உட்புகு கால்வாயின் மிதப்பி அமைவிடங்களை அளவீடு செய்தல்
- ♦ கொழும்பு துறைமுக வரை படத்தை மீள் திருத்தம் செய்தல்
- ♦ துறைமுக உள்ளக பாதை விரிவாக்கல் திட்டத்தின் அளவீடு மற்றும் மட்ட நோக்குதல்
- ♦ ஜய கொள்கலன் முனையத்தின் V (JVT – V) செய்திட்டத்திற்காக முனையத்தின் அளவீட்டுப் பணிகளுக்கான ஆலோசனை பெற்றுக்கொடுத்தல்
- ♦ மஹர கருங்கல் தொழிற்சாலை எல்லை நிர்ணயம் மற்றும் எல்லையை அளவீடு செய்தல்
- ♦ துறைமுக நகரத்தின் எல்லையை அளவிடுதல்
- ♦ கொழும்பு ஓத நீர் ஏற்ற இறக்க தரவு நிலையத்தின் அவதானிப்பு நடவடிக்கைக்காக மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளல்

**காலி துறைமுகம்**

- கடல் அலை ஏற்ற இறக்கம் மற்றும் காலநிலை தரவு நிலையத்தை மேற்பார்கை செய்தல்
- காலியில் காணிக் குழுக் கூட்டங்களி பங்கேற்றல்
- குத்தகை உடன்படிக்கைகளுக்கான அளவீடுகள் மற்றும் திட்டமிடல் பணிகள் மேற்கொள்ளுதல்
- பிரதான அலைதாங்கியை பணரமைத்தலுக்காக புவியியல் ரீதியான ஆய்வுகளை மேற்கொள்ளல்
- விடுமுறை விடுதியாக பயன்படுத்தக்கூடிய இல்லங்களை விலைக்கு வாங்குதல் தொடர்பான கள பரீசீலனை குழுவின் பணிகளை மேற்கொள்ளுதல்
- துறைமுகத்தை தோண்டும் பணிகளை பராமரித்தல் நடவடிக்கைகளுக்காக உள்ளக துறைமுக தடாகத்தையும் பிவவேசக் கால்வாயில் ஒலி ஆள அளவீடும் செய்தல்

**திருகோணமலை துறைமுகம்**

- குத்தகை திட்டம் தயார்  செய்தலுக்கான மதிப்பீட்டுப் பணிகள்
- கடல் (அலை ஏற்ற இறக்கம்) மற்றும் காலநிலை தரவு நிலையத்தை அவதானித்தல் மற்றும் பராமரித்தல் நிறுவுதல்
- அத்துமீறப்பட்ட 150 க்கு மேற்பட்ட காணிப் பிரமாணங்ளின் அளவைப் பணிகளை பெற்றுக்கொள்ளல்
- கிழக்கு பிரதான ஆளுநரின் அமுலாக்கப்பட்ட திருகோணமலை காணிகள் தொடர்பான நிகழ்ச்சிகளில் பங்குபற்றுதல்
- வான்கல கெமரா ஆய்வு விசாரணைகள் மற்றும் தரவு பகுப்பாய்கு குழுவில் பங்குபற்றுதல்

**ஹம்பாந்தோட்டை துறைமுகம்**

- பிரவேச மற்றும் கால்வாயின் நீரியல் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளல்
- நில அளவைத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சுவிகரிக்கப்பட்டுள்ள நிர்மாண கடல் எல்லைக்கு அளவைப் பணிகளை மேற்கொள்ளல்
- திட்ட பொறியியலாளர்களினால் வழங்கப்பட்ட ஏனைய தொடர்புபடும் ஆய்வு நடவடிக்கைகள்

**காங்கேசன்துறை துறைமுக**

- காங்கேசன்துறை துறைமுகத்தின் புரமைப்புத் திட்டம் நில அளவை திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் அளவிடப்பட்ட பணிகள் மேற்கொள்ளல்
- புதிய துறைமேடையில் நீரியல் ஆய்வுகள் மற்றும் மட்டமாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளல்
- துறைமுக எல்லை மற்றும் புதிய வாயில் தொகுதி பொருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளல்
- காங்கேசன்துறை  துறைமுகத்துக்காக தயாரிக்கப்பட்ட விபரமடங்கிய ஆவணங்களின் வர்த்தமாணியை வெளியிடுதல்

**ஒலுவில் துறைமுகம்**

- நஷ்டஈடு வழங்குதல் மற்றும் மீள் குடியேற்றக் குழுவின் நடவடிக்கைள் மேற்கொள்ளுதல்
- மீள் குடியேற்றுவதற்கு தகுதி பெற்றவர்கள் என அடையாளம் காணப்பட்ட நபர்களுக்காக மீள் குடியேற்றல் தொடர்பான ஆய்வு நடாத்துதல்

- துறைமுக உட்பிரவேசப் பாதையில் நீரியில் ஆய்வுகளும் மட்டமாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளல்
- அமைச்சரினால் திட்டமிடப்பட்ட ஒலுவில் துறைமுக விஷேட குழுக் குழுக்கூட்டத்தில் பங்குபற்றுதல்

**கடல் மைல் பிரிவு**

கப்பல்களுக்கு சேவைகள் வழங்குதல் லோஞ்ச் இயக்குபவர்கள், கடலக அளவையாளர்கள், சிறிய மற்றும் பாரிய பழுதுபார்ப்பு வேலைத்தளங்கள், எண்ணெய் மற்றும் எண்ணெய் கலந்த நீர், மற்றும் குப்பைகள் அகற்றுவதற்கான சேவைகள் தொடர்பாக வருடாந்தம் பதிவு செய்து கொள்ளல் மற்றும் கப்பல்சேவை வழங்குவதற்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கலும் இப்பிரிவினால் இணைப்பாக்கம் செய்யப்பட்டன.

| அனுமதிப்பத்திரத்தின் பெயர் | வழங்கப்பட்ட தொகை | வருமானம் (ரூபா) |
|---|---|---|
| கப்பல்களை பழுதுபார்க்கும் அனுமதிப்பத்திரம் | 141 | 13,503,332.49 |
| டொக்யார்ட் அனுமதிப்பத்திரம் | 65 | 2,818,017.59 |
| அளவை அனுமதிப்பத்திரம் | 40 | 3,414,621.78 |
| கப்பல்களுக்கான சேவைகள் வழங்குவோரின் அனுமதிப்பத்திரம் | 96 | 8,228,619.90 |
| படகு அனுமதிப்பத்திரம் | 46 | 5,364,030.47 |
| எஸ்.ஏ.ஜீ.ரீ மற்றும் ஏனைய அனுமதிப்பத்திரம் | 12 | 541,053.76 |
| **மொத்தம்** | | **33,869,675.92** |

## அபிவிருத்தி செய்திட்டங்கள்

### திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பகுதி

**1. கிழக்கு கொள்கலன் முனையம் (ECT) – கட்டம் 1**

**கொழும்பு துறைமுக விரிவாக்கல் செய்திட்டம்**

**கருத்திட்டம் தொடர்பான விபரங்கள்**

தெற்கு துறைமுகத்தின் இரண்டாவது ஆழத்தில் கூடிய கொள்கலன் முனையமாக கிழக்கு முனையம் இருப்பதோடு வருடாந்தம் 2.4 மில்லியன் 20 சம அலகுகளைக் கொண்ட பரிமாணம் மற்றும் 1200 மீட்டர் கொண்ட மேடைச்சுவரையும் 18 மீட்டர் ஆழத்தையும் இது கொண்டிருக்கின்றது. கிழக்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்து கையாளல் மேற்கொள்வதற்கு நிர்மாணித்து, கையாளல் மேற்கொண்டு, ஒப்படைக்கப்படும் (BOT) சலுகைக் கொடையை வழங்குவதற்கு இலங்கை துறைமுக அதிகார சபை எதிர்பார்க்கின்றது. இலங்கை துறைமுக அதிகாரசபை தற்போது கிழக்கு கொள்கலன் முனைய மேடைச்சுவரில் 440 மீட்டரும் அதனை அண்டிய முனையப் பிரதேசத்தையும் அதனோடு தொடர்புபடும் ஏனைய வசதிகளையும் அபிவிருத்தி செய்துள்ளது.

**தற்போதைய முன்னேற்றம்**

2016 யூன் 06 ஆம் திகதி “அபிப்பிராயம் தெரிவிப்பதற்கான விளம்பரம்” (Expression of Interest) வெளிப்படுத்தப்படுதலோடு செய்திட்டத்தின் பூர்வாங்க தகுதிகாண் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டு 2016 செப்டெம்பர் 20 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டது. அபிப்பிராயம் தெரிவிப்பதற்கான அழைப்புக்கள் 2016.09.20 ஆம் திகதி முடிவடைந்து அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கலந்துரையாடல் குழுவினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியோடு கிடைக்கப்பெற்ற அபிப்பிராயம் தெரிவிக்கும் விண்ணப்பங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை குழுவினால் 2016.11.23 மற்றும் 2016.12.07 ஆகிய திகதிகளில் நடைபெற்ற கூட்டங்களின் போது செய்திட்டத்திற்கான

முதலீட்டாளர் ஒருவரை தெரிவு செய்து கொள்வதற்கு உரிய குறிப்பான வழிகாட்டல்களை அனுசரிக்க வேண்டுமென அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. ஒட்டுமொத்த கேள்விவிலை செயற்பாட்டின் போது மேலதிக தெரிவு வழிகாட்டல்கள் அனுசரிக்கப்படுதலின் எதிர்மறையான பெறுபேறுகளை சுட்டிக்காட்டி கௌரவ துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரினால் அமைச்சரவை பத்திரமொன்று முன்வைக்கப்பட்டது. குறித்த விடயம் பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை குழுவில் மீண்டும் முன்வைக்கப்படுவதற்கு அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டதோடு கேள்விவிலையின் செயற்பாடு 2016.12.21 ஆம் திகதியில் இருந்து செயற்படாதுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் தயாரிக்கப்பட்ட சலுகை உடன்படிக்கையின் நகல் அறிக்கை இலங்கை துறைமுக அதிகார சபையினால் மீளாய்வு செய்யப்பட்டு அது தொடர்பான கருத்துரைத்தல்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் முன்வைக்கப்பட்டுள்ளன.

கொழும்பு துறைமுகத்தில் ஆழத்தில் கூடிய புதிய கொள்கலன் முனையங்களுக்கான சாத்தியவள தேவைப்பாடு கவனத்திலெடுக்கப்பட்டு கிழக்கு கொள்கலன் முனையம் கட்டம்-I இல் கையாளல்களை மேற்கொள்வதற்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு கௌரவ துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் அமைச்சரவை பத்திரமொன்றை முன்வைத்துள்ளார்.

**2. காலி துறைமுகத்தில் உல்லாசப் படகுத்தள செய்திட்டம்**

இலங்கை துறைமுக அதிகார சபை ஊடாக காலி துறைமுகம் விரிவாக்கும் செயற்பாட்டில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

சுற்றுலாத்துறை மற்றும் வணிக நடவடிக்கைகளுக்கு பிராந்திய துறைமுகமொன்றாக காலி துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது அரசாங்கத்தினதும் இலங்கை துறைமுக அதிகார சபையினதும் ஒருமித்த நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டிருக்கும் உல்லாச படகுகளுக்கான வசதிகள் வழங்கப்படும் பிரதேசத்தில் உல்லாச படகுகள் இயக்கப்படுவதனை அபிவிருத்தி செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

மேற்குறித்த செய்திட்டங்களை தனியார் துறையுடன் இணைந்து அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை துறைமுக அதிகார சபை எதிர்பார்க்கின்றது. குறித்த பிரேரணை கோரலின் நோக்கம், ஆர்வம் காட்டும் நபர்களிடமிருந்து பிரேரணைகளை கோருதல் மற்றும் காலி துறைமுக உல்லாச படகுத்தளத்தினை இயக்குவதற்கு அவற்றை திட்டமிடுவதிலும் நிர்மாணிப்பதிலும் ஆரம்பம் செய்து, இயக்கம் மேற்கொண்டு, கையளிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட முடியுமென்பதனை நிரூபித்து அதற்கான வர்த்தக,முகாமைத்துவ, தொழில்நுட்ப மற்றும் நிதி ஆற்றல்களை காண்பிக்கும் நம்பிக்கைமிகு கேள்விவிலைதாரர்களை அடையாளம் காண்பதே ஆகும்.

அதன்படி காலி துறைமுகத்தின் உல்லாச படகுத்தளத்தில் இயக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நிதி வழங்குதல்,திட்டமிடுதல்,நிர்மாணித்தல் மற்றும் கையாளல்களை மேற்கொள்ளல் தனியார் துறையினால் மேற்கொள்ளப்படும்.உயர் நிலையின் சர்வதேச தரங்களுக்கேற்ப உல்லாச படகுகளுக்கான வசதிகளை நிர்மாணித்து இயக்கம் மேற்கொண்டு, ஒப்படைப்பது முதலீட்டாளரின் பொறுப்பாகும். இதில் உல்லாச படகுத் தொகுதியொன்றும் (Marina Concess Complex) உள்ளடங்குவதோடு உண்டிச்சாலைகள்,வர்த்தக கூடங்கள்,தொடர்புபடும் சேவைகள்,உல்லாச படகுச் சங்கங்கள்,களியாட்ட நிகழ்வு மேம்பாட்டு வேலைத்திட்டங்கள்,விருந்துபசாரச் சேவைகள் அடங்கலான சகல சேவைகளும் வழங்கப்படுதலின் மூலம் படகு போக்குவரத்துக்குரிய அனைத்து உல்லாச நடவடிக்கைகளுக்கும் காலி துறைமுகம் கவர்ச்சிகர நிலையமாக மாற்றப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரேரணைகள் முன்வைக்கப்படும் காலம் 2018 ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதியுடன் முடிவடைந்து பிரேரணைகள் மதிப்பிடப்படுவதற்கான பணிகள் இடம் பெற்று வருகின்றன.

### 3. பயணிகள் முனைய செய்திட்டம் (பண்டாரநாயக்க துறைமேடை)

உல்லாசத்துறையில் வேகமாக முன்னேறிவரும் சந்தையின் ஒரு பாகம் கடல் உல்லாச கைத்தொழில் துறையுமாகும். இது வழிகாட்டிக் கட்டணங்கள், கப்பல்களை கட்டிவைத்தல் போன்ற துறைமுகப்பணிகளுடன் மிகவும் சமீபமாக தொடர்புபடுவதோடு பயணிகளுக்கான வசதிகளை வழங்குவது துறைமுக அதிகாரிகளின் பொறுப்பாகும்.குறித்த தொழிற்துறையின் விருத்திக்கு குறித்த வசதிகள் வழங்கப்படுகின்ற போதிலும் பணிகளை மேம்படுத்துவதற்கும் வசதிகளை விருத்தி செய்வதற்குமான எதிர்கால அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பிப்பதற்கு வேறு சந்தைகளை கையாள்வோரின் ஒத்துழைப்பும் அவசியமாகின்றது. இந்தப் பின்னணியில் வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான மாதிரி ஒன்றை ஏற்படுத்துவதிலும் சம்பந்தப்பட்ட உல்லாச சேவைகளை கையாள்வதிலும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு உதவுவதற்கு இப்பணியின் குறித்த துறையில் ஈடுபட்டிருக்கும் செயற்பாட்டாளர்களில் விருத்தி ஆற்றல்களையும் எதிர்கால திட்டங்களை கொண்டுள்ளவர்களையும் இனங்காண்பது அவசியமாகும்.

இந்த செய்திட்டத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறுவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது.

### 4. திருகோணமலை துறைமுக அபிவிருத்தி செய்திட்டம்

**செய்திட்டம் தொடர்பான விபரங்கள்**

திருகோணமலைக்கான கோட்பாட்டு ரீதியான பிரதான பாரிய திட்டம் குறுகிய மற்றும் நீண்ட கால செய்திட்டப் பிரேரணைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. பிரேரணை கோரலில் தெரிவு செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட ஓசன் பிக் மற்றும் டிமோ கம்பனிகளின் முதலீட்டுப் பிரேரணைகள்,“பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை குழுவிடம்” சமர்ப்பிக்கப்பட்டு மீன் பண்ணை பற்றியதான பிரேரணை செயலாளர்களின் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை துறைமுகத்திலிருந்து நிலக்கரி மற்றும் க்லிங்கர் புகையிரதத்தினால் போக்குவரத்து செய்வதனை முன்னுரிமை செய்திட்டமொன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது. புகையிரத பாதையை அடையாளம் காண்பதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை, திருகோணமலை அரசாங்க அதிபர் மற்றும் புகையிரத திணைக்களம் ஆகியவை ஒன்றாக இணைந்து செயற்படுகின்றன. புகையிரத திணைக்களத்தினால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அது முடிவடைந்ததன் பின்னர் எதிர்கால உட்பிரவேச பாதை மற்றும் மீள் குடியேற்றுவதற்கான திட்டமும் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் தயாரிக்கப்படும்.

கொழும்பு துறைமுகத்தின் கப்பற்சரக்கு நிலையம் – 02 இன் (CFS – 02) கூரை அமைப்பு மற்றும் தூண்களைப் பயன்படுத்தி 24 மீட்டர் x 96 மீட்டர் அளவிலான புதிய களஞ்சியசாலையின் நிர்மாணப்பணிகள் முடிவடைந்துள்ளன. திருகோணமலை துறைமுகத்தின் 2 மற்றும் 3 ஆம் களஞ்சியசாலைகள் அமைந்துள்ள இடத்திலேயே புதிய களஞ்சியசாலை அமைக்கப்பட்டுள்ளதோடு இது நிலக்கரி, க்லிங்கர் மற்றும் பொதுவான கப்பற்சரக்குகளை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு பயன்படுத்தப்படும்.

இருக்கும் இல. 6 ஆம் களஞ்சியசாலை அழிவடைந்த நிலையில் உள்ளது. எனவே இலங்கை துறைமுக அதிகாரசபையினால் இல. 06 ஆம் களஞ்சியசாலை அகற்றப்பட்டு அதே இடத்திலேயே 30 மீட்டர் x 96 மீட்டர் அளவிலான புதிய களஞ்சியசாலையொன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டு பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை துறைமுகத்தின் உட்பிரவேச கால்வாயின் இடது மற்றும் வலப் பக்கங்களில் நீரில் அமிழ்த்தப்பட்டுள்ள சங்கிலி பயன்பாட்டில் கட்டிவைக்கப்பட்டிருக்கும் தன்னிச்சையாக எரியும் சூரிய சக்தியினால் செயற்படும் 14 மின்குமிழ்கள் பொருத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இந்த செய்திட்டத்தின் கீழ் வெளிச்சவீடுகள் மீள் செயற்படுத்தப்படவும் உள்ளன. விலைமதிப்பிடப்பட்ட செய்திட்ட ஆகுசெலவு யென் 01 பில்லியன் ஆகும். செய்திட்டம் நடைபெற்று வருகின்றது.

இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய காணிகளுக்கான டோனா கமெரா மூல ஆய்வு (Drone Survey) முடிவடைந்து இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய காணிகளை அடையாளம் காணும் செயற்பாட்டில் இலங்கை துறைமுக அதிகாரசபை ஈடுபட்டுள்ளது.

**5. காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி**

**செய்திட்ட விபரங்களும் தற்போதைய நிலைமையும்**

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் உடன்பாட்டுடன் காங்கேசன்துறை துறைமுகத்தில் இயக்கங்களை ஆரம்பிக்கப்படும் பொருட்டு இலங்கை துறைமுக அதிகாரசபையிடம் 50 ஏக்கர் நிலப் பிரதேசத்தை ஒப்படைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதில் 15 ஏக்கர் நிலம் பூர்வாங்கமாக பாதுகாப்பு வேலி அமைத்து வாயில் மற்றும் களஞ்சிய வசதிகளோடு துறைமுக இயக்கங்களை பாதுகாப்பாக மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்துக்கான நில அளவைப்படம் (Survey Map) யாழ்ப்பாண நில அளவைத் திணைக்களத்திலிருந்து பெற வேண்டியுள்ளதோடு எல்லை வேலி/மதில் நிர்மாணித்து வாயில் அமைப்பு மற்றும் களஞ்சியம் அமைப்பதற்கு நில அளவை வரைபடத்தை பெறுவதற்கு இலங்கை துறைமுக அதிகார சபை எதிர்பார்க்கின்றது.

**6. தேசிய துறைமுகப் பெருந்திட்டம்**

**செய்திட்ட விபரங்களும் தற்போதைய நிலைமையும்**

போக்குவரத்துத்துறை தொடர்பில் இலங்கை அரசாங்கம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழில்நுட்ப உதவியை பெற்றுக் கொண்டுள்ளது,மேற்குறிப்பிட்டுள்ள தொழில்நுட்ப உதவியுடன் தேசிய துறைமுக பாரிய திட்டத்தை தயாரிப்பதற்கான தொழில்நுட்ப உதவியை பெற்றுக்கொள்வது தொடர்பில் அமெரிக்க டொலர் மில்லியன 1.5 தொகை கொடையாக வழங்குவதன் மூலம் துறைமுக துறைக்கு ஒத்துழைப்பை தெரிவித்துள்ளது.அதன்படி தேசிய துறைமுக பாரிய திட்டத்தை தயாரிப்பதற்கு 2016 நவம்பர் மாதம் நெதர்லாந்தின் Maritime & Transport Business Solutions (MTBS) கம்பனியின் சேவையை 18 மாத காலப்பகுதிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி பெற்றுத்தந்துள்ளது. தேசிய துறைமுக பாரிய திட்டம் தயாரிக்கப்படுகையில் இந்த ஆலோசனைச் சேவையின் விடய உள்ளடக்கத்தில் பின்வரும் விடயங்கள் அடங்கி இருக்கும்.

(அ) தேசிய துறைமுக்கொள்கை (NPD)
(ஆ) கொழும்பு துறைமுக அபிவிருத்தித் திட்டம்
(இ) திருகோணமலை துறைமுக அபிவிருத்தித் திட்டம்
(ஈ) சேவைகளை வழங்குதல் மற்றும் துறைமுகம் சம்பந்தப்படும் பிரதேசங்களை தொடர்பு படுத்தப்படுவதற்கு முன்னோடியாக அமைந்த செய்திட்டங்கள்.
(உ) துறைமுகத்தினுள் உட்பிரவேசிப்பதற்கான அதிவேக மேம்பால செய்திட்டத்தின் இறுதித்திட்டம் தொடர்பான தொழில்நுட்ப மீளாய்வு . (PAEH)

கொழும்பு துறைமுகம் மற்றும் திருகோணமலை துறைமுகங்களினது பூர்வாங்க சாத்தியவள கட்டங்களின் ஆய்வு தொடர்பில் பின்வரும் 08 குறுகிய கால முன்னுரிமை செய்திட்டங்கள் இந்த ஆய்வின் போது அடையாளம் காணப்பட்டுள்ளன. பூர்வாங்க சாத்தியவள கட்டத்தின் விடயத்துறையின் வரைவிலக்கணம், நிதி ஆற்றல், பொருளாதார ஆற்றல் மற்றும் அபிவிருத்தி மாதிரி போன்றவை இதனுள் அடங்கும்.

**கொழும்பு துறைமுகம்**

1. ஜய கொள்கலன் முனையம் நவீனமயப்படுத்தும் திட்டம்
2. கொழும்பு துறைமுகத்தில் திரவமாக்கப்பட்ட இயற்கை வாயுவின் (LNG) இயக்கம் மற்றும் களஞ்சியப்படுத்தல்
3. கொழும்பு துறைமுகத்தின் பயணிகள் முனையம்
4. துறைமுக சன சமூக தொகுதி (Port Community System)

5. பண்டாரநாயக்க துறைமேடையின் களஞ்சியங்களை வேறு இடங்களுக்கு கொண்டு செல்லும் திட்டம
6. இளவரசர் விஜய மேடையை நவீனமயப்படுத்தும் திட்டம்

**திருகோணமலை துறைமுகம்**

1. அஷ்ரப் துறைமேடையை நவீனமயப்படுத்தும் கட்டம் -1
2. ஆழ் கடல் எண்ணெய் துறைமேடை

பூரவாங்க சாத்தியவள ஆய்வுகள் ஒன்றிணைக்கப்பட்ட அனைத்து இறுதி அறிக்கைகளையும் MTBS நிறுவனம் முன்வைத்துள்ளது.

## வெளித் துறைமுக செய்திட்டப் பகுதி

### 1. காங்கேசன்துறை துறைமுகம் புனரமைப்புச் செய்தல்

வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யும் அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைய பூர்வாங்க துறைமுக வசதிகளை ஸ்தாபித்தும் விரிவாக்கியும் வணிக துறைமுகமொன்றாக காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

**பிரதான புனரமைப்புப் பணிகள் (இந்திய எக்ஸிம் வங்கியினால் வழங்கப்படும் வெளிநாட்டு கடன் நிதியம் மூலம் நிதி ஈடுபடுத்தப்பட உள்ளது)**

♦ காங்கேசன்துறை துறைமுக புனரமைப்பு தொடர்பில் அமெரிக்க டொலர் 45.27 மில்லியன் தொகை நிதியுதவியை பெற்றுக்கொடுப்பதற்கு 2018 சனவரி 10 ஆம் திகதி கடன் வழங்கும் உடன்படிக்கையொன்று இலங்கை அரசாங்கம் மற்றும் இந்திய எக்ஸிம் வங்கிக்கிடையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

♦ இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கிடையில் கடன் வழங்கும் உடன்படிக்கையொன்று 2018 அக்டோபர் 17 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளது.

♦ செய்திட்டத்திற்கு தகுதியான செய்திட்ட முகாமைத்துவ ஆலோசகரொருவரை எக்ஸிம் வங்கியினால் தெரிவு செய்வதற்கான பூர்வாங்க தகுதியின் ஆவணப் பரீட்சிப்பு முடிவடைந்து பூர்வாங்க தகுதிகளைப் பெற்றுள்ள நபர்களின் பெயர்ப்பட்டியலில் செய்திட்ட முகாமைத்துவ ஆலோசகரொருவர் தெரிவு செய்து கொள்வதற்கான விலைகோரல் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டு 2019 அக்டோபர் மாதத்தில் தெரிவு செய்யப்பட்ட செய்திட்ட முகாமைத்துவ ஆலோசகரிடம் ஒப்பந்தம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

♦ பரீட்சாத்த அட்டவணைக்கேற்ப (Tantative Schedule) பிரதான நிர்மாணப்பணிகள் 2020 ஆண்டின் யூலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

**பிரதான புனரமைப்புப் பணிகளை இலகுபடுத்தலின் பூர்வாங்க அபிவிருத்தி நடவடிக்கைகள் (இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதி பயன்பாட்டில்)**

♦ பிரதான அபிவிருத்தி செய்திட்டம் நடைமுறைப்படுத்துவதனை இலகுபடுத்துவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை தனது சொந்த நிதிப் பயன்பாட்டில் சில பூர்வாங்க அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. எல்லை வேலி/மதில் மற்றும் வாயில் அமைப்பின் நிர்மாணம் 2018 அக்டோபர் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு முற்பணமாக ரூபா 8.5 மில்லியன் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டுள்ளது. இருக்கும் அலுவலக கட்டடத்தினை மாற்றும் வேலைகள் முடிவடைந்து எல்லை மதில் நிர்மாணிப்பதற்கான அத்திவாரமிடுதலிலான தோண்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**2. திருகோணமலை துறைமுக அபிவிருத்தி செய்திட்டம்**

- திருகோணமலை துறைமுகத்தில் மொத்தத் தொகை கப்பற்சரக்குகளுக்கு இருக்கும் உயர் கிராக்கியை நிறைவு செய்வதற்கு திருகோணமலை துறைமுகத்தின் அஷ்ரப் துறைமேடையை 160 மீட்டரினால் நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- தேவையான பூர்வாங்க அங்கீகாரங்களை முகாமைத்துவ குழுவிலிருந்தும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபையிலிருந்தும் பெறப்பட்டு செய்திட்டப்பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கான அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது.

- செய்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளாக அஷ்ரப் துறைமேடையை விரிவுபடுத்தும் பணி தொடர்பில் உத்தேச பிரதேசம் உள்ளடங்கும் வகையில் "பூர்வாங்க நில ஆய்வு" (Borehole Investigation) மேற்கொள்ளப்படுவது அவசியமாகும். இதன்படி பூர்வாங்க நில ஆய்வை மேற்கொள்வதற்கு விலை கோரல் கோரப்பட்டு விலைதாரரொருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 2019 ஆண்டின் முற்பகுதியில் கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்படும்.

**3. ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி செய்திட்டத்தின் கட்டம் - II**

- செய்திட்டத்தின் நிர்மாணப்பணிகள் நிறைவு செய்யப்பட்டு செய்திட்டம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. பிழைகளை சரிசெய்வதற்கான ஒரு வருட பொறுப்பு வகிக்கும் காலம் (Defect liability period) நடைமுறையிலுள்ளதோடு. தடுத்து வைப்புப் கட்டணமும் 2019 ஆம் ஆண்டில் விடுவிக்கப்படவுள்ளது.

- அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு 2017 யூலை மாதத்தில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் அரச/தனியார் கூட்டுரிமையின் மீது இயக்கங்களை மேற்கொள்வதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை, வ/ப சைனா மேர்சன்ட் போர்ட் ஹோல்டிங் கம்பனியுடன் சலுகைக்கான உடன்படிக்கையொன்றை ஏற்படுத்தியுள்ளது. இதன்படி ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்குரிய அனைத்து துறைமுக இயக்கம்/துறைமுக சொத்துக்கள்/நிர்வாக நடவடிக்கைகளும் ஹம்பாந்தோடடை இன்டநெஷனல் போர்ட் சேர்விசஸ் கம்பனியிடமும் ஹம்பாந்தோட்டை இன்டநெஷனல் போர்ட் குரூப் கம்பனியிடமும் பொறுப்பளிக்கப்பட்டுள்ளன.

## ஒப்பந்தம் மற்றும் வடிவமைப்புப் பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படும் சிவில் பொறியியல் செய்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதும் துறைமுகம் சம்பந்தப்பட்ட அமைப்புக்களை திட்டமிடுவதும் ஒப்பந்தம் மற்றும் வடிவமைப்புப் பகுதியின் பிரதான பொறுப்பாகும். துறைமேடைச்சுவர்கள், பாலங்கள், கட்டடங்கள் மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபையின் பிரதான வர்த்தக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்கான பாதைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளின் அமைவுகளை திட்டமிடுவதும் இப்பகுதிக்குரியதாகும். மேலும் சகல பிராந்திய துறைமுகங்கள் உள்ளடங்கலாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து பகுதிகளினதும் சகல பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி செய்திடடங்களின் திட்டமிடும் பணிகளும் இப்பகுதியினால் நிறைவேற்றப்படுகின்றன. இந்த செய்திட்டங்களுக்குரிய விலைகோரல் பணிகள், ஆலோசனைச்சேவைகள், நிர்மாண மேற்பார்வை, தரக்கட்டுப்பாடு, ஒப்பந்த முகாமைத்துவம், செய்திட்ட முகாமைத்துவம், மற்றும் நடைமுறைப்படுத்தலும் இதனுள் அடங்கும்.

மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு மேலதிகமாக கொழும்பு துறைமுகத்தின் சிறிய கட்டுமாணப்பணிகளை அதன் நேரடி தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு மேற்கொள்வதும் இப்பகுதியின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டினுள் இப் பகுதியினால் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் பின்வருமாறு சாராம்சம் செய்து வழங்கப்படுகின்றன.

## 1. கொழும்பு துறைமுகத்தின் உள்ளக துறைமுக பாதை விரிவாக்குதல்

தெற்கு துறைமுக அபிவிருத்திப் பணிகள் முடிவடைதலோடு துறைமுகத்தினுள் ஏற்படக்கூடுமென எதிர்பார்க்கப்படும் பாதைகளின் நெருக்கடிகளுக்கு முகங்கொடுப்பதற்காக இங்குரு கடைச் சந்தியிலிருந்து வாசல் இல 01 வரை தற்போதுள்ள 04 நிரல்களைக்கொண்ட உள்ளக துறைமுக பாதையை 06 நிரல்களாக விரிவுபடுத்தப்பட வேண்டியுள்ளது. பாதையின் விரிவாக்கலுக்கு இணையாக கொழும்பு கோட்டை பிரதேசத்தில் இருக்கும் 02 பாலங்களையும் துறைமுக அணுகு பாதையிலுள்ள புளுமெண்டல் வீதிக்கு ஊடாகச் செல்லும் பாலத்தையும் விரிவாக்குதல் அவசியமாகும்.

ஆறு நிரல்கள் வரை பாதை விரிவாக்கப்படுவதற்கு தற்போதிருக்கும் கட்டடங்கள், அலுவலகங்கள்,வேலைத்தளங்கள் மற்றும் உபகரணங்கள் போன்றவற்றை உடைத்து அகற்றி வேறு இடத்தில் நிறுவப்பட வேண்டியுள்ளன. உள்ளக துறைமுக பாதையின் விரிவாக்கல் பணிகள் 2013 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு கட்டடங்களை உடைக்கும் பணிகள் முற்றாக முடிவடைந்த பிரதேசங்களில் நிர்மாண வேலைகள் கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### செய்திட்டத்தின் முன்னேற்றம்

உள்ளக துறைமுக பாதையின் விரிவாக்கல் நடவடிக்கைகள் கட்டங்களாக இடம்பெற்றுள்ளன. 2018 ஆண்டில் ரூபா 81.79 மில்லியன் தொகையின் வேலைகள் ( நிதிசார் முன்னேற்றம்) பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 2018 டிசெம்பர் மாதம் வரையில் இந்த செய்திட்டத்தின் மொத்த நிதிசார் முன்னேற்றம் ரூபா 847.89 மில்லியன் ஆகும்.

CFS–III களஞ்சியத்திலிருந்து வைத்திய நிலையம் வரையிலான பாதையின் நிர்மாணம் முடிவடைந்து கப்பல் கட்டும் தளத்தின் (DOCKYARD) வளைவிலிருந்து டி சேரம் வாயில் வரையிலான பாதையின் நிர்மாணப்பணிகள் இடம் பெற்று வருகின்றன.

ஹர்த்தால் பாலத்தின் படகு முனையத்திலிருந்து இலங்கை கடற்படைத்தளம் வரையிலான பாதையின் நிர்மாணப்பணிகளுக்கு விலைகோரல்கள் மேற்கொள்ளப்பட்டு அமைச்சின் கொள்வனவுக் குழுவின் தீர்மானத்திற்கமைய திருத்தப்பட்ட விலைகோரல் ஆவணங்களுடன் 2019 ஆண்டில் இந்த விலைகோரலை மீள கவனத்துக்கு எடுத்து மீண்டும் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 2. துறைமுக உடபிரவேச பாதையை விரிவாக்குதல்

மண் பரிசோதனை நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளதோடு பாதை விரிவாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் மோசமான மண் படிவமொன்று (peat) உள்ளதால் மண் மேம்படுத்தப்பட வேண்டுமென அடையாளம் காணப்பட்டுள்ளது. மண் மேம்பாடு தொடர்பில் திட்டமிடுவதற்கும் பாதை விரிவாக்குவதற்கும் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திலிருந்து (CECB) பிரேரணையொன்று பெறப்பட்டு வேலைகள் மத்திய பொறியியல் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

### செய்திட்டத்தின் முன்னேற்றம்

மண் மேம்பாடு தொடர்பான பூர்வாங்க அறிக்கை மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்தினால் முன்வைக்கப்பட்டு திட்டமிடல்/வடிவமைப்பினை நிறைவு செய்வதற்கு துறைமுக உட்பிரவேச அதிவேக மேம்பால செய்திட்டத்தின் இறுதியான வரிசையடிப்படையின் விபரங்களை (Final Trace) பெற்றுத்தருமாறு மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்தினால் வேண்டுகொள் முன்வைக்கப்படடுள்ளது. ஆயினும் 2018 மார்ச் 23 ஆம் திகதி வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தின் பிரகாரம் மென்மையான மண் தரை கடினமாக்கும் பரிசோதனை (Soft ground Treatment)

அவர்களினால் மேற்கொள்ளப்பட்டு உத்தேச துறைமுக உட்பிரவேச அதிவேக மேம்பால செய்திட்டத்தோடு துறைமுக உட்பிரவேச பாதை விரிவாக்குவதற்கு திட்டமிடப்படும்.

### 3. கொழும்பு துறைமுகத்தின் முனையங்கள்/மேடைகளை புனரமைப்புச் செய்தல்

**பண்டாரநாயக்க மேடையில் கல் பதித்து தார் இடுதல்**

முழு மேடைப்பிரதேசமும் கிழிறங்கியுள்ளதால் பண்டாரநாயக்க மேடையினை மேம்படுத்துவது அவசியமென இனங்காணப்பட்டுள்ளது.

பாண்டாரநாயக்க துறைமேடையில் கல் பதித்து தார் இடும் பணிகள் கட்டம் I 2017 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது

**செய்திட்டத்தின் முன்னேற்றம்**

பாண்டாரநாயக்க துறைமேடையில் கல் பதித்து தார் இடும் பணிகள் கட்டம் II இல் தார் இடும் பணிகள் ரூபா 28.05 மில்லின் ஒட்டுமொத்த ஆகுசெலவில் 2018 நிறைவு செய்யப்பட்டன.

### 4. ஜய கொள்கலன் முனையத்தின் 3 ஆம் மேடையினை புனரமைப்புச் செய்தல் (M மற்றும் N நிரல்கள்)

கொள்கலன்கள் அடுக்கும் பிரதேசங்கள் மற்றும் பாதைகளின் அநேகமானவை கீழிறங்கி குழிகளாக உள்ளதால் தற்போதிருக்கும் கொள்கலன்கள் அடுக்கும் முனையமும் உள்ளடங்கலாக ஜய கொள்கலன் முனையம் -3 இலுள்ள பாதைகளோடு கொள்கலன்கள் அடுக்கும் முனையத்தையும் புனரமைப்பது அவசியமாகும். முனையத்தில் அன்றாடம் மேற்கொள்ளப்படும் கொள்கலன் கையாளல் பணிகளுக்கு இடையூறு ஏற்படாதவாறு புனரமைப்புப் பணிகள் கட்டங்களாக மேற்கொள்பட்டுவருகின்றன.

**செய்திட்டத்தின் முன்னேற்றம்**

ஜய கொள்கலன் முனையத்தின் 3 ஆம் மேடையின் M மற்றும் N நிரல்களின் புனரமைப்புப் பணிகள் ரூபா 49.68 மில்லியன் மொத்த ஆகுசெலவில் 2018 ஆண்டின் இரண்டாம் காலாண்டில் நிறைவு செய்யப்பட்டன.

### 5. விஜயகுமார துறைமேடையில் கல பதித்து தார் இடுதல் கட்டம் II

விஜயகுமார துறைமேடையின் முழு முனையப் பிரதேசமும் பாதிப்படைந்துள்ளதால் மேற்றளம் செப்பனிடுவதும் மழை நீர் வடிகான் தொகுதியை மேம்படுத்துவதும் அவசியமாகும். துறைமுக இயக்கங்களில் ஏற்படும் தாக்கத்தை குறைப்பதற்கு இரண்டு கட்டங்களின் கீழ் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்று திட்டமிடப்பட்டுள்ளது.

கட்டம்-I இன் ஒப்பந்தம் 2017 சனவரி மாதம் ரூபா 37.6 மில்லியன் ஒட்டுமொத்த ஆகுசெலவிற்கு ஒப்படைக்கப்பட்டு பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

கட்டம-II க்கான களை திட்டமிடுதல் மற்றும் வடிவமைப்பு வேலைகள் நிறைவடைந்துள்ளதோடு செய்திட்டம் 2019 ஆண்டில் நிறைவு செய்யப்படவுள்ளது.

### 6. கொள்கலன் கப்பல்சரக்கு கையாளல் நிலைய – 02 (CFS II) வேலைத்தளங்களை வேறு இடங்களுக்கு கொண்டு செல்லல்

இங்குறு கடை சந்தியிலிருந்து வாயில் இல 01 வரையிலான துறைமுக உடபிரவேச மேம்பால செய்திட்டம் காரணமாக அலுவலகங்கள், வேலைத்தளங்கள் மற்றும் கட்டடங்களை வேறு இடமொன்றக்கு கொண்டு செல்லப்படவேண்டுமென இனம் காணப்பட்டுள்ளது. அதன்படி இரண்டு இயந்திர உபகரண வேலைத்தளங்களும் ஒரு மின்சார வேலைத்தளமும் CFS II அமைந்துள்ள பிரதேசத்திற்கு கொண்டு செல்லப்படும்.

**செய்திட்டத்தின் முன்னேற்றம்**

விலைகோரல் முடிவடைந்து ஒரு இயந்திர வேலைத்தள கட்டடத்திற்கான மதிப்பீட்டுப்பணிகள் இடம் பெற்று வருகின்றன.

**7. திருகோணமலை துறைமுகத்தின் அஷ்ரப் துறைமேடையை புனரமைத்தல்**

துறைமேடைச் சுவர் சமீபமாக முனையம் கீழிறங்குவதன் காரணமாக முனையங்களின் இயக்க நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளதால் அஷ்ரப் துறைமேடையை அபிவிருத்தி செய்வதும் மேற்றளம் புதிதாக தயாரிப்பதும் அவசியமென அடையாளம் காணப்பட்டுள்ளது. விலைகோரல் அழைக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட ஆக்க குறைந்த விலைகோரல் ஒப்பந்தக்காரின் குற்றம் (ஏற்றுக் கொள்ளாமை) காரணமாக முடிவுறுத்தப்பட்டு மீள் திருத்தப்பட்ட விடய உள்ளடக்கத்துடனான விலைகோரல் ஆவணம் தயார்செய்யப்பட்டு வருகின்றது.

**செய்திட்டத்தின் முன்னேற்றம்**

வேலைத்தளத்தின் விலை கவனத்தில் கொள்ளப்பட்டு மீண்டும் விலைகோரல் அழைப்பதற்கான புதிய விலைகோரல் ஆவணம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

**8. திருகோணமலை துறைமுகத்தில் நிருவாகக்கட்டடத்திற்கான மேலதிக மாடித்தளம் (Floor) ஒன்றை நிர்மாணித்தல்.**

அனைத்து காரியாலயங்களும் ஒரு இடத்தில் அமைப்பதற்கு இருக்கும் நிர்வாகக்கட்டடத்தில் மேலதிக மாடித்தளமொன்றை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**செய்திட்டத்தின் முன்னேற்றம்**

நிர்மாணப்பணிகள் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் இடம்பெற்று வருகின்றன. மொத்த ஒப்பந்தத்தின் பெறுமதி ரூபா 25.3 மில்லியன் ஆகும்.

**9. காலி துறைமுகத்தின் க்லொசனபேர்க் துறைமேடையை புனரமைத்தல்**

காலி துறைமுகத்தின் முனையம் பழுதடைந்த நிலையில் இருப்பதன் காரணமாக முனையத்தின் இயக்க நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளதால் இருக்கும் துறைமேடையை அபிவிருத்தி செய்வதும் அதன் மேற்றளத்தை புதிதாக தயாரிப்பதும் அவசியமென அடையாளம் காணப்பட்டுள்ளது.

**செய்திட்டத்தின் முன்னேற்றம்**

நிர்மாணப்பணிகள் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. செய்திட்டத்தின் ரூபா 60.29 மில்லியன் மொத்த ஒப்பந்த பெறுமானம் கொண்ட முதலாம் கட்டம் 2018 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க அளவில் நிறைவு செய்யப்பட்டு ரூபா 24.39 மில்லியன் மொத்த ஒப்பந்த பெறுமதிகொண்ட செய்திட்டத்தின் இரண்டாம் கட்டம் இடம்பெற்று வருகின்றது.

**10. காலி துறைமுகத்தின் அலைதாங்கி புனரமைத்தல்**

அமைவின் ஆயுதப்பிரிவு வேறு இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டதன் காரணமாக காலி துறைமுகத்தின் பிரதான அலைதாங்கியை புனரமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. வேலைகள் பின்வருமாறு இரண்டு கட்டங்களில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கட்டம் I – பிரதான அலைதாங்கி I (MB 1) இலங்கை கடற்படை முகாமிலிருந்து சுமார் 150 மீட்டர் நீளமாகவும் (MB 2) – SLAM City Cement கம்பனிக்கு பின்னாலுள்ள குத்தகை பிரதேசம் 120 மீட்டர் நீளம் கொண்டதாக

கட்டம் 2 – MB -3 அலைதாங்கி சுமார் 300 மீட்டர் நீளம் கொண்டதாக

அலைதாங்கியின் புனரமைப்புத் திட்டம் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பகுதியினால் மேற்கொள்ளப்பட்டு கட்டம்- 1 கான விலைகோரல் ஆவணம் தயாரிக்கப்பட்டு வருகின்றுத.

## 11. ஒலுவில் கரையோரத்தின் மண் அரிப்பு தொடர்பிலான விரிவான ஆய்வுகள்

ஒலுவில் துறைமுகத்திற்கு அப்பால் அமைந்துள்ள வடக்கு எல்லையில் தற்போது ஏற்பட்டு வரும் மண் அரிப்பு,தெற்கு எல்லையில் தெற்கு அலைதாங்கி நெடுகே பாரியளவில் மணல் குவிதல், உட்பிரவேச கால்வாயினுள்ளும் சுற்றுப்புறங்களிலும் சேற்று படிவு அகற்றுதல் போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகளாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன.இந்தப்பணிகளின் ஆரம்பமாக ஒலுவில் கரையோரத்தின் மண் துணிக்கைகளின் நகர்வின் போக்கு மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்களைத் தீர்மானிப்பதற்கும் பரிகாரங்களாக மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளைத் தயாரிப்பதற்குமான விரிவான பொறியியல் ஆய்வு மேற்கொள்ளப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

ஒலுவில் துறைமுக அபிவிருத்தி செய்திட்டத்தின் நிதியுதவி வழங்கும் முகவர் நிறுவனமான டென்மார்க் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு (DANIDA) குறித்த ஆய்வு தொடர்பில் நிதியுதவி வழங்குவதற்கு உடன்பட்டுள்ளது. ஆய்வை மேற்கொள்வதற்கு, ஆலோசனைச்சேவையின் வெற்றிகர ஆலோசகரான வ/ப டனிஸ் ஹைய்ரொலிக் நிறுவனத்திடம் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் செயலாளர் ஒப்படைத்துள்ளார்.

2017 ஏப்ரல் மாதம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் கூட்டறையின் போது ஆய்வின் இறுதி வரைபு அறிக்கையை டனிடா நிறுவனத்தின் பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட உள்நாட்டு பங்காளர்களின் (stakeholders) பங்கேற்புடன் டனிஸ் ஹைய்ரொலிக் நிறுவனம் இலங்கை துறைமுக அதிகார சபையிடம் வழங்கியுள்ளது.

அதன் பின்னர் வெளிநாட்டு வள திணைக்களத்தில் இலங்கை துறைமுக அதிகாரசபை, டனிடா மற்றும் டனிஸ் ஹைய்ரொலிக் நிறுவனத்தின் பங்கேற்புடன் நடைபெற்ற கூட்டத்தின் போது வேறு செலவு குறைந்த மாற்று வழிகளை ஆராய்வதற்காக ஆய்வை நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.டனிஸ் ஹைய்ரொலிக் நிறுவனத்திடமிருந்து விடய உள்ளடக்கம் (Scope) மற்றும் ஆகுசெலவு பிரேரணையை (Cost Proposal) பெற்றுக்கொள்வதற்கு துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. எனவே டனிஸ் ஹைய்ரொலிக் நிறுவனத்திற்கு இது அறிவிக்கப்பட்டு அவர்களின் பதில் எதிர்பார்க்கப்படுகின்றது.

2017 ஏப்ரல் மாதம் நடைபெற்ற கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டவாறு ஆய்வை நீடிப்பதற்கான விடய உள்ளடக்கம் மற்றும் ஆகுசெலவு பிரேரணையை டனிஸ் ஹைய்ரொலிக் நிறுவனம் வழங்கியது. ஆய்வு தொடர்பான இறுதி அறிக்கை 2017.06.20 ஆம் திகதி முன்வைக்கப்பட்டு இறுதிக்கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியை பெற்றுத்தறுமாறு தெரிவித்து டென்மார்க் தூதுவராலயத்துக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### செய்திட்டத்தின் முன்னேற்றம்

2018 ஆம் ஆண்டின் ஜனவரி மாத 04 ஆம் வாரத்தின் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் முதலீட்டு நிதியத்தின் (IFU) பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட பங்காளர்களோடு டென்மார்க்கில் இலங்கை துறைமுக அதிகாரசபை வெற்றிகரமாக கூட்டத்தொடர்களை நடாத்தியது.

குறித்த செயற்பாட்டை பேணிச்செல்வதற்கும் ஒலுவில் துறைமுகத்தில் கையாளல்களை மேற்கொள்வதற்கும் அமைச்சரவையில் அமைச்சரவை பத்திரமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

## பொறியியல்

### கடலக பொறியியல் பகுதி

கொழும்பு துறைமுகத்தின் கடலக, இயக்க மற்றும் சிவில் பொறியியல் பகுதிகள் போன்று காலி, திருகோணமலை மற்றும் காங்கேசன்துறை போன்ற துறைமுகங்களின் இயக்க தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு போதுமானளவு மிதவைக்கலங்கள் சேவையில் ஈடுபடுத்துவதனை உறுதிப்படுத்துவது கடலக பொறியியல் பகுதியின் பிரதான பணிப்பொறுப்பாகும். இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து கலங்களினதும் படகுகளினதும் தட்டுக்களில் நீருக்கு கீழ் மற்றும் என்ஜின் அறை இயந்திரங்களினது அனைத்து பிரதான பராமரிப்புப்பணிகளும் கடலக பொறியியல் பகுதியினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோன்று அனைத்து கலங்களினதும் படகுகளினதும் உருக்கு மற்றும் மரப்பாகங்களை புதுப்பித்தல், துருப்படிவு நீக்குதல், மை பூசும் வேலைகள் அடங்கலாக தண்டுப்பகுதிகள் மற்றும் கலத் தட்டுக்களின் பழுதுபார்ப்புப் பணிகளும் இப்பகுதியினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. சம்பந்தப்பட்ட கலங்களின் வகுப்பு நிலைகளை பேணியும் தொழில்நுட்ப மீளாய்வுகளை மேற்கொண்டும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் கலம் கட்டும் செய்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதும் கடலக பொறியியல் பகுதியின் பொறுப்புக்களில் அடங்கும்.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு குறித்த சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்த வெளிதரப்பினர்களுக்கும் தேவையான சேவைகள் கடலக பொறியியல் பகுதியினால் 2018 ஆண்டினுள் வெற்றிகரமாக வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று இந்த வருடம் வெற்றிகரமான ஆண்டென நாம் தொடர்ந்தும் நம்புகின்றோம். அதேபோன்று கடலக பொறியியல் பகுதியின் ஆளணியினர் எதிர்வரும் ஆண்டிலும் அதன் பயனுறுதியான தன்மையினையும் செயற்திறனையும் அதிகரித்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றனர்.

கடலகப் பகுதி இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன் 2018 ஆண்டினுள் இப்பிரிவுகளினால் அடையப்பெற்ற வெற்றிகள் பின்வருமாறு.

#### கடலகப் பிரிவு I

#### மீளமைக்கும் பொறியியல் பிரிவு

இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து நங்கூரமிடல் பணிகளிலான இழுவைக் கலங்கள், ''மேக'' தீயணைப்புக் கலத்தினதும் சகல சேறுவாரி கலங்களினதும் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு கடலக 01 பிரிவின் கீழுள்ள மீளமைக்கும் பொறியியல் பிரிவு பொறுப்பாகவுள்ளது. இந்த மிதவைக் கலங்களுக்கான லொயிட் பதிவேடு வகையீட்டுச் சோதனை தேவைப்பாடுகளை மேற்கொண்டு அவற்றின் பழுதுபார்ப்புகள் செய்யப்படும் வேளையிலும் கூட கொழும்பு துறைமுகத்தின் 05 நங்கூரமிடல் பணிகளிலான கலங்கள், திருகோணமலை துறைமுகத்தின் 02 நங்கூரமிடலின் கலங்கள், காலி, காங்கேசன்துறை துறைமுகங்களில் தலா 01 நங்கூரமிடல் பணிகளிலான கலங்கள் சம்பந்தப்பட்ட இயக்கங்களுக்கான தேவைப்பாடுகளை இப்பிரிவினால் பூர்த்தி செய்ய முடிந்துள்ளது.

அதேபோன்று இரண்டு தோண்டும் கலங்களான நீர் உறிஞ்சும் ''ஹன்சகாவா'' கலமும் சேறுவாரும் ''தியகொவுலா'' கலமும் இப்பிரிவினால் 2018 ஆண்டினுள் உயர் இயக்க நிலையில் பேணப்பட்டுள்ளன. இலங்கை துறைமுக அதிகாரசபையின் கடலக மற்றும் பொறியியல் பகுதிகளில் பயன்படுத்தப்படும் வெளியே பொருத்தும் மோட்டார்களினது (Outboard Motors) அன்றாட பழுதுபார்த்தல்களும் பராமரிப்புப் பணிகளும் மீளமைக்கும் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

அதேபோன்று தடாக ஆய்வுப் பதிலாக நீரியல் மற்றும் வேறு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு இந்த ஆண்டில் அனைத்து கலங்களுக்குரிய வகுப்புகளும் பேணிச்செல்லப்பட்டன.

**பொறியியல் துறைமுக கலப் பிரிவு**

வழிகாட்டிக் கலங்கள், நங்கூரமிடல் பணிகளிலான கலங்கள் மற்றும் ஏனைய கலங்களின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புகள் இப்பிரிவின் பிரதான பொறுப்பாகும். கடலக பகுதி போன்று இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழுள்ள ஏனைய துறைமுகங்களின் இயக்க தேவைப்பாடுகளையும் இப்பிரிவுக்கு நிறைவேற்றக் கூடியதாக இருந்தன.

“வழிகாட்டி 11” மற்றும் “வழிகாட்டி 15” வழிகாட்டி கலங்கள் பொறியியல் துறைமுக கலப் பிரிவினால் 2018 ஆண்டில் புனரமைக்கப்பட்டன. திருகோணமலை மற்றும் காலி துறைமுகங்களின் கலங்களினது பழுதுபார்ப்புப் பணிகள் அடங்கலாக இலங்கை துறைமுக அதிகார சபையின் அனைத்து வழிகாட்டிக் கலங்கள், நங்கூரமிடல் கலங்கள் மற்றும் ஏனைய கலங்களினது காப்பு பராமரிப்பு சேவைகளும் ஏனைய பழுதுபார்ப்புப் பணிகளும் 2018 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஆண்டினுள் அனைத்து வழிகாட்டி கலங்களினதும் நங்கூரமிடல் கலங்களினதும் பதிவேடு வகையீட்டுச் சோதனைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

**கடலகப் பிரிவு II**

**கப்பல் நிர்மாணப் பிரிவு**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் மிதவைக் கலங்களினது சகல மரத்திலான வேலைகள், துருப்படிவு நீக்குதல், மை பூசும் வேலைகள், பைபர் கிளாஸ் பழுதுபார்ப்புப் பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டதோடு இலங்கை துறைமுக அதிகாரசபையின் நங்கூரக் கலங்கள், இழுவை வத்தைகள் மற்றும் ஏனைய கலங்களின் மரத்திலான தளபாடங்களின் பழுதுபார்ப்புகள், அடைப்புப் பலகை (Paneling) வேலைகள், மோதல் தடுப்புகளின் பழுதுபார்ப்புப் பணிகளும் இப்பிரிவின் பொறுப்பாகும். அதேபோன்று 600 தொன் பாரத்தை தாங்கக் கூடிய சறுக்கு வழி மற்றும் ஏனைய வழிகளுக்கு எடுப்பதையும் சறுக்கு வழியில் இருந்து கலங்களை மீண்டும் கடலுக்கு விடுவிக்கும் பணிகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆண்டினுள் வேலுசுமன மோட்டார் கலம் (MT VeluSumana) சறுக்கு வழிக்கு எடுக்கப்பட்டு தண்டுப்பகுதியின் பிரதான பழுதுபார்ப்புகளும் நீருக்கு கீழ் பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்களினது பழுதுபார்ப்புகளும் நிறைவு செய்யப்பட்டன. இந்த ஆண்டில் ஏனைய சறுக்கு வழிக் கையாளல்கள் வெளித்தரப்பினருக்குரிய கலமொன்றின் ( Barge matara) மூலம் மேற்கொள்ளப்பட்டன. நங்கூரமிடல் மற்றும் சறுக்கு வழிக் கலங்கள் ஏனைய பைபர் கிலாஸ் மற்றும் மர அடைப்புப்பலகைகளின் பழுதுபார்ப்புகளும் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

**கப்பற்சரக்கு கலப் பிரிவு**

கடலகப் பகுதியில் பயன்படுத்தப்படும் வழிகாட்டிக்கலங்கள், நங்கூரமிடல் கலங்கள் போன்ற இயக்கப்பகுதியினால் பயன்படுத்தப்படும் இழுவைக்கலங்கள், மோட்டார் கலங்கள், நீர் வத்தைகள் மற்றும் தட்டு வத்தைகளின் உருக்கு மற்றும் மர பழுதுபார்ப்புக்கள் மேற்கொள்வது கப்பற்சரக்கு கலப் பிரிவின் பொறுப்பாகும். அதேபோன்று இந்த உருக்கு கலங்ளின் துருப்படிவுகளை நீக்குவதும் மை பூசுவதும் இப்பிரிவுக்குரியதாகும்.

2018 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் 10,11,12,13,14 ஆம் வழிகாட்டிக்கலங்கள் மற்றும் ஏனைய கலங்களுக்குத் தேவையான உருக்கு பழுதுபார்த்தல்கள், மோதல் தடுப்பு பழுதுபார்த்தல்கள் மற்றும் மை பூசும் வேலைகளுக்கு அவை சறுக்கு வழிக்கு எடுக்கப்பட்டன.

பல்வேறு வகையிலான கயிறு சிலிங்கைகளின் உற்பத்தி மற்றும் வினியோகம் போன்று இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஏனைய பிரிவுகளுக்கும் வெளி தரப்பினர்களுக்குமான திரைச் சீலைகள், பல்வேறு அளவிலான கென்வஸ் மூடு சீலைகள் மற்றும் கூடார சீலைகளை உற்பத்தி செய்யும் ஆற்றலும் இப்பிரிவுக்கு உண்டு. 2018 ஆண்டில் கிடைக்கப்பெற்ற வேலைக் கட்டளைகளுக்கு ஏற்ப மேற்குறித்த பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**புதிய பேரே முனையம்**

கடலக பகுதியில் பயன்படுத்தப்படும் இழுவைக்கலங்கள், நங்கூரமிடல் கலங்கள் போன்று இயக்க பகுதியினால் பயன்படுத்தப்படும் உருக்கு கப்பற்சரக்கு வத்தைகள் மற்றும் நீர் வத்தைகளினது பழுதுபார்த்தல் வேலைகள், துருப்படிவுகளை நீக்குதல், மை பூசுதல் போன்றவை புதிய பேரே முனைய பிரிவின் முக்கிய பொறுப்பாகும். வேலுசுமன இழுவைக்கலத்தினதும் கப்பற்சரக்கு வத்தையினதும் உருக்கு பழுதுபார்ப்புகள் மற்றும் 18 ஆம் நீர் வத்தையின் மை பூசும் வேலைகள் 2018 ஆண்டில் மேற்கொள்ளப்படடுள்ளன.

## இயந்திர உபகரண பொறியியல் பகுதி

ஜய கொள்கலன் முனையத்தினதும் ஐக்கிய கொள்கலன் முனையத்தினதும் கொள்கலன் கையாளல் உபகரணங்களை முறையாக பேணிச்செல்லும் வேலைத்திட்டங்கள் திட்டமிடுதலிலும் நடைமுறைப்படுத்தலிலும் இயந்திர உபகரண பொறியியல் பகுதி முன்னுரிமை வழங்குகின்றது. கப்பலிலிருந்து கரை வரை பொருட்களை கையாளும் பாரம்தூக்கிகளின் 90% மேற்பட்ட அளவிலான செயற்பாட்டை பேணிச் செல்வதில் 2018 ஆண்டில விசேட கவனம் செலுத்தப்படடுள்ளது.

உபகரணங்கள் செயலிழக்கும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவசர சீரசெய்யும் செயன்முறையுடன் தொடர்புபட்டு திட்டமிடப்பட்ட பராமரிப்பு வேலைத்திட்டம் ஊடாக 2018 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் கொள்கலன் மற்றும் மரபுரீதியான கப்பற்சரக்குகளை கையாளும் உபகரணங்கள் இப்பகுதியினால் வெற்றிகரமாக பராமரித்துச் செல்லப்பட்டன.

இயந்திர உபகரண பொறியியல் பகுதியின் பிரதான பொறுப்பாகிய கப்பற்சரக்கு கையாளும் பராமரிப்புக்கு மேலதிகமாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து வாகனங்கள் (பேரூந்து, லொறி, வேன், டப்பிள் கெப், கார், முச்சக்கர வண்டி, மற்றும் மோட்டார் சைக்கிள்) இப்பகுதியினால் பராமரிக்கப்படுகின்றன.

சமர்ஹில் பகுதியில் நிறுவப்பட்டுள்ள உணவுக்கு பயன்படுத்தப்படும் இறக்குமதி மொத்தத் தொகை எண்ணெய் களஞ்சியம், இயந்திர உபகரண பகுதியின் மேற்பார்வையில் இயங்குகின்றது. 2018 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதி வளர்ச்சிக்கு இப்பகுதி சிறப்பான முறையில் பங்களிப்பை வழங்கியுள்ளது.

ஆயுட்காலம் கடந்துள்ள உபகரணங்களுக்கு பதிலாக புதிதாக உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளும் திட்டத்தின் மீது பல கொள்வனவுகள் இப்பகுதியின் கீழ் செயற்படுத்தப்பட்டன. ஜய கொள்கலன் முனையத்துக்கு 14 முனைய டிடக்டர் வண்டிகள் வழங்கும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன் அவை 2019 ஆண்டின் நடுப்பகுதியில் கிடைக்கப்பெறவுள்ளன.

அதேபோன்று சேவைகள் வழங்கலிலான கையாளல்களுக்கு 15 தொன்னுக்கு குறைந்த 04 போர்க்லிப்ட் வண்டிகளும் 2019 ஆண்டில் கிடைக்கப்பெறவுள்ளன.

## இயந்திர உபகரண வேலை பொறியியல் பகுதி

அனைத்து கட்டமைப்புகள் அனைத்து துறைமுகங்களினதும் இயக்கம் / இயக்கமல்லாத உபகரணங்களை இயக்க நிலையை பேணுதல்/ உரிய முறையில் செயல்படுத்தும் நிலையை பேணுதல் இயந்திர உபகரண வேலை பொறியியல் பகுதியின் பிரதான பணிகளாகும். நங்கூர இழுவைக்கலம் வழிகாட்டிகலம் சேறுவாரிகள் கலங்கள் ஆகியவற்றுக்கு கொள்கலன் கையாளும் பாரம் தூக்கிகளின் அனைத்து அமைப்பு ரீதியான திருத்தப்பணிகள் உருக்கு சார்ந்த பழுதுபார்ப்புப் பணிகள் ஜய கொள்கலன் முனையம் மறறும் ஐக்கிய கொள்கலன் முனையங்களுக்கு உரிய கொள்கலன் பாரம் தூக்கிகள் சிறிய கொள்கலன் ட்ரேலர்களுக்குரிய அனைத்து கட்டமைப்புகள் சார்ந்த திருத்தப் பணிகள் உருக்கினால் அமைந்த கட்டிட களஞ்சியங்கள் மற்றும் வேறு கட்டமைப்புக்களை புதிதாக நிர்மாணித்தல் மற்றும் பழைய உருக்கு கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்களை அகற்றுதல் ஆகியன இதில் அடங்குகின்றன. கப்பற் சரக்குகள் கையாளும் உபகரணங்கள் கப்பலோட்டக் கலங்களுக்கு தேவையான புதிய உதிரிப்பாங்களை இயந்தி சாதனங்களினால் உற்பத்தி செய்தல் செப்பனிடும் வேலைகள் மற்றும் அடைத்தல் மற்றும் அனைத்து துறைமுகங்களிலும் ஏனைய

அனைத்து வேலைகளும் அற்றும் துறைமுகம் சார்ந்த பணிகளில் இப்பகுதி ஈடுபட்டுள்ளது. மேலும் இப்பகுதி சங்கிலிகள் மற்றும் கொழுக்கிகள் பரீட்சிப்பதோடு இயக்கத் தேவைகளுக்குப் பயன்படுத்தும் கிரப் உபகரணங்கள் பராமரித்தல் தொடர்பான பொறுப்புக்களையும் கொண்டுள்ளன.

இவ்வாண்டினுள் இப்பகுதியினால் பின்வரும் பணிகள் நிறைவு செய்யப்பட்டன.

- கிழக்கு கொள்கலன் முனைய உட்புகு வாயிலின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. வெளிவாயில் வேலையின் 60% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது
- விஜய குமார மேடையின் களஞ்சியத்தை உடைத்தகற்றுதல் மறறும் அக்களஞ்சியத்தின் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு மாத்திரம் வேறாக்கப்பட்ட நிரல் பாதைகளை (Conveyor belt Structure) புதுப்பித்தல்
- கொச்சிக்கடை களஞ்சியத்தை உடைத்தகற்றியதன் பின் அதிலுள்ள பொருட்களை பயன்படுத்தி திருகோணமலை களஞ்சியத்தை அமைத்தல்
- J-12, கென்ட்ரி பாரம்தூக்கிகளின் றொலி பீலிப்பாதையை பழுதுபார்த்தல்
- J-09, J-11, J-12, J-18 ஆகிய கென்ரி பாரம்தூக்கிகளின் ரொலி பீலிப்பாதைகளை பழுதுபார்த்தல்
- J-1, J- 2, கென்ரி பாரம் தூக்கிகளின் ஏணி வரிசைகளை பழுதுபார்த்தல்
- J-12, தூணுடன் தொடர்புபடுத்தும் உத்திரங்கள் புதுப்பித்தல் வேலை 75% நிறைவு செய்யப்பட்டுள்ளது
- CFS –V மற்றும் பரந்தன் களஞ்சியத்தை புதுப்பித்தல்
- பண்டாரநாயக்க துறைமேடையின் களஞ்சியத்துக்கு இராக்கைகளை அமைத்தல்
- சைத்தியவில் மின் உயர்த்தி மூடுகையின் கூரையை பூரணமாக திருத்துதல் மற்றும் சைத்திய வளவுக்குள் பார்வையாளர்கள் ஓய்வு பெறுவதற்காக கட்டிடம் ஒன்றை அமைத்தல்
- திருகோணமலை துறைமுகத்தின் மிதப்பிகளை நிறுவுதல்
- பூரணமாக வெளிச்சவீடுகளை திருத்துதல் பணிகள் 40% நிறைவடைந்துள்ளது

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு மேலதிகமாக இலங்கை கடற்படையின் நங்கூரங்கள் கட்டி வைக்கும் சங்கிலிகளை பரீட்சித்தல் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் இயந்திர உபகரண வேலை பொறியியல் பகுதியின் வேலைத்தளம் 07 இனால் கல்வனைஸ் பணிகள் பிரம்மூவர் வண்டிகளில் தேய்வடைந்த உதிரிப்பாகங்களை இயந்திர சாதன உதவியால் தயாரித்தல், புஷ் வார்த்தல், நீர்க்குழாய்கள் பொருத்துதல் மற்றும் திருத்துதல் மற்றும் பட்டறை வேலைகள் போன்ற பாரிய அளவிலான 100 வேலைகள் மற்றும் சிறிய அளவிலான 3,105 வேலைகள் செய்யப்படுகின்றன.

## சிவில் பொறியியல் பகுதி

துறைமுகத்தின் கட்டமைப்பு கட்டிடங்கள் உள்ளக பாதைகள் துறைமேடைகள் உத்தியோகபூர்வ சேவை இல்லங்களை பராமரித்தல் அதேபோன்று துறைமுக தடாகத்தின் ஆளம் மற்றும் பிரவேசப் பாதையின் பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் பங்காளகளுக்கு தேவையான வெறும் பலவித சேவைகளை வழங்கும் சிவில் பொறியியல் பகுதி இலங்கை துறைமுக அதிகாரசபையின் பிரதான பகுதிகளில் ஒன்றாகும். நாட்டில் அமைந்துள்ள ஏனைய துறைமுகங்களில் வசதிகள் மற்றும் வெளிச்ச வீடுகள் பராமரித்தல் வரையும் இப்பகுதியின் பணிகள் பரந்துள்ளன.

ஆரம்பமாக அறிந்து கொள்ளப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப சிவில் பராமரிப்பு பணிகளை திட்டமிட்டுள்ளதோடு சிறு பராமரிப்பு பணிகள் அவற்றின் துரிதத் தேவையை அடிப்படையாகக் கொண்டு இப்பகுதியின் பணிக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டது.

துறைமுக வளவிற்குள் துப்பரவை பேணுதல் இப்பகுதியின் விடயதானத்திற்கு உற்பட்டுள்ளதோடு குறித்த நிறுவனத்துடன் ஒன்றிணைந்து திண்மக் கழிவு முகாமைத்துவ தொகுதி அமுல்படுத்தப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டினுள் சிவில் பொறியியல் பகுதியினால் கொழும்பு துறைமுகத்தில் நடைபெற்ற பல்வேறு சிறு பராமரிப்பு பணிகளுக்கு மேலதிகமாக கீழ்வரும் பிரதான பணிகளும் சிறப்பாக நிறைவு செய்யப்பட்டுள்ளது.

- திருகோணமலை துறைமுகத்தில் புதிய களஞ்சியங்கள் நிர்மாணித்தல்
- ஜய கொள்கலன் முனையத்தில் கொள்கலன் துறையில் திருத்த வேலைகள்
- யாழ்ப்பாண தீபகற்பத்தில் வெளிச்சவீட்டை புணர்நிர்மாணித்தல்
- காலித்துறைமுகத்தில் துறைமுக தடாகத்தை அகழ்தல்
- நுவரெலிய உல்லாச விடுதியை புதுப்பித்தல்
- சட்டப்பகுதியை மீளமைத்தல்
- பாதுகாப்புப் பகுதியை மீளமைத்தல்
- நிதிப்பகுதியின் திருத்த வேலைகள் மேற்கொள்ளல்
- துறைமுக வளவுக்குள் அமைந்துள்ள சிற்றுண்டிச் சாலைகளை திருத்தியமைத்தல்
- துறைமுக வளவுக்குள் இருக்கின்ற மலசல கூடங்களை திருத்தியமைத்தல்.

## மனிதவள அபிவிருத்தி

### மனிதவளப் பகுதி

இலங்கை துறைமுக அதிகார சபையின் மனிதவள பகுதி அனைத்துப் பகுதிகளுக்கும் ஏனைய துறைமுகங்கள் உள்ளடங்கலாக ஆட்களை நியமிப்பதன் மூலம் நிறுவனக் குறிக்கோளினை அடைய முக்கிய பங்குவகிக்கிறது. முகாமைத்துவம் மற்றும் ஊழியர்கள் ஆகிய இரு பிரிவினரும் திருப்திப்படும் வகையில் மனித வள நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இது நிறைவேற்றப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மொத்த வேலையாட்களின் தொகை 9,377 ஆகும். இது நிரந்தர, ஒப்பந்த மற்றும் ஏனைய வகையினர் பின்வருமாறு:

| | நிரந்தர | ஒப்பந்த அடிப்படையில் | வேறு | மொத்த |
|---|---|---|---|---|
| நிறைவேற்று | 579 | 10 | 0 | 589 |
| நிறைவேற்று அல்லா | 5246 | 26 | 0 | 5272 |
| தொழில்நுட்பம் | 1835 | 0 | 0 | 1835 |
| தொழில்நுட்பம் அல்லாத | 1678 | 1 | 2 | 1681 |
| மொத்தம் | **9338** | **37** | **2** | **9377** |

எனினும், 2018 ஆண்டின் ஆரம்பத்திலிருந்த மொத்த ஊழியர்த் தொகை 9,651 ஆகும். ஆண்டு இறுதியில் இது 9,710 ஆக அதிகரிதுள்ளதோடு ஒவ்வோர் துறைமுகத்தினதும் ஊழியர்த் தொகையின் விபரம் வருமாறு:

| | நிரந்தர | ஒப்பந்த அடிப்படையில் | வேறு | வேறு |
|---|---|---|---|---|
| கொழும்பு துறைமுகம் | 8,929 | 18 | 1 | 8,948 |
| காலி துறைமுகம் | 362 | 0 | 0 | 362 |
| திருகோணமலை துறைமுகம் | 400 | 0 | 0 | 400 |
| **மொத்தம்** | **9,691** | **18** | **1** | **9,710** |

**2018 ஆம் ஆண்டில் துறைமுகத்தினுள் வழங்கப்பட்ட உள்ளகப் பதவியுயர்வுகள்**

மனிதவளத்திட்டத்திற்கு அமைய ஆட்சேர்ப்பு நடைமுறையின் மீது தகைமைகளைக் கொண்ட அபேட்சகர்கள் மூலம் உள்ளக வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன. ஆயினும் தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகள் நிறுவனத்தினுள் இல்லாத சந்தர்ப்பங்களில் வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

**2018 ஆண்டில் வெளிவாரியாக ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் உள்ளக பதவியுயர்வு தொடர்பான விபரங்கள்**

2018 ஆண்டில் நிரந்தரமாகவும் ஒப்பந்த அடிப்படையிலும் 695 ஊழியர்கள் வெளிவாரியாக இணைத்துக் கொள்ளப்பட்டனர். கீழ்வரும் அட்டவணையில் விபரமாக காண்பிக்கப்படுகின்றது.

| ஊழியர்களின் வகை | நிரந் | ஒப்பந்த | மொத்தம் |
|---|---|---|---|
| நிறைவேற்று தரம் | 17 | 1 | 18 |
| நிறைவேற்று தரம் அல்லாத | 192 | 0 | 192 |
| தொழில்நுட்பம் | 263 | 0 | 263 |
| தொழிநுட்பம் அல்லாத | 222 | 0 | 222 |
| **மொத்தம்** | **694** | **1** | **695** |

2018 ஆண்டினுள் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை கீழ் வருமாறு.

| | |
|---|---|
| நிறைவேற்று தரம் | 01 |
| நிறைவேற்று தரம் அல்லாத | 03 |
| **மொத்தம்** | **04** |

**வெளியேறிய ஊழியர்களின் விபரங்கள்**

2018 ஆண்டில் வெளியேறிய ஊழியர்களின் மொத்தத் தொகை 366 ஆகும். அதன் விபரங்கள் வருமாறு:

| வெளியேறியதற்கான காரணம் | ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஓய்வூபெறுதல் | 294 |
| இறப்பு | 28 |
| பதவி விலகல் | 11 |
| சேவையை விட்டுச் செல்லல் | 10 |
| வைத்தியகாரணங்களின் மீது ஓய்வு பெறுதல் | 01 |
| சேவை முடிவுறுத்தல் | 22 |
| **மொத்தம்** | **366** |

**திடீர் விபத்துக்கள் மற்றும் நட்டஈடு வழங்குதல்**

இலங்கை துறைமுக அதிகார சபையின் ஊழியர்கள் 48 பேர் மற்றும் 05 வெளி நபர்கள் உள்ளடங்கலாக 2018 ஆம் ஆண்டில் ஏற்பட்ட திடீர் விபத்துக்களின் மொத்த எண்ணிக்கை 53 ஆகும். வெளி நபர்கள் ஒருவர் மரணமடைந்துள்ளதுடன் ரூபா 440,000/= தொகை நட்ட ஈடாக செலுத்தப்பட்டுள்ளது.

**மரண சகாய நிதி வழங்குதல்**

கொழும்பு துறைமுகத்தில் இயற்கைக் காரணங்களின் மீது மரணமடைந்த ஊழியர்களில் தங்கி வாழ்வோருக்கு கொடுப்பனவுகளாக ரூபா 443,000/= செலுத்தப்பட்டுள்ளதோடு 2018

ஆண்டில் மேலும் ரூபா 50,000/= செலுத்தப்பட வேண்டியுள்ளது. இக்கால எல்லையில் ஏனைய துறைமுகங்களின் ஊழியர்களுக்கு பணிக்கொடை வழங்கப்படவில்லை.

**விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்**

புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களுக்கு மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்லூரியினால் 15 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

**தங்க நாணயங்கள் வழங்கல்**

| நிறை | நாணயங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 01 பவுண் | 51 |
| 01 ¼ பவுண் | 178 |
| 01 ½ பவுண் | 44 |

**ஒழுக்காற்று நடவடிக்கைகள்**

மனித வளப்பகுதியினால் ஒழுக்காற்று விசாரணைக்கு 241 உம் வேறு விசாரணைகள் 88 உம் 2017 ஆண்டு முதல் விசாரணை முன் கொண்டுவரப்பட்டதுடன் இதில் 166 விசாரணைகள் முடிவடைந்துள்ளன. வருட இறுதியில் 163 விசாரணைகள் முடிவடையாமல் இருந்தது.

## நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபை தனது இலக்குகள்/நோக்கங்களை அடையப்பெறுதலில் மனிதவளம் தொடர்பில் விசேட கவனம் செலுத்துகின்றது. நிதி மற்றும் பொருட்களை முகாமைத்துவம் செய்யும் முறையில் மனிதவளத்தை முகாமைத்துவம் செய்ய முடியாது. இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு தனது ஊழியர்களுக்கு சிறந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான வசதிகளையும் வாய்ப்புக்களையும் அளிக்கும் நோக்குடன் நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுப் பகுதி இரு பிரிவுகளாகச் செயற்படுகிறது.

- பிரதான அலுவலகம்
- மத்திய சமையலறைப் பிரிவு

நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுப்பகுதியினால் செயற்படுத்தப்படும் நலன்புரி செயற்பாடுகள் வருமாறு:

1. **பிரதான காரியாலயம்**

**ஊழியர்களுக்கான சுகாதார காப்புறுதித் திட்டம்**

ஆகஸ்ட் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்ட ஊழியர்களுக்கான சுகாதார காப்புறுதித் திட்டம் 2018 ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. தலைவரின் ஒப்பத்துடன் வெளியிடப்பட்ட 2018.11.01 ஆம் திகதிய இல : 28 /2018 துறைமுக அதிகாரசபையின் சுற்றுநிருபம் ஊடாக இதுவரை செயற்படுத்தப்பட்ட ஊழியர்களுக்கான சுகாதார காப்புறுதித்திட்டம் அமைப்பு ரீதியான மாற்றத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

ஊழியர்களின் சுகாதார காப்புறுதித் திட்டத்தின் கீழ் வெளி சிகிச்சைகளுக்கு வழங்கப்படும் ரூபா 7,500 மற்றும் மூக்குக்கண்ணாடிகளுக்கான ரூபா 5,000 தொகைக்குப் பதிலாக புதிய காப்புறுதித் திட்டத்தின் கீழ் வெளி சிகிச்சைகளுக்கு ரூபா 10,000 மூக்குக் கண்ணாடிக்கு ரூபா 10,000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. வைத்தியப்பகுதியின் பரிந்துரை பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதியூடாக ஊழியர்களுக்கு குறித்த தொகையை ஈடுசெய்து கொள்ள முடியும். இதற்குரிய

அனுகூலங்களை ஒதுக்குவதற்கான குறைநிரப்பு மதிப்பீடு முகாமைத்துவ பணிப்பானரிடம் முன்வைக்கப்பட்டு அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்குறித்த சுற்றுநிருபத்திற்கமைய 2018.09.01 ஆம் திகதியில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மூக்குக் கண்ணாடிகளுக்கும் வெளி சிகிச்சைகளுக்குமுரிய பணம் மீள்ஈடு செய்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி குறித்த கொடுப்பனவுகளுக்கான பூர்வாங்க பணிகள் தற்போது நலன்புரி பகுதியினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

**புலமைப்பரிசில் திட்டம்**

இலங்கை துறைமுக அதிகாரசபையினது ஊழியர்களின் பிள்ளைகளுக்கு க.பொ.த (உ/த) மற்றும் பல்கலைக்கழகக் கல்வி தொடர்பில் இரு பரிசில்கள் வழங்கப்படுகின்றன. க.பொ.த (உ/த) தொடர்பில் ரூபா 750 படி 24 மாதங்களுக்கு வழங்கப்படும்.

பல்கலைக்கழகத்தில் கல்வி பெறும் ஊழியர்களின் பிள்ளைகளுக்கான மஹபொல நிதியுதவி அல்லது அதற்கு பதிலாக பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் மாணவ நிதி உதவி பெற்றுக்கொள்ளப்படாத அடிப்படையில் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

வருடமொன்றுக்கு 10 மாதங்களாக 03 வருடத்திலிருந்து 05 வருடம் வரையிலான காலப்பகுதிக்கு புலமைப்பரிசில் வழங்கப்படுவதோடு, அதுவானது கற்கை பாடநெறியின் காலப்பகுதி மீது தங்கியிருக்கும். 03 வருட பட்டப் பாடநெறிக்கு வருடமொன்றிற்கு ரூபா 25,000 படி 03 வருடங்களுக்கும் அதேபோன்று 04 மற்றும் 05 வருட முழுக்கால வைத்திய பட்ட பாடநெறிக்கு வருடமொன்றிற்கு ரூபா 25000 படி 05 வருடங்களுக்கு வழங்கப்படும். அதன்படி 03 வருட பொதுவான பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவ மாணவிகளுக்கு ரூபா 75,000 வும் 04 வருட பட்டப் பாடநெறியை பின்பற்றும் மாணவ/மாணவிகளுக்கு ரூபா 100,000 வும் 05 வருட வைத்திய பட்டத்தை பின்பற்றும் மாணவ/மாணவிகளுக்கு ரூபா 125,000 படி வருடாந்தம் ரூபா 25000 வழங்கப்படுகின்றது .

தற்போது செலுத்தப்படும் மாணவ புலமைப்பரிசில் நிதியினை மஹபொல நிதியுதவிக்கு சமனான வகையில் அதிகரிக்குமாறு வேண்டுகோள் முன்வைக்கப்பட்டு அது தொடர்பில் உயர் முகாமைத்துவத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 2011/2012 ஆண்டு தொடர்பில் ரூபா 100,000 வும் 2012/2013 ஆண்டில் ரூபா 200,000 வும் முறையே 2013/2014 க்கு ரூபா 975,000 , 2014/2015 க்கு ரூபா 1,775,000, 2015/2016 க்கு ரூபா 3,650,000, 2016/2017 தொடர்பில் ரூபா 1,925,000 கொடுப்பனவுகள் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

க.பொ.த (சா/த) சித்தியடைந்த A அல்லது B சித்திகள் 06 க்கு மேல் பெற்று அனைத்து பாடங்களிலும் சித்திபெற்ற மாணவ/மாணவிகளுக்கு 02 வருடங்களுக்கு ரூபா 9,000 படி வழங்கப்படுகின்றது. 2018 ஆண்டில் க.பொ.த(சா/த) மாணவர்கள் தொடர்பில்ரூபா 5,190,600 வழங்கப்பட்டுள்ளது.

**ஆயுர்வேத மருத்துவ நிலையம்**

2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களின் பயன்பாட்டிற்கு ஆரம்பிக்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவ நிலையம் வெற்றிகரமாக செயற்பட்டு வருகிறது. இதுவரை பதிவுசெய்யப்பட்டுள்ள நோயாளிகளின் எண்ணிக்கை 2528 ஆகும். 2018 இல் 3905 நோயாளிகளுக்கு சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆயுர்வேத வைத்திய சிகிச்சைகளுக்கு மேலதிகமாக அக்குபஞ்சர் மருத்துவமும் ஆயுர்வேத ஒத்தடமும் வழங்கப்படுகின்றன. ஆயர்வேத வைத்திய நிலையம் தொடர்பில் 2018 ஆண்டில் மீண்டுவரும் செலவினமாக ரூபா இரண்டு மில்லியனும் 2019 ஆண்டில் இதற்குச் சமனான தொகையும் ஒதுக்கப்பட்டுள்ளது.துறைமுக முகாமைத்துவ ஆலோசனைச்சேவை தனியார் கம்பனி ஊடாக ஆயர்வேத வைத்திய நிலையத்திற்கு பணியாளர்கள் ஆடசேர்க்கப்பட்டுள்ளதோடு இதற்கான நிரந்தர ஆளணியினர் தொடர்பில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மனிதவள திட்டத்தில் இந்த விடயம் உள்ளடக்கப்பட்டு ஆட்சேர்க்கப்படுவதற்கு மனிதவள பகுதியிடம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**வீடமைப்புக் கடன் திட்டம்**

புதிய வீடொன்றை அமைத்தல், வீட்டுடன் ஒரு பாகத்தை சேர்த்தல், வீடொன்றை கட்டுவதற்கு காணியொன்றை வாங்குதல் போன்ற நடவடிக்கைகளுக்கு 05 இலட்சம் ரூபா ஆகக் கூடிய தொகைக்கு உட்பட்டதான கடன் வழங்கும் திட்டம் துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களுக்கு அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் அனுசரணையோடு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. குறித்த திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு வருடாந்தம் 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு குறித்த பணிகளின் தேவைகளுக்கேற்ப வங்கிக்கு விடுவிக்கப்படுகின்றது. குறித்த கடன் தொகை வழங்கப்படும்போது 6% சலுகைரீதியான வட்டி அறவிடப்படுகிறது. 2018 ஆண்டினுள் ரூபா 2,500,000 தொகை இதுவரை ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

2018 ஆண்டு தொடர்பில் வீட்டுக்கடன் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 50 மில்லியன் ஆகும். ஆயினும் வீட்டுக்கடன் பெறுவதில் ஊழியர்களின் கேள்விகள் குறைவடைந்ததன் காரணமாக 2018 ஆண்டில் வங்கிக்கு விடுவிக்கப்பட்ட தொகை ரூபா 250,000 இலட்சம் ஆகும். இது இதற்கு ஒதுக்கப்பட்ட தொகையில் 5% ஆகும். ரூபா 350,000 ஆக இருந்த வீட்டுக்கடன் தொகை 2006 ஆண்டில் ரூபா 500,000 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

2006 ஆண்டிலிருந்து 2018 வரையிலான 12 வருட காலப்பகுதியினுள் வீட்டுக்கடன் தொகை அதிகரிக்கப்படவில்லை. சென்ற வருடங்களில் வீடுகட்டும் நிர்மாணப் பொருட்களினதும் காணிகளினதும் விலைகள் துரிதமாக அதிகரித்திருந்தும் அதற்கேற்றவாறு வீட்டுக்கடன் தொகை அதிகரிக்கப்படவும் இல்லை. வீட்டுக்கடன் தொகையை அதிகரிக்குமாறு தொழிற் சங்கங்கள் உயர் முகாமைத்துவத்திடமும் ஊழியர்கள் இப்பகுதியிடமும் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

நலன்புரிப் பகுதியினால் வழங்கப்படும் நலன்புரி வசதிகளில் வீட்டுக்கடன் திட்டத்திற்கு ஊழியர்களின் ஆர்வம் மிகவும் குறைந்துள்ளது. வீட்டுக்கடன் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதி ஏற்பாடுகளுக்கு உட்பட்டதாக இந்தக் கடன் தொகையை அதிகரித்து வீட்டுக்கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும்.

**நலன்புரி நடவடிக்கைகளுக்கான பேருந்துகள்**

இலங்கை துறைமுக அதிகாரசபை ஊழியர்களினதும் யாத்திரை, சுற்றுலா மற்றும் அவர்களது குடும்பத்தினரின் மரணச்சடங்கு போன்றவற்றில் கலந்துகொள்வதற்காக 06 பேருந்துகளை ஒதுக்கியுள்ளது. உள்ளகப் போக்குவரத்திற்காக 3 பேருந்துகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஊழியர் ஒருவரின் மரணச்சடங்கு தொடர்பில் பகுதி, பிரிவின் ஊழியர்கள் பங்கேற்பதற்காக இலவசமாக ஒரு பேருந்து வழங்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக சுற்றுலா, யாத்திரை மற்றும் திருமண நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு அதிகாரசபையின் ஊழியர்களுக்கு தலா ஒரு கி.மீட்டருக்கு ரூபா 12 தங்கி வாழ்வோருடனான சுற்றுலா தொடர்பில் தலா ஒரு கீ.மீட்டருக்கு ரூபா 15 வீதம் சலுகைக்கட்டண அடிப்படையில் பேரூந்து வழங்கப்படுகின்றது.

2018 ஆண்டினுள் ஈடுபடுத்தப்பட்டிருந்த பேரூந்துகளின் பயண எண்ணிக்கை 871 ஆகும்.

**பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையம்**

2½ முதல் தொடக்கம் 05 வயது வரையான ஊழியர்களின் பிள்ளைகளை பராமரிப்பதற்கான வசதிகளை இது வழங்குகிறது. ஜனவரி முதல் ஆகஸ்ட்ஸ்ட் 31 வரையான காலப்பகுதிக்கு சிறுவர்கள் அனுமதிக்கப்படுவதுடன் மாதாந்தம் ஒரு பிள்ளைக்கு ரூபா 1,300 சலுகைக் கட்டணமாக அறவிடப்படுகிறது. 2018 ஆண்டில் 30 பிள்ளைகள் பராமரிக்கப்பட்டதுடன் அதில் 19 பிள்ளைகள் 05 வயதினை பூர்த்தி செய்ததன் காரணமாக பாடசாலைக் கல்வியை பெறுவதற்காக நீங்கிச் சென்றுள்ளனர்.

பகல் நேர பராமரிப்பு நிலைய பிள்ளைகளுக்கு சிற்றுண்டி மற்றும் மதிய உணவு துறைமுக அதிகாரசபையினால் வழங்கப்படுகின்றது. இப் பராமரிப்பு நிலையத்தின் பணிகளை சிறப்பாக பேணிச்செல்வதற்கு இதன் சேவையை 2019 ஆம் ஆண்டிலிருந்து துறைமுக முகாமைத்துவ

மற்றும் ஆலோசனைச்சேவை தனியார் கம்பனி ஊடாக பெற்றுக் கொள்வதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

2018 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையிலான காலப்பகுதிக்கு மொத்த மாதாந்த கட்டணமாக ரூபா 569,400 கிடைக்கப்பெற்றுள்ளது.

**நூலக வசதிகள்**

இலங்கை துறைமுக அதிகாரசபையானது அதன் ஊழியர்களின் வாசிக்கும் ஆர்வத்தினை அதிகரிக்கவும் அவர்களது திறனினை அதிகரிக்கவும் அறிவினைப் பெற்றுக்கொள்ளவும் ஊழியர்களினால் பராமரிக்கப்படும் நூலகங்களிற்கு நிதியுதவியினை வழங்குகிறது. 2018 இல் 20 நூலகங்களிற்கு புத்தகங்கள் வாங்குவதற்காக ரூபா 200,000 வழங்கப்பட்டுள்ளது.

**விசேட விடுமுறைக்கான கொடுப்பனவுகள்**

நோய் நிலைமையொன்றின் அல்லது சடுதி விபத்தொன்றின் போது தனக்குரித்தான அனைத்து விடுமுறைகளும் முடிவடைந்த சந்தர்ப்பத்தில் வைத்திய சிபாரிசு மீது சேவைக்கு தகுதியாகும் வரை ஆகக்கூடியது 180 நாட்கள் வரை நலன்புரி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். பிரதான வைத்திய அலுவலரின் பரிந்துரைக்கமைய சம்பளமுடைய அல்லது சம்பளமற்ற விடுமுறைகள் வழங்கப்படுகின்றன. 2018 ஜனவரி இருந்து டிசெம்பர் 31ஆம் திகதி வரையில் 102 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று அதில் அங்கீகார சம்பளமற்ற 254 நாட்கள் தொடர்பில் அங்கீகார சம்பளமுடைய 3487 விடுமுறைநாட்களுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**கடலக நூதனசாலை**

துறைமுக மற்றும் கப்பற்றுறையின் சரித்திர பரிணாமத்தை காண்பிக்கும் மாதிரி உருவ மற்றும் காட்சிப்பதாகைகள் போன்று பழைய துறைமுக வளவினுள் பயன்படுத்தப்பட்ட பொருட்களும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்களுக்கு உயர் கல்வி பெறுமதி கொண்ட இதை பார்வையிடுவதற்கு பெருந்தொகையான மாணவர்கள் வருகை தருகின்றனர். கொழும்பிற்கு அப்பால் கல்வி சுற்றுலாக்கள் வரும் பெருந் தொகையான பாடசாலை மாணவர்களும் முதியோர் இல்லம் மற்றும் முன்பள்ளி பாடசாலையிகளிலிருந்தும் இதற்கு வருகை தருகின்றனர். மு.ப. 08.00 இருந்து பி.ப 05.00 மணி வரையிலும் ஞாயிறு போயா தினங்களிலும் திறந்திருக்கும். 2018 ஆண்டில் நுதனசாலைக்கு 42776 பேர் வருகை தந்துள்ளனர்.

கடலக நூதனசாலையை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு வருவதற்கான பூர்வாங்க பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதன்படி கடலக நூதனசாலையை குளிரூட்டுவதற்கும் ஒளிமயமாக்குவதற்குமான ஆரம்ப பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பில் 2018 மற்றும் 2019 வருடங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூபா 25 மில்லியன் ஆகும்.

**ஊழியர்களுக்கான வெகுமதிகள்**

30 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்த அனைத்து ஊழியர்களுக்கும் பெறுமதிமிக்க நினைவுப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. அதன்படி 30 வருட சேவையை நிறைவு செய்த ஊழியர்களுக்கான வெகுமதிகள் வழங்கும் பணிகள் மனிதவள பகுதி வழங்கும் தகவலின் அடிப்படையில் நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதியினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதன்படி 2018 ஆம் ஆண்டில் தகைமை பெற்றவர்களின் எண்ணிக்கை 405 ஆகும்.

**நலன்புரி உண்டிச்சாலைகள்**

துறைமுக அதிகாரசபையின் வளவினுள் ஊழியர்களினதும் பல்வேறு சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு வருகை தருபவர்களினதும வசதி கருதி 13 நலன்புரி உண்டிச்சாலைகள் நடாத்திச் செல்லப்படுவதோடு வருடாந்த விலைகள் கோரல் மூலம் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் மூலம் உண்டிச்சாலைகள் பேணிச் செல்லப்படுகின்றன. 2018 ஆண்டில் உண்டிச்சாலைகள் மூலம் வாடகைக் கட்டணமாக கிடைக்கப்பெற்ற மொத்த வருமானம் ரூபா 5,263,399 ஆகும். கொச்சிக்கடையில் அகற்றப்பட்ட

புதிய சமையலறை வளவில் புதிதாக உண்டிச்சாலையொன்றை நிர்மாணிப்பதற்கான பணிகள் தற்போது இடம் பெற்று வருகின்றன.

இதற்கு மேலதிகமாக அனைத்து உண்டிச்சாலைகளினதும் பழுதுபார்ப்பு பணிகளை நிறைவு செய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதோடு குறித்த புதுப்பித்தல்களை 2019 ஆண்டில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**கதிர்காமம் இல 11 விடுமுறை விடுதி**

2017.10.06 ஆம் திகதிய இல:29/2017 ஆம் தலைவரின் சுற்றுநிருபம் மூலம் கதிர்காமம் இல:11 விடுமுறை விடுதி நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியினால் 2018.01.01 இருந்து 2018.12.31 ஆம் திகதி வரை ஊழியர்கள் 385 பேருக்கு அறை வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

நிறைவேற்று - 161 நிறைவேற்று அல்லாத : 224

விடுமுறை விடுதியின் புனரமைப்பு பணிகளுக்கு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதோடு குறித்த பணிகளை 2019 ஆண்டில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**2. மத்திய சமையலறைப் பிரிவு**

**ஆளணியினருக்கு இலவசமாக உணவு வழங்குதல்**

துறைமுக அதிகாரசபையின் முறை மற்றும் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்களுக்கு பகல்/இரவு உணவுகள் போன்று தேநீர், தீன்பண்டங்கள் மற்றும் கஞ்சும் வழங்கப்படுவதுடன் அலுவலக ஊழியரகளுக்கு பகல் உணவும் வழங்கப்படுகின்றன அலுவலக ஊழியர்களில் இரவு 10.00 மணி அல்லது அதற்கு பின்னர் சேவையில் ஈடுபடுவோருக்கு இரவு உணவும் வழங்கப்படுகின்றது. 2018 ஆண்டில் பகல்/இரவு, தேநீர் தின்பண்டங்கள் மற்றும் கஞ்சு தொடர்பில் செலவிடப்பட்ட தொகை ரூபா 873,003,968 ஆகும். பகல்/இரவு உணவுகளுக்கு ரூபா 649,767,694 வும் தேநீர் தின்பண்டங்கள் மற்றும் கஞ்சு தொடர்பில் ரூபா 223,236,274 வும் செலவிடப்பட்டுள்ளது.

**விசேட விழா நிகழ்ச்சிகளின் உபசாரப்பணிகள்**

முகாமைத்துவப் பணிப்பாளரின் பூர்வாங்க அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் வருடம் ஆரம்பிக்கும் நிகழ்வு, இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஆண்டு நிறைவு விழா, சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் வருட இறுதி விழா போன்றவற்றுக்கு உபசாரப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக தேசிய ரீதியில் ஏற்படும் இயற்கை அனர்த்தங்களின் போது உயர் முகாமைத்துவத்தின் அங்கீகாரத்தின் மீது சமைத்த உணவு பார்சல்களும் வழங்கப்படுகின்றன.

## மருத்துவப் பகுதி

மருத்துவ பகுதியானது ஒருநாளில் 24 மணித்தியாலங்களும் வாரத்தில் 7 நாட்களும் தொழிற்படும்.

ஆறு வைத்தியர்கள், ஒரு பல்வைத்தியர் மற்றும் துணை மருத்துவ பணியாளர் குழுவொன்றினால் வெளிநோயாளர் பிரிவின் சேவைகளுக்கு உதவி வழங்குவதோடு வெளிநோயாளர் சிகிச்சை பல் சிகிச்சை, கதிர்ப்படம், நுஊபு வசதிகள், ஆய்வுகூடம், 24 மணித்தியால மருந்தகம் மற்றும் நோயாளர் காவு வண்டி சேவைகள் போன்ற தொழிற்பாடுகள் நடைபெறுகின்றன. விபத்து மற்றும் அவசர சேவைகள் உடனடியாக வழங்கப்படும்.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் பகுதி வரியாக டெங்கு ஒழிப்பு குழுவின் அங்கத்தவரொருவர் மற்றும் பகுதித் தலைவர்களின் கண்காணிப்பின் கீழ் ஒவ்வொரு பகுதிக்கும் தொடர்புடைய டெங்கு கட்டுப்பாட்டுக் குழுவினால் வாரம்தோரும் துறைமுக வளவுக்குள் டெங்கு நுழம்பு பரவும் பிரதேசங்களை பரீட்சிக்கப்படுகின்றன. ஒவ்வொரு

பகுதியினாலும் மாதாந்த அறிக்கையொன்று துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரின் செயலாளருக்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவரூடாக அனுப்பப்படுகின்றது.

ஏற்படுகின்ற சிக்கல்கள் பற்றி கலந்துரையாடுவதற்கு மற்றும் அதற்கான சரியான செயற்பாடுகளை எடுப்பதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை டெங்கு ஒழுப்பு குழு மாதாந்த கூட்டங்களை நடாத்துகிறது.

வாழ்க்கை (பாங்கு) முறை காரணமாக ஏற்படும் நோயின் தன்மைகள் விசேடமாக நீரிழிவு நோய் தடுப்பு தொடர்பில் கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்கள், பகுதிகள் மற்றும் பிரிவுகள் மட்டத்தில் நடாத்தப்பட்டன. வைத்திய பகுதியின் வளங்கள் பாவனை மிகவும் உயர் நிலையில் இடம்பெற்றுது.

## மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்வி கலாசாலை

துறைமுக ஊழியர்கள், துறைமுகத்தினைப் பாவிப்போர் மற்றும் ஏனைய துறைமுக கடல்சார் துறையில் உள்ளவர்களுக்கு பயிற்சிகளை வழங்குதல் மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்வி கலாசாலை முக்கிய குறிக்கோளாகும். தெரிவுசெய்யப்பட்ட குழுக்களின் அறிவு, திறன், மனப்பான்மையினை மேம்படுத்தும் நோக்குடன் விரிவுரைகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் நடை முறைபயிற்சி செயற்திட்டங்கள் வடிவமைத்தலையே இந்நிறுவகத்தின் வருடாந்த பயிற்சி நாட்காட்டி கவனத்தில் கொள்கிறது துறைமுக ஊழியர்களின் உற்பத்தித்திறன் மேம்பாடு, குழு மனப்பாங்கு விருத்தி, தொழிநுட்பத்திறன்களை மேம்படுத்தல், வாடிக்கையாளர் சேவைகள், தர மேம்பாடு போன்ற பல செயலமர்வுகள் 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டன. சான்றிதழைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாடிக்கையாளர் சார்பான கற்கைநெறிகள் மூலம் துறைமுக ஊழியர்கள் தமது தகைமை மட்டத்தினைத் தரமுயர்த்தவும் துறைமுக செயற்பாடுகள் குறித்து சிறப்பான தகைமைகளைப் பெறவும் மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்வி கலாசாலை வழிவகை மேற்கொள்கின்றது.

2018 இல் மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்வி கலாசாலை 8,325 பரீட்சார்த்திகளுக்கு பயிற்சிகளை வழங்கியதுடன் அவை 401,273 மனித மணித்தியாலங்களையும் பூர்த்தி செய்திருந்தன. மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்வி கலாசாலை ஆனது 346 பல்கலைக்கழக மாணவர்கள், தொழிநுட்பக் கல்லூரி மற்றும் ஏனைய தொழிற்கல்லூரி மாணவர்களுக்கும் தொழிற்பயிற்சிகளை வழங்கியது.

2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்த பயிற்சிகள் தொடர்பான செயலாற்றுகை

| கற்கைகள் | பயிற்சிபெற்ற மொத்த பரீட்சார்த்திகள் எண்ணிக்கை | மனித மணித்தியாலங்கள் |
|---|---|---|
| உபகரணங்களை கையாளுதல் | 994 | 17,382 |
| கப்பற்சரக்கு கையாளுதல் | 11 | 264 |
| முகாமைத்துவம் | 3,458 | 233,885 |
| தகவல் முறைமை | 790 | 65,102 |
| தொழிநுட்பம் (மின்/கைத்தொழில் பட்டறை) | 490 | 30,134 |
| தீயணைப்பு பாதுகாப்பு, தொழில்சார் சுகாதாரம | 1,040 | 11,275 |
| கடலகம் மற்றும் மாலுமி | 1,542 | 43,222 |
| தேசியகைத்தொழில் பயிற்சி அதிகாரியின் பயிலுனர்கள் தொழில் பயிற்சி அதிகாரபை மற்றும் தொழிநுட்பக் கல்லூரி | 178 | 180,600 |
| பல்கலைக்கழக பட்டப்படிப்பை மேற்கொள்வோர் | 168 | 141,120 |
| **மொத்தம் (சேவை நிலைய பயிற்சிஅற்ற)** | **8,325** | **401,273** |
| **மொத்தம் (சேவை நிலைய பயிற்சியுடன்)** | **8,671** | **722,993** |

**புதிய திட்டத்தின் அடிப்படையில் இலங்கை துறைமுக அதிகாரசபை ஊழியர்களின் பதவியுயர்வுக்கான தகைமைகளை பெற்றுக்கொடுத்தல் தொடர்பான ஏற்பாடுகள்**

உரிய கல்வித்தகைமைகள் இல்லாததன் காரணமாக சில துறைமுக ஊழியர்களின் தொழிலானது முன்னோக்கிச் செல்லாமல் பதவியுயர்வுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இந்நிலைமையினை தவிர்த்து இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு பொருத்தமான வகையில் இவர்களுக்கான தகைமைகளை பூர்த்திசெய்துகொள்வதற்கு மூன்றாம் நிலை மற்றும் தொழில்நுட்ப கல்வி தொடர்பான ஆணைக்குழு TVEC, தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகாரசபை (NAITA) ஒன்றிணைந்த கட்டமைப்பு பயிற்சித் திட்டம் மற்றும் தேசிய தொழில்நுட்ப தகைமைகளை பூர்த்தி செய்யவும் சான்றிதழ் (NVQ) ஆகியவற்றை பெற்றுக் கொடுப்பதற்கும் மஹபொல மற்றும் கடல்சார் கல்வி கலாசாலை திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், 2018 இல் நிறைவேற்று அலுவலர்களின் நன்மைக்காக துறைமுக செயற்பாடுகள் முகாமைத்துவ டிப்ளோமா, துறைமுக பாதுகாப்பு முகாமைத்துவ டிப்ளோமா, கணக்கீடு மற்றும் கணக்காய்வு டிப்ளோமா மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா போன்றன நடாத்தப்பட்டன. இலங்கை துறைமுக அதிகாரசபை பெண் பாரம் தூக்கிகள் செயற்படுத்துனர்களினதும் தேர்ச்சிகளை மேம்படுத்துவதற்கு புதிய நிகழ்ச்சித்திட்மொன்றும் தயாரிக்கப்பட்டன.

**ஒட்டுமொத்த துறைமுக உற்பத்தித்திறனினை மேம்படுத்தல்**

ஒட்டுமொத்த துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலை உற்பத்தித்திறனினை மேம்படுத்த துறைமுக நடவடிக்கைகளின் வேறுபட்ட தொழில்களில் மகாபொல துறைமுகங்கள் மற்றும் கடல் கல்வி நிறுவகம் திறன் மேம்பாட்டுப் பயிற்சி செயலமர்வுகள் நடாத்தப்படுகின்றன

1. துறைமுக நிதி மற்றும் கணக்கீடு
2. கணக்காய்வு
3. கொள்முதல் மற்றும் களஞ்சிய முகாமைத்துவம்
4. இலிகிதர் திறன் விருத்தி மற்றும் நிர்வாகம்
5. மனிதவள முகாமைத்துவம்
6. நன்னோக்கிலான எண்ணப்பாடுகள்
7. சுகாதார மற்றும் பாதுகாப்பு விடயங்கள்
8. துறைமுக முகாமைத்துவம்
9. மேற்பார்வையாளர்கள், தொழிநுட்ப வல்லுநர்களுக்கான பொறியியல் படம் வரைதல்
10. மோட்டார் கட்டுப்பாட்டுச் சுற்று
11. மின்சாரவியலாளருக்கான இலத்திரனியல்
12. ஓட்டுதல் பயிற்சிநெறி
13. கணனிப் பயிற்சிகள்
14. உபகரணங்கள் சார்ந்த பயிற்சிகள்

2018 இல் 39 செயற்திட்டங்கள் 994 பங்குபற்றுனர்களுக்கு நடாத்தப்பட்டது. மேலும் கொள்கலன் முனையங்களிலுள்ள ஆட்கள் மற்றும் உபகரணங்களின் பாதுகாப்பினை மேம்படுத்த 761 தனிப்பட்ட டிரக் சாரதிகளுக்க்கு விழிப்புணர்வு செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. இச் செயற்திட்டம் டிரக் சுழற்சி நேரத்தினைக் குறைத்ததுடன் கொள்கலன் நடவடிக்கைகளில் பாதுகாப்பினை மேம்படுத்தியது.

**உள்நாட்டு மற்றும் சர்வதேச கப்பலோட்ட துறைக்கு பங்களிப்பு வழங்குதல்**

மகாபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலை கடல் பயிற்சிச் செயற்திட்டங்களை வழங்குவதன் மூலம் உலகக் கப்லோட்டத் துறைக்குப் பெரும்பங்காற்றுகிறது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கை இளைஞர்கள் இப்பயிற்சிகளைப் பெற்றதுடன் சர்வதேச கப்பலோட்டத் துறையில் வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்கின்றனர், 2018 இல் இவ்வாறான 76 செயற்திட்டங்கள் 1,542 பேருக்கு நடாத்தப்பட்டுள்ளன.

**ISO 9001: 2008 தரச் சான்றிதழ்**

கப்பலோட்டிகளுக்கான சர்வதேச கடல்சார் அமைப்பு (IMO)/ கப்பலொன்றில் வேலை செய்வதற்கு தேவைப்படும் பயிற்சிச் சான்றிதழ் – (Standard Training Certificate for Watch Keeping (STCW)) போன்ற பயிற்சிப் பாடநெறி நடாத்துவதிலான முக்கிய தரக்கட்டுப்பாட்டிற்கான ISO 9001-2008 சான்றிதழ் இலங்கையின் பிரதான கல்வி நிறுவனமான மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது. மாலுமிகளுக்கான International Maritime Organaization /Standards Of Training, Certification and Watch Keeping பயிற்சி நெறிகளை நடாத்துவதற்கு இருக்கவேண்டிய அத்தியாவசியமான 2015 ISO 9001 தரச் சான்றிதழை பெற்றுக் கொண்டுள்ள இலங்கையின் முன்னணி கல்வி நிறுவுனம் மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்வி கலாசாலையாகும்.

2018 ஆண்டினுள் மூன்று முகாமைத்துவ மீளாய்வுகளும் நான்கு உள்ளக கணக்காய்வுகளும் வணிக சடல்சார் செயலக கணக்காய்வொன்றும் இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட உறுதிப்பாட்டுக்கான (IRQS) கணக்காய்வு ஒன்றும் நடாத்தப்பட்டுள்ளன.

**நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல்**

மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலை அதன் செயற்பாடுகளின் போது நவீன தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்தலின் மூலம் அதன் பயிற்சிப் பாடநெறிகளின் தரத்தினை மேம்படுத்தியுள்ளது. நிறுவப்பட்டுள்ள மெகாரொனிக் விஞ்ஞானகூடத்தின் பயன்பாட்டில் 23 அபேட்சகர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். துறைமுகத்தில் கென்ட்ரி மற்றும் ட்ரான்பர் பாரம்தூக்கி இயக்குபவர்கள் 24 பேர் பயிற்றுவிக்கப்படுவதற்கு கொள்கலன் தாங்கியின் பயிற்சி மாதிரி பயன்படுத்தப்படுகின்றது.

**பயன்படுத்தப்படக்கூடிய ஊழியர் படையணி**

எதிர்கால தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் புதிதாக அபிவிருத்தி செய்யப்படும் துறைமுகங்களின் வேலைகளுக்கு திறன் கொண்ட ஆளணி குழாமொன்றை பேணிச் செல்லும் செயற்பாட்டிலும் மஹபொல பயிற்சி நிலையம் ஈடுபட்டுள்ளது. இந்த நோக்கில் 2018 ஆண்டினுள் துறைமுக இயந்திர இயக்குபவர்கள் 233 பேர் பயிற்றுவிக்கப்பட்டனர்.

**மொழிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்திறனை மேம்படுத்துதல்**

உலகளாவிய வர்த்தகங்களின் போது வாடிக்கையாளர்கள் திருப்திப்படுத்துவது முக்கிய விடயமென்பதால் பாவனையாளர்கள் மிகவும் திருப்தி கொள்வதற்கு ஊழியர்களின் மொழித்தேர்ச்சி அதிகரிக்கப்படுவதற்கும், அவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப அறிவாற்றலை வழங்குவது தொடர்பிலும் இலங்கை துறைமுக அதிகாரசபை கவனம் செலுத்துகின்றது. மஹபொல பயிற்சி நிலையம் இப்பொறுப்பை ஏற்றுள்ளதோடு அதற்கான 2018 ஆண்டில் பல்வேறு தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டங்களில் 790 ஊழியர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். மேலும், தெரிவு செய்யப்பட்ட 331 அபேட்சகர்களுக்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக பிரிடிஷ் கவுன்சில் கல்வி நிறுவனத்துடன் (Brittish Council) இணைந்து நிறைவேற்றுத்தர உயர் உத்தியோகத்தர்கள் 23 பேருக்கு விரிவுரைகள் நடாத்துவதற்கான ஆற்றல்களை அதிகரிப்பது தொடர்பான பயிற்சி நெறிகள் மஹாபொல மற்றும் கடல்சார் கல்வி கலாசாலையில் நடாத்தப்பட்டது.

**கைத்தொழில் ஒத்துழைப்பு வழங்கல்**

அரச பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்கை பாடநெறிகளை பூர்த்தி செய்து தொழில்நுட்ப பயிற்சி பெற்றுக்கொடுக்கப்படுவதிலான ஒத்துழைப்பு வழங்கும் செயற்பாட்டில் இலங்கை துறைமுக அதிகாரசபை ஈடுபட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டினுள் பல்வேறு பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பினை மேற்கொண்ட 168 பேருக்கும் மற்றும் துறைசார்ந்த

178 மாணவர்களுக்கும் அவர்களின் பயிற்சிகளை நிறைவு செய்து கொள்வதற்கான சந்தரப்பங்களையும் இலங்கை துறைமுக அதிகாரசபை வழங்கியுள்ளது.

**மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலை சேவைகளை வழங்கும் கடல்சார் நிறுவனங்கள்**

மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலை பின்வரும் நிறுவனங்ளுக்கு சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளது.

1. இலங்கைக் கடற்படை
2. தொழில்நுட்ப கற்கைகளுக்கான லங்கா நிறுவனம் (தனியார்) லிமிடட்
3. சினெக் (Cinec)
4. Marecantile Seamen Training Institute Ltd
5. UNK Global maritime Institute
6. வணிகக் கப்பற்துறை சார்ந்த செயலகம் (Merchant Shopping Secretariat)
7. சமுத்திர பல்கலைக்கழகம் (Occean University)

**ஈட்டப்பட்ட வருமானம்**

2018 சனவரி தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதியில் வெளியாட்களுக்கு கட்டணம் செலுத்தப்பட்ட பாடநெறிகள் மூலம் துறைமுக அதிகாரசபையானது 21,304,422 ரூபா வருமானத்தினைப் பெற்றுக்கொண்டது. இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஒட்டுமொத்த செயற்பாடுகளை மேம்படுத்தவென வேறுபட்ட பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சியின் மூலம் 22,525,668 ரூபா வருமானம் ஈட்டப்பட்டது. இதனால், 2018 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலை பெற்ற மொத்த வருமானம் 43,830,050 ரூபாவாகும்.

மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலையினால் 2018 இல் நடாத்தப்பட்ட இந்தக் கற்கைகளுக்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை 8,902,870 ரூபாவாகும்.

## துணைச் சேவைகள்

### செயலகப் பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபையின் முக்கிய பகுதிகளுள் பிரதான இடம் வகிக்கும் செயலகப் பகுதியில் தலைவரின் அலுவலகம், உப தலைவரின் அலுவலகம், முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் மேலதிக முகாமைத்துவப் பணிப்பாளர் போன்றோரின் அலுவலகங்கள் உள்ளடங்குவதோடு இப் பகுதியினால் ஒட்டுமொத்த நிர்வாகப்பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

இவற்றை உரிய முறையில் தடையின்றி நடாத்திச் செல்லும் பொருட்டு உயர் முகாமைத்துவத்தின் ஆலோசனைகளுக்கேற்ப சுற்றுநிருபங்களை வெளியிடுவதும், சட்டங்களை வகுப்பதும், துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சிலிருந்தும் வேறு நிறுவனங்களிலிருந்தும் கிடைக்கப்பெறும் கடிதங்களுக்கு துரிதமாக பதில் வழங்குவதும் இப்பகுதியின் பிரதான பணிகளில் சிலவாகும். இந்த நிர்வாக பணிகள் தவிர்ந்த ஏனைய சம்பந்தப்பட்ட பகுதிகளோடு சிறந்த தொடர்புகளைப் பேணி இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் செயற்பாட்டுத் திட்டத்தினை தயாரிப்பதும் பாராளுமன்றத்தில் அமைச்சரிடம் கேட்கப்படும் வினாக்களுக்கான பதில்களை தயாரிப்பதும் பொது வர்த்தகம் தொடர்பான பாராளுமன்ற குழுவின் துறைமுக அதிகாரசபை தொடர்புபடும் அறிக்கைகளை தயாரிப்பதும் இப்பகுதியினால் நிறைவேற்றப்படும் ஏனைய பிரதான பணிகளாகும்.

கணக்காய்வு அத்தியட்சகர் இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பில் வெளியிடும் கணக்காய்வு அறிக்கைகளுக்கு பதில் வழங்குவதும் கணக்காய்வுப் பணிகளில் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகருக்குத் தேவையான விபரங்களைப் பெற்றுக்கொடுப்பதும் இப்பகுதியினால் மேற்கொள்ளப்படும் மேலுமொரு சிறப்புப் பணியாகும். கணக்காய்வு

விசாரணைகள், இயக்க மற்றும் நிதிசார் செயலாற்றுகையின் முன்னேற்ற அறிக்கைகள், இலங்கை துறைமுக அதிகாரசபையினது அங்கீகார ஆளணித்தொகை பற்றியதான விபரங்கள் மாதாந்தம், முன்று மாதத்திற்கொருமுறை மற்றும் வருடாந்தம் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு ஊடாக நிதி அமைச்சிடம் இப்பகுதியினாலேயே முன்வைக்கப்படுகின்றன.

நாட்டின் அனைத்து அரசசார் நிறுவன ஊழியர்கள் உள்ளடங்கும் வகையில் இலங்கை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள அக்ரஹார (ரண்) ஊழியர் சுகாதார காப்புறுதித் திட்டம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்கள் தொடர்பிலும் நடைமுறைப்படுத்தப்படுவதோடு அதன் பணிகளும் இப்பகுதியினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இப் புதிய காப்புறுதித்திட்டம் மூலம் முன்னர் இருந்த காப்புறுதித்திட்டத்தை விடவும் கூடிய சிறந்த அனுகூலங்கள் கிடைக்கப்பெறுவதோடு பின்வருமாறு அனுகூலங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

1. தனியார் மருத்துவமனையொன்றில் தங்கி சிகிச்சை பெறுகையில் வழங்கப்பட்ட ஆகக்கூடிய ரூபா 200,000 காப்புறுதித் தொகையானது ரூபா 350,000 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.
2. ஊழியரொருவரின் இயற்கை மரணமொன்றின் போது வழங்கப்பட்ட ரூபா 100,000 கருணைக் கொடுப்பனவானது ரூபா. 700,000 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.
3. சடுதி விபத்தொன்றின் போது ஏற்படும் ஊழியரின் மரணம் தொடர்பில் வழங்கப்பட்ட ரூபா 1,000,000 நட்டஈட்டுத் தொகையானது ரூபா 2,000,000 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.
4. பாரிய நோய்களுக்கான கொடுப்பனவுகளும் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டுள்ளன.

   இதய சிகிச்சை தொடர்பில் ரூபா 1,000,000 வரை
   மூளை மற்றும் சிறுநீரக சத்திரசிகிச்சைகள் தொடர்பில் ரூபா. 1,200,000 வரை
   புற்றுநோய் சத்திரசிகிச்சைகள் தொடர்பில் ரூபா. 600,000 வரை

இதற்கு மேலதிகமாக ஆண்டினுள் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களும், விழாக்களும் ஏற்பாடு செய்யப்பட்டன. 2018 ஆண்டில் நிறுவன ரீதியான சமூகப் பொறுப்புப்பணிகளின் கீழ் மஹரகம அபேக்ஷா மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளுக்கு உலர் உணவுகள் வழங்கும் வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டு இலங்கை துறைமுக அதிகாரசபையின் 39 ஆவது ஆண்டு நிறைவையொட்டி விவசாயத் திணைக்களம் மற்றும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து துறைமுக வளாகத்தினுள் மர நடுகை நிகழ்ச்சித் திட்டமும் சமூக நன்மை கருதிய இரத்ததான வேலைத்திட்டமும் மேற்கொள்ளப்பட்டன.

முகாமைத்துவ மட்ட அலுவலர்களின் கடமைகளுடன் தொடர்புபடும் வெளிநாட்டு பயிற்சித்திட்டங்களில் புலமைப்பரிசில் வழங்குவதற்கு தகுதியான அபேட்சகர்களை தெரிவு செய்து, வெளிநாட்டு மாநாடுகள், கண்காட்சிகளில் கலந்துகொள்ளும் அதிகாரிகள், ஊழியர்கள் சம்பந்தப்படும் அனைத்துப் பணிகள் போன்று சர்வதேச விளையாட்டுப்போட்டிகளில் பங்கேற்பதற்கு வெளிநாடு செல்லும் ஓட்டப்போட்டியாளர்களின் வெளிநாட்டுப்பயணங்கள் தொடர்பான பணிகளும் செயலகப் பகுதியினாலேயே நிறைவேற்றப்படுகின்றன.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் எண்ணக்கருவின் அடிப்படையில் நாட்டின் இளைய பரம்பரையினரை அழிவு தரும் போதைப் பொருட்களிலிருந்து மீட்கும் நோக்குடன் பிரகடனப்படுத்தப்பட்ட “போதைப்பொருள் ஒழிக்கும் வாரத்துக்கு” ஒத்துழைப்பு வழங்கும் வகையில் செயலகப் பகுதியிலிருந்து துறைமுக மஹபொல கடல்சார் கலாசாலை வரையிலான போதைப்பொருள் எதிர்ப்புக்கான நடைபவனியின் நிகழ்வும் செயலகப் பகுதியினால் ஏற்பாடு செய்யப்பட்டதொன்றாகும்.

கடமைப்பணிகள் நிமித்தம் அல்லது தனிப்பட்ட தேவைகளுக்கு நுவரஎலிய,காலி, ஒலுவில் மற்றும் கதிர்காம (விசேட) நலன்புரி விடுதிகளை துறைமுக அதிகாரசபையின் அதிகாரிகள் /ஊழியர்களுக்கு சலுகைக்கட்டண முறையில் ஒதுக்கீடு செய்யும் பணியையும் செயலகப் பகுதி மேற்கொள்கின்றது. இவற்றின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் பொறியியல் பகுதியோடு தொடர்புபட்டு மேற்கொள்ளப்படுகின்றன.

சொந்த நேரம், வாகன எரிபொருள் மற்றும் ஆளணிகள் பயன்படுத்தப்பட்டு அனைத்து பகுதி மற்றும் பிரிவுகளிலிருந்து சம்பந்தப்பட்ட பகுதி/பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப்படும் கடிதங்கள் செயலகப்பகுதியில் ஒன்றுதிரட்டப்பட்டு ''கடிதங்கள் வினியோகிக்கும் நிலையமாக'' செயற்பட்டு கடிதங்களை தாமதியாது வினியோகிக்கும் பணியையும் செயலகப் பகுதி மேற்கொள்கின்றது.

அதிகார சபையின் அதிகாரிகள்/ஊழியர்களினால் மேற்கொள்ளப்படும் ஒழுங்கீனங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகளிலிருந்து தங்களை விடுவிக்குமாறு கோரி அவர்கள் தலைவரிடம் முன்வைக்கும் மேன்முறையீடுகளை ஒழுக்காற்று சட்டக்கோவைக்கேற்ப விசாரிப்பதற்கு மேன்முறையீட்டுக் குழுவிடம் முன்வைக்கும் பணியையும் செயலகப் பகுதி செய்கின்றது.

## தகவல் முறைமைப் பகுதி

### முனைய முகாமைத்துவ தொகுதி (TMS)

புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி முனைய முகாமைத்துவ தொகுதியின் உற்பத்தித்திறன், கொள்கலன் கையாளல் செயற்பாட்டின் செயற்திறன் மற்றும் வாயில்களின் தன்னியக்க முறையை மேம்படுத்துவது தொடர்பில் இலங்கை துறைமுக அதிகார சபையின் வர்த்தக செயற்பாட்டை விருத்தி செய்யும் பொருட்டு உத்தேச மேம்பாட்டுத் தொகுதியோடு செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான பகுப்பாய்வு சாதனம் (Artifical Intelligence Analytical Tools) , வானொலி அலைவரிசையினை அடையாளம் காணுதல் (RFI), உலக நிலைப்படுத்தல் தொகுதி (Global Positioning System), வெளிச்சக் குறியீடுகளை அடையாளம் காணுதல் (Optic Character Recognition ) போன்றவை பயன்படுத்தப்படும்.

### வானொலி அலைவரிசையினை அடையாளம் காணும் சாதனம் (RFID) அடிப்படையிலான பாதுகாப்புத் தொகுதி

வானொலி அலைவரிசையினை அடையாளம் காணும் தொகுதி அடிப்படையிலான அடையாள அட்டை வழங்கும் முதலாவது கட்டம் துறைமுக பாவனையாளர்களுக்கும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணியாளர்களுக்கும் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தொகுதியின் இரண்டாம் கட்டம் மூலம் இலத்திரனியல் ஊடாக விண்ணப்பப்படிவங்களை முன்வைத்தல், கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் சேவைகளை உச்ச முறையில் பெற்றுக்கொள்வதற்கு நடைமுறை செயலி (Mobile Apps) மற்றும் வெப் தளங்களை பயன்படுத்தக்கூடிய ஆற்றல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### இலத்திரனியல் ஆவண (e-Docs) முகாமைத்துவ தொகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபையின் இலத்திரனியல் ஆவணத் தொகுதியொன்று மிக விரைவில் நடைமுறைப்படுத்தப்படும். இத்தொகுதியூடாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து ஆவணங்களும் இலக்கமிடப்பட்டு (digitize) ஆவணங்களை இலகுவாகப் பெறுவதற்கும் பரஸ்பரம் அவற்றை பரீசீலிக்கக்கூடியதாகவும் இருக்கும். இத்தொகுதியின் மூலம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பௌதீக ஆவண முகாமைத்துவத்தின் போது ஏற்படும் விரையம், களஞ்சியப்படுத்தலின் காலத்தையும் செலவினத்தையும் குறைத்துக் கொள்ள முடியும்.

### நிதி மற்றும் கொள்வனவுத் தொகுதி மேம்படுத்துதல் (Oracle e – Business suite)

இருக்கும் மொடியூல் மூலம் புதிய தொகுதி மேம்படுத்தலோடு தரமுயர்த்தப்படும். புதிய நிதி மற்றும் கொள்வனவு தொகுதியூடாக துறைமுக பாவனையாளர்களுக்கு இலத்திரனியல் முறையில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் புதிய பல வசதிகளும் கிடைக்கப் பெறும்.

## சட்டம் பகுதி

1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகார சபைச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள விசேட துறைமுகங்களான கொழும்பு, காலி, திருகோணமலை, ஹம்பாந்தோட்டை மற்றும் காங்கேசன்துறை/ பருத்தித்துறை ஆகிய துறைமுகங்களுக்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் சட்ட அலுவலர்கள், சட்ட ஆலோசகர்களுக்கு அதேபோல் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபை, பணிப்பாளர்கள்,பகுதித் தலைவர்கள் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஏனைய பிரிவுகளுக்கும் ஆலோசனைகளை வழங்கி வருகின்றது.

**ஆலோசனைகள்**

2018 ஆம் ஆண்டினுள் முகாமைத்துவத்திற்கும் மற்றும் பகுதித் தலைவர்களுக்கும் 500 க்கு மேற்பட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக இலங்கை துறைமுக அதிகாரசபையினைத் தரப்பாகக் கொண்ட ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள், பிணை முறிகள், உறுதிகள், உரிமை கைமாற்றல்கள், குத்தகை, பிரகடனங்கள், அடகு வைத்தல்கள் போன்றவை) தொடர்பில் நகல் அறிக்கைகளை தயாரித்தல், உடன்படிக்கைகளை ஏற்படுத்தல் போன்ற ஏனைய பணிகளிலும் சட்டப் பகுதி ஈடுபட்டது.

**ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் மற்றும் பிணைமுறி, உறுதிகள்**

2018 ஆண்டில் 18, ஒப்பந்தம்/ உடன்படிக்கை மற்றும் 23 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் சட்டப் பகுதி மூலம் அமுல்படுத்தப்பட்டன.

இந்த சட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக பின்வரும் உடன்படிக்கைகள் மற்றும் பிணை முறிகளுக்குரிய பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

- ♦ வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளுக்கான ஊழியர்களின் சம்பளமற்ற விடுமுறை தொடர்பிலான பிணை.்.ஒப்பந்த உடன்பாடுகள் - 09
- ♦ இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பயிற்சி மற்றும் கல்வி தொடர்பிலான பிணை.்.ஒப்பந்த உடன்பாடுகள் - 29

இலங்கை துறைமுக அதிகாரசபையினை தரப்பாகக் கொண்ட அனைத்து நீதிமன்ற விடயங்கள் தொடர்பிலும் சட்டமா அதிபர் மற்றும் வெளி சட்டத்தரணிகளின் உதவியோடு சட்டப் பகுதியின் நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

**வழக்குத் தாக்கல்**

2017 ஆம் ஆண்டினுள் புதிதாக வழக்கு தொடர்பான, 398 முறைப்பாடுகள், விண்ணப்பங்கள் வெளிதரப்பினர்களினால் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு எதிராகவும் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஏனைய தரப்பினர்களுக்கு எதிராகவும் (மீயுயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல்நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், தொழில் நியாய சபைகள், நீதிவான் நீதிமன்றம், மனித உரிமை தொழில் ஆணையாளர், ஆணைக்குழு,பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் (Ombudsman) தொழில் திணைக்களம், தீர்ப்பளித்தல் மற்றும் தொழிலாளர் நட்டஈட்டு விசாரணை சபை மற்றும் சுங்க விசாரணை போன்றவற்றில்) சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

2018 ஆம் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு எதிராக/இலங்கை துறைமுக அதிகாரசபையினால் புதிய வழக்குகளுக்கான முறைப்பாடுகள், தொடர்பாக 109 விண்ணப்பங்கள் மீயுயர் நீதிமன்றம், மேன்முறையீட் நீதிமன்றம்,மேல் நீதி மன்றம் மாவட்ட

நீதிமன்றம் தொழில் நியாய சபைகள் நீதிவான நீதிமன்றம் மனித உரிமைகள் ஆணைக்குழு தொழில் ஆணையாளர்தொழில் திணைக்களம், தீர்ப்பளித்தல் மற்றும் தொழிலாளர் நட்டாஈட்டு விசாரணை சபை மற்றும் சுங்க விசாரணை பிரிவு ஆகியவற்றில் சமர்ப்பிக்கட்டிருந்தன மொத்தமான 507 வழக்குகளுள் 82 வழக்குகளின் பணிகள் 2018 ஆம் ஆண்டு இறுதியில் முடிடைந்துள்ளன.

2018.12.31 ஆம் திகதிக்கு வழக்குகள்/ முறைப்பாடுகள்/ விண்ணப்பங்கள் 424 மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் முடிவுறாத நிலையில் இருந்தன.

**மீயுயர் நீதிமன்ற வழக்குகள்**

2017 ஆம் ஆண்டின் இறுதியில் 32 வழக்குகள் விசாரணை நிலையில் இருந்தன 2018 ஆம் ஆண்டினுள் புதிதாக 08 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. மொத்தமான வழக்குகள் 40 இல் 02 நிராகரிக்கப்பட்டும் 01 வழக்கு நறைவுபெற்றும் 02 வழக்குகள் அகற்றிக்கொள்ளப்பட்ட நிலையிலும் இருந்தன. 2018.13.31 ஆம் திகதிக்கு 35 வழக்குகள் மீயுயர் நீதிமன்றில் விசாரணை நிலையில் இருந்தன.

**மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள்**

2017.12.31 வரை 24 வழக்குகள் விசாரணை நிலையில் இருந்தன. 2018 ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு எதிராக புதிதாக 02 வழக்குகள் தொடரப்பட்டன. மொத்த 26 வழக்குகளில் 04 வழக்குகள் நிராகரிக்கப்பட்டன. 2018.12.31 வரை 22 வழக்குகள் மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன.

**உயர் நீதிமன்ற வழக்குகள்**

2017.12.31 அம் திகதிக்கு 15 வழக்குகள் விசாரணை நிலையில் உள்ளன. 2018 ஆண்டினுள் ஒரு வழக்கு புதிதாக தாக்கல் செய்யப்பட்டது. மொத்தம் 16 வழக்குகளில் ஒரு வழக்கு நிராகரிக்கப்பட்டதுடன் ஒரு வழக்கு அகற்றிக்கொள்ளப்பட்டது. 2018.12.31 ஆம் திகதிக்கு உயர் நீதிமன்றில் 14 வழக்குகள் விசாரணை நிலையில் உள்ளன.

**மாவட்ட நீதிமன்ற வழக்குகள்**

2017.12.31 ஆம் திகதிக்கு 09 வழக்குகள் விசாரணை நிலையில் உள்ளன. 2018 ஆம் ஆண்டில் புதிதாக 03 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டன. மொத்தமான 12 வழக்குகளில் ஒரு வழக்கு முடிவடைந்தும் 02 வழக்குகள் நிராகரிக்கப்பட்டும் உள்ளதோடு ஒரு வழக்கு அகற்றிக் கொள்ளப்பட்டது. 2018.12.31 ஆம் திகதிக்கு 08 வழக்குகள் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன.

**நீதவான் நீதிமன்ற வழக்குகள்**

2017.12.31 அம் திகதிக்கு 22 வழக்குகள் விசாரணை நிலையில் உள்ளன. 2018 ஆண்டினுள் புதிதாக 72 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மொத்தமான 94 வழக்குகளுள் ஒரு வழக்கு அகற்றிக்கொள்ளப்பட்டுள்ளது. 02 வழக்குகள்

நிராகரிக்கப்பட்டுள்ளதோடு 49 வழக்குகள் நிறைவடைந்துள்ளன. 2018.12.31 ஆம் திகதிக்கு 42 வழக்குகள் விசாரணை நிலையில் உள்ளன.

**தொழில் நியாய சபை வழக்குகள்**

2017.12.31 ஆம் திகதிக்கு தொழிலாளர் நியாய சபையின் 05 வழக்குகள் விசாரணை நடாத்தப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டில் புதிதாக 03 வழக்குகள் இ.து.அ சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளதோடு, தொழில் நியாய சபையின் 08 வழக்குகளுள் 05 வழக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளது. 2018.12.31 ஆம் திகதிக்கு 03 வழக்குகள் விசாரணை நிலையில் உள்ளன.

**இவை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள், தொழிலாளர் பிணக்குகள் (இணக்கம் தொடர்பிலான வழக்குகள்) பற்றியதில் தொழில் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் பாராளுமன்ற ஆலாட்சி அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் ஊழியர் நட்டஈடு ஆணையாளரிடமும் சமர்ப்பிக்கப்பட்டவை விண்ணப்பங்களாக கருதப்படும்.**

2017.12.31 ஆம் திகதிக்கு புதிதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் 163 விண்ணப்பங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதோடு, புதிதாக இணக்கப்பாட்டுக்காக 100 முறைப்பாடுகளும் தொழில் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஆலாட்சி அதிகாரியிடமும் முன்வைக்கப்பட்ட. 18 முறைப்பாடுகளும் தொழில் நியாய சபையின் ஒரு முறைப்பாடும் விசாரணை செய்யப்படுகின்றன.

2018 ஆம் ஆண்டில் மனித உரிமை ஆணைக்குழுவில் முன்வைக்கப்பட்ட புதிய 05 விண்ணப்பங்களும், ஆலாட்சி அதிகாரியிடம் முனவைக்கப்பட்ட ஒரு முறைப்பாடும், தொழில் ஆணையாளரிடம் இணக்கப்பாட்டிற்காக 14 முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு தொழில் நஷ்டஈடு நியாய சபையிடம் எதுவித விண்ணப்பமும் சமர்ப்பிக்கப்படவில்லை.

மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட 04 விண்ணப்பங்களும் இணக்கப்பாட்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட 04 முறைப்பாடுகளும் 2018 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்பட்டதோடு தொழில் நியாய சபையிடம் எதுவித முறைப்பாடுகளும் சமர்ப்பிக்கப்படவில்லை.

அதன்படி 2018.12.31 ஆம் திகதிக்கு வரை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 164 விண்ணப்பங்களினதும் இணக்கம் காணல் தொடர்பாக 110 முறைப்பாடுகளினதும் ஆலாட்சி அதிகாரியிடம் சமர்ப்பித்த 19 முறைப்பாடுகளினதும் மற்றும் ஊழியர் நட்டஈட்டு ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 01 முறைப்பாட்டினதும் பணிகள் முடிவுறாத நிலையில் இருந்தன.

**நடுவர் தீப்பாய வழக்குகள்**

2017.12.31 ஆம் திகதிக்கு வணிக தீர்ப்பாய வழக்குகள் 03 உம், கைத்தொழில் தீர்ப்பாய 06 வழக்குகளும் விசாரணை செய்யப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டில் கைத்தொழில் தீர்ப்பாய வழக்குகள் எதுவும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு எதிராக தாக்கல் செய்யப்படவில்லை. ஒரு கைத்தொழில் பிணக்கு வழக்கு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதுடன் ஒரு வணிக பிணக்கு வழக்கு நிறைவு செய்யப்பட்டுள்ளது. அதற்கேற்ப 2018.12.31 ஆம் திகதிக்கு கைத்தொழில் பிணக்கு 02 வழக்குகளும், 05 வணிக பிணக்கு வழக்குகளும்

விசாரணையில் உள்ளன. (நடுவர் தீர்ப்பாய சபையினால் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள வழக்குகளுக்கு எதிராக இலங்கை துறைமுக அதிகாரசபை மேன் முறையீட்டினை முன்வைத்துள்ளதால் முடிவடைந்துள்ள 02 வர்த்தக பிணக்குகளும் முடிவுறாத வழக்குகளாக கருதப்படுகின்றன.

**சுங்க விசாரணைகள்**

2017.12.31 ஆம் திகதிக்கு சுங்கத்தினால் 02 விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2018.12.31 ஆம் திகதிக்கு ஒரு (01) விசாரணைப்பணி முடிவுறாத நிலையில் இருந்தது.

## வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவப் பகுதி

இலங்கையின் அனைத்து வர்த்தக துறைமுகங்களினுடைய செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பிற்காக இலங்கைத் துறைமுக அதிகாரசபையினால் தேவைப்படும் எரிபொருள், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய பொருட்களின் கொள்வனவு (உள்நாடு மற்றும் வெளிநாடு) ஆகியவற்றை இப்பிரிவு உள்ளடக்கியுள்ளது.

**2018 ஆம் ஆண்டின் முன்னேற்றம்**

**மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் போது அனுமதியளிக்கப்பட்ட விலைமனுக்கோரல்களின் எண்ணிக்கை**

| **விபரம்** | **கேள்வி மனுக்கோரல் சபை கூட்டங்களின் எண்ணிக்கை** | **கேள்வி மனுக்கோரல் சபை அங்கீகாரங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| திணைக்கள பெறுகைக்கான குழு (ரூபா 2,000,000/ க்கு மேல்) | 13 | 130 |
| அமைச்சரவையின பெறுகைக்கான குழு- A (ரூபா 500,000/= முதல் 2,000,000/= வரை) | 51 | 1,474 |
| அமைச்சரவையின பெறுகைக்கான குழு- B (ரூபா 500,000/= க்கு குறைந்தது) | 91 | 5,412 |

வெளிநாட்டு கொள்வனவுகளில் 2018 ஆம் ஆண்டின் மொத்த செலவினம்

- பொருட்களின் பெறுமதி

| | | | | |
|---|---|---|---|---|
| I. | மூலதனமற்ற பொருட்கள் | ரூபா | 249.51 | மில்லியன் |
| II. | மூலதனப் பொருட்கள் | ரூபா | 46.058 | மில்லியன் |

திறக்கப்பட்ட கடன் கடிதங்கள் பொருட்கள் பொறுப்பேற்றல் D/A மற்றும் பொருட்களுக்கு செலுத்துதல் D/P - 53

மின்னஞ்சல் திறக்கப்பட்ட நிதிப்பரிமாற்றக் கட்டணங்களின் எண்ணிக்கை - 45

**2018 இல் வாப்பு பிரிவினால் அகற்றிச் செல்லப்பட்ட பொருட்களின் விபரம்**

| | |
|---|---|
| கப்பற் சரக்குகள் | 59 |
| விமான சரக்குகள் | 37 |
| தபால் பொதி | 03 |

**31.12.2018 இலுள்ள இருப்புக்களின் மொத்தப் பெறுமதி ரூபா – 762,389,366.53**

**பிரதான களஞ்சியங்களும் மொத்த இருப்பு கட்டுப்பாடும்**

2018 இன்போது களஞ்சியத்திற்குப் பெறப்பட்ட பொருட்களின் பெறுமதி (மூலதனமற்ற பொருட்கள்) - **ரூபா 2,104,745,177.24**

2018 இன்போது களஞ்சியத்திற்குப் பெறப்பட்ட பொருட்களின் பெறுமதி (மூலதனப் பொருட்கள்) - **ரூபா 241,461,466.44**

பயனாளிகள் பகுதியில் வெளியிடப்பட்ட பொருட்களின் பெறுமதி (மூலதனமற்ற பொருட்கள்) - **ரூபா 2,087,065,197.54**

## பாதுகாப்புப் பகுதி

பாதுகாப்புப் பகுதி துறைமுக அதிகாரசபையில் மிகவும் முக்கியமான பணிகளை மேற்கொள்கின்றன. சகல துறைமுகங்களினதும் சேவைகளுக்காக பாதுகாப்பு வழங்குதல் இலங்கை துறைமுக அதகாரசபையின் நிருவாகத்திற்குட்பட்ட சகல துறைமுகளினதும் சொத்துக்கள் மற்றும் மனித வழங்களைப் பாதுகாப்பதோடு சொத்துக்கள் மற்றும் மனித வழங்களைப் பாதுகாப்பதோடு சகல பயனாளிகளையும் துறைமுக வளாகம் மற்றும் கடல் எல்லைகளை பாதுகாத்தலுடன் கையாளுகின்ற கப்பற்சரக்குள் மற்றும ˙சேவைகளை நாடி வரும் கலங்களுக்கு பாதுகாப்பு வழங்குவது இப்பகுதியின் பிரதான பொறுப்புக்களாகும். இதற்கு மேலதிமகாக இலங்கை துறைமுக அதிகார சபையின் அபிலாசைகளை அடைந்து கொள்வதற்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை மிகவும் சிறந்த வ கையில் வழங்குவதற்கு இப்பகுதி பொறுப்பாயுள்ளதோடு அப்பணிகளை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதொடு வழங்கப்படுகின்ற வேறு பல்வேறு சேவைகள் மூலம் வருமானம் ஈட்டுவது இப்பகுதியில் அடங்குகின்றன.

அதற்கேற்ப கடந்த வருடங்களைப் போன்ற 2018 ஆம் ஆண்டிலும் பல்துறைமுக அனுமதிபத்திரங்கள் வினியோகித்தல் மூலம் 560,054,657.51 ரூபா வருமானமொன்று ஈட்டியுள்ளதோடு அவ்வாறு விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திர வகைகள் கீழ்வருமாறு

- வருடாந்த வாகன அனுமதிப்பத்திரம்
- வருடாந்த தனிநபர் அனுமதிப்பத்திரம்
- மாதாந்த தனிநபர் அனுமதிப்பத்திரம்
- மாதாந்த வாகன அனுமதிப்பத்திரம்
- Angling அனுமதிப்பத்திரம்
- தற்காலிக தனிநபர் மற்றும் வாகன அனுமதிப்பத்திரம்
- புதிய போக்குவரத்துக்கு வாகனங்கள் சேர்க்கப்படும் வாகனங்களுக்காக வழங்கப்படும் விஷேட வாகன அனுமதிப்பத்திரம் (விடயதத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதியின் கீழ்)
- அங்கீகாரம் பெற்றுள்ள வாகன அனுமதிப்பத்திரம்
- அதிகாரசபையின் அலுவலர்களுக்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரம்
- அதிகாரசபையின் ஊழியர்களுக்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் (அடையாள அட்டை)
- குழாமிலுள்ள வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரம்
- ஊழியர்களின் தனிப்பட்ட வாகன அனுமதிப்பத்திரம்

இதற்கு மேலதிகமாக இலவக தனிநபர் மற்றும் வாகன அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதோடு துறைமுகத்தினுள் போக்குவதத்து நடவடிக்கைகளுக்கு புதிய வாகனங்ளை வழங்கும் நிறுவனத்துக்கு தடையின்றி வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக அமைச்சரின் ஆலோசனையின் பேரில் வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்படுகின்றது.

**அமுலுக்கு வந்த புதிய நிகழ்ச்சித் திட்டங்கள்**

- ஐந்து வருடங்களுக்கு அமுலில் உள்ளவாறு வருடாந்தம் பணம் செலுத்தி புதுப்பித்தல் அடிப்படையில் வழங்கப்படும் வருடாந்த தனிநபர் அனுமதிப்பத்திதிற்கு பதிலாக வருடம்தோறும் பணம் செலுத்தி புதுப்பிக்கக்கூடிய வருடாந்த தனிநபர் அனுமதிப்பத்திரமொன்று (RPU) வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் மூலம் வருடாந்த அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்காமல் துறைமுகத்தினுள் நுழைகின்ற அனுமதிப்பத்திரதாரர் தொடர்பில் எழுகின்ற சிக்கலான நிலையை தவிர்த்துக் கொள்வதற்கு முடியும்

- துறைமுகத்தை பயன்படுத்துபவர்கள் துறைமுகத்தினுள் நுழையும் போது எதிர்நோக்கும் சிக்கல்களை தவிர்த:து அனுமதிப்பத்திரம் வழங்கும் பணிகள் மிகவும் செயற்திறனாக செய்வதற்கும் மதாந்த மற்றும் வருடாந்த துறைமுக உட்புகும் அனுமதிப்பத்திரம் (Online) நேரடியான முறையில் பெற்றுக்கொள்வதற்கு வசதிகள் ஏற்படுத்துவதற்கு தேவையான திட்டங்களை தயாரித்துள்ளதோடு அந்நிகழ்ச்சித் திட்டம் எதிர்காலத்தில் அமுல்படுத்தப்படவுள்ளது.

- சர்வதேக கப்பல்கள் மற்றும் துறைமுக பாதுகாப்பு நியமங்களை (ISPS CODE) பின்பற்றி அனைத்து துறைமுகங்களுக்கும் தொடர்பான அனைத்து பிரதேசங்ளும் உள்ளடங்கும் வகையில் அறிவித்தல் பலகைகள் அமைப்பதற்கு 2018 ஆம் ஆண்டில் நடைவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- துறைமுகம் சார்ந்த நிறுவனங்களுக்கு சர்வதேச கப்பல்கள் மற்றும் துறைமுக பாதுகாப்பு நியமங்கள் தொடர்பாக பயிற்சி அமர்வுகள் 2018 ஆம் ஆண்டில் நடாத்தியிருப்பதோடு எதிர்பரும் வருடத்திலும் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- அனைத்து வாயில்கள் துறைகள் மற்றும் முனையங்களின் பாதுகாப்பு நடவடிக்கைள் முறைப்படுத்தல் தொடர்பாக அதிதொழிநுட்ப CCTV தொகு பொருத்தும் திட்டமொன்று 2017 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டதோடு 2018 ஆம் ஆண்டில் அத்திட்டத்திலன் மதிப்பீட்டு நடவடிக்கைளக் நிறைவு செய்து தற்போது அது அமைச்சரவையின் பெறுகைக்கான குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

- துறைமுக வாயில்களில் அனைத்து நபர்களும் பொருட்களும் ஸ்கேன் இயந்திரம மூலம் பரீட்சித்தல் தொடர்புடைய அதி தொழில்நுட்ப ஸ்கேனர் இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்கு ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு இவ்வியந்திரங்கள் கொள்வனவு செய்வது தொடர்பாக மேற் கொண்டு நடவடிக்கை மெற்கொள்வதற்கு அமைச்சரவையின் பெறுகைக்கான குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு கடலப் பிரிவின் மீளமைப்பு செய்து துறைமுகத்தினுள்ளேயும் வெளியேயும் கடல் எல்லையின் பாதுகாப்பு நடவடிக்கைள் முறைமுக பேணிச் செல்வதற்கு இலங்கை பொலிஸ் கடலகப் பகுதி இலங்கை கடற்பாடை ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து புதிய பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டது. அதற்கேற்ப துறைமுக கடலகப் பிரதேசத்தினுள் மீனவர்களினால் மேற்கொள்ளப்பட்ட கரைவரை வீசுதல் போன்ற சட்டவிரேத செயற்பாடுகளை மட்டுப்படுத்துவதற்கு பாதுகாப்புப் பகுதியின் கடலகப் பிரிவிற்கு முடிந்துள்ளது.

மேலே குறிப்பிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் சிறப்பாக செய்வதற்கு பயிற்றுவிக்கப்பட்ட மனிதவளத்தின் தேவை 2018 ஆம் ஆண்டில் அடையாளப் காணப்பட்டதுடன் வெற்றிடமாக விருந்த பதவிகளுக்கு புதிய ஆட்சேர்ப்புக்களைச் செய்து மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலையுடன் இணைந்து அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை பெற்றுக்கொடுத்ததோடு செயற்திறனை அதிகரிப்பதற்கு அறிவு ஆற்றல் மற்றும் மனப்பாங்காக விருத்தி செய்து பண்பு மிக்க பாதுகாப்புச் செவையொன்றை பேணிச் செல்வதற்கு அனைத்து உத்தியோகத்தர்களையும் பிரதிநிதிப்படுத்தும்வாறு கீழ்க்குறிப்பிடப்படுகின்ற பயிற்சி நெறிகள் அமுல்படுத்தப்பட்டுள்ளது. அதனூடாக கொழும்பு துறைமுகத்தில் மாத்திரமன்றி பிராந்திய துறைமுகங்களில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் பயிற்சியளிக்கப்பட்டனர்.

செயல்படுத்தப்பட்ட பயிற்சி நெறிகள்

- அபாகரமான கப்பற்சரக்குகள் மற்றும் நாசகார ஆயுதங்கள் துறைமுகத்தினூடாக பரிமாற்றலை தடுத்தல்
- பாதுகாப்பு சார்ஜன் பதவிக்கு பதவியுயர்த்துவதற்கு பயிற்சி பாடநெறிகள் ஆரம்பித்தல்
- அலுவலக நடைமுறைகள் தொடர்பாக ஆரம்ப அறிவொன்றை பெற்றுக்கொடுத்தல்

இவ்வாறான பண்புகளுடன் கூடிய பாதுகாப்பு சேவையொன்று பெற்றுக்கொடுப்பதனூடாக 2018 ஆம் ஆண்டினுள் அதிகாரசபையின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கு இப்பகுதியினால் முடிந்துள்ளது.

## தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி (CPRD)

தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி அதன் ஆரம்பத்திலிருந்தே இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்கள் மற்றும் வெளி நிறுவனங்களுக்கிடையில் திருப்திகரமான மற்றும் தன்நோக்கிலான தொடர்புகளைப் பலப்படுத்தி இலங்கை துறைமுக அதிகாரசபையின் தோற்றப்பாட்டினை உயர்த்துவதில் மிகவும் உறுதிப்பாட்டுடன் செயற்பட்டுள்ளது.

ஊடக நிறுவனங்கள், பொதுமக்கள், அரசாங்கத்திணைக்களங்கள், முகவர் நிறுவனங்கள் மற்றும் நிறுவனரீதியான பங்காளர்களோடு தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகளை பலப்படுத்துவது இப்பகுதியின் பிரதான பொறுப்புக்களில் ஒன்றாகும். ஊடகவியலாளர்கள், ஆய்வாளர்கள், அரசாங்க அலுவலர்கள் மற்றும் ஏனைய பிரதான தாக்கம் ஏற்படுத்துவோருடனான உறவையும் தொடர்பாடலையும் முகாமைத்துவம் செய்யும் செயற்பாடானது இலங்கை துறைமுக அதிகாரசபையின் நோக்கங்களை அடைந்து கொள்வதில் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியினால் மேற்கொள்ளப்படும் மிகவும் முக்கியம் வாய்ந்த பணியொன்றாகும்.

தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி, உள்நாட்டு மற்றும் சர்வதேச ஊடக நிறுவனங்கள், பங்காளர்கள் மற்றும் துறையில் ஈடுபட்டுள்ள ஏனைய ஆர்வம் காட்டும் தரப்பினர்களோடு ஒத்துழைப்புடன் பணியாற்றுவதற்கு விரிவான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மேற்கொண்டும் அலைவரிசைகளை கவர்ந்து சென்ற ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நடாத்தப்பட்ட செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் பொதுசன உறவுகள் உறுதிப்படுத்தப்பட்டு தன்நோக்கிலான பிரசாரம் பெற்றுக்கொடுக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் இப்பகுதியினால் எடுக்கப்பட்டுள்ளன.

செய்திகளின் தொகுப்பு மற்றும் தொடர்பாடல், ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் பல்வித ஊடகம், இலக்கு குழுக்களிடம் தகவல்களை பகிரல் போன்று மரபுரீதியான சமூக ஊடக மேம்பாட்டு வேலைத்திட்டங்களை திட்டமிடுதல், விருத்தி செய்தல், முகாமைத்துவம், மேற்பார்வை மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பான பிரசாரம் மற்றும் அதன் புகழ் நாமத்தை வளர்ப்பதிலும் மூலோபாயங்களை நடைமுறைப்படுத்துவதிலும் எமது பிரதான நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்பாடுகள் ஊடாக கவனம் செலுத்தப்பட்டன. ஊடக சந்திப்புக்கள், வரவேற்பு விழாக்கள், நேர்முக கலந்துரையாடல்கள், ஊடக அறிவித்தல்களை தயாரித்தல், நெறியாள்கை மற்றும் வெளியிடல், நிகழ்ச்சிப்படத் தொகுப்புக்கள், புகைப்பட அல்பம் மற்றும் ஏனைய சொற்பொழிவுகள் முன்வைக்கப்படுதலின் மூலமும் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுப்பகுதியின் செயற்பாடுகள் தொடர்பிலான அறிக்கைகள் ஒன்றுசேர்க்கப்படுதலின் மூலமும் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2018 ஆண்டில் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியினால் அன்றாடம் நடாத்திச் செல்லப்படும் செயற்பாடுகள் மற்றும் அடையப்பெற்றுள்ள வெற்றிகள் தொடர்பில் விரிவாக அறிவூட்டுதலை நோக்காகக்கொண்டு கொண்டு கேட்போர் மற்றும் வலைய தொடர்பு சாதன விரிவுபடுத்துவதற்குரிய புதிய நேரடி வெளியீடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இலங்கை துறைமுக அதிகாரசபையின் விழாக்கள் மற்றும் செயற்பாடுகளை அடிப்படையாக வைத்து வருடம் பூராகவும் பல்வேறு உத்தியோகபூர்வ ஊடக அறிவித்தல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது 12 ஆவது வெளியீட்டு ஆண்டுக்குரிய " தீர்த்த" பத்திரிகை 2018 ஆண்டில் நான்கு சஞ்சிகைகளை வெளியிட்டுள்ளதுடன் இது இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்கள் மற்றும் பங்காளர்களுக்கிடையில் இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இந்த ஒவ்வொரு சஞ்சிகை மூலம் துறைமுக மற்றும் கப்பற்றுறையின் தற்போதைய நடவடிக்கைகள், இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவ மூலோபாயங்கள், கவர்ச்சி மிகுந்த சேவைச் சுற்றாடல், இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியரகளின் குடும்ப உறுப்பினர்கள் அடைந்த வெற்றியின் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பல்வேறு பகுதியினால் ஒழுங்கு செய்யப்பட்ட விழாக்கள் போன்ற முக்கிய விடயங்களும் உள்ளடங்கியிருந்தன. மேலும் துறைமுக அதிகாரசபையில் நீண்டகாலம் சேவையாற்றி ஓய்வு பெறும் ஊழியர்கள் தொடர்பிலும் பத்திரிகையில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களினால் எழுதப்பட்டு தெரிவு செய்யப்பட்டுள்ள படைப்புக்களின் தொகுப்பான " காவ்யஞ்ஜலி" நுலாக்கப்பட்டுள்ளது. 80 பக்கங்களைக் கொண்ட இதனுள் 60 கவிகள் உள்ளடங்கி இருக்கின்றன.

நாம் இலக்கு வைக்கும் ரசிகர்களின் கவர்ச்சிகரத்தன்மையை விரிவுபடுத்துவதற்கும் வலுவாக்குவதற்கும் 2018 ஆண்டில் இறுதியில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்புபடும் புதிய இணையத் தளங்களைக் கொண்ட விபரக்கொத்தும் உத்தியோகபூர்வ ருவிட்டர் கணக்கும் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியினால் திட்டமிடப்பட்டு ஒலிபரப்பு ஆரம்பம் செய்யப்பட்டுள்ளது. இணையத்தள வெப்தளங்கள் உள்ளடங்கலான இரண்டு விபரக்கொத்துக்கள் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு 2019 ஆண்டின் முற்பகுதியில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகளுடன் தொடர்புடைய ஆவணங்களில் பெருந்தொகையானவை இலகுபடுத்துவதற்கு தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியினால் new.slpa.lk நுழைவுடன் அதன் புதிய வெப்தள விபரக்கொத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வெப்தளம் மூலம் வருடம் பூராகவும் இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் தொடர்புடையதான பதிப்பு செய்யப்பட்ட பத்திரிகை அறிக்கைகள் துரிதமாக முன்னேறிவரும் சமூக வலைத்தளங்களை கவருவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் கணக்கை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதோடு இதுவானது இலங்கை துறைமுக அதிகாரசபையின் நோக்கங்களை விருத்தி செய்தலில் பயன்படுத்தப்பட்டு முகநுல் (face book) யூ ரியுப் பக்கங்களுடன் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளது. மரபுரீதியான வெளியீட்டு ஊடகங்களைப் பேணியும் இணையத்தளம், தொலைபேசி மற்றும சமூக வலைத்தளங்கள் போன்ற பல்வேறு தொடர்பாடல் மேற்கொள்வதானது இலங்கை துறைமுக அதிகாரசபையின் தோற்றப்பாட்டினை உயர்த்துவதில் தேவைப்படுவதாக தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி நம்புகிறது.

பொதுசன உறவின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்கு அதனை உருவ செயற்பாடுகள் மூலம் காண்பிப்பதற்கு தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியினால் சென்ற ஆண்டில் பல கானொளித் தயாரிப்புக்கள் பதிப்பிடப்பட்டு பிரசாரம் செய்யப்பட்டன. தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுப்பகுதியினால் 2018 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்கள் ஓய்வு பெறும் விழா போன்றவற்றின் 88 காணொளிகளும் இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் தொடர்புபட்ட 72 காணொளிகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. காணொளி செய்திகள் நாட்டின் அலைவரிசைகளுடன் பரிமாற்றப்படும் மணித்தியால செய்திகளில் ஒலிபரப்பப்பட்டுகின்றன.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊடகங்களுக்கு தகவல்களை வெளியிடுவதற்கு அதிகாரமுள்ளதாக கருதப்படும் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுப்பகுதியிடம் சென்ற ஆண்டில் பொறுப்பளிக்கப்பட்டிருந்த பல இலக்குகளை வெற்றிகரமாக அடைந்து கொள்வதில் வீடியோ கமெரா, புகைப்படத் தயாரிப்பு, காணொளித் தயாரிப்புகள், உருவ நிர்மாணம் (Graphic Designing) போன்றவை ஊடகப் பிரிவு ஊடாக சிறப்பாக பணியாற்றியுள்ளது. அறிக்கைகளை பெறுதல் மற்றும் வினியோகம் தொடர்பில் ரூபவாஹினி குறுந் திரைப்படங்களிலிருந்து வீடியோ தயாரிப்பு, விசேட நிகழ்வுகள், காட்சி மற்றும் பதிப்பு ஆவணங்களை பாதுகாப்பாக பேணுதல், அறிக்கைகளை பேணுதல் மற்றும் பிரசாரம் செய்வதற்கு முக்கிய நிகழ்வுகளில் எடுக்கப்படும் புகைப்பட தொகுப்பை பேணுதல் பொதுசன உறவுகளை விரிவாக்குவதற்கான பல்வேறு விழாக்களை ஏற்பாடு செய்வதும் இலங்கை

துறைமுக அதிகாரசபையின் பங்காளர்களுக்கும் கொழும்பு துறைமுகத்துக்கும் இடையிலான தொடர்புகளை மேம்படுத்துவதும் இதனுள் அடங்கும்.

ஜய கொள்கலன் முனையம் (JCT), சவுத் ஏசிய கேட்வே டேர்மினல்ஸ் கம்பனி (SAGT) மற்றும் களம்பு இன்டநெஷனல் கன்டேனர் டேர்மினல்ஸ் கம்பனி (CICT) ஆகியவற்றுடன் இணைந்து இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட “ Port of Colombo Awards Night” முதல் தடவையாக இந்த ஆண்டில் கொழும்பில் நடைபெற்றது. குறித்த நிகழ்வு முழுமையாக தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியினாலேயே செய்யப்பட்டுள்ளன. Port of Colombo Awards Night 2018 போது வலயத்தில் இலங்கையை பிரதான கேந்திர துறைமுகமொன்றாக்கும் பயணத்தின் போது துறைமுகத்தில் அதிகரித்து வரும் கையாளல் பரிமாணம் தொடர்பில் அவர்களினால் வழங்கப்படும் சேவையின் பெறுமதி இனங்கானப்பட்டுள்ளது. கொழும்பு துறைமுகத்திற்கு வழங்கப்பட்ட பங்களிப்பை இனங்கண்டு பிரதான கப்பல் மற்றும் ஊட்டக் கப்பல் செயற்பாட்டாளர்கள் 2018 இல் Port of Colombo Awards Night நிகழ்வின் போது கௌரவிக்கப்பட்டனர்.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் செயற்பாட்டை இரண்டு கண் காட்சிகளில் அதாவது அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தகம் பற்றியதான அமைச்சும் கைத்தொழில் வர்த்தக அமைச்சும் மற்றும் துறைமுகங்கள், கப்பற்றுறை அமைச்சுடன் தொடர்புபட்டு படகுகள் நிர்மாண தொழில்நுட்ப மேம்பாட்டு நிறுவனம் (BTI) மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை (EDB) ஒழுங்கு செய்த காலி துறைமுக உல்லாசப் படகுத்தளத்தில் நடைபெற்ற கண்காட்சி மற்றும் “ BOat Show & Boat festival Sri Lanka 2018” நிதி மற்றும் ஊடக அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட தொழில்முயற்சிகளின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு மொனராகலையில் நடைபெற்ற “ Enterprise Sri Lanka” முதலாவது தொழில்முயற்சிகளின் கண்காட்சியில் பங்குபற்றியது.

2018 ஆண்டில் சிறந்த துறைமுக அதிகாரசபைக்கான விருதினை இலங்கை துறைமுக அதிகாரசபை பெற்றுள்ளதோடு கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் டுபாயில் நடைபெற்ற உலக துறைமுக ஒன்றியத்தின் போது தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி இலங்கை துறைமுக அதிகார சபையை பிரதிநிதிப்படுத்தியது.

வருடாந்த நாட்காட்டிகள் மற்றும் நாட்குறிப்புப் புத்தகங்களை திட்டமிட்டு பிரசுரித்து வினியோகிக்கும் நடவடிக்கைகளை தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி ஒருங்கிணைப்பு செய்கின்றது.

நிறுவனம் மற்றும் பொதுமக்களுக்கிடையிலான உறவை கட்டியெழுப்பி பேணிச் செல்லும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மிகவும் முக்கிய பகுதியான தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியின் செயற்பாடு மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும்.

## உள்ளக கணக்காய்வு பகுதி

### நிருவாகம் (துறைமுக கணக்காய்வு)

வருடாந்த கணக்காய்வு வேலைத்திட்டத்தின் ஊடாக உள்ளக கணக்காய்வு பகுதியின் பணிகள் வரிசைப்படுத்தப்பட்டு கணக்காய்வுக் குழு கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வுக் குழு பணிப்பாளர் சபைக்கு அவர்களின் நம்பிக்கையான பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் ஒத்துழைப்பை வழங்குகின்றது. கணக்காய்வுக் குழு ஊடாக இலங்கை துறைமுக அதிகாரசபையினுள் பயனான மற்றும் விபரமான உள்ளக கட்டுப்பாட்டு தொகுதியொன்று நடைமுறைப்படுத்துவதை பணிப்பாளர் சபை உறுதிப்படுத்தி உள்ளது. முக்கிய பூர்வாங்க உள்ளக கட்டுப்பாட்டு செயற்பாட்டு முறையாக உள்ளக திட்டம் மற்றும் தற்போதுள்ள கணக்காய்வு வேலைத்திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு அதிகாரசபையின் நிர்வாகத்தை இன்னும் மேம்படுத்தும் நோக்கில் மேலும் சில முக்கிய நடவடிக்கைகளை குழு நடைமுறைப்படுத்தியுள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபையினது வருமானம்/செலவின துறைகளின் உள்ளக பரீட்சிப்புகள் மற்றும் பொதுவான கணக்காய்வுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

**உள்ளக பரிசோதனைகள்**
**ஊழியர்களின் வருகை**

தொழிலாளர் மற்றும் தொழிலாளரல்லாத ஊழியர்கள் சேவை நிலையத்தில் பிரசன்னமாகி இருப்பது தொடர்பில் திடீர் பரிசோதனைகள், அவசர சுற்றிவளைப்புக் குழுவினால் இரவு/ பகல் வேலைமுறைகளில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. கடமை நேரத்தில் அனுமதியின்றி சேவை நிலையத்தை விட்டுச் சென்ற ஊழியர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இதன் விளைவாக ஊழியர்கள் தமது சேவை நிலையங்களில் தங்கியிருப்பதற்கு இதன் சிறப்பான உந்துதலாக அமைந்துள்ளது.

**நிதி**

பணம் மற்றும் சிறு பண இருப்பு தொடர்பில் அவ்வப்போது திடீர் பரிசோனைகள் மேற்கொள்ளப்பட்டு மற்றும் முரண்பாடுகள் தொடர்பில் அறிவிக்கப்பட்டன.

**வருமான கணக்காய்வு**

விசேடபணியாக துறைமுகத்தின் வருமானம் கிடைக்கப்பெறுதல்கள் தொடர்பான கணக்காய்வுகள், கணக்காய்வு வேலைத்திட்டத்திற்கேற்ப மேற்கொள்ளப்பட்டு அதனூடாக துறைமுக கட்டணங்கள் குறைவாக செலுத்தப்பட்டவையும் கண்டறியப்பட்டன.

கடன்பட்டோர் கணக்குகள், பிணக்கிற்குரிய சிட்டைகள் மற்றும் நிராகரிக்கப்பட்ட காசோலைகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதோடு அவைகளின் வித்தியாசங்கள் அறிக்கையிடப்பட்டன. தரையிறக்கல் மற்றும் விநியோகப் பிரிவுகள் அன்றாடம் பரீட்சிக்கப்பட்டன.

**செலவினக் கணக்காய்வு**

மூலதன மற்றும் மீண்டு வரும் செலவினங்களும் களஞ்சிய கொடுப்பனவு வவுச்சர்கள் தொடர்பிலும் அடிக்கடி பரீட்சிப்புக்கள் மேலதிகமாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய முறைகேடுகளும் வெளிப்படுத்தப்பட்டன. வாகன ஓட்டக் குறிப்புப் படிவங்களும் வாகன அனுமதி வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களும் பரீட்சிக்கப்பட்டு குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன.

சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் தயாரித்தல் தொடர்பில் தொடர்ச்சியாக கவனிக்கப்பட்டு கண்டறியப்பட்ட வித்தியாசங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

**களஞ்சியங்கள் தொடர்பான பௌதீக உறுதிப்பாடுகளைப் பரீட்சித்தல்**

கொழும்பு துறைமுகத்தின் களஞ்சியங்களில் பௌதீகரீதியான உறுதிப்பாடுகளின் பரீட்சித்தல்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டதோடு ஏனைய துறைமுகங்களினது வருடாந்த இருப்பு பரீட்சித்தல்களின் போது ஒத்தாசைகளும் வழங்கப்பட்டன.

பிரதான களஞ்சியங்களின் தொடர்ச்சியான உறுதிப்பாடுகள் பரீட்சிக்கப்படுகையில் களஞ்சியங்களில் இருக்கும் நிரந்தரமாக தேவைப்படாத பொருட்களின் இருப்பு அடையாளம் காணப்பட்டதுடன், தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்காக வழங்கல் பகுதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**விசாரணைகள்**

தலைவரின் வேண்டுகோளுக்கு இணங்க, விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

**இறுதி கணக்குகள்**

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாட்டினை கவனத்திற் கொண்டு அதிகாரசபையின் இறுதிக் கணக்குகளை பரீட்சிப்பதும் இப்பகுதியின் பொறுப்பாகும்.

**முன் கணக்காய்வு**

மீளாய்வாண்டினுள் வைப்புக்களை மீள்செலுத்துதல் மற்றும் துறைமுக கட்டணங்களை கைவிடுதல் தொடர்பில் முன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

**ஹம்பாந்தோட்டை, காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்கள்**

ஹம்பாந்தோட்டை, காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்களில் களஞ்சிய பரிசோதனைகள் மற்றும் விஷேட கணக்காய்வுகள் நடாத்தப்பட்டது.

**கணக்காய்வுக் குழு**

கணக்காய்வுக் குழுவில் பணிப்பாளர் சபையில் உள்ள பொதுத்திறைசேரியின் பிரதிநிதி மற்றும் பணிப்பாளர் சபையின் பணிப்பாளர்கள் இருவர் இரு பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் அடங்கியுள்ளனர். தொடர்ச்சியான கூட்டங்கள் நடைபெறுவதை உறுதி செய்வதற்காக, கணக்காய்வுக் குழுவின் தலைவராக பொதுத்திறைசேரி பிரதிநிதியை நியமிக்க பணிப்பாளர் சபை முடிவு செய்யப்பட்டது.

கணக்காய்வு குழுவினால் உள்ளக நிருவாக கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளை மீளாய்வு செய்வதுடன் அக்கொள்கைகளினதும் செயற்பாடுகளினதும் செயற்திறனை தீர்மானித்து உள்ளக கணக்காய்வு அறிக்கை மற்றும் அரசாங்க கணக்காய்வு அறிக்கை மிளாய்வு செய்வதோடு அவர்களின் பரிந்துரைகள் பணிப்பாளர் சபை ஊடாக அமுல் படுத்துவதற்கு பகுதித் தலைவர்களினால் அப்பரிந்துரைகளுக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இதன் மூலம் பணிப்பாளர் சபையின் வழிகாட்டல் மீது நிதி மற்றும் செயற்பாட்டு அவதானங்களை அடையாளங்காண்பதற்குரிய செயன்முறை மற்றும் பொறிமுறைகள் அதிகாரசபையிடம் இருப்பதாகவும் இவ்வாறான அவதானங்களை சிறப்பாக திட்டமிடப்பட்டசெயற்பாட்டு திட்டமொன்றின் ஊடாக முகாமைத்துவப் படுத்தி தீர்ப்பதற்கு உறுதி செய்யப்படுகிறது.

ஊழியர்களின் மற்றும் பிற பங்குதாரர்களின் நன்மைக்காக வளங்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காகவும் செயற்திறனை அதிகரிப்பதற்கும் நிதி மற்றும் செயல்திட்ட நடவடிக்கைகள் மற்றும் இது தொடர்பான தற்போதுள்ள அமைப்பு மற்றும் நடைமுறைகளை வலுப்படுத்துவதற்காக பணிப்பாளர் சபைக்கு அறிவிப்பது கணக்காய்வுக்கழுவின் பொறுப்பாகும்.

## ஏனைய துறைமுகங்கள்

### திருகோணமலை துறைமுகம்

**கப்பல் கையாளல்கள்**

**கப்பலில்லிருந்து கப்பலுக்கான (Ship To Ship) கையாளல்கள்**

திருகோணமலை துறைமுகத்தில் கப்பலிலிருந்து கப்பலுக்காக (Ship To Ship) கையாளல்கள் 2015 ஏப்ரல் மாதத்தில் இருந்து செயற்படுத்தப்பட்டன

**கலங்கள்**

திருகோணமலை துறைமுகத்திலுள்ள கலங்கள் பின்வருமாறு

- இழுவைக் கலங்கள் 02. -TTA துறைமேடையில் நங்கூரமிடப்பட்டிருக்கும் இயக்கங்களில் ஈடுபடும்.
- சறுக்கு வழி கலங்கள் 04. -இயக்கங்களில் ஈடுபடும் - 02 இயக்கங்களில் ஈடுபடாத – 02.

- டனக் இழுவைக் கலம் -01 -இயக்கங்களில் ஈடுபடும் TTA துறைமேடையில் நங்கூரமிடப்பட்டிருக்கும்.

## காலி துறைமுகம்

| கப்பல் வகை | கப்பல்களின் எண்ணிக்கை |
|---|---|
| கிளின்கர் | 71 |
| குளின்வர் அடங்கிய கப்பல்கள் வத்தைகள் | 02<br>(கப்பலில் இருந்து கரை வரையான இயக்கங்கள் 23 முறை) |
| ஜிப்சம் | 04 |
| சீமெந்து தொகை | இல்லை |
| சீமெந்து பொதிகள் | இல்லை |
| இரும்புத்தாது (Slag) | 01 |
| பயணிகள் கப்பல் (துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்ட) | 05 |
| பயணிகள் கப்பல் (வெளியே நங்கூரமிடப்பட்ட) | 02 |
| ஏனையவை (மோட்டார் உல்லாசப் படகுகள், பயணிகள் கப்பல், மீன்பிடிப் படகுகள் மற்றும் திருத்த வேலைகள், எரிபொருள் பெற்றுக் கொள்ளல் மற்றும் வேறு தேவைகளுக்காக வருகின்ற வேறு கப்பல்கள் உட்பட) | 56 |
| நங்கூரமிடப்பட்ட | 119 |
| துறைமுக எல்லைகளுக்கு அப்பாலான கப்பல்கள் | 8,690 |
| உல்லாசப் படகுகள் | 36 |



# நிதி மீளாய்வு
# ஆண்டறிக்கை 2018

**(வருமானம் சகல துறைமுகங்களினதும்)**

(துறைமுக நடவடிக்கைகள் வெவ்வேறாக) வருமானம் (ரூபா.மில்)

| வபரம் | 2018 | ★ 2017 | வபரம் | 2018 | ★ 2017 |
|---|---|---|---|---|---|
| துறைமுக செயற்பாடுகளிலிருந்து வருமானம் | 38,546 | 35,389 | கப்பலோட்டம் | 10,583 | 8,145 |
| ஏனைய வருமானம் | 13,737 | 8,574 | கப்பற் சரக்கு ஏற்றுதல்/ இறக்குதல் | 18,257 | 16,873 |
| | | | வாப்பு கையாளல் | 5,607 | 5,325 |
| | | | துறைமுக வசதிகள் | 3,226 | 3,773 |
| | | | ஏனைய சேவை இயக்கம் | 873 | 1,274 |
| **மொத்த வருமானம்** | **52,283** | **43,963** | **உப மொத்தம்** | **38,546** | **35,389** |

★ ஒப்பிட்டுப் பார்க்கும் தேவைப்பாடுகளுக்காக 2017 ஆண்டின் உண்மை பெறுமதியிலிருந்து ஹம்பாந்தோட்டை துறைமுகம் விடுவிக்கப்பட்டுள்ளது.

**இயக்க மற்றும் ஏனைய செலவினங்கள் (சகல துறைமுகங்களினதும்)**

(ரூபா.மில்லியன்)

| விபரம் | 2018 | ★ 2017 | (அதிகரித்தல)/ குறைதல் | % |
|---|---|---|---|---|
| சொத்துக்களை பராமரித்தல் | 1,323 | 1,324 | 0 | 0 |
| எரிபொருள் , மின்சாரம் மற்றும் நீர் | 2,328 | 2,148 | (180) | (8) |
| வெளிநாட்டுக் கடன் மீதான வட்டி | 2,257 | 1,808 | (448) | (25) |
| மேலதிக நேரம் | 4,688 | 3,795 | (893) | (24) |
| தேய்மனாம் (தவணை முறையில் நிதி செலுத்துதல்) | 4,047 | 5,571 | 1,522 | 27 |
| சும்பளங்கள் வேதனங்கள் மற்றும் கொடுப்பனவுகள் | 15,087 | 12,523 | (2,564) | (20) |
| ஏனையவை | 2,540 | 2,608 | 67 | 3 |
| **செலவினம்** | **32,270** | **29,776** | **(2,494)** | **8** |
| வேளிநாட்டு நாணய மாற்று/ (நட்டம்/இலாபம் | 11,317 | 2,194 | (9,122) | (416) |
| **வெளிநாட்டு நாணய மாற்று இழப்பு அடங்கலான மொத்தச் செலவினம்** | **43,587** | **31,970** | **(11,617)** | **(36)** |

## கொழும்பு துறைமுகம்

2018 ஆம் ஆண்டில் கொழும்பு துறைமுகத்தில் ரூபா 19,484 மில்லியன் இயக்க இலாபமொன்று பதிவாகியுள்ளது. 2017 ஆம் ஆண்ல் தேறிய வருமானம் ரூபா 41,455 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் தேறிய இலாபம் ரூபா 49,606 மில்லியனாவதோடு இது ரூபா 8,151 மில்லியன் அதிகரிப்பாகும். 2018 ஆம் ஆண்டில் வரிக்கு முன்னரான மொத்த செலவினம் (ரூபா 11,195 மில்லியன் அந்நிய செலாவணி நட்டம் அடங்கலாக) ரூபா 41,841 மில்லியன் ஆவதோடு 2017 ஆம் ஆண்டில் செலவினம் ரூபா 30,445 மில்லியன் ஆகியது. (ரூபா 2,261 மில்லியன் அந்நிய செலாவணி நட்டம் அடங்கலாக) இது 37% அதிகரிப்பாகும்.




**குறிப்பு:-**

ஹம்பாந்தோட்டை துறைமுக இயக்கத்துக்காக இலங்கை துறைமுக அதிகாரசபை, இலங்கை அரசு, சைனா மேர்சன்ட் போரட் ஹோல்டிங்ஸ் கம்பனி, ஹம்பாந்தோட்டை இன்டர்நெஷனல் போர்ட் குரூப் (HIPG) ஹம்பாந்தோட்டை இன்டர்நெஷனல் போர்ட் சர்விசஸ் (HIPS) ஆகியவற்றிற்கிடையில் 2017 ஜுலை 29 ஆம் திகதி ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட சலுகைக்கான உடன்படிக்கை காரணமாக 2018 ஆண்டில் வரவு மற்றும் செலவு கணக்குகள் கொழும்பு துறைமுகத்துக்க மாற்றப்பட்டுள்ளது.

எனவே 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் தேவைக்காக கீழ்வரும் விடயம் இன்றிய வருமானம் மற்றும் செலவினம் கொழும்பு துறைமுகத்தின் கணக்கிற்கு சேர்க்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டுடன் வருமானத்திற்கு, ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் வேறு வருமானமான ரூபா 131 மில்லியன் உள்ளடங்கியதோடு 2017 ஆம் ஆண்டின் செலவிற்கு ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் ரூபா 2,641 மில்லியனான மீதி மற்றும் மாகம்புர துறைமுக முகாமைத்துவக் கம்பனிக்கு செலுத்தப்பட்ட ரூபா 616 மில்லியன் முகாமைத்துவ கட்டணமும் உள்ளடங்குகின்றன.

## காலி துறைமுகம்

2018 ஆம் ஆண்டில் காலி துறைமுகத்தில் 499 மில்லியன் இயக்க இலாபம் பதிவாகியுள்ளது. 2017 ஆம் ஆண்டில் தேறிய இலாபம் ரூபா 1,388 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2018 ஆண்டில் தேறிய இலாபம் 1,623 மில்லியன் ஆனதோடு அது ரூபா 235 மில்லியன் அதிகரிப்பாகும்.

2018 வருடத்தில் வரிக்கு முன்னரான மொத்த செலவினம் ரூபா 925 மில்லியன் ஆனதோடு (ரூபா 122 மில்லியன் அந்நிய செலாவணி நட்டம் அடங்கலாக) 2017 ஆம் அண்டில் செலவினம் ரூபா 760 மில்லியன் ஆகியது. (ரூபா 32 மில்லியன் செலாவணி நட்டம் அடங்கலாக) இது 22% அதிகரிப்பாகும்.




## திருகோணமலை துறைமுகம்

2018 ஆம் ஆண்டில் திருகோணமலை துறைமுகம் ரூபா 160 மில்லியன் இயக்க இலாபமொன்றை பதிவு செய்துள்ளது. 2017 ஆம் ஆண்டில் தேறிய வருமானமான ரூபா 1,120 மில்லியனுக்கு ஒப்பாக 2018 வருடத்தில் தேறிய வருமானம் ரூபா 1,054 மில்லியன் ஆக பதியப்பட்டது. இது ரூபா 67 மில்லியன் அதிகரிப்பாகும்.

2017 ஆண்டில் செலவினம் ரூபா 764 மில்லியன் ஆனதோடு 2018 ஆம் ஆண்டில் வரிக்கு முன்னரான மொத்த செலவு ரூபா 820 மில்லியனாக பதிவாகியது இது 7% அதிகரிப்பாகும்.



இலங்கை துறைமுக அதிகாரசபை மனித மூலதனத்தை பிரதான உந்துசக்தியான அமைப்பென அடையாளம் கண்டுகொண்டுள்ளதுடன், மனித வளத்தை அபிவிருத்தி செய்வதற்கான வழிகளைக் குறிக்கின்ற ஒரு மனிதவள கொள்கையை அறிமுகப்படுத்துவதன் மூலம் இந்த போட்டித்தன்மையான சிறந்த முடிவுகளை மனித வளம் எடுக்கும் நோக்கில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலை என்பது மனித வளத்திற்கான பயிற்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்ற பிரதான பயிற்சி நிறுவனமாகும். டிப்ளோமோ பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகள் கருத்தரங்குகள் மற்றும் நடைமுறை அமர்வுகள் உள்ளிட்ட பல்வேறு பயிற்சித் திட்டங்கள் இந்த கல்வியகத்தில் நடத்தப்படுகின்றன. மேலும் தேசிய அளவிலான தகுதி (NVQ) சான்றிதழ் பெறக்கூடியவாறு செயல்முறை பரீட்சைகளை நடாத்துவதற்கு இந்நிறுவனத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது..

ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் அங்கீகார ஆளணித் தொகை தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டதனால், அதனை மீளாய்வு செய்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவ சைவைகள் திணைக்களத்தால் அறிமுகம் செய்யப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் செயற்பாட்டு வரையறைக்கு ஏற்ப உத்தேசித்த ஆட்சேர்ப்புத் திட்டம் திட்டமிடப்படுகின்றது மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலையினால் நடாத்தப்படுகின்ற பயிற்சி நெறிகளுக்கான தேவை நடப்பு வருடங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றை காட்டுகின்றது. 2018 ஆம் ஆண்டில் மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலையினால் சுமார் 8,325 ஊழியர்கள் பயிற்சியளிக்கப்பட்டனர்.

நிறுவன ரீதயிலான நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு ஆளணியினருக்கு தமது செயலாற்றலை சுயமாக அமுல்படுத்துவதற்கு தகுந்த சூழலை அமைப்பதற்காக திட்டமிடப்பட்ட மனிதவளக் கொள்கையின் மூலம் நிருவாகக் கோவை ஒழுக்காற்றுக் கொள்கை, ஆட்சேர்ப்பு விதிமுறை மற்றும் பல்வேறு பகுதிகளில் நிலவும் மனிதவள தேவைகள் மீளாய்வு செய்யப்படுகின்றது. மேலும், இம்மனிதவளக் கொள்கையினால் அனைத்து ஊழியர் குழுவிற்கும் சமனான வாய்ப்புக்களை பெற்றுக்கொடுப்பதை உறுதி செய்வதோடு விஷேடமாக பதவியுயர்வுகள் பெற்றுக்கொடுத்தலின் போது ஆண் பெண் பேதமின்றி சமத்துவத்தை பேணிக்கொண்டு அனைதத்து விதமான மனிதவளம் மற்றும் தொடர்புபடுத்தலில் சமனான வாய்ப்பை உறுதிப்படுத்தும்.

# ஒன்றிணைந்த சமூகப் பொறுப்புக்கள்

மீளாய்வுக்குட்படும் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஒன்றிணைந்த சமூகப் பொறுப்புக்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

- ♦ க.பொ.த. (சா.்.த) மற்றும் க.பொ.த (உ.்.த) பரீட்சைகளில் மிகவும் சிறந்த முறையில் சித்தி பெற்ற துறைமுக ஊழியர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்கள் வழங்குதல்.

- ♦ துறைமுக ஊழியர்களது சிறு பிள்ளைகளின் நலன்புரி தொடர்பிலான சகல வசதிகளையும் கொண்ட பகல்நேர பராமரிப்பு நிலையம் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

- ♦ சகல வசதிகளையும் கொண்ட துறைமுக தீயணைப்புப் படைப்பிரிவு அதன் பணிகளில் கொழும்பு மாநகர சபைக்கு உதவியுள்ளதுடன் கொழும்பு மற்றும் அண்டிய பிரதேசங்களில் அவசர நிலைமைகளின் போது தீயணைக்கும் நடவடிக்கைகளில் தனது ஒத்துழைப்பையும் நல்கியுள்ளது.

- ♦ முல்லேரியாவிலுள்ள மனநோயாளர் வைத்தியசாலையின் நோயாளர் விடுதியொன்றை பராமரித்தல்.

வர்த்தகத்துடன் தொடர்புடைய சகல தரப்பினர்களினதும் நலனுக்காக வளங்களை வெற்றிகரமாகப் பயன்படுத்தி சம்பந்தப்பட்ட நிறுவனத்தை உரிய வழிகாட்டல்களோடு நிர்வகித்து நடாத்திச் செல்லப்படுவதற்காக அந்நிறுவனத்தினால் ஏற்படுத்தப்படும் ஒட்டுமொத்த செயற்பாடு இதுவாகும். நல்லாட்சி பேணப்படுதல் தொடர்பிலான முக்கிய பொறுப்பு அதிகாரசபையின் தலைவர் மற்றும் அதன் பணிப்பாளர் சபையைச் சார்ந்ததாகும். நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களை அடையும் பொருட்டு அதன் செயற்பாடுகள், நிர்வாக மற்றும் உரிய முறையில் செயற்படுகின்றமை. தொடர்பில் அவர்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டியுள்ளதுடன் இதற்கு தொழில்சார் அலுவலர்கள் அவர்களுக்குரிய செயற்பாட்டுத் துறைகளில் பங்களிப்பு வழங்குவதன் மூலம் வசதிகள் செய்தல் வேண்டும். இப்பணியினுள் உள்ளக கணக்காய்வாளர்களுக்கு நிறுவனத்தின் செயலாற்றுகை தொடர்பில் பரீட்சிப்பதற்கும் அங்கீகார நடைமுறைகளிலிருந்து வழுகிச் செல்லும் சந்தர்ப்பங்கள் இருப்பின் அது தொடர்பில் அறிக்கை செய்யப்படுதலின் ஊடாக முக்கிய பணி மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக இயக்க மற்றும் நிதிசார்ந்த விடயங்களில் எதிர்பார்க்கப்படும் செயலாற்றுகையினை அடையப்பெறுவதற்கான பரிந்துரைகள் உள்ளக கணக்காய்வாளர்களினால் வழங்கப்பட்டு அதனூடாக ஒட்டுமொத்த நல்லாட்சிக்கான பங்களிப்பு செய்யப்படுகின்றது.

நிதிசார்ந்த மற்றும் கையாளல் செயற்பாடுகள் அறிக்கை செய்யப்படும் உயர் நிலை மற்றும் தொடர்ச்சியான தன்மை தொடர்பில் தமக்கு வழங்கப்பட்டுள்ள பணிகள் எவ்வகையில் நிறைவேற்றப்படுகின்றதென்பதை முகாமைத்துவம் பணிப்பாளர் சபையுடன் தொடர்பு கொள்ளும் தகவல்களின் உயர் நிலை, வெளிப்படையான நிறுவனமொன்றினை நடாத்திச் செல்வதற்கு அவர்களின் உயர் அர்ப்பணிப்பு இன்றியமையாததாகும். இதற்கு உயர் நிலையிலான ஒன்றிணைந்த நிர்வாகம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதற்கு அதிகாரசபை உறுதிபூண்டுள்ளது.

அதிகாரசபையின் நிர்வாகம் தொடர்பில் பணிப்பாளர் சபை பொறுப்பு வகிக்கின்றது. சிறந்த நடைமுறைகள் செயற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான சட்டதிட்டங்கள், விதிகள், அமைப்பு முறைகள் மற்றும் செயற்பாடுகள் மேம்படுத்தப்படுதலில் குறிப்பிடத்தக்க கவனம் அதிகாரசபையினால் தொடர்ச்சியாக செலுத்தப்படுகின்றது. அதிகாரசபையினால் அதன் நிர்வாகப் பணிகள் தொடர்பான அமைப்பு முறைகள் தொடர்ச்சியான திருத்தங்களுக்கு உட்படுத்தப்படுகின்றன.

நிதி ஆண்டினுள் அதிகாரசபையினால் அனுசரித்து செல்லப்பட்டுள்ள சிறந்த ஒன்றிணைந்த நிர்வாக அடிப்படைகள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- பணிப்பாளர் சபை மற்றும் சபையின் உப குழுக்கள்
- உள்ளக கட்டுப்பாடு
- உள்ளக கணக்காய்வு
- ஒழுக்காற்று விதிமுறைகள்
- பொது திறைசேரி, நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சுடனான தொடர்பு
- சாசனம் மற்றும் நீதித் தேவைப்பாடுகளுக்கு இணங்கி செயற்படுதல்
- அரச தொழில் முயற்சிகளின் நல்லாட்சிக்கான வழிகாட்டல்கள்

நிதி அமைச்சின் அரச தொழில் முயற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் அரச தொழில் முயற்சி நல்லாட்சிக்கான வழிகாட்டல்களில் இனம் காணப்பட்ட சில சரத்துகளிலிருந்து ஒதுங்குவதற்கு துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சர் ஆகியோரினால் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளுக்கு அனுமதி வழங்குவதற்கு எடுத்த அமைச்சரவையின் தீர்மானம் பின்பற்றப்பட்டு துறையினுள் உயர் போட்டித்தன்மை மற்றும் செயன்முறையின் அரச துறை நிறுவனமொன்றாக மாறுவதற்கு தேவைப்படும் நெகிழ்வுத்தன்மையும், சுதந்திரமும் உறுதிப்படுத்தும் பொருட்டு நிர்வாகம் தொடர்பான யாப்பொன்று இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நகல்படுத்தப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையும் சபையின் உப குழுக்களும்**

பணிப்பாளர் சபை தலைவர், உப தலைவர் மற்றும் 07 பணிப்பாளர்களைக் கொண்டிருக்கும். பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் உயர் தொழில் மற்றும் தனிப்பட்ட வகையில் நீதி நெறியுடையவர்களாகவும் அதிகாரசபை ஈடுபட்டிருக்கும் துறையின் அனுபவம் உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

பணிப்பாளர் சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்தல் கீழ் கண்டவாறு அமையும்.

- துறைமுக அபிவிருத்தி அல்லது துறைமுக இயக்கம் அல்லது சட்டம் அல்லது நிதி விடயங்கள் அல்லது கப்பற்றுறை அல்லது வர்த்தகம் அல்லது பொறியியல் நடவடிக்கைகள் அல்லது, நிர்வாகம், தொழிலாளர் தொடர்பு சம்பந்தமான அனுபவம் மற்றும் ஆற்றலுடையோர் என அமைச்சரினால் கருதப்படுவோரில் தலைவர் உட்பட பணிப்பாளர்கள் 04 பேர் அமைச்சரினால் நியமிக்கப்படுவர்.

- சரத்தின் 13:1 பிரிவின் கீழ் முகாமைப் பணிப்பாளர் அமைச்சரினால் நியமிக்கப்படுவார்.

- நிதி விடயங்கள் தொடர்பிலான அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படும் பொதுத் திறைசேரியின் பிரதிநிதியொருவர்.

- சுங்கப் பணிப்பாளர் நாயகம் மற்றும் மீன்பிடி தொடர்பான விடயங்களில் அமைச்சுக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதியொருவர்.

தலைவர் தவிர்ந்த உப சரத்து (1) (அ) அல்லது (1) (இ) யின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர்களிரொருவர் துறைமுக அதிகாரசபையின் உப தலைவராக அமைச்சரினால் நியமிக்கப்பட முடியும்.

தலைவருக்கும், உப தலைவருக்கும், முகாமைப் பணிப்பாளருக்கும் வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் தெளிவாக வெவ்வேறாக விளக்கப்பட்டுள்ளன. நிறைவேற்று தரத்திலல்லாத சகல பணிப்பாளர்களும் ஆழ்ந்த அறிவு மற்றும் முறையான அனுபவங்களின் மீது அதிகாரசபைக்கு சேவைகளை வழங்குவர். இவ்வறிக்கையின் காலப்பகுதியில் பதவி வகித்த அதிகாரசபையின் பணிப்பாளர்களின் பெயர்கள் மற்றும் விபரங்கள் 13-17 ஆம் பக்கங்களில் காட்டப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் பிரதான கடமைகளும் பொறுப்புக்களும் பின்வருமாறு

- மூலோபாயமான நோக்கம், கொள்கைகள், குறிக்கோள்கள் போன்றவற்றினை ஸ்தாபிப்பதன் மூலம் கட்டளைகளை வகுத்தல்.

- நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றும் செயற்பாட்டினை மேற்பார்வை செய்தல்.

- போதுமானளவு உள்ளக கட்டுப்பாடு மற்றும் உயர் தரத்திலான நெறியினைப் பேண உத்தரவாதமளித்தல்.

- நோக்கத்தினை அமைத்துக் கொள்வதற்கான வழிகாட்டல், விதிமுறைகளை தயாரித்தல் மற்றும் அதன் செயற்பாட்டிற்கு உத்தரவாதமளித்தல்.

- சகல பிரதான வர்த்தக நடவடிக்கைகளின் இடர்பாடு நிலைமைகளை இனம்கண்டு தகுந்த போதுமான கட்டுப்பாடு பேணல், இடர்பாடு நிலைமைகள் தொடர்பில் காலத்திற்கேற்றவாறு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான குறித்த நிலைமை அறிக்கை செய்யப்படும். மேற்பார்வை செயல்முறை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றதென்பதில் உத்தரவாதமளித்தல்.

பணிப்பாளர் சபை தொடர்ச்சியாக கூட்டங்களை நடாத்துவதோடு மீளாய்வுக்குட்படும் வருடத்தில் பணிப்பாளர் சபையானது 14 முறை கூடியது. பணிப்பாளர் சபையின்

செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதற்குத் தேவையான விபரங்கள் காலத்திற்கேற்ப பெற்றுக் கொள்ள முடியும். பணிப்பாளர் சபையின் செயலாளர் தலைவருடன் கலந்தாலோசித்து நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படுவதோடு ஒவ்வொரு பணிப்பாளர் சபையின் கூட்டத்திற்கு முன்னர் எல்லா பணிப்பாளர்களுக்கும் விபரமான அறிக்கை அனுப்பி வைக்கப்படும். பணிப்பாளர் சபையில் கலந்து ஆலோசிப்பதற்குள்ள ஏனைய விடயங்களில் இயக்கம், நிதிச் செயற்பாட்டு சுட்டெண்களை மீளாய்வு செய்தல், பிரதான மூலதன செலவினத் திட்டம் மற்றும் பிரேரணைகள் அதன் வரையறையினுள் அங்கீகரித்தலும் அடங்கிருந்தது.

முன்வைக்கப்பட்ட எல்லா பரிந்துரைகள் சம்பந்தமாக, பணிப்பாளர் சபையின் இறுதி அனுமதி கிடைக்கப்பெறுதலுக்குட்பட்டதாக சில பொறுப்புக்கள் தொடர்பில் செயற்படுவதற்கு கணக்காய்வுக் குழுவிடமும் முகாமைத்துவ குழுவினையொத்த உப குழுக்களிடமும் கையளிக்கப்பட்டன.

**முகாமைத்துவக் குழு**

தலைவர், உப தலைவர் முகாமைப் பணிப்பாளர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர் அடங்கலாக பணிப்பாளர் சபையின் 04 அங்கத்தவர்கள் உட்பட முழு நேர 07 பணிப்பாளர்கள், ஹாபர் மாஸ்டர் ஆகியோர் முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவர்களாக செயற்பட்டனர்.

அன்றாட நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் கையாளல் நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படுகையில் வெற்றிகரமான வர்த்தக நிறுவனமொன்றாக மனிதவளம் உள்ளிட்ட வளங்களின் உச்ச பயன்பாடு பெறப்படுவதற்கும் துறைமுக நுகர்வோர்களுக்கும் ஏனைய சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கும் வழங்கப்படும் சேவைகளின் தன்மை உயர்த்தப்படுவதற்கும் முகாமைத்துவ குழு பல்வேறு பாகங்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொண்டது.

அதன் கூட்டங்களின் போது சகல கொள்கை சார்ந்த விடயங்கள் போன்று தீர்மானங்கள் நடைமுறைப்படுத்துதற்கு முன்னர் அவை பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் உடன்பாடு பெறுவதற்கு முன்னரும் துல்லியமாக பரீட்சித்துப் பார்க்கப்பட்டன. தீர்மானங்கள் முன் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டன. இச்செயற்பாடுகள் தாமதங்களின்றி வெற்றிகரமாக நிறைவேற்றும் பொருட்டு முகாமைத்துவக் குழுவினால் மாதத்திற்கு இருமுறை கூடி தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும். முகாமைத்துவக் குழுவினால் இவ்வருடத்தினுள் 11 கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

**கணக்காய்வுக் குழு**

பணிப்பாளர் சபையின் அங்கத்தவரான பொது திறைசேரியின் பிரதிநிதி மற்றும் பணிப்பாளர் சபையின் இரண்டு அங்கத்தவர்களையும் இக்குழு கொண்டுள்ளது. 2018 டிசெம்பர் மாதம் இக்குழு மீண்டும் நியமிக்கப்பட்டது.

கணக்காய்வுக் குழுவினால் கொள்கைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடு விதிமுறைகளின் வெற்றிகரமான செயற்பாடு மீளாய்வு செய்யப்பட்டு செயற்திறன் உறுதிப்படுத்தப்படும். உள்ளக கணக்காய்வு அறிக்கை மற்றும் அரசாங்க கணக்காய்வுக் கடிதங்கள் பரிட்சித்துப் பார்க்கப்பட்டு அவைகளின் பரிந்துரைகள் பகுதித் தலைவர்களினால் அனுசரிக்கப்படும்வாறு பணிப்பாளர் சபை ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோன்று பணிப்பாளர் சபையின் வழிகாட்டலின் கீழ் அதிகாரசபைக்கு நிதியினாலும் இயக்க செயற்பாடுகளினாலும் நிலவும் இடர்பாடுகள் சிறந்த முறையிலான வரைவிலக்கண செயற்பாடுகளினூடாக அடையாளம் காண்பதற்கும் அவ்வாறான இடர்கள் முகாமைத்துவம் செய்யப்படுவதை உறுதிப்படுத்தும் பொறிமுறையொன்றினை அதிகாரசபை கொண்டுள்ளதனை முகாமைத்துவக் குழு உறுதிப்படுத்துகின்றது.

ஊழியர்கள் மற்றும் துறைமுக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நபர்களினது நலன்களின் வினைத்திறன் மேம்படுத்தப்படுவதற்கும் வளங்களினது உற்பத்தித் திறன் உயர்த்தப்படுவதற்குமான நிதி மற்றும் கையாளல் தொடர்பில் நிலவும் விதிகள், முறைமைகள் வலுப்படுத்தப்படுவதற்காக நாள் தோறும் பணிப்பாளர் சபைக்கு அறிக்கை செய்தல் இக்குழுவின் பொறுப்பாகும்.

**உள்ளக கட்டுப்பாடு**

எந்தவொரு அமைப்பிலும் செயற்திறன் மிக்க முகாமைத்துவத்திற்காக திறனாக இயங்கக் கூடிய உள்ளக கட்டுப்பாடு முறையொன்று இருப்பது அவசியமாகும். அதிகாரசபையின் உள்ளக கட்டுப்பாட்டு செயற்பாடுகளின் மீளாய்வு தொடர்பான சகல பொறுப்பும் பணிப்பாளர் சபையைச் சாரும். பின்பற்றப்பட வேண்டிய கொள்கை முறைகள் பற்றியதில் விரிவான ஒழுங்கு விதிகள் அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்டுள்ளன. அவை அடிக்கடி மீளாய்வு செய்யப்பட்டு முறைப்படுத்தப்பட்டன. வர்த்தக ரீதியான நோக்கங்களை அடைவதற்கு இடையூறாக இருக்கும் இடர்களுக்கு முகம் கொடுப்பதற்காக செயற்பாட்டு முறையொன்று திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய அதிகாரசபையின் சொத்துக்களை அனுமதியின்றி பாவித்தல், கைமாறுதலைத் தவிர்த்தல், முறையான அறிக்கைகளைப் பேணுதல் மற்றும் நிகழும் தகவல்களின் பிழையின்மை தொடர்பாக தேவையான அளவு சான்றுகளையும் இக்குழு வழங்கும்.

அதிகாரசபையின் அமைப்புக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களின் மூலம் அதன் திறன் நேர்மைத் தன்மை, சீரிய நிலைமை மற்றும் சிறந்த தொடர்பாடல் சூழல் பேணப்படுதலின் அதிகாரசபையின் அர்ப்பணிப்புடனான செயற்பாடு உள்ளக கட்டுப்பாட்டிற்கு உறுதுணையாகும்.

**உள்ளக கணக்காய்வாளர்கள்**

பூரண தகுதி வாய்ந்த பட்டயம் பெற்ற கணக்காளரொருவரினால் கணக்காய்வுப் பகுதியின் தலைமை வகிக்கப்படுகின்றது. இப்பகுதி, பூரண சுதந்திரமாக இயங்குகின்றது. தலைவருக்கும் கணக்காய்வுக் குழுவுக்கும் நேரடியாக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

தலைவரினதும் கணக்காய்வுக் குழுவின் அறிவுரைகளுக்கும் இணங்க இப்பகுதிக்குரிய விடய பணிகள் தயாரிக்கப்படுகின்றன. விடய உள்ளடக்கம் சம்பந்தப்பட்ட திருத்தங்களுக்காக தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்படுகின்றன. பிரதானமாக முழு உள்ளக கட்டுப்பாடு தொகுதி கணக்காய்வுப் பகுதியினால் மேற்பார்வை செய்யப்படுகின்றது. அதேபோல் கணக்காய்வுக் குழு தேவையான ஒத்துழைப்பை வழங்குகின்றது. உள்ளக கணக்காய்வானது, உள்ளக கட்டுப்பாடு முறைகளின் வினைத்திறன் மற்றும் துரிதத்தன்மை தொடர்பான குறிக்கோள்கள் வெளிக்கொணரப்பட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக செயற்பாட்டுத் திட்டங்கள் மதிப்பிடப்படும்.

**ஒழுக்கச் சட்ட விதிகள்**

ஏற்றுக்கொள்ளக் கூடிய உயர் மட்ட ஒழுக்க நடைமுறை பேணப்படுதலுக்கு வழிகாட்டுவதற்காக ஒழுக்க விதிமுறைகள் விதிக்கப்பட்டுள்ளன. சகல பணிப்பாளர்கள், பகுதித் தலைவர்கள் மற்றும் ஊழியர்களினால் தமது அன்றாட கடமைகள் நிறைவேற்றப்படுகையில், தமது செயற்பாடுகளிலும் அதிகாரசபையின் புகழ் நாமத்திற்கும் தோற்றப்பாட்டிற்கும் பாதிப்பேற்படுத்தும் சந்தர்ப்பங்களில் உயர் நிலையிலான ஒழுக்க நெறியுடன் நேர்மையாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதலை அதிகாரசபை எதிர்பார்க்கின்றது.

ஒழுக்கச் சட்ட விதிகளின் அடிப்படைகள்;

- ♦ சகல நடவடிக்கைகளின் போது நேர்மை, நியாயம் மற்றும் பக்க சார்பின்மை பேணுதல்
- ♦ சட்டம் பற்றி அறிந்திருத்தல் மற்றும் அதற்கு கீழ்ப்படிதல்
- ♦ நிறைவேற்றப்படும் சகல நடவடிக்கைகள் தொடர்பிலும் அந்தரங்கத்தன்மை.
- ♦ அதிகாரசபைக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் அல்லது தீய விளைவுகள் ஏற்படக்கூடியவாறு செயற்படுவதைத் தவிர்த்தல்.

**அனுகூலமான திட்ட வரம்பு மற்றும் சாசன சட்ட தேவைகளுக்கு உட்படல்**

எல்லா சாசன மற்றும் சட்ட தேவைகளுக்கு ஏற்ப செயற்படுவதானது இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகும். இந்நோக்கத்தினை முதன்மையாகக் கொண்டு அதிகாரசபையானது எல்லா சாசன மற்றும் சட்ட தேவைகளுக்கும் ஏற்ப

செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்கு நிதி மற்றும் உள்ளக கணக்காய்வு பகுதிகள் ஊக்கத்துடன் செயற்படுகின்றன. அதற்கு மேலதிகமாக சட்டப் பகுதி அதிகாரசபையின் வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் ஏனைய கருமங்கள் சட்ட நியதிகளுக்கு ஏற்ப இடம்பெற உறுதிப்படுத்தப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கின்றது.

**துறைமுகங்கள், கப்பற்றுறை அமைச்சு மற்றும் நிதியமைச்சின் பொது திறைசேரியுடனான தொடர்பு**

உரிய வழியில் மற்றும் மூலோபாயமான நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கு பணிப்பாளர் சபைக்கு வழிகாட்டும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர், அமைச்சின் செயலாளர், மூலோபாய தொழில் முயற்சி முகாமைத்துவ (ளுநுஆயு) நிறுவனத்துடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை மேற்கொள்கின்றனர். அதற்கு மேலதிகமாக நிதி அமைச்சின் பொது திறைசேரியின் தேவைக்கேற்ப மூன்றாண்டு காலத்திற்கான வர்த்தகத் திட்டம், நிதி மற்றும் ஏனைய இயக்க செயற்பாட்டு அறிக்கை உள்ளடங்கலான முழுமையான அறிக்கைகள் காலாண்டு அடிப்படையில் அதிகாரசபையினால் முன்வைக்கப்பட்டன.

**குறிப்பிடப்பட்ட பங்குதாரர் தொடர்பான வெளிப்பாடு**

இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் கொடுக்கல் வாங்கல்கள் செய்யும் தரப்பினர் சம்பந்தமாகவும் தனிப்பட்ட அக்கறை அல்லது உறவு தங்களிடத்தில் இல்லையென பணிப்பாளர் சபை உறுதிப்படுத்தி அறிவிக்கின்றது.

**பொறுப்பு**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதி அறிக்கைகள் அதிகாரசபையின் குறிப்பிட்ட நடவடிக்கைகள் தொடர்பில் உண்மை மற்றும் நியாயத் தன்மையினைப் பிரதிபலிப்பதெனவும் அவ்வறிக்கையானது ஏற்றுக்கொள்ளப்பட்ட தேவைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளதென்பதும் பணிப்பாளர் சபையின் கருத்தாகும்.

**எதிர்காலம்**

உண்மைப் பெறுமதியுடன் ஒட்டுமொத்த திரட்டிய நிர்வாகம் நிலைத்து நிற்பதற்கு கண்மூடித்தனமான திருப்தியடையக்கூடிய முறைகள் மற்றும் கொள்கைகள் போன்றவற்றில் அன்றி உண்மையான முறையில் அனைத்து பங்காளர்களினதும் நம்பிக்கையினை வெல்லக் கூடிய உயர்ந்த செயல்பாட்டுடன் நியாய முறையில் பேணிச் செல்வதன் மூலம் நிலை நாட்டமுடியும் என்பதை இலங்கை துறைமுக அதிகாரசபை நம்புகின்றது.



# துறைமுக புள்ளிவிபரங்கள்
# ஆண்டறிக்கை 2018

## கொழும்பு துறைமுகம்

**துறைமுக பரிமாணம்**

**துறைமுக பிரதேசம்**

| | |
|---|---|
| துறைமுக தடாக பிரதேசம் | 184.6 ஹெக்டயார் |
| வட மேல் அலைதாங்கியின் நீளம் | 810 மீட்டர் |
| வட கிழக்கு அலைதாங்கியின் நீளம் | 330 மீட்டர் |
| மேற்கு நுழைவாயில் | 230 மீட்டர் X 16 மீட்டர் |
| வடக்கு நுழைவாயில் | 190 மீட்டர் X 13 மீட்டர் |

**சேவைக் காலம்**

வருடத்தின் சகல நாட்களிலும் 24 மணித்தியால சேவை அடிப்படையில் கொழும்பு துறைமுகம் இயங்குகிறது.

**2018 இல் கையாளப்பட்ட கப்பல் சரக்குகளின் அளவு**

| | |
|---|---|
| கொள்கலனிலிடப்பட்டவை | 89.9% |
| பிரித்த மொத்தம் | 0.7% |
| உலர் மொத்தம் | 2.8% |
| திரவ மொத்தம் | 6.6% |

## புதிய கொழும்பு தெற்கு துறைமுகம்

**துறைமுகப் பிரதேசம்**

| | |
|---|---|
| துறைமுக தடாக பிரதேசம் | 192.0 ஹெக்டயார் |
| தென்மேற்கு அலைதாங்கியின் நீளம் | 5,140 மீட்டர் |
| வடமேற்கு அலைதாங்கியின் நீளம் | 1,550 மீட்டர் |
| பிரதான நுழைவாயில் | 570 மீட்டர் X 18 மீட்டர் |

## காலி துறைமுகம்

துறைமுக பரிமாணம்

| | |
|---|---|
| நீர் பிரதேசம் | 15.3718 ஹெக்டயார் |
| உட்பிரவேச கால்வாய் | 140 மீட்டர் |
| நிலப் பிரதேசம் | 16.4015 ஹெக்டயார் |
| அங்கீகார மொத்த நீள் அளவு | 130 மீட்டர் |
| அனுமதியேற்கப்பட்ட ஆழம் | 7.3 மீட்டர் |

**வேலை நேரங்கள்**

மே தினம் பகல் நேரத்தில் மாத்திரம் கப்பல் நடவடிக்கைகள் இடம்பெறும் என்பதோடு வருடத்தின் சகல நாட்களிலும் காலி துறைமுக வேலைகள் 24 மணித்தியாலய அடிப்படையில் இடம் பெறும்.

## வழி விலகும் காலம்

கிழக்கு - மேற்கு பிரதான கடல் மார்க்கத்திலிருந்து பயணக் காலம் எதுவுமில்லை.

**நங்கூர வசதிகள்**

## மொத்த கரையோர நங்கூரத்தளங்கள் - 05

| நங்கூரத்தளம் | முழு நீளம் (மீ) | கரையோர ஆழம் (மீ) |
|---|---|---|
| குளோசன்பேர்க் ஜெட்டி | 420 | 8.9 |
| புதிய பாலம் | 162 | 8.9 |
| புதிய பாலம் / குறுக்காக | 84 | 8.9 |

**களஞ்சியசாலை வசதிகள்**

| பெயர் | அலகுகளின் பிரமாணம் | சராசரி உயரம் (அடி.) | பிரதேசம் (ச.அ) | கொள்ளளவு (கன. அடி) | கொள்கலன் அடுக்கும் உயரம் (அடி) |
|---|---|---|---|---|---|
| இல. 01 | 06 | 23 | 20,000 | 460,000 | 10 உயரம் |
| இல. 02 | 12 | 23 | 40,000 | 920,000 | 10 உயரம் |
| காலி துறைமுகத்தின் நீருக்கடியிலான கேபல் நிலையம் (GSCD) | 07 | 23 | 23333.3 | 536666.7 | 10 உயரம் |
| இலங்கை துறைமுக அதிகார சபை | 05 | 23 | 16666.7 | 383333.3 | 10 உயரம் |

2018.01.05 ஆம் திகதி முதல் 2023.01.14 திகதி வரை காலி துறைமுக நீருக்கடியிலான கேபல் நிலையத்துக்கு இல: 02 ஆவது களஞ்சியத்தின் 07 அலகுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

## திருகோணமலை துறைமுகம்

**துறைமுக பரிமாணம்**

| | |
|---|---|
| நீர் பிரதேசம் | 1,536 ஹெக்டயார் |
| உட்பிரவேச கால்வாய் (ஆகக் குறைந்த அகலம்) | 500 மீட்டர் |
| நில பிரதேசம் | 2,254 ஹெக்டயார் |

**வேலை நேரங்கள்**

திருகோணமலை துறைமுகத்தில் மே தினத்தில் பகல் நேரத்தில் மாத்திரம் கையாளல் நடவடிக்கைகள் இடம்பெறுவதோடு திருகோணமலை துறைமுகத்தில் தவிர்ந்த வருடத்தின் அனைத்து நாட்களிலும் 24 மணித்தியால அடிப்படையில் சேவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கப்பல் பயணங்கள் பகல் காலங்களில் மட்டுமே இடம்பெறும்.

**நங்கூரத்தள வசதிகள்**

**இலங்கை துறைமுக அதிகார சபையின் நங்கூரத்தளங்கள்**

| நங்கூரத்தளம் | முழு நீளம் (மீ) | கரையோர ஆழம் (மீ) |
|---|---|---|
| அஷ்ரப் இறங்குதுறை | 250 | 12.5 |
| பக்க துறைமேடைகள் (அஷ்ரப் இறங்குதுறை) | 90 X 2 | 8.5 |
| மட்கோவ் துறைமேடை | 45 | 3.5 |
| ரீரீஏ துறைமேடை | 190 | 2.0-4.0 |
| சிலோன் துறைமேடை | 50 | 2.5 |
| நகர துறைமேடை | 50 | 2.5 |
| மூதூர் துறைமேடை | 60 | 3.0 |
| வீஎஸ்ஓ துறைமேடை | 25 | 1.5 |
| பழைய நகர துறைமேடை | 60 | 2.0 |
| எண்ணெய் துறைமேடை | 130 | 9.75 |

**ஏனைய துறைமேடைகள்**

| நங்கூரத்தளம் | முழு நீளம் (மீ) | கரையோர ஆழம் (மீ) |
|---|---|---|
| பிரிமா துறைமேடை (உள்ளக) | 122 | 5.9 |
| பிரிமா துறைமேடை (வெளியக) | 227 | 14.3 |
| பிரிமா துறைமேடை (பன்நோக்கு) | 170 | 10.3 |
| டோக்கியோ சீமெந்து துறைமேடை | 160 | 9.5 |

**குதங்கள் பற்றிய விபரங்கள் - ரீரீஏ**

| குதம் | பரிமாணம் (அடி | சராசரி உயரம் (அடி) | பரப்பளவு (ச.அடி) | கொள்கலன் அடுக்கும் உயரம் (அடி) | கொள்ளளவு (க.அடி) |
|---|---|---|---|---|---|
| இல. 01 | 75 X 34 | - | 2,550 | 12 | 30,600 |
| இல. 02 மற்றும் 03 | 90 X 70 | 15 | 6,300 | 12 | 75,600 |
| இல .04 | 190 X 95 | 19 | 18,050 | 14 | 252,700 |
| இல. 05 A | 150 X 110 | 25 | 16,500 | 15 | 247,500 |
| இல 05 B | 150 X 80 | 15 | 12,000 | 12 | 144,000 |
| இல. 06 | 300 X 110 | 20 | 33,000 | 15 | 495,000 |
| இல. 07 | 96 X 36 | - | 3,456 | 12 | 41,472 |

## மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகம் - தற்போது

**துறைமுக பரிமாணம்**

**துறைமுகப் பிரதேசம்**

| | |
|---|---|
| துறைமுக நீர் பிரதேசம் | 75 ஹெக்டயர் |
| மேற்கு அலைதாங்கியின் நீளம் | 988 மீட்டர் |
| கிழக்கு அலைதாங்கியின் நீளம் | 311 மீட்டர் |
| உட்பிரவேச கால்வாய் | 210 மீட்டர் * 16 மீட்டர் |
| திருப்பும் வட்டம் | 600 மீட்டர் |

**துறைமேடையின் நீளம்**

| | |
|---|---|
| பொதுவான கப்பற் சரக்கு துறைமேடை | 600 **மீட்டர்** |
| சேவைத் துறைமேடை | 105 மீட்டர் |
| எண்ணெய் துறைமேடை 1 | 310 மீட்டர் |
| எண்ணெய் துறைமேடை 2 | 300 மீட்டர் |
| நீர்த் தடாக ஆழம் | 17 மீட்டர் |
| கப்பல் வடிவம் | 100,000 நிறை தொன் |

## மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகம் - இரண்டாம் கட்டம் முடிவடைந்ததன் பின்னர்

**துறைமுக பரிமாணம்**

**துறைமுகப் பிரதேசம்**

| | |
|---|---|
| பூர்த்தியடைந்ததன் பின்னர் மொத்த நீர்ப் பிரதேசம் | 152 ஹெக்டயார் (கட்டம் 1 இன் நீர்ப் பிரதேசம் அடங்கலாக) |
| உட்பிரவேசக் கால்வாய் | 210 மீட்டர் * 17 மீட்டர் |
| திருப்பு வட்டம் | 600 மீட்டர் |

**துறைமேடையின் நீளம்**

| | |
|---|---|
| பிரதான கொள்கலன் நங்கூரத்தளம் | 835.5 **மீட்டர்** |
| ஊட்டச்சேவை கொள்கலன் முனையம் | 460 மீட்டர் |
| பல் நோக்கு நங்கூரத்தளம் | 838.5 மீட்டர் |
| பரிமாற்ற நங்கூரத்தளம் | 208 மீட்டர் |
| நீர்த்தடாகத்தின் ஆழம் | 17 மீட்டர் |
| கப்பல் வடிவம் | 100,000 நிறை தொன் |



# நிதி அறிக்கைகள்

# ஆண்டறிக்கை 2018

31.12.2018 அன்று இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபை பின்வருமாறு:

**கலாநிதி பராக்கிரம திசாநாயக்க**
தலைவர்

**திரு. பீ.ஜி. தசாநாயக்க**
உபதலைவர்

**கெப்டன் அத்துல ஹேவாவிதாரன**
முகாமைத்துவ பணிப்பாளர்

**திரு. நிலான் விக்ரமசிங்ஹ**
நிறைவேற்றுப் பணிப்பாளர்

**திருமதி பீ.எஸ்.எம். சார்ள்ஸ்**
பணிப்பாளர்

**திரு. எச்.ஜி. சுமணசிங்க**
பணிப்பாளர்

**திரு. நிசாந்த விக்ரமசிங்ஹ**
பணிப்பாளர்

**திரு. சுரங்க பீ ஹிதெல்லாராச்சி**
பணிப்பாளர்

**திரு. ராஜ் ஒபேசேகர**
பணிப்பாளர்

மீளாய்வாண்டினுள் பணிப்பாளர் சபையின் 14 கூட்டங்கள் நடைபெற்றன.

பணிப்பாளர் சபையின் உப குழுவாக செயல்படும் முகாமைத்துவக் குழுவின் 11 கூட்டங்கள் 2018 ஆம் ஆண்டினுள் நடைபெற்றது. சபையின் ஏனைய உப குழுவான கணக்காய்வுக் குழு 2017 ஆம் ஆண்டில் 04 கூட்டங்களை நடத்தியது. கீழ்வரும் பணிப்பாளர்கள் கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்களாக செயல்படுகின்றார்கள்

**திரு. எச்.ஜி. சுமணசிங்க**
தலைவர்

**திருமதி பீ.எஸ்.எம் சார்ள்ஸ்**
உறுப்பினர்

கொழும்பு துறைமுகம் உலக பிரதான 30 துறைமுகங்கள் மிகவும் துரிதமக அபிவிருத்தியடைந்து வரும் துறைமுகமாக 2018 ஆம் ஆண்டினுள் தரப்படுத்தப்பட்டுள்ளது. முன்னைய வெற்றிப்பதிவுகளை வீழ்த்தி கொள்கலன் இருபது சம அலகுகள் 07 மில்லியன்களை கையாள்வதற்கு 2018 இல் கொழும்பு துறைமுகத்துக்கு முடிந்துள்ளது. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது சவுத் ஏஷியா கேட்வே டர்மினல்ஸ் கம்பனியினால் 14.2% கையாளும் விகிதமும் மற்றும் கொழும்பு இன்டர்நெஷனல் கன்டேனர் டர்மினல்ஸ் கம்பனியின் 12.00% கையாளல் விகிதம் மற்றும் அதனோடு சிறிது அதிகரித்த 14.6% இனால் அதிகரித்த வளர்ச்சி விகிதத்தை பெற்றுக் கொள்வதற்கு ஜய கொள்கலன் முனையத்துக்கு முடிந்துள்ளது. மீள் ஏற்றுமதிக் கையாளலில் 22.2% பெற்றுக்கொண்டு ஜய கொள்கலன் முனையம் உயர்ந்த அதிகரிப்பொன்றை காட்டுகின்றது. சர்வதேச அல்பாலைனர் ஆய்வுக்கேட்ப கொழும்பு துறைமுகம் இவ்வாறான உயர்ந்த இடத்தை துறைமுக வரலாற்றில் முதலாவதாக பெற்றுக்கொண்டுள்ளது.

விசாலத்தில் கூடிய கப்பல்களின் வருகை அதிகரித்தல் புதிய கூட்டமைப்பு/ஒன்றிணைவு /சுவீகரிப்புக்கள் மற்றும் தனியார் பிரிவின் முனையக் கையாளுனர்களின் போட்டியான கட்டணங்கள் சலுகைகள் போன்ற சவால்களுக்கு மத்தியில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முனையங்கள் 14.6% அதிகரிப்பை பெற்றுக்கொண்டு 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது கொள்கலன் 2,304,534 இருபதின் சம அலகுகள் கையாண்டுள்ளது சவுத் ஏஷியா கேட்வே டர்மினல்ஸ் மற்றும் கொழும்பு இன்டனஷனல் கன்டேனர் டேர்மினில் கம்பனிகள் முறையே 14.2% மற்றும் 12.0% ஆக்கபூர்வ அதிகரிப்பினை பெற்றுக்கொண்டுள்ளது

- கொழும்பு துறைமுகத்தின் கையாளல் பரிமாணம் 2017 ஆம் ஆண்டில் 6,209,608 கொள்கலன் இருபதின் சம அலகுகளில் இருந்து 2018 ஆம் ஆண்டில் 7,047,486 இருபதின் சம அலகுகள் வரை அதிகரித்துள்ளது (இது இருபதின் சம அலகுகள் 838,418 அல்லது 13.5% அதிகரிப்பாகும்.)
- 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது கொழும்பு துறைமுகத்தின் மீள் ஏற்றுமதி கொள்கலன் கையாளல் பரிமாணம் 18.2% ஆல் அதிகரித்துள்ளது (இருபதின் சம அலகுகுள் 860,776).
- 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது கொழும்பு துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த கப்பற் சரக்கு தொன்களின் பிரமாணம் 12.5% ஆல் அதிகரித்துள்ளது.

2018 ஆண்டில் கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கையுடன் 2017 ஆண்டை ஒப்பிடும் போது 4,329 ஆகவும் 2017 ஆண்டில் கொள்கலன் கப்பல்களின் வருகையின் எண்ணிக்கை 4,331 ஆக மாற்றமடையாமல் இருந்ததைக் காணக்கூடியதாக உள்ளது. கொள்கலன்களைக் கொண்ட கப்பல்களின் வருகை 2017 ஆம் ஆண்டில் குறிப்பிடப்பட்ட 3,683 உடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் 3,739 அதாவது 1.5% ஆல் அதிகரித்துள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபை முனையங்களுக்கும் கொழும்பு துறைமுகத்துக்கும் கூடிய கொள்கலன் பிரமாணத்தை கவர்ந்து கொள்வதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவத்தினால் சந்தை மற்றும் வியாபார அபிவிருத்தி மூலோபாயங்கள் பல செயற்படுத்தப்பட்டது. இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் நடவடிக்கைகளை மேற்கொண்டும் பேணிச் செல்வதற்கும் தொடர்புகளை பலப்படுத்திக் கொள்வதற்கு பிரதான கப்பல் சேவைகளுடன் முனைய சேவைகள் ஒப்பந்தங்கள் ஐந்து (05) கைச்சாத்திடப்பட்டன. 2018 ஆம் ஆண்டினுள் பிரதான நான்கு கப்பல் சேவைகளும், ஊட்டக் கப்பல் சேவை ஒன்றும் கவர்ந்து கொள்வதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு முடிந்துள்ளது, அதற்கும் மேலாக எதிர்பாராமல் வருகை தருகின்ற கப்பல்களை எமது முனையங்களில் கையாண்டு அதன் மூலம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முனையங்களுக்கு இடையிலான இயக்கங்களை பெற்றுக் கொள்வதற்கு முடிந்துள்ளது.

அதிவிசாலமான கொள்கலன் கப்பல்களைக் (ULCS) கையாளக் கூடிய வகையில் ஆழத்தில் கூடிய நங்கூரத்தள வசதிகள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கொழும்பு தெற்கு துறைமுகத்தில் நிர்மாணிக்கப்பட்டது. 14.25 மீட்டர் ஆழத்துடன் கூடிய கொழும்பு இன்டநெஷனல் கன்டேனர் டேர்மினல் முனையத்துக்கு கொள்கலன் கப்பல்கள் 308 வருகை தந்துள்ளன. இதன் விளைவாக பிராந்தியத்தில் மீள் ஏற்றுமதி கொள்கலன் மத்திய நிலையமாக கொழும்பு துறைமுகம் தமது இடத்தை தக்க வைத்துக்கொள்ள முடிந்துள்ளது. 2018 ஆம் ஆண்டின் மூன்றாவது தவணையில் ட்டுவரி மெரிடைம் ஆய்வின் மூலம் கொழும்பு துறைமுகம் சர்வதேச துறைமுக தொடர்புபடுத்தும் சுட்டெண்ணின் 11 ஆவது இடத்துக்கு தரப்படுத்தப்பட்டுள்ளதோடு 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அது இரண்டு தானங்களுக்கு முன்னேறியுள்ளது.

சென்ற ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆண்டில் 18.9% விகித அதிகரிப்பான ரூபா 52,283 மில்லியன் வருமானம் இலங்கை துறைமுக அதிகார சபையினால் ஈட்டப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் ரூபா 22,270 மில்லியன் இயக்க இலாபமானது (வெளிநாட்டு கடன் வட்டி மற்றும் அந்நிய செலாவணி நட்டம்/கிடைக்கப்பெறுதல்களுக்கு முன்னர்) 2017 ஆண்டில் ரூபா 15,995 மில்லியன் வரை 39.2% தால் அதிகரித்துள்ளது.

# நிதி அறிக்கை வெளியிடல் தொடர்பான பணிப்பாளர் சபையின் அறிக்கை

இலங்கை துறைமுக அதிகாரசபையின் சகல நிதி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் கணக்குப் புத்தகங்கள் முறையாக பேணப்படுதலையும், அச்செயற்பாட்டின் நிலைமை மற்றும் வருடத்தின் இலாபம்/நட்டம் தொடர்பான உண்மையானதும் தெளிவான எண்ணப்பாடும் ஏற்படும் வண்ணம் அதன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றதென்பதனை 1971 இன் 38 ஆம் இலக்கச் சட்டத்தின் (12) மற்றும் (13.6) ஆம் பிரிவின் மீது உறுதிப்படுத்துதல் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர்களினது பொறுப்பாகும்.

இதன்படி கணக்குப் புத்தகங்கள் முறையாகப் பேணி நடாத்திச் செல்வதற்கு அதிகாரசபைக்கு பணிப்பாளர் சபை வழிகாட்டியுள்ளதுடன் வழமையான கூட்டங்களின் போது கணக்காய்வுக் குழு ஊடாக நிதி நிலைமைகளின் அறிக்கையிடல் முறைமைகள் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டன.

இவ்வறிக்கையில் குறிப்பிடப்படும் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் நீதியானதும், தூரநோக்குடனான தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகளின் மூலம் கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்ச்சியான அடிப்படையின் மீது ஏற்றுக்கொள்ளப்படுவது தொடர்பில் பணிப்பாளர்களினால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதிகாரசபையின் சொத்துக்களைப் பாதுகாத்தல், நிதி மோசடி மற்றும் வேறு ஒழுங்கீனங்களை தடுப்பதற்கும் கண்டுபிடிப்பதற்குமாக தம்மால் எடுக்கக்கூடிய சகல நடவடிக்கைகளையும் பணிப்பாளர் சபை எடுத்துள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபையின் வர்த்தக நடவடிக்கைகளை முறையான முகாமைத்துவம் செய்வதற்கும் எமது ஆவணங்களின் உண்மை மற்றும் நம்பிக்கைத் தன்மையை செயன்முறையாக முடிந்தளவு பாதுகாக்கப்படும் பொருட்டு உள்ளக பரீட்சிப்புக்கள், உள்ளக கணக்காய்வுகள், நிதி மற்றும் ஏனைய கட்டுப்பாடுகள் அடங்கலான பயனானதும் பூரண கட்டுப்பாடும் கொண்ட முறையொன்றினை பணிப்பாளர் சபை ஸ்தாபித்துள்ளது.

பணிப்பாளர் சபையின் உத்தரவின் பிரகாரம்



**எஸ்.ஏ.எஸ்.கே. ஜயசேகர**
**பணிப்பாளர் சபைச் செயலாளர்**

நிறுவனத்தின் நிதி முகாமைத்துவம் தொடர்பிலான தமது பொறுப்புக்களை நிறைவேற்றும் போது பணிப்பாளர் சபைக்கு உதவுதல் கணக்காய்வுக் குழுவின் பொறுப்பாகும். இது நிறைவேற்றப்படுதலில் குழுவின் பிரதான பொறுப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- பயன்மிகுந்த உள்ளக கட்டுப்பாடு மற்றும் உள்ளக கணக்காய்வுப் பணிகள் செயற்திறனோடு நடைபெறுவதனை உறுதிப்படுத்தல்
- நிதிக் கூற்றுக்கள், நிதிசார்ந்த அறிக்கையிடல் மற்றும் கணக்காய்வு செயற்பாடுகளின் வெளிப்படைத் தன்மை தொடர்பில் மீளாய்வு மற்றும் மேற்பார்வை செய்தல்
- சட்டபூர்வமான மற்றும் ஒழுங்குபடுத்தும் தேவைப்பாட்டின் உடன்பாட்டினை உறுதிப்படுத்தல்
- இயக்க செயற்திறன் மற்றும் கட்டுப்பாட்டுத் தொகுதிகளின் மீளாய்வு

பொது திறைசேரியின் பிரதிநிதியொருவர்/இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளரொருவர் கணக்காய்வுக் குழுவின் தலைமையை வகிப்பதோடு அதிகாரசபையின் நிர்வாகம் சிறந்த முறையில் மேற்கொள்வதற்காக மீளாய்வுக்குட்படும் ஆண்டினுள் பல முக்கிய செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

முக்கிய ஆரம்ப உள்ளக நிருவாக முறையாக மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட உள்ளக செய்திட்டம் குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ளதோடு அதிகார சபைக்கு அதன் நிருவாகத்தை விடவும் சிறப்பாக நடைப்பெறுவதற்கு ஒத்துழைக்கும் நோக்கில் முக்கிய சில பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

முக்கிய பூர்வாங்க உள்ளக செயன்முறையாக, 2018 ஆண்டு உள்ளக திட்டம் மற்றும் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தியதோடு அதனை செயலில் ஈடுபடுத்தப்படுவதன் பயனான தன்மை மாதாந்த முன்னேற்ற அறிக்கை பெறப்பட்டு மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட நகல் அறிக்கையானது பணிப்பாளர் சபையின் பதில்களோடு மீளாய்வு செய்யப்பட்டது. குழுக் கூட்டத்தில் கவனத்திலெடுக்கப்பட்ட முக்கிய காரணிகள் கணக்காய்வுக் குழுவின் பரிந்துரைகளோடு பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. அதிகாரசபையின் மூன்று மாதங்களுக்கான அறிக்கை மற்றும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வுடன் தொடர்ந்து மீளாய்வு செய்யப்பட்டதோடு, பணிப்பாளர் சபையின் விருப்பத்தின் பேரில் மேற்கொண்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. குழுக் கூட்டத்தின் போது சுட்டிக்காட்டப்பட்ட காரணிகள் கணக்காய்வுக் குழுவின் சிபாரிசுடன் பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

அதிகாரசபையின் சொத்துக்கள் பாதுகாப்பாக இருக்கின்றமை, கணக்காய்வு கணக்குகளில் காட்டப்படும் நிதி நிலைமைகள் மற்றும் பெறுபேறுகள் பிரயோசனமற்ற கூற்றுக்களிலிருந்து தவிர்க்கப்படும் என்பதனை காட்டுவதற்காக தேவைப்படும் ''பரிசோதனைகள் மற்றும் சமநிலை பேணல்'' நடைமுறைப்படுத்தப்படுகின்றதென்பது கணக்காய்வுக் குழுவின் அபிப்பிராயமாகும். ஆண்டினுள் அதிகாரசபையின் கட்டுப்பாடு மேம்படுத்தப்படுவதற்கும் அதிகாரசபையின் பணிகள் சிறந்த வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்படுவதற்கும் குழுவினால் பாரிய பங்களிப்பு வழங்கப்பட்டது.

**எச். ஜீ. சுமனசிங்ஹ**
**தலைவர் - கணக்காய்வுக் குழு**

சட்டபூர்வ தேவைகளுக்கு இணங்குதலின் முக்கியத்துவம் தொடர்பான விடயங்கள் பின்வருமாறு

**ஊழியர் சேமலாப நிதி - அதிகாரசபையினதும் ஊழியர்களினதும் பங்களிப்பு**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் சகல நிரந்தர ஊழியர்களுக்குமுரிய இலங்கை துறைமுக அதிகாரசபையினது பங்களிப்பு 15% மற்றும் ஊழியர்களின் பங்களிப்பு 10% உரிய மாதத்திற்கு பின்வரும் மாதத்தின் கடைசி தினத்திற்கு முன்னர் தொழில் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

ஊழியர்களிடமிருந்து குறைக்கப்பட்ட சகல நிதி மற்றும் ஊழியர்களுக்காக அதிகாரசபையினால் பங்களிப்பு நிதி குறிப்பிட்ட திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்பட்டுள்ளது.

**ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்**

அதிகாரசபையின் மாதாந்த பங்களிப்பான 3% குறிப்பிடப்பட்ட திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்பட்டுள்ளது.

**உழைக்கும் போதே செலுத்தும் வரி**

உழைக்கும் போதே செலுத்தும் வரி குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**வருமான வரி**

ஈட்டப்பெற்ற வருமானத்திற்கான வரி செலுத்துதல் வரி செலுத்த வேண்டிய வருமானம் பெறப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பங்களின் குறிப்பிடப்பட்ட திகதியில் மூன்று மாதத்திற்கொருமுறை 2006 இன் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 10 ஆம் இலக்கத்தின் 113 ஆம் பிரிவின் விதிமுறைகளுக்கேற்ப அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**வருடாந்த வருமானம்**

2017 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான அதிகாரசபையின் வருமான வரி தொடர்புபட்ட வருடாந்த அறிக்கைகள் தேசிய உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் வருடாந்தம் கோவையிலிடப்படுகின்றன. இது சகல ஆண்டுகளிலும் குறிப்பிட்ட திகதியான நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

**வருடாந்த அறிக்கையிடல்**

சகல வருடங்களிலும் வரவு செலவு மற்றும் கணக்குகள், வருடாந்த அறிக்கைகள் ஆகியவை இலங்கை பாராளுமன்றம், பொது திறைசேரி மற்றும் அமைச்சிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

| டிசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது | கொழும்பு | திருகோணமலை | காலி | இ.து.அ.ச 2018 | 2017 ஹம்பாந்தோட்டை தவிர்ந்த |
|---|---|---|---|---|---|
| **வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை** | | | | | |
| சரக்கு கப்பல்கள் | 4,244 | 180 | 75 | 4,499 | 4,545 |
| ஏனைய கப்பல்கள் | 146 | 9 | 9 | 164 | 167 |
| | | | | - | |
| ஏனைய களங்கள் | 689 | 46 | 59 | 794 | 818 |
| | **5,079** | **235** | **143** | **5,457** | **5,530** |
| **கையாளப்பட்ட** | | | | | |
| **கொள்கலன் ரீ.ஈ.யூக்கள்** | | | | | |
| மாற்றியேற்றல் | 1,965,987 | - | - | 1,965,987 | 1,609,114 |
| உள்நாட்டு | 328,813 | - | - | 328,813 | 388,282 |
| மீளடுக்குதல் | 9,734 | - | - | 9,734 | 13,306 |
| **மொத்த ரீ.ஈ.யூக்கள்** | **2,304,534** | **-** | **-** | **2,304,534** | **2,010,702** |
| **கொள்கலன் ரீ.ஈ.யூக்கள் (எஸ்.ஏ.ஜீ.ரீ)** | | | | | |
| மாற்றியேற்றல் | 1,644,336 | - | - | 1,644,336 | 1,406,265 |
| உள்நாட்டு | 379,939 | - | - | 379,939 | 375,944 |
| மீளடுக்குதல் | 42,483 | - | - | 42,483 | 27,626 |
| **மொத்த இருபது சம அலகுகள்** | **2,066,758** | **-** | **-** | **2,066,758** | **1,809,835** |
| **கொள்கலன் இ.ச.அலகுகள் (சீஐசீரீ)** | | | | | |
| மாற்றியேற்றல் | 1,992,035 | - | - | 1,992,035 | 1,726,203 |
| உள்நாட்டு | 634,497 | - | - | 634,497 | 619,325 |
| மீளடுக்குதல் | 49,662 | - | - | 49,662 | 43,003 |
| **மொத்த இருபது சம அலகுகள்** | **2,676,194** | **-** | **-** | **2,676,194** | **2,388,531** |
| **கொள்கலன் ரீ.ஈ.யூக்கள் (கொழும்பு துறைமுகம்)** | | | | | |
| மாற்றியேற்றல் | 5,602,358 | - | - | 5,602,358 | 4,741,582 |
| உள்நாட்டு | 1,343,249 | - | - | 1,343,249 | 1,383,551 |
| மீளடுக்குதல் | 101,879 | - | - | 101,879 | 83,935 |
| **மொத்த ரீ.ஈ.யூக்கள்** | **7,047,486** | **-** | **-** | **7,047,486** | **6,209,068** |
| மரபு முறையான மெ.தொ | 3,517,522 | 3,173,077 | 729,457 | 7,420,056 | 7,522,340 |
| திரவ மெ.தொ | 6,618,378 | 386,711 | - | 7,005,089 | 6,318,954 |
| | **10,135,900** | **3,559,788** | **729,457** | **14,425,145** | **13,841,294** |
| **சம அலகுகள் (மொ.தொ) (இ.து.அ.ச)** | | | | | |
| கொள்கலனிடப்பட்ட சரக்கு | 29,080,139 | - | - | 29,080,139 | 25,791,290 |
| மரபு முறையான சரக்கு | 3,535,276 | 3,173,077 | 729,457 | 7,437,810 | 7,522,340 |
| திரவம் | 6,618,378 | 386,711 | - | 7,005,089 | 6,318,954 |
| **மொத்த இ.ச அலகுகள்** | **39,233,793** | **3,559,788** | **729,457** | **43,523,038** | **39,632,584** |
| **இ.சம அலகுகள் (மெ.தொன்) (எஸ்.ஏ.ஜீ.ரீ)** | | | | | |
| கொள்கலனிடப்பட்ட சரக்கு | 27,042,195 | - | - | 27,042,195 | 23,622,195 |
| மரபு முறையான சரக்கு | - | - | - | - | |
| திரவம் | - | - | - | - | |
| **மொத்த இ.சம அலகுகள் (மெ.தொன்)** | **27,042,195** | **-** | **-** | **27,042,195** | **23,622,195** |
| **இ.சம அலகுகள் (மெ.தொன்) சீ.ஐ.சீ.ரீ** | | | | | |
| கொள்கலனிடப்பட்ட சரக்கு | 33,893,481 | - | - | 33,893,481 | 30,411,243 |
| மரபு முறையான சரக்கு | - | - | - | - | |
| திரவம் | - | - | - | - | |
| | **33,893,481** | **-** | **-** | **33,893,481** | **30,411,243** |
| **இ.சம அலகுகள் (மெ.தொன்) கொ.துறைமுகம்** | | | | | |
| கொள்கலனிடப்பட்ட சரக்கு | 90,015,815 | - | - | 90,015,815 | 79,824,728 |
| மரபு முறையான சரக்கு | 3,535,276 | 3,173,077 | 729,457 | 7,437,810 | 7,522,340 |
| திரவம் | 6,618,378 | 386,711 | - | 7,005,089 | 6,318,954 |
| **மொத்த இ.சம அலகுகள் (மெ.தொன்)** | **100,169,469** | **3,559,788** | **729,457** | **104,458,714** | **93,666,022** |
| **கையாளப்பட்ட மெ.தொன் (இ.து.அ.ச)** | | | | | |
| கொள்கலனிடப்பட்ட சரக்கு | 54,053,066 | - | - | 54,053,066 | 54,109,284 |
| மரபு முறையான சரக்கு | 8,144,775 | 3,341,207 | 510,612 | 11,996,594 | 14,472,781 |
| ஏனையவை | 4,849,320 | 239,667 | 61,493 | 5,150,480 | 4,760,974 |
| **மொத்த தொன் எடை** | **67,047,161** | **3,580,874** | **572,105** | **71,200,140** | **73,343,039** |
| **மொத்த தொன் எடை (எஸ்.ஏ.ஜீ.ரீ)** | | | | | |
| கொள்கலனிடப்பட்ட சரக்கு | 49,409,665 | - | - | 49,409,665 | 42,569,709 |
| மரபு முறையான சரக்கு | - | - | - | - | |
| ஏனையவை | - | - | - | - | |
| **மொத்த தொன் எடை** | **49,409,665** | **-** | **-** | **49,409,665** | 42,569,709 |
| **மொத்த தொன் எடை ( சீ.ஐ.சீ.ரீ)** | | | | | |
| கொள்கலனிடப்பட்ட சரக்கு | 102,203,816 | - | - | 102,203,816 | 93,110,002 |
| மரபு முறையான சரக்கு | - | - | - | - | |
| ஏனையவை | - | - | - | - | |
| **மொத்த தொன் எடை** | **102,203,816** | **-** | **-** | **102,203,816** | **93,110,002** |
| **கையாளப்பட்ட மொத்த தொன் எடை (கொழும்பு துறைமுகம்)** | | | | | |
| கொள்கலனிடப்பட்ட சரக்கு | 205,666,547 | - | - | 205,666,547 | 189,788,995 |
| மரபு முறையான சரக்கு | 8,144,775 | 3,341,207 | 510,612 | 11,996,594 | 14,472,781 |
| ஏனையவை | 4,849,320 | 239,667 | 61,493 | 5,150,480 | 4,760,974 |
| **மொத்த தொன் எடை** | **218,660,642** | **3,580,874** | **572,105** | **222,813,621** | **209,022,750** |
| **ஆளணி** | | | | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | **8,948** | **400** | **362** | **9,710** | **9,377** |

# நிதி நிலைமை தொடர்பான அறிக்கை

(இலங்கை ரூபாய்களில் காட்டப்பட்டுள்ளன)

| டிசெம்பர் 31 வரையிலான நிதிசார் நிலைமை தொடர்பான கூற்று | | குழுமம் | | இ-து-அ-ச | |
|---|---|---|---|---|---|
| | | 2018 | 2017 | 2018 | 2017 |
| | குறிப்பு | | | | |
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | | | |
| சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்கள் | 3 | 147,060,913,673 | 149,445,346,188 | 147,011,659,779 | 149,426,989,444 |
| உணரா சொத்துக்கள் | 4 | 230,312,403 | 57,039,427 | 230,312,403 | 57,039,427 |
| முதலீடு செய்யப்பட்ட சொத்துக்கள் | 5 | 172,382,765,733 | 173,647,489,750 | 172,382,765,733 | 173,647,489,750 |
| இணை கம்பனிகளின் முதலீடுகள் | 6 | 100 | - | 76,000,100 | 76,000,000 |
| துணைக் கம்பனிகளின் மீதான முதலீடுகள் | 7 | 39,221,857,964 | 39,221,857,964 | 39,196,120,030 | 39,196,120,030 |
| விற்பதற்குள்ள நிதிசார் சொத்துக்கள் (ASF) | 8 | 20,786,547,809 | 21,974,163,908 | 20,786,547,809 | 21,974,163,908 |
| அரசாட்டு முதலீட்டு வங்கியிலிருந்துஅற.வேண். தொகை | 9 | 102,995,559 | 123,179,740 | 102,995,559 | 123,179,740 |
| பொ.திறை. கிடைக்கப்பெற வேண்டிய நிதி - மக்கள் வங்கி | 10 | 3,950,858,870 | 3,950,858,870 | 3,950,858,870 | 3,950,858,870 |
| **மொத்த நடைமுறையற்ற சொத்துக்கள்** | | **383,736,252,111** | **388,419,935,847** | **383,737,260,283** | **388,451,841,169** |
| | | | | | |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | | | |
| பட்டியலிடப்பட்ட பொருட்கள் | 11 | 2,550,631,838 | 2,497,221,609 | 2,535,006,071 | 2,484,790,666 |
| வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெறுதல்கள் | 12 | 12,962,975,602 | 115,568,661,254 | 11,958,215,682 | 114,562,457,908 |
| வைப்புக்கள் மற்றும் முற்பணம் | 13 | 231,415,959 | 295,557,929 | 231,415,959 | 295,557,929 |
| முன் செலுத்துதலின் செலவினம் | | 65,041,109 | 105,069,819 | 65,041,109 | 105,069,819 |
| ஊழியர்களின் கடன் | 14 | 5,012,492,331 | 4,297,024,012 | 4,979,815,402 | 4,270,311,802 |
| ஏனைய நிதிசார் சொத்துக்கள் | 15 | 36,132,390,042 | 22,491,559,843 | 35,935,170,096 | 22,345,520,484 |
| காசு மற்றும் காசுக்குச் சமனான சொத்துக்கள் | 16 | 2,754,881,161 | 1,736,048,989 | 1,934,879,597 | 914,764,144 |
| சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்கள்- வ/ப MP | 17 | 998,823 | 998,823 | - | - |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **59,710,826,866** | **146,992,142,278** | **57,639,543,917** | **144,978,472,752** |
| **மொத்த சொத்துக்கள்** | | **443,447,078,977** | **535,412,078,125** | **441,376,804,200** | **533,430,313,920** |
| | | | | | |
| **திணிவு மற்றும் பொறுப்புக்கள்** | | | | | |
| | | | | | |
| **திணிவு** | | | | | |
| ஈடுபடுத்தப்பட்ட மூலதனம் | 18 | 7,591,379,785 | 7,591,379,785 | 7,591,379,785 | 7,591,379,785 |
| இருப்பு மூலதனம் | 19 | 14,543,219,896 | 14,533,969,106 | 14,543,219,896 | 14,533,969,106 |
| ஏனைய இருப்புக்கள் | 20 | 1,125,903 | 1,125,903 | 1,125,903 | 1,125,903 |
| மாறுபடும் வருமானம் | 21 | 171,277,865,767 | 173,117,689,453 | 171,277,865,767 | 173,117,689,453 |
| கடன் தீர்க்கும் இருப்புக்கள் | 22 | 4,613,549,887 | 4,613,549,887 | 4,613,549,887 | 4,613,549,887 |
| மீள் மதிப்பிடலின் இருப்புக்கள் | 23 | 75,228,436,897 | 75,893,542,157 | 75,228,436,897 | 75,893,542,157 |
| விற்பதற்குள்ள நிதிசார் சொத்துக்களின் இருப்புக்கள் | | (1,013,023,345) | 174,592,753 | (1,013,023,345) | 174,592,753 |
| தடுத்து வைக்கப்பட்ட ஈட்டல்கள் | | 36,524,981,185 | 32,780,151,598 | 37,978,458,423 | 34,320,307,691 |
| **முழு திணிவு மொத்தம்** | | **308,767,535,975** | **308,706,000,643** | **310,221,013,213** | **310,246,156,734** |
| | | | | | |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | | | |
| கடன் பெறுதல்கள் - இலங்கை அரசாங்கம் | 24.1 | 59,690,100,248 | 54,924,342,666 | 59,690,100,248 | 54,924,342,666 |
| கடன் பெறுதல்கள் - நிதிசார் நிறுவனங்கள் | 25.1 | 10,926,466,537 | 11,363,752,700 | 10,924,411,551 | 11,360,327,710 |
| அரச ஏற்பாடுகள் | 26 | 28,451,742,423 | 28,764,321,596 | 28,451,742,423 | 28,764,321,596 |
| பின்னுரிமை வரி பொறுப்புக்கள் | 27 | 9,198,644,245 | 4,191,116,180 | 9,198,644,245 | 4,191,116,180 |
| ஓய்வு பெறுதலின் அனுகூலங்களுக்கான பிணைப்புகள் | 28 | 5,381,709,018 | 4,737,678,804 | 5,371,717,412 | 4,731,949,905 |
| **நடைமுறையற்ற முழு பொறுப்புக்கள்** | | **113,648,662,471** | **103,981,211,946** | **113,636,615,879** | **103,972,058,057** |
| | | | | | |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | | | |
| பொருட்கள் , சேவை வழங்கல் மற்றும் கடனாளிகள் | 29 | 1,783,098,873 | 106,228,718,883 | 1,478,725,009 | 105,914,892,043 |
| கடன் பெறுதல்கள் - இலங்கை அரசாங்கம் | 24.2 | 6,645,377,816 | 5,198,526,722 | 6,645,377,816 | 5,198,526,722 |
| கடன் பெறுதல்கள் - நிதிசார் நிறுவனங்கள் | 25.2 | 5,112,837,302 | 4,708,319,092 | 1,960,389,294 | 1,555,871,084 |
| வைப்புகள் மற்றும் கிடைக்கப்பெற்ற முற்பணம் | 30 | 2,207,268,553 | 2,215,795,483 | 2,207,268,553 | 2,215,795,483 |
| செலுத்த வேண்டிய நடைமுறை வரி | 31 | 319,257,513 | 298,733,479 | 289,230,831 | 276,768,597 |
| ஏற்பாடுகள் மற்றும் ஒன்றுசேர்ந்த செலவினம் | 32 | 4,962,924,635 | 4,074,771,871 | 4,938,183,606 | 4,050,245,199 |
| பின்னுரிமை வரி பொறுப்புக்கள் | | 115,834 | - | - | |
| மொத்த நடைமுறை பொறுப்புக்கள் | | **21,030,880,525** | **122,724,865,529** | **17,519,175,108** | **119,212,099,128** |
| **திணிவு மற்றும் பொறுப்புக்களின் மொத்த கூட்டுத்தொகை** | | **443,447,078,977** | **535,412,078,125** | **441,376,804,200** | **533,430,313,920** |

105-119 பக்கங்களில் கணக்கீட்டுக் கொள்கைகளும் 120-141 பக்கங்கள் வரையிலான நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்களும் இந்த நிதிசார் கூற்றுக்களில் விசேட பங்கினை வகிக்கின்றது. வழங்கப்பட்டுள்ள இந்த நிதிசார் கூற்று 2018.12.31 வரை இலங்கை துறைமுக அதிகார சபையின் உண்மையானதும் சுமாரானதுமான தோற்றப்பாடாகும்.

வழங்கப்பட்டுள்ள இந்த நிதிசார் கூற்று 2018.12.31 வரை இலங்கை துறைமுக அதிகாரசபையின் உண்மையானதும் சுமாரனதுமான தோற்றப்பாடு ஆகும்.

சிராணி வன்னியாராச்சி
**பணிப்பாளர் (நிதி)**

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிசார் அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். இந்த நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பில் ஒப்பிடப்பட்டுள்ளன.

காவன் ரத்னாயக்க
**தலைவர்**

கெப்டன் அத்துல ஹேவாவித்தாரன
**முகாமைத்துவ பணிப்பாளர்**

திகதி : 2019 பெப்ரவரி 28

அடைப்புகுறிக்குள் உள்ள எண்ணிக்கைகள் கழித்தல்களாக காண்பிக்கப்பட்டுள்ளன.

(இலங்கை ரூபாய்களில் காட்டப்பட்டுள்ளன)

| டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டின் விரிவான வருமான கூற்று | | குழுமம் | | இ.து.அ.ச | |
|---|---|---|---|---|---|
| | | 2018 | 2017 | 2018 | 2017 |
| | குறிப்பு | | | | |
| வருமானம் | 33 | 38,546,124,626 | 35,887,576,749 | 38,546,124,626 | 35,389,455,404 |
| | | - | | | |
| நேரடி செலவினம் | 34 | (21,255,413,995) | (20,577,453,769) | (21,112,085,564) | (20,011,306,204) |
| | | - | | | |
| **மொத்த இலாபம்** | | **17,290,710,631** | **15,310,122,980** | **17,434,039,062** | **15,378,149,199** |
| ஏனைய இயக்க வருமானம் | 35 | 11,577,690,595 | 6,936,504,408 | 11,577,478,847 | 6,924,202,305 |
| நிர்வாக செலவினம் | 36 | (8,661,394,247) | (7,701,478,049) | (8,868,026,841) | (7,907,367,241) |
| **இயக்க இலாபம்** | | **20,207,006,980** | **14,545,149,339** | **20,143,491,069** | **14,394,984,263** |
| தூய நிதி ஆகு செலவு | 37 | (81,453,526) | (269,436,216) | (130,554,275) | (207,764,536) |
| அந்நிய செலாவணி கிடைக்கப்பெறுதல் / நட்டம் | 38 | (11,316,830,420) | (2,266,439,579) | (11,316,830,420) | (2,193,749,789) |
| துணைக் கம்பெனிகளிலிருந்து கிடைக்கப்பெற்ற இலாபங்களின் பாகம் | 7.2 | - | (39,164,092) | - | |
| **வரிகளுக்கு முன்னரான இலாபம்** | | **8,808,723,034** | **11,970,109,452** | **8,696,106,374** | **11,993,469,938** |
| வருமான வரி செலவினம் | 39 | (21,322,032) | (20,354,391) | - | - |
| மாறுபடும் வரி செலவினம் | 27 | (4,448,860,301) | 102,008,604 | (4,448,860,301) | 102,008,604 |
| **வருடத்திற்கான இலாபம்** | | **4,338,540,701** | **12,051,763,665** | **4,247,246,073** | **12,095,478,542** |
| **தாய்க் கம்பெனியின் வர்த்தக பங்காளர்களுக்கான ஒதுக்குதல்கள்** | | **4,338,540,701** | **12,051,763,665** | **4,247,246,073** | **12,095,478,542** |
| **ஏனைய விபரமான வருமானம்** | | | | | |
| வருடத்தின் இலாபம் | | 4,338,540,701 | 12,051,763,665.00 | 4,247,246,073 | 12,095,478,542 |
| ஓய்வாற்றலின் அனுகூல கொடுப்பனவின் மீள் மதிப்பீடு | | (351,550,704) | (176,382,793) | (347,934,931) | (177,735,321) |
| விற்பதற்குள்ள நிதி சொத்துக்களின் பெறுமதி மாற்றமடைதல் | 8.1 | (71,925,684) | 21,643,291 | (71,925,684) | 21,643,291 |
| பட்டியலிடப்படாத பங்குகள் மீதான பாதிப்புக்கான ஏற்பாடுகள். | 8.2 | 1,115,690,415 | - | 1,115,690,415 | |
| | | | - | | - |
| வருடத்தின் ஏனைய விபரமான மொத்த வருமானம் | | (1,539,166,802) | (154,739,502) | (1,535,551,029) | (156,092,030) |
| **ஆண்டின் முழு விபரமான வருமானம்** | | **2,799,373,898** | **11,897,024,163** | **2,711,695,043** | **11,939,386,512** |
| **தாய்க் கம்பெனியின் வர்த்தக பங்காளர்களுக்கான ஒதுக்குதல்கள்** | | **2,799,373,898** | **11,897,024,163** | **2,711,695,043** | **11,939,386,512** |

105-119 பக்கங்களில் கணக்கீட்டுக் கொள்கைகளும் 120-141 பக்கங்கள் வரையிலான நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்களும் இந்த நிதிசார் கூற்றுக்களில் விசேட பங்கினை வகிக்கின்றது.

(இலங்கை ரூபாய்களில் காட்டப்பட்டுள்ளன)

2018ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டின் திணிவு மாற்றமடையும் கூற்று

| | ஈடுபடுத்தப்பட்ட மூலதனம் | மூலதன சேமிப்பு | ஏனைய சேமிப்புகள் | மாறுபடும் வருமானம் | கடன் விடுவிப்பின் சேமிப்பு | மீள் வகையிடுதலின் சேமிப்பு | விற்பதற்குள்ள சேமிப்பு | தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈட்டல்கள் (பற்று) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **வகை** | | | | | | | | | |
| **2017 ஜனவரி 01 ஆம் திகதி வரை மிகுதி** | 7,591,379,785 | 712,038,233 | 1,125,903 | 3,071,461,909 | 4,613,549,887 | 74,048,089,533 | 152,949,462 | (13,661,974,306) | 76,528,620,407 |
| ஆண்டின் இலாபம் | - | - | - | | - | - | - | 12,051,763,665 | 12,051,763,665 |
| ஏனைய விபரமான வருமானம் | - | - | - | | - | - | 21,643,291 | | 21,643,291 |
| மொத்த விபரமான வருமானம் | | | | | | | | | - |
| மீள்வகையிடலின் மீதி மீதான சீர்செய்தல் | - | - | - | | - | 2,157,158,929 | - | | 2,157,158,929 |
| செலுத்தப்பட்ட பங்கு இலாபங்கள் | | | | | | | | (6,802,000) | (6,802,000) |
| அற்றப்படுதல் மீதான சீர்செய்தல் | - | - | - | | - | (311,706,305) | - | 311,706,305 | - |
| முன் ஆண்டின் மீதான சீர்செய்தல் (குறிப்பு 41) | - | - | - | | - | - | - | 33,033,174,743 | 33,033,174,743 |
| CICT கம்பனியின் முற்கொடுப்பணவு மீதான சீர்செய்தல் | - | - | | | - | - | - | - | - |
| HIPS இன் முதலீடு மீதான மூலதன கிடைக்கப்பெறுதல் / நட்டம் | | 13,821,930,873 | | | - | | | - | 13,821,930,873 |
| ஓய்வூதிய அனுகூல பொறுப்புகள் மீதான மீள் மதிப்பீடு | | | | (103,534,286) | | | | (176,382,793) | (279,917,079) |
| CICT கம்பனியின் முற்கொடுப்பணவு மீதான கட்டணம் | | | | (658,207) | | | | | (658,207) |
| வரையறுக்கப்பட்ட லாப் டர்மினல் கம்பனியினால் ஒரே தடவையில் செலுத்தப்பட்ட கட்டணம் | | | | (6,829,041) | | | | | (6,829,041) |
| வரையறுக்கப்பட்ட டிஸ்லரின் கம்பனியினால் ஒரே தடவையில் செலுத்தப்பட்ட தொகை | | | | (596,774) | | | | | (596,774) |
| வரையறுக்கப்பட்ட டோக்கியோ கம்பனியினால் ஒரே தடவையில் செலுத்தப்பட்ட தொகை | | | | 309,000,000 | | | | | 309,000,000 |
| வரையறுக்கப்பட்ட டிஸ்லரின் கம்பனியினால் ஒரே தடவையில் செலுத்தப்பட்ட தொகை | | | | 370,000,000 | | | | | 370,000,000 |
| வரையறுக்கப்பட்ட டோக்கியோ கம்பனியினால் ஒரே தடவையில் செலுத்தப்பட்ட தொகை | | | | 72,388,674,280 | | | | | 72,388,674,280 |
| குத்தகை வரி உரித்துகள் HIPS | | | | 97,198,113,903 | | | | | 97,198,113,903 |
| குத்தகை வரி உரித்துகள் HIPG | | | | (46,075,536) | | | | | (46,075,536) |
| மீள்வகையிடல் சேமிப்பு மீதான மாறுப்படும் வரி சீர்செய்தல் | | | | | | | | 1,228,665,984 | 1,228,665,984 |
| பட்டியலிடப்படாத மூலதனம் மீதான சீர்செய்தல் | | | | (61,866,795) | | | | | (61,866,795) |
| HIPG கம்பனி கைப்பற்றிக்கொள்ளல் மீதான குத்தகை வாடகை உரித்துக்கள் | | | | - | | | | | - |
| CICT யினால் செலுத்தப்பட்ட முற்பணம் மீதான சீர்செய்தல் | | | | - | | | | | - |
| | | | | - | | | | | - |
| **2017 ஜனவரி 01 ஆம் திகதி வரையான மிகுதி** | 7,591,379,785 | 14,533,969,106 | 1,125,903 | 173,117,689,453 | 4,613,549,887 | 75,893,542,157 | 174,592,753 | 32,780,151,598 | 308,706,000,643 |
| ஆண்டின் வருமானம் | - | - | - | | - | - | - | 4,338,540,701 | 4,338,540,701 |
| ஏனைய விபரமான வருமானம் | - | - | - | | - | - | (71,925,684.00) | | (71,925,684) |
| **மொத்த விபரமான வருமானம்** | | | | | | | | | - |
| மீள்வகையிடல் மீதி மீதான சீர்செய்தல் | - | - | - | | - | | - | | - |
| செலுத்தப்பட்ட பங்குகிலாபம் | | | | | | | | (1,000,000) | (1,000,000) |
| அகற்றல்கள் மீதான சீர்செய்தல் | - | - | - | | - | (106,437,496) | - | 106,437,496 | (0) |
| HIPS இன் முதலீடு மீதான மூலதன கிடைக்கப்பெறுதல் / நட்டம் | | | | | | | | | - |
| முன் ஆண்டின் மீதான சீர்செய்தல் (குறிப்பு 41) | - | - | - | | - | - | - | (347,597,906) | (347,597,906) |
| ஹம்பாந்தோட்டை நிலையான சொத்துக்கள் FD/AR/JE/09 மீதான சீர்செய்தல் | - | *9,250,790* | | | - | - | - | | 9,250,790 |
| ஓய்வூதிய அனுகூல பொறுப்புகள் மீதான மீள் மதிப்பீடு | | | | | | | | (351,550,704) | (351,550,704) |
| கடன் மீதான சீர்செய்தல் | - | - | - | | - | - | - | | - |
| CICT கம்பனியினால் செலுத்தப்பட்ட முற்பண கொடுப்பணவு | | | | (103,534,286) | | | | | (103,534,286) |
| வரையறுக்கப்பட்ட லாப் டர்மினல் கம்பனியினால் ஒரே தடவையில் செலுத்தப்பட்ட கட்டணம் | | | | (658,207) | | | | | (658,207) |
| வரையறுக்கப்பட்ட டிஸ்லரிஸ் கம்பனியினால் ஒரே தடவையில் செலுத்தப்பட்ட தொகை | | | | (10,300,000) | | | | | (10,300,000) |
| வரையறுக்கப்பட்ட டோக்கியோ கம்பனியினால் ஒரே தடவையில் செலுத்தப்பட்ட தொகை | | | | (12,333,333) | | | | | (12,333,333) |
| HIPS கம்பனி கைப்பற்றிக்கொள்ளல் மீதான குத்தகை வாடகை உரித்துக்கள் | | | | (731,198,730) | | | | | (731,198,730) |
| HIPG கம்பனி கைப்பற்றிக்கொள்ளல் மீதான குத்தகை வாடகை உரித்துக்கள் | | | | (981,799,130) | | | | | (981,799,130) |
| மாறுப்படும் வரி மீதான சீர்செய்தல் | | | | | | (558,667,764) | | | (558,667,764) |
| பட்டியலிடப்படாத மூலதனம் மீதான சீர்செய்தல் | | | | | | | (1,115,690,414) | | (1,115,690,414) |
| **2018 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கான மிகுதி** | 7,591,379,785 | 14,543,219,896 | 1,125,903 | 171,277,865,767 | 4,613,549,887 | 75,228,436,897 | (1,013,023,345) | 36,524,981,185 | 308,767,535,975 |
| **இ.து.அ.ச** | | | | | | | | | |
| **2017 ஜனவரி 01ஆம் திகதிக்கான மிகுதி** | 7,591,379,785 | 712,038,233 | 1,125,903 | 3,071,461,909 | 4,613,549,887 | 74,048,089,533 | 152,949,462 | (12,170,982,560) | 78,019,612,153 |
| ஆண்டின் வருமானம் | - | - | | - | - | - | - | 12,095,478,542 | 12,095,478,542 |
| ஏனைய விபரமான வருமானம் | - | - | | - | - | - | 21,643,291 | - | 21,643,291 |
| **மொத்த விபரமான வருமானம்** | | | | | | | | | - |
| மீள்வகையிடலின் மீதி மீதான சீர்செய்தல் | - | - | | - | - | 2,157,158,929 | - | - | 2,157,158,929 |
| அற்றப்படுதல் மீதான சீர்செய்தல் | - | - | | - | - | (311,706,305) | - | 311,706,305 | - |
| HIPS,HIPG இன் முதலீடு மீதான மூலதன கிடைக்கப்பெறுதல் / நட்டம் | - | 13,821,930,873 | | - | - | - | - | - | 13,821,930,873 |
| முன் ஆண்டின் மீதான சீர்செய்தல் (குறிப்பு 41) | - | - | | - | - | - | - | 33,033,174,743 | 33,033,174,743 |
| CICT கம்பனியினால் செலுத்தப்பட்ட முற்பண கொடுப்பணவு | | | | (103,534,286) | | | | | (103,534,286) |
| வரையறுக்கப்பட்ட லாப் டர்மினல் கம்பனியினால் ஒரே தடவையில் செலுத்தப்பட்ட கட்டணம் | | | | (658,207) | | | | | (658,207) |
| வரையறுக்கப்பட்ட டிஸ்லரிஸ் கம்பனியினால் ஒரே தடவையில் செலுத்தப்பட்ட தொகை | | | | (6,829,041) | | | | | (6,829,041) |
| வரையறுக்கப்பட்ட டோக்கியோ கம்பனியினால் ஒரே தடவையில் செலுத்தப்பட்ட தொகை | | | | (596,774) | | | | | (596,774) |
| வரையறுக்கப்பட்ட டிஸ்லரிஸ் கம்பனியினால் ஒரே தடவையில் செலுத்தப்பட்ட தொகை | | | | 309,000,000 | | | | | 309,000,000 |
| வரையறுக்கப்பட்ட டோக்கியோ கம்பனியினால் ஒரே தடவையில் செலுத்தப்பட்ட தொகை | | | | 370,000,000 | | | | | 370,000,000 |
| கைப்பற்றல்கள் மீதான குத்தகை வரி உரித்துகள் HIPS | | | | 72,388,674,280 | | | | | 72,388,674,280 |
| கைப்பற்றல்கள் மீதான குத்தகை வரி உரித்துகள் HIPG | | | | 97,198,113,903 | | | | | 97,198,113,903 |
| கைப்பற்றல்கள் மீதான குத்தகை வரி உரித்துகள் HIPS | | | | (46,075,536) | | | | | (46,075,536) |
| கைப்பற்றல்கள் மீதான குத்தகை வரி உரித்துகள-HIPG | | | | (61,866,795) | | | | | (61,866,795) |
| CICT கம்பனியினால் செலுத்தப்பட்ட முற்பண கொடுப்பணவு | - | - | | | - | - | - | - | - |
| ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் வருமான செலவீனம் மீதான சீர்செய்தல் | | | | | | | | 1,228,665,984 | 1,228,665,984 |
| ஓய்வூதிய அனுகூல பொறுப்புகள் மீதான மீள் மதிப்பீடு | | | - | | - | | | (177,735,321) | (177,735,321) |
| CICT கம்பனியினால் செலுத்தப்பட்ட முற்பண கொடுப்பணவு | | | | | | | | | - |
| லாப் டேர்மினல் கம்பனியினால் ஒரே தடவையில் செலுத்திய தொகை | | | | | | | | | - |
| | | | | | | | | | - |
| **2017 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கான மீதி** | 7,591,379,785 | 14,533,969,106 | 1,125,903 | 173,117,689,453 | 4,613,549,887 | 75,893,542,157 | 174,592,753 | 34,320,307,691 | 310,246,156,736 |
| ஆண்டின் வருமானம் | - | - | - | | - | - | - | 4,247,246,073 | 4,247,246,073 |
| ஏனைய விபரமான வருமானம் | - | - | - | | - | - | (71,925,684.00) | - | (71,925,684) |
| **மொத்த விபரமான வருமானம்** | | | | | | | | | - |
| மீள்வகையிடலின் மீதி மீதான சீர்செய்தல் | - | - | | - | - | | - | | - |
| அற்றப்படுதல் மீதான சீர்செய்தல | - | - | | - | - | (106,437,496) | | 106,437,496 | - |
| ஹம்பாந்தோட்டை நிலையான சொத்துக்கள் FD/AR/JE/09 மீதான சீர்செய்தல் | | *9,250,790* | | | | | | | 9,250,790 |
| HIPS இன் முதலீடு மீதான மூலதன கிடைக்கப்பெறுதல் / நட்டம் | | | | | | | | | - |
| முன் ஆண்டின் மீதான சீர்செய்தல் (குறிப்பு 41) | | | | | | | | (347,597,906) | (347,597,906) |
| CICT கம்பனியினால் செலுத்தப்பட்ட முற்பண கொடுப்பணவு | - | - | | | - | - | - | - | - |
| ஓய்வூதிய அனுகூல பொறுப்புகள் மீதான மீள் மதிப்பீடு | | | | | | | | (347,934,931) | (347,934,931) |
| கடன் மீதான சீர்செய்தல் | - | - | | | - | - | - | - | - |
| CICT கம்பனியினால் செலுத்தப்பட்ட முற்பண கொடுப்பணவு மீதான சீர்செய்தல் | | | | *(103,534,286)* | | | | | (103,534,286) |
| லாப் டேர்மினல் கம்பனியினால் ஒரே தடவையில் செலுத்தப்பட்ட தொகை | | | | *(658,207)* | | | | | (658,207) |
| டிஸ்டிலரிஸ் கம்பனியினால் ஒரே தடவையில் செலுத்தப்பட்ட தொகை | | | | *(10,300,000)* | | | | | (10,300,000) |
| டோக்கியோ சீமெந்து கம்பனியினால் ஒரே தடவையில் செலுத்தப்பட்ட தொகை | | | | *(12,333,333)* | | | | | (12,333,333) |
| கைப்பற்றல்கள் மீதான குத்தகை வரி உரித்துகள-HIPS | | | | *(731,198,730)* | | | | | (731,198,730) |
| கைப்பற்றல்கள் மீதான குத்தகை வரி உரித்துகள-HIPG | | | | *(981,799,130)* | | | | | (981,799,130) |
| மீள்வகையிடுதலின் மாறுப்படும் வரி மீதான சீர்செயதல் | | | | | | (558,667,764) | | | (558,667,764) |
| பட்டியலிடப்படாத மூலதனம் மீதான சீர்செய்தல் | | | | | | | *(1,115,690,414)* | | (1,115,690,414) |
| **2018 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கான மீதி** | 7,591,379,785 | 14,543,219,896 | 1,125,903 | 171,277,865,767 | 4,613,549,887 | 75,228,436,897 | (1,013,023,345) | 37,978,458,423 | 310,221,013,213 |

105-119 பக்கங்களில் கணக்கீட்டுக் கொள்கைகளும் 120-141 பக்கங்கள் வரையிலான நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்களும் இந்த நிதிசார் கூற்றுக்களில் விசேட பங்கினை வகிக்கின்றது.

# காசுப் பாய்ச்சல் அறிக்கை

(இலங்கை ரூபாய்களில் காட்டப்பட்டுள்ளன)

| 2018 டிசெம்பர் 31ம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான காசுபாய்ச்சல் | குழுமம் 2018 | குழுமம் 2017 | இதுஅச 2018 | இதுஅச 2017 |
|---|---|---|---|---|
| **வரிகளுக்கு முன்னதான இலாபம்** | **8,808,723,034** | **11,970,109,452** | **8,696,106,374** | **11,993,469,938** |
| சீர்செய்யப்பட்ட | | | | |
| துணைக் கம்பனிகளின் இலாபப் பங்கு (தூய பங்கு இலாபம்) | - | 39,164,092 | - | - |
| தேய்மானம் | 4,022,189,767 | 5,560,486,512 | 4,016,616,489 | 5,547,819,038 |
| ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் வருமான செலவின சீர்செய்தல் | - | 1,228,665,984 | - | 1,228,665,984 |
| உணரா சொத்துக்கள் | 30,655,643 | 23,924,336 | 30,655,643 | 23,695,026 |
| ஆண்டின் பணிக்கொடை கட்டணம் மற்றும் சம்பந்தப்பட்ட ஆகு செலவு | 702,582,527 | 628,563,266 | 700,899,467 | 632,614,189 |
| பங்கிலாப வருமானம் | (2,240,351,509) | (839,681,509) | (2,240,351,509) | (839,681,509) |
| வட்டி வருமானம் | (2,208,920,317) | (1,735,779,887) | (2,159,268,568) | (1,650,080,928) |
| வட்டி செலவினம் | 2,257,106,666 | 2,229,389,034 | 2,256,555,666 | 2,082,018,395 |
| | - | - | | |
| அரசாங்க கொடைகளின் மீதி | (309,174,484) | (61,171,076) | (309,174,484) | (61,171,076) |
| தூய செலாவணி நட்டம் | 11,316,830,420 | 2,278,909,051 | 11,316,830,420 | 2,205,937,060 |
| CICT கம்பனியினால் செலுத்தப்படும் முற்பண கொடுப்பணவு | (103,534,286) | (103,534,286) | (103,534,286) | (103,534,286) |
| லாப் கம்பனியினால் ஆண்டில் செலுத்தப்பட்ட தொகை | (658,207) | (658,207) | (658,207) | (658,207) |
| டிஸ்டலரிஸ் கம்பனியினால் ஆண்டில் செலுத்தப்பட்ட தொகை | (10,300,000) | (6,829,041) | (10,300,000) | (6,829,041) |
| HIPG/HPS கம்பனியின் குத்தகை வரி உரித்துக்கள் | (1,712,997,860) | (107,942,330) | (1,712,997,860) | (107,942,330) |
| பொது திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெறுதல் - மக்கள் வங்கி | - | 3,950,858,870 | - | 3,950,858,870 |
| பொது திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெறுதல் - மக்கள் வங்கி | - | (3,950,858,870) | - | (3,950,858,870) |
| டோக்கியோ சீமெந்து கம்பனியிலிருந்து ஆண்டில் கிடைக்கப்பெறுதல் தொகை | (12,333,333) | (596,774) | (12,333,333) | (596,774) |
| நிறுவனரீதியான சமூக பொறுப்புக்களின் செலவீனம் | - | (17,467,352) | - | (17,467,352) |
| நிலையான சொத்துக்களின் அகற்றப்படுதல்கள் மீதான இலாபம் | (16,024,922) | (18,139,866) | (16,024,922) | (18,139,866.00) |
| **மூலதன பணி மாற்றல்களுக்கு முன்னரான இயக்க இலாபம்** | **20,523,793,139** | **21,067,411,396** | **20,453,020,890** | **20,908,118,258** |
| **மூலதன பணி மாற்றங்கள்** | | | | |
| பட்டியல் படுத்தப்பட்டவை | (53,410,229) | 450,476,599 | (50,215,405) | (23,504,214) |
| வர்தகம் மற்றும் ஏனைய கிடைக்கப்பெற வேண்டியவை | 104,348,692,534 | (104,687,905,948) | 104,362,666,803 | (103,740,921,708) |
| வைப்புக்கள் மற்றும் முற்பணம் | 64,141,970 | (88,758,338) | 64,141,970 | (88,758,338) |
| முன்னர் செலுத்திய செலவினம் | 40,028,709 | (53,070,210) | 40,028,709 | (53,070,210) |
| ஊழியர்களின் கடன் மற்றும் ஏனையவை | (709,503,599) | 8,611,631 | (709,503,599) | 8,611,631 |
| வர்தக மற்றும் ஏனைய கடன் உரிமையாளர்கள் | (104,434,693,187) | 106,896,579,377 | (104,436,167,034) | 106,897,012,310 |
| கிடைக்கப்பெற்ற வைப்புக்கள் மற்றும் முற்பணம் | (8,526,930) | (2,041,110,620) | (8,526,930) | (2,041,110,620) |
| பொது திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெறுதல்கள் | - | 4,369,842 | - | 4,369,842 |
| ஏற்பாடுகள் மற்றும் ஒன்று சேர்ந்த செலவினம் | 887,938,307 | (5,401,104,932) | 887,938,307 | (5,862,884,744) |
| **இயக்கங்களால் ஈட்டப்பட்ட நிதி** | **20,658,460,714** | **16,155,498,797** | **20,603,383,711** | **16,007,862,204** |
| செலுத்தப்பட்ட வட்டி | (1,996,843,394) | (3,147,988,754) | (1,996,292,394) | (3,191,434,497) |
| செலுத்தப்பட்ட பணிகொடை | (410,103,017) | (428,803,093) | (409,066,891) | (428,588,159) |
| செலுத்தப்பட்ட வரி | (312,810,824) | (313,871,591) | (298,406,936) | (299,155,517) |
| **இயக்க பணிகள் மூலம் கிடைக்கப்பெற்ற தூய நிதி** | **17,938,703,480** | **12,264,835,358** | **17,899,617,491** | **12,088,684,032** |
| **முதலீட்டுக்களின் காசுபாய்ச்சல்கள்** | | | | |
| சொத்துக்கள் , உபகரண வகை உபகரணங்களை கைப்பற்றிக்கொள்ளல் | (163,222,860) | (234,744,363) | (126,752,432) | (226,747,761) |
| நிலையான சொத்துக்களை அகற்றலின் மூலமான ஈட்டல்கள் | 16,166,413 | 41,889,593 | 16,166,413 | 24,107,030 |
| டிஸ்டலரிஸ் கம்பனியினால் ஒரே தடவையில் கிடைக்கப்பெற்ற தொகை | - | 309,000,000 | - | 309,000,000 |
| டோக்கியோ சீமெந்து கம்பனியிலிருந்து ஒரே தடவையில் கிடைக்கப்பெற்ற தொகை | - | 370,000,000 | - | 370,000,000 |
| முடிவடையா மூலதன வேலைகள் | (225,551,518) | (13,448,381,643) | (225,551,518) | (13,448,381,643) |
| உணரா சொத்துக்களை கைப்பற்றுதல் | (205,681,089) | (11,187,222) | (205,681,089) | (11,187,222) |
| கிடைக்கப்பெற்ற பங்கிலாபம் | 2,239,351,509 | 832,879,509 | 2,240,351,509 | 839,681,509 |
| கிடைக்கப்பெற்ற வட்டி | 1,760,133,597 | 1,140,142,394 | 1,710,481,848 | 1,098,540,547 |
| அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய வட்டி | 20,184,181 | 24,232,164 | 20,184,181 | 24,232,164 |
| ஏயை நிதி சொத்துக்களிலிருந்து தூய ஈட்டப்பட்டவை | (13,640,830,199) | (4,125,404,192) | (13,589,649,612) | (4,050,571,836) |
| **முதலீடுகளிலிருந்து தூய நிதி ( பயன்படுத்தப்பட்ட)** | **(10,199,449,965)** | **(15,101,573,763)** | **(10,160,450,700)** | **(15,071,327,214)** |
| **நிதி ஈடுபடுத்தலின் மூலமான காசுபாய்ச்சல்கள்** | | | | |
| இலங்கை அரசாங்கத்திடமிருந்து கடன் பெறுதல் | - | 12,016,727,822 | - | 12,016,727,822 |
| நிதி நிறுவணங்களிடமிருந்து கடன் பெறுதல் | - | - | - | - |
| பெற்ற கடனை இலங்கை அரசாங்கத்துக்கு மீள செலுத்துதல் | (5,179,100,598) | (6,959,384,915) | (5,179,100,598) | (6,959,384,915) |
| பெற்ற கடனை நிதி நிறுவணங்களுக்கு மீள செலுத்துதல் | (1,541,320,743) | (1,743,449,323) | (1,539,950,739) | (1,742,079,319) |
| **மூலதனமிடலில் தூய தொகை (பயன்படுத்தப்பட்ட)** | **(6,720,421,341)** | **3,313,893,584** | **(6,719,051,337)** | **3,315,263,589** |
| **காசு மற்றும் காசுக்கு சமனான பொருட்களின் தூய மாற்றம்** | **1,018,832,172** | **477,155,179** | **1,020,115,453** | **332,620,407** |
| வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமனான பொருட்கள் | **1,736,048,989** | **1,258,893,810** | **914,764,144** | **582,143,737** |
| **வருட இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமனான பொருட்கள் (குறிப்பு 16)** | **2,754,881,161** | **1,736,048,989** | **1,934,879,597** | **914,764,144** |

105-119 பக்கங்களில் கணக்கீட்டுக் கொள்கைகளும் 120-141 பக்கங்கள் வரையிலான நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்களும் இந்த நிதிசார் கூற்றுக்களில் விசேட பங்கினை வகிக்கின்றது.

## 1 தாபனம் தொடர்பான தகவல்கள்

### 1.1 பொது விடயங்கள்
1984 இன் 7 மற்றும் 35 ஆம் இலக்க சட்டங்களின் பின் திருத்தியமைக்கப்பட்ட 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகாரசபைச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய 1979 ஆகஸ்ட் 01 ஆம் திகதி இலங்கை துறைமுக அதிகாரசபை நிறுவப்பட்டது.

### 1.2 முக்கிய விடயங்கள் மற்றும் இயக்க செயற்பாடுகளின் நிலை
கப்பல்சுமை, கப்பலேற்றல் மற்றும் மாற்றியேற்றல் தரை இறக்குதல் மற்றும் பண்டக சாலையிடல், வாப்பு சேவைகள் கலங்களிலிருந்து கலங்களுக்கானதும் வழிகாட்டி கட்டணங்ளுக்காக குதங்கள் மற்றும் களஞ்சியங்களுக்கிடையிலும் நீர் மூழ்கும் பணிகளுக்கு கலங்களைக் கட்டி வைப்பதற்கும் மற்றும் சுழியோடுதல் மற்றும் நீருக்கடியிலான கப்பல்களின் பழுதுபார்க்கும் நடவடிக்கைகள், அதற்கான துணைச் சேவைகளாக கலங்களுக்கு தண்ணீர், எரிபொருள் மற்றும் மின்சாரம் வழங்குதல்

### 1.3 நிதி ஆண்டு
அதிகாரசபையின் நிதியாண்டு டிசெம்பர் 31 ஆம் திகதியன்றுடன் முடிவடையும்.

### 1.4 பதிவு அலுவலகம்
இலங்கை துறைமுக அதிகாரசபையின் பதிவு அலுவலகம் இல : 19 சைத்திய வீதி, கொழும்பு – 01 ஆகும். அதன் தபால்பெட்டி இலக்கம் 595 ஆகும்.

### 1.5 ஊழியர் தொகை
2018 திசெம்பர் 31 ஆம் திகதிக்கான ஊழியர் தொகை 9,710 (2017-9,377) ஆகும்.

### 1.6 பிரகடனப்படுத்தப்படுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள திகதி
2017 டிசம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டிற்கான பணிப்பாளர் சபையில் முன்மொழியப்பட்ட பிரேரணைக்கமைய 2018 பெப்ரவரி 23 ஆம் திகதிக்கு துறைமுக அதிகாரசபையின் நிதிசார் அறிக்கைகள் வெளியிடப்படுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 2 முக்கிய கணக்கியற் கொள்கைகளின் சாராம்சம்

### 2.1 தயாரிக்கும் அடிப்படை

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் விதிமுறைகளுக்கமைய (SLFRSs) துறைமுக அதிகாரசபையின் ஒன்றிணைந்த நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. விற்பதற்குள்ள நிதிசார்ந்த சொத்துக்களின் நியாயமான பெறுமதிக்கேற்ப மாற்றப்பட்ட பழைய நிதிசார் கூற்றுக்களின் மீது ஒன்றிணைந்த நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இலங்கை கணக்கீட்டு நியமங்களை அனுசரித்து நிதிசார் கூற்றுக்கள் தயார் செய்யப்படுகையில் சில பகுப்பாய்வு கணக்கியல் மதிப்பீடுகளை பயன்படுத்துதல் அவசியமாகும். இந்த செயற்பாட்டின் போது குழு கணக்கியலின் கொள்கைகள் பயன்படுத்துதலிலான தமது தீர்வுகளை அடைவதற்கு முகாமைத்துவத்திற்கு இது அவசியப்படும்.

### 2.2 ஒன்றிணைத்தல்

#### 2.2.1 துணை நிறுவனம்

துணை நிறுவனம் என்பது பொதுவாக விருப்பம் கோரலின் அரைவாசிக்கும் மேல் பங்கு உரித்துக்கள் கொண்ட குழுவின் கீழ் நிர்வகிக்கப்படும் நிதிசார்ந்த மற்றும் செயற்பாட்டுக் கொள்கைகள் கொண்ட அலகொன்றாகும். துணை நிறுவனமொன்றின் நிர்வாகம் குழுவிற்கு மாற்றப்படும் திகதியிலிருந்து துணை நிறுவனமொன்று முற்றாக ஒன்றிணைந்ததாகக் கருதப்படும். இதன் நிர்வாகம் முடிவடையும் திகதியிலிருந்து இது ஒன்றிணைந்த நிலையிலிருந்து நீக்கப்படுகின்றது.

வர்த்தகக் கூட்டாக கருதப்படும் பொருட்டு கைப்பற்றப்படும் செயற்பாட்டை குழு பயன்படுத்தும். மாற்றப்பட்ட சொத்துக்களினது நியாயபூர்வ பெறுமதி மற்றும் துணை நிறுவனங்களினால் வகிக்கப்படும் பொறுப்புக்களைக் கொண்டதாக துணை நிறுவனம் அமைந்திருக்கும். துணை நிறுவனம் முற்றாக அதிகாரசபைக்குச் சொந்தமானதால் துணை நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்படாத நடவடிக்கைகள் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இடை கூறுகளின் கொடுக்கல் வாங்கல்கல் மீதிகள், குழுவின் கூறுகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படும் வருமானம் மற்றும் செலவினம் நீக்கப்படும். மேலும் சொத்துக்களில் ஏற்றுக்கொள்ளப்படும் கூறுகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படும் இலாபம் மற்றும் நஷ்டமும் நீக்கப்படும். குழுவினால் பயன்படுத்தப்படும் கொள்கைகள் தொடர்ந்தும் மாற்றமில்லாது பயன்படுத்தப்படும் தேவைப்பாட்டின் மீது துணை நிறுவனத்தின் கணக்கியற் கொள்கைகள் மாற்றப்பட்டுள்ளன.

### 2.2.2 ஒன்றிணைந்த நிறுவனம்

குழுவில் தாக்கம் செலுத்தக்கூடிய அலகொன்றின் பொதுவாக பிரகடனப்படுத்தும் உரிமையில் 20% அல்லது அதற்கு மேலான அளவில் நேரடியான அல்லது நேரடியற்ற உரிமை கொண்ட நிர்வாகமின்றிய அலகொன்றாகும். இணைந்த நிறுவனத்தின் முதலீடு திணிவு முறை பயன்பாட்டில் கணக்கு வைக்கப்படுகின்றது நியாயத்தின் முறைமையின் கீழ் முதலீடு ஆரம்பத்தில் ஆகு செலவாகக் கருதப்படுவதோடு பொறுப்பேற்றுக்கொள்ளும் திகதியின் பின்னர் முதலீடு பொறுப்பேற்பவரின் இலாபம் அல்லது நஷ்டம் முதலீட்டாளரின் பாகத்தின் அதிகரிப்பு அல்லது குறைவடைதலாக ஏற்றுக்கொள்ளப்படும்.

குழுவின் பிற்கால ஒப்படைப்பு இலாபங்கள் அல்லது நஷ்டப்பாகங்கள் மொத்த வருமானத்தின் பிற்கால ஒப்படைப்பு பாகங்களின் செயற்படுகை, ஏனைய வருமானம் தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இது முதலீட்டின் போது முன்கொண்டு வரப்படும் நிதிக்கேற்ப சீர்செய்தலோடு கவனத்தில் கொள்ளப்படுகின்றது.ஒவ்வொரு நிதியாண்டு இறுதித் தினத்தில் ஒன்றிணைந்த நிறுவனத்தின் சொத்துக்களுக்கு பாதிப்பேற்பட்டுள்ளதா என கவனிக்கப்படுதல் வேண்டும்.

இதன்போது இணைந்த நிறுவனத்தின் சொத்துக்களினது நியாயமான பெறுமதியானது அவை மீள் அறவிட்டுக்கொள்ளக்கூடிய பெறுமதியை தாண்டும் போது அதுவானது பாதிப்பின் நட்டம் என அடையாளம் காணப்பட்டு இணைந்த நிறுவனத்தின் இலாப நட்டத்துடன் சீர் செய்தல் வேண்டும்.

## 2.3 வெளிநாட்டு நிதி பரிமாற்றம்

### 2.3.1 செயற்படுத்தப்படும் மற்றும் சமர்ப்பிக்கப்படும் நிதி வகை

குழுவின் ஒவ்வொரு அலகுளின் நிதிசார் அறிக்கைகளில் உள்ளடங்கப்படும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதமடைதல்கள் அந்த அலகு செயற்படும் ஆரம்ப பொருளாதார நடவடிக்கைகளில் தொடர்புபடும் நிதி வகை பயன்பாட்டில் கணக்கிடப்படும். ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாய்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இது குழுவினால் சமர்ப்பிக்கப்படும் நிதி வகையாகும்.

### 2.3.2 கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதமடைதல்கள்

வெளிநாட்டு நிதிகளில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் பயன்பாட்டிலுள்ள நிதி வகையில் மாற்றப்படும் போது அக்கொடுக்கல் வாங்கல்களுக்குரிய திகதிகளில் வெளிநாட்டு நாணய விகிதத்திற்கேற்ப அவ்வாறு செய்யப்படும். அவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் சீர் செய்தலின் பயனாக கிடைக்கப்பெறும் வெளிநாட்டு நாணய இலாப நஷ்டங்கள் மற்றும் வருட இறுதியில் நிதிசார் சொத்துக்கள், பொறுப்புக்கள், மாற்றப்படுதலில் எழும் இலாப நஷ்டங்கள் விபரமான கூற்றினுள் அடையாளங் காணப்படுதல் வேண்டும்.

ஆகுசெலவின் மாற்றங்களுக்குரிய பரிமாற்ற வேறுபாடுகள் விபரமான வருமான கூற்றினுள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**2.4. சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்கள்**

2.4.1 குறித்த திணைக்களத்தினால் பணிகள் முடிவடைந்ததற்கான உறுதி வழங்கியதன் பின் செயற்பாட்டு நிகழ்ச்சிகளின் கணக்குளில் இருக்கும் ஆகு செலவு மூலதனப்படுத்தப்படும்.

2.4.2 சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்கள் அடிப்படையாக ஆகுசெலவுக்கேற்ப ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இருந்த சொத்து அமைந்துள்ள இடத்திற்கு கொண்டு வருவதற்காக நேரடியாக செலவு செய்யப்பட்ட ஆகுசெலவும் குழுவின் முகாமைத்துவத்தினால் கருதப்படும் வகையில் அவை செயற்படுத்தப்படக் கூடிய நிலைக்குக் கொண்டு வருவதற்காக செலவு செய்யப்பட்ட நிதியும் இந்த ஆகுசெலவில் அடங்குதல் வேண்டும்.

அதிகாரசபையின் சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்களின் மீள் அளவு மதிப்பீடு செய்யப்பட்ட நிதித் தொகையானது சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்களின் பெறுமதி நியாயபூர்வ பெறுமதிக்கு சமனாகும் சந்தர்ப்பங்களில் மீள் அளவு மதிப்பீடு செய்யப்பட்ட திகதியில் கருதப்பட்ட ஆகுசெலவாக கொள்ளப்படுகின்றது. சொத்துக்கள், இயந்திரவகை மற்றும் உபகரணங்களின் பெறுமதியில் சேர்ந்த தேய்மானம். மற்றும் சேர்ந்த பாதிப்புகள் கழிக்கப்பட்ட ஆகுசெலவாகும்.

சொத்துக்கள் பேணிச்செல்லப்படும் பெறுமதியில் அல்லது சொத்தாக அடையாளங் காணப்படும் சந்தர்ப்பங்களில் பேணிச் செல்லப்படும் நிதித் தொகை பிற்கால ஆகுசெலவில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஏதாவது காரணமொன்றிற்குரிய எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் குழுவில் சேரக்கூடிய சந்தரப்பங்களில் மாத்திரம் இவ்வாறு செய்யப்படும். ஏனைய சகல பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் அவை நடைபெறும் நிதி சார்ந்த காலப்பகுதிக்குரிய பூரண வருமான கூற்றினுள் உள்ளடக்கப்படுகின்றது.

காணிகளின் பெறுமதி தேய்மானம் செய்யப்படமாட்டாது. எளிய வழி முறையொன்றின் பயன்பாட்டில் ஏனைய பெறுமதிகளின் தேய்மானம் கணிப்பிடப்படுகின்றது. அவற்றின் ஆகுசெலவு அல்லது ஆகுசெலவாக கருதப்படக் கூடிய பெறுமதிகள் பின்வருமாறு அவற்றின் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலங்களுக்கேற்பவாறாக இருக்கும்.

| **சொத்து வகை** | | **விகிதம்** |
|---|---|---|
| கையாளல் கட்டடங்கள் மற்றும் அமைவுகள் | 5-100 வருடங்கள் | 1% -20% |
| மிதவை உபகரணங்கள் | 2-22 வருடங்கள் | 4.5% - 50% |
| கையாளல் உபகரணங்கள் | 2-20 வருடங்கள் | 5% - 50% |
| இயந்திர உபகரணங்கள் | 2-20 வருடங்கள் | 5% -50% |
| அலுவலகங்கள் மற்றும் நலன்புரி கட்டடங்கள் | 2-100 வருடங்கள் | 1 % - 50% |
| கணனி வன் பொருள் | 1–5 வருடங்கள் | 20% - 100% |
| மோட்டார் வாகனம் | 5-15 | 6.6% -20% |
| மின் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் | 1-20 | 5% - 100% |
| தளபாடங்கள் | 1-20 | 5% - 100% |
| வேறு சொத்துக்கள் | 1-20 | 5% - 100% |

சொத்துக்களின் ஏற்படும் பெறுமதி அவை மீள் அறவிடப்படக் கூடிய பெறுமதியை விட அதிகரித்திருப்பின் ஏற்படும் பெறுமதியானது மீள் அறவிட்டுக் கொள்ளக் கூடிய பெறுமதி நீக்கப்படுதல் வேண்டும்

செயற்படுத்தப்படுவதற்குரிய பணிகளின் (Work in Progress) கொள்கை என்பது குறித்த திணைக்களத்தினால் பணிகள் முடிவடைந்ததற்கான சான்றிதழ் வழங்கியதன் பின் செயற்படம் நிகழ்ச்சிகளின் கணக்குகளில் இருக்கும் ஆகுசெலவு மூலதனப்படுத்தப்படும்.

### 2.4.3 உணரா சொத்துக்கள்

பெறப்படுவதற்கு செலவு செய்யப்படும் ஆகுசெலவு, குறிப்பிட்ட மென் பொருள் மற்றும் தொகுதிகளின் அடிப்படையில் பெறப்பட்ட கணனி மென் பொருள் மற்றும் கையாளல் தொகுதிகள் மூலதன சொத்துக்களாகக் கணிக்கப்படுகின்றன. சேர்ந்த கடன் தொகை மற்றும் சேர்ந்த பாதிப்புகள் கழிக்கப்பட்டதன் பின்னர் உணரா சொத்துக்களின் பெறுமதி குறிப்பிடப்பட்டுள்ளது. பின்வருமாறு அவற்றின் மதிப்பிடப்பட்டுள்ள ஆயுட்காலம் குறைக்கப்பட்டு கடன் ஈடுசெய்தலின் பின்னரான ஆகுசெலவு குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| கணனி மென் பொருள் | 1-6 வருடங்கள் | 16.6% - 100% |

கணனி மென் பொருள் வேலைத்திட்டங்கள் பராமரித்தலின் ஆகுசெலவினுள் நடைபெறுவதுடன் அவை செலவு செய்யப்பட்ட நிதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

### 2.4.4 முதலீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள்

வாடகைப் பணம் அறவிடப்படுவதற்காக பேணப்பட்டு வரும் முதலீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் ஆரம்பமாக அதன் ஆகு செலவுக்கேற்ப கணக்கிடப்படுகின்றது.

2011 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப தயார்செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீள் மதிப்பீடு செய்யப்பட்ட விலைகளுக்கேற்ப முதலீட்டுச் சொத்துக்கள் பேணப்பட்டு வந்துள்ளன. முதலீட்டுச் சொத்துக்களின் விற்பனை வரி பெறுமதி நியாயபூர்வ பெறுமதிக்கு சமனாகுவதால் முதலீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்களில் அடங்கிய நிதி அவ்வாறு மீள் பெறுமதி செய்யப்பட்ட திகதியிலிருந்து வந்த கருதிய ஆகுசெலவாக அதிகாரசபையினால் கருதப்பட்டுள்ளது. அதன்படி முதலீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள், சேர்ந்த தேய்மானங்கள் மற்றும் சேர்ந்த பாதிப்புக்கள் கழிக்கப்பட்டதாக கருதப்பட்ட ஆகுசெலவாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய சொத்துக்கள், இயந்திர வகை, உபகரணங்கள் சேர்ந்த தேய்மானங்கள் மற்றும் சேர்ந்த பாதிப்புக்கள் கழிக்கப்பட்ட ஆகுசெலவாக பின்னர் கணக்கிடப்பட்டுள்ளது.

காணிகளின் பெறுமதி தேய்மானம் செய்யப்படமாட்டாது. இலகு முறையொன்றின் பயன்பாட்டில் ஏனைய பெறுமதிகளின் தேய்மானம் கணிக்கப்படுகின்றது. அவற்றின் ஆகுசெலவு அல்லது ஆகுசெலவாக கருதப்படக் கூடிய பெறுமதி பின்வருமாறு அவற்றின் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலத்திற்கமைய இவ்வாறு செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| முதலீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் | 10 -100 வருடங்கள் | 1% - 10% |

### 2.4.5 நிதிசாராத சொத்துக்களின் பாதிப்பு

அறிக்கை செய்யப்படுவதற்குட்படும் ஒவ்வொரு காலப்பகுதியின் இறுதியில் குழுவினால் அதன் சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்கள் முதலீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் உணரா சொத்துக்களின் பெறுமதி மீளாய்வு செய்யப்படுவதோடு அந்த சொத்துக்களுக்கு பாதிப்பேதும் ஏற்பட்டதற்கான ஏதாவது காட்டப்படுதல் உள்ளதாவென தீர்மானிக்கப்படும். அவ்வாறு காட்டுப்படின் அவ்வாறான பாதிப்புகளில் ஏற்பட்ட பாதிப்பின் அளவு தீர்மானிக்கப்படுவதற்காக சொத்துக்களிலிருந்து அறவிட்டுக் கொள்ளக்கூடிய தொகை மதிப்பீடு செய்யப்படும். ஏதாவது சொத்தொன்றின் அறவிட்டுக்கொள்ளக்கூடிய நிதி மதிப்பிடப்பட முடியாத சந்தர்ப்பங்களில் குழுவினால் நிதி ஈட்டல் அலகு தீர்மானிக்கப்படுவதுடன் அந்த சொத்துக்குரிய நிதி ஈட்டல் அலகினால் அறவிட்டுக்கொள்ளக்கூடிய நிதி மதிப்பீடு செய்யப்படும்.

ஏதாவதொன்று விற்பதற்காக செலவு செய்யப்படும் செலவினம் மற்றும் பாவனையிலுள்ள ஏதாவது விற்பதற்காக செலவு செய்யப்படும் செலவினம் மற்றும் பாவனையின் பெறுமதியானது கழிக்கப்பட்ட நியாயமான பெறுமதியின் உயர் மட்ட அறவிட்டுக்கொள்ளக் கூடிய நிதி எனப்படும். பாவனையின் பெறுமதி மதிப்பிடப்படுகையில் எதிர்கால நிதி கிடைக்கப்பெறுதல்கள் நிகழ்கால பெறுமதியில் கழிக்கப்பட்ட நிதிக்கமைய வருமானம் செலுத்தப்படுவதற்கு முன் கழிவுக் கட்டண முறை பின்பற்றப்பட்டு மதிப்பீடு செய்யப்படும். தற்போதிருக்கும் பணத்தில் காலப் பெறுமதி மற்றும் சொத்துக்குரிய விசேட இடர்நேர் கொண்ட சந்தை நிலை வெளிக்காட்டப்படும் வகையில் கழிக்கப்படுவதற்கு முன்பிருந்த வரி நிலைமை பயன்படுத்தப்பட்டு இவ்வாறு செய்யப்படும். எதிர்காலத்தில் ஏற்படும் காசுப் பாய்ச்சலோடு இது சீர்செய்யப்பட மாட்டாது.

ஏதாவது சொத்தொன்றில் அறவிட்டுக் கொள்ளக்கூடிய நிதி (நிதி ஈட்டல்) அலகானது) அதில் நிலவும் பெறுமதிக்குக் குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டிருப்பின் சொத்தொன்றில் பேணப்படும் நிதி (நிதி ஈட்டல் அலகு) அறவிட்டுக் கொள்ளக்கூடிய நிதித் தொகை வரை கழிக்கப்படும். பாதிப்புகளில் ஏற்படும் நஷ்டம் மொத்த வருமானக் கூற்றில் விரைவில் அடையாளங் காண முடியும்.

## 2.5 நிதிசார் சொத்துக்கள்

2.5.1 பூர்வாங்க அடையாளங்காணலிலேயே குழுவினால் நிதிசார் சொத்துக்களினது வகையீடு தீர்மானிக்கப்படுவதோடு குழுவினால் அதன் நிதிசார் சொத்துக்கள் பின்வருமாறு வகையீடு செய்யப்பட்டுள்ளது.

(அ) கால முதிர்வடையும் வரை பேணப்படும் முதலீடுகள் (HTM)
(ஆ) கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை
(இ) விற்கப்பட வேண்டியுள்ளவை (AFS)

### அ) கால முதிர்வடையும் வரை பேணப்படும் முதலீடுகள்

கால முதிர்வடையும் வரை பேணப்படும் முதலீடுகள் என்பது கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை தவிர்ந்த நிரந்தர மற்றும் தீர்மானிக்கப்பட வேண்டிய செலுத்தும் மூலக் கருவில்லாத நிதிசார் சொத்துக்களாகும். கால முதிர்வடையும் வரை வைத்துக்கொள்ளப்படும் முதலீடுகளாக அந்த முதலீடுகள் முதிர்வடையும் வரை வைத்துக்கொள்ளப்படுவதற்கு குழுவிற்கு கரு அல்லது ஆற்றல் பெறக் கூடிய முதலீடுகள் வகையீடு செய்யப்பட்டுள்ளன. முதலீடுகளாக காலமுதிர்வடைவு இல்லாதிருப்பின் கால முதிர்வடையும் வரை வைத்துக்கொள்ளப்படும் முதலீடுகள் நடைமுறையற்ற சொத்துக்களில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த வகையின் கீழ் தற்போது பொறுப்பேற்கப்படும் கடன்காரர்களை குழு குறிப்பிடப்பட்டுள்ளது.

### (ஆ) கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை

கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை என்பது நிரந்தர மற்றும் தீர்மானிக்கப்பட வேண்டியவை போன்று தற்போது செயற்படும் சந்தையில் தெரிவிக்கப்படாதுள்ள மூலக் கருவில்லா நிதிசார் சொத்துக்களாகும் அறிக்கை செய்யப்படுதலுக்குட்படும் காலப்பகுதி முடிவடைந்த 12 மாதங்களுக்கு மேற்படும் கால முதிர்வடையும் சொத்துக்கள் தவிரந்த நடைமுறைச் சொத்துக்களினுள் சேர்க்கப்பட்டுள்ள கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவைகளாகும். இவை நடைமுறைசாராத சொத்துக்களாக வகையீடு செய்யப்பட்டுள்ளன. வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெற வேண்டியவை, மீள் விலைக்கு வாங்கப்பட்ட அரசாங்க பிணைமுறிகள், நிரந்தர வைப்புக்களுக்கான பூர்வாங்க செலுத்துதல்கள், முற்பண வைப்புக்கள் ஊழியர்களின் கடன்கள் அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் இறுதியில் இருக்கும் காசு மற்றும் காசு சம மதிப்புகள் குழுவின் கடன்கள் மற்றும் கிடைக்கப்பெற வேண்டிய பொருட்களாகும்.

**(இ) விற்பதற்குள்ள பொருட்கள்**

விற்பதற்குள்ள நிதிசார் சொத்துக்கள் என்பது இவ்வகையின் கீழ் பெயரிடப்பட்டுள்ள அல்லது பெயரிடப்படாத வேறு வகையின் கீழ் வகையீடு செய்யப்பட்டிராத மூலகூறு அற்ற நிதிசார் சொத்துக்களாகும். முதலீடு, கால முதிர்வு அடையாதொன்றெனில் அல்லது அதுவானது அறிக்கை செய்வதற்கு உட்படும் காலப்பகுதியின் இறுதியிலிருந்து 12 மாதங்களினுள் பணிகள் முடிவுறுத்தப்பட முகாமைத்துவத்தினால் கருதப்படாத நடைமுறை சாராத சொத்துக்களினுள் இவை உள்ளடக்கப்பட்டுள்ளன. முன்வைக்கப்பட்டுள்ள வர்த்தகப் பொருட்களின் முதலீடுகள் மற்றும் முன்வைக்கப்படாத வர்த்தகப்பொருட்களின் முதலீடுகளை விற்பதற்குள்ள நிதிசார் சொத்துக்கள் கொண்டிருக்கும்

**2.5.2 ஏற்றுக் கொள்ளல் மற்றும் அடிப்படை அளவீடு**

கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை நிதிசார் சொத்துக்களாக குழுவினால் இக்கொடுக்கல் வாங்கல் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து வகையீடு செய்யப்பட்டுள்ளது. குழுவானது நிதி உடன்பாட்டின் ஏற்பாடுகளுக்கமைய ஒப்பந்தத்தின் தரப்பினரான வர்த்தக கொடுக்கல் வாங்கல் திகதியிலிருந்து ஏனைய நிதிசார் சொத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

நிதிசார் சொத்துக்கள் முதலில் நியாயபூர்வ பெறுமதிக்கேற்ப கணிப்பீடு செய்யப்படுகின்றன. இதற்குப் புறம்பாக நியாயபூர்வ பெறுமதி குறிப்பிடப்படாதுள்ள சொத்துக்கள் அவற்றின் இலாப நஷ்டங்களின் ஊடாக கொடுக்கல் வாங்கலின் ஆகுசெலவின் நேரடி தொடர்பு மீது கணக்கீடு செய்யப்படுகின்றது.
நிதிசார் சொத்துக்களிலிருந்து காசுப் பாய்ச்சல் கிடைக்கப்பெற உரித்து இல்லாதபோது அல்லது மாற்றப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் நிதிசார் சொத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அதேபோன்று இந்த நிலைமையின் கீழ் குழுவினால் அதன் உரித்தின் அனைத்து இடர்நேர் தன்மை மற்றும் அனுகூலங்கள் பெருமளவில் நிதிசார் சொத்துக்களுக்கு மாற்றப்படுகின்றது.

**2.5.3 பின்னர் மேற்கொள்ளப்படும் கணக்கீடுகள்**

**அ) கால முதிர்வடையும் வரை தடுத்து வைக்கப்படும் முதலீடுகள்**

காலம் தாண்டப்படும் வரை பொறுப்பேற்கப்படும் முதலீடுகளானது பாதிப்புகளில் நஷ்டமேற்பட்டிருப்பின் அவை கழிக்கப்பட்டு பயனான வட்டி முறை அனுசரிக்கப்பட்டு பிற்காலத்தில் நடைபெறும் கடன் ஈடுசெய்தலின் செலவினமாகும். பொறுப்பேற்றலின் கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படும் தள்ளுபடி கழித்தல் அல்லது தவணைகள் கருத்திலெடுக்கப்பட்டு கடன் ஈடுசெய்தலின் செலவினம் கணக்கிடப்படுகின்றது.

**(ஆ) கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை**

பூரண ஏற்றுக்கொள்ளலின் பின்னர் கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை கடன் ஈடுசெய்தலின் செலவினத்திற்கேற்ப கணக்கிடப்படுவதுடன் அவ்வாறு செய்யப்படுகையில் பாதிப்புகளுக்கான ஏற்பாடுகள் கழிக்கப்பட்டு பயனான வட்டி முறை அனுசரிக்கப்படுகின்றது.

**(இ) விற்பதற்குள்ள பொருட்கள்**

ஆரம்ப ஏற்றுக்கொள்ளலின் பின்னர் விற்பதற்குள்ள நிதிசார் சொத்துக்களாக வகையீடு செய்யப்பட்டுள்ள வட்டியில்லாத பங்கு முதலீடுகள் நியாயபூர்வ பெறுமதிக்கேற்ப கணிப்பிடப்படுகின்றன. விற்பதற்குள்ள நிதிசார் சொத்துக்களின் நியாயபூர்வ பெறுமதியின் வித்தியாசம் பங்குகளின் மாற்றங்கள் மீதான கூற்றில் விற்பதற்காக ஒதுக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ள ஏனைய முழு வருமானத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். குழுவின் உபாயரீதியான முதலீடுகளான வட்டியில்லா பங்குகளின் முதலீடுகள், பாதிப்புகளில் ஏற்பட்ட நஷ்டம் கழிக்கப்பட்டபின் ஏற்படும் செலவினம் மீது கணிக்கப்படுகின்றன.

அவற்றின் நியாயபூர்வ பெறுமதியானது நம்பிக்கையான முறையில் மதிப்பிடப்பட முடியாதுள்ளதனால் இவ்வாறு செய்யப்படும்.

### 2.5.4 நிதிசார் சொத்துக்கள் பாதிப்படைதல்

#### (அ) செலவு மீட்புக்கான சொத்துக்களின் பராமரிப்பு

கடன் ஈடுசெய்தலின் செலவின முறைக்கமையமுன்கொண்டு செல்லப்படும் சொத்துக்கள், ஏதாவது நிதி சார்ந்த சொத்தொன்றுக்கு பாதிப்பேற்பட்டிருப்பின் பாதிப்பு ஏற்பட்டுள்ளதென அடிப்படை விடய மூல சான்றுகள் உள்ளக சந்தர்ப்பமொன்றின் போது அறிக்கை செய்யப்படுவதற்கு உட்படும் காலப்பகுதியின் இறுதியில் குழுவினால் அது தொடர்பில் மதிப்பிடப்படுகின்றது. சொத்தொன்றின் ஆரம்ப ஏற்றுக் கொள்ளப்படுதலின் பின்னர் ஏதாவது விடயம் அல்லது பல சம்பவங்களின் பயனாக பாதிப்பு அல்லது அதனால் நஷ்டமேற்பட்டுள்ளதென விடய மூல சான்றுகள் இருப்பின் மாத்திரம் நிதிசார்ந்த சொத்தொன்றுக்கு பாதிப்பு ஏற்பட்டதாக கருதப்படும். இங்கு நஷ்டமேற்பட்ட விடயம் அல்லது பல சம்பவங்கள் நிதிசார்ந்த சொத்தின் எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் தொடர்பில் தாக்கமேற்படும் போது அதுவானது நம்பிக்கையூட்டும் வகையில் மதிப்பிடப்படக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை போன்று காலம் தாண்டும் வரை பொறுப்பேற்கப்படும் முதலீடுகள் கடன் ஈடுசெய்தலின் செலவினத்திற்கேற்ப பேணப்படுவதுடன் நஷ்டத்தின் அளவானது சொத்தில் பேணப்படும் நிதியின் சமனாக மதிப்பிடப்பட்டுள்ள வித்தியாசத்திற்கேற்ப கணிப்பிடப்படுகின்றது. (இதற்கு எதிர்காலத்தில் நடைபெறும் கடன் பாதிப்புகள் உள்ளடங்கப்படமாட்டாது.) அதேபோன்று மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிதி சார்ந்த சொத்துக்களினது பயனான வட்டி முறை மீது தள்ளுபடி செய்தல் வேண்டும். நிதிசார் பெறுமதியில் பேணப்பட்டு வரும் நிதி கழிக்கப்படுவதுடன் மொத்த வருமானம் பற்றிய கூற்றில் நஷ்டம் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

பிற்காலத்தில் பாதிப்பினால் ஏற்பட்ட நஷ்டம் குறைவடையின் மற்றும் அந்த நஷ்டமானது விடய மூல நிலைக்கேற்ப நஷ்டம் ஏற்பட்ட பின் நடைபெற்ற சம்பவத்துடன் தொடர்புடையதென ஏற்றுக்கொள்ளப்படின் அவ்வாறான சந்தர்ப்பமொன்றின் போது முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதிப்பிலான நஷ்டம் மொத்த வருமான கூற்றில் ஏற்றுக் கொள்ளப்படும்

#### (ஆ) விற்பதற்குள்ள பொருட்கள்

நிதிசார் சொத்துக்களுக்கு பாதிப்பேற்பட்டுள்ளதான விடய மூல சான்றுகள் இருக்கின்றதாவென அறிக்கை செய்யப்படுதலுக்குட்படும் ஒவ்வொரு காலப்பகுதி முடிவிலும் குழுவினால் மதிப்பீடு செய்யப்படும். விலை குறிப்பிடப்பட்டுள்ள பங்குகளிலான முதலீடுகள் தொடர்பில் நியாய பெறுமதியில் முக்கியமான அல்லது நீண்டகாலமாக அதன் ஆகு செலவிற்குக் குறைந்த சொத்துக்களினது அளவு இருப்பது சொத்துக்கு பாதிப்பு ஏற்படுதலாக கருதப்படும் சான்றாகும். இங்கு குறிப்பிடப்பட்ட முதலீடுகள் தொடர்பில் அவ்வாறான சான்று இருப்பின் இலாபம் மற்றும் நஷ்டம் கணக்கிடப்படுகையில் முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட நஷ்டம் கழிக்கப்பட்டு பொறுப்பேற்றலின் செலவினம் மற்றும் நிகழ்கால நியாயபூர்வ பெறுமதிக்கிடையிலான வித்தியாசம் கருதப்பட்ட சேர்ந்த மீள் வகையீடு செய்தலாக ஏற்றுக்கொள்ளப்படும். விலை குறிப்பிட்ட பங்குகளிலான முதலீட்டு ஒப்பந்தத்தில் இலாபம் அல்லது நஷ்டத்தில் பாதிப்பு உள்ளதென அந்த சந்தர்ப்பத்தில் விற்பதற்குள்ள பொருட்கள் வகையீடு செய்வதற்காக இலாபம் அல்லது நஷ்டத்தின் ஊடாக மீள் வகைப்படுத்தலின் மூலம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இந்த மீள் காட்டப்படும் பணம் ஏனைய மொத்த வருமானம் தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்படும்

விலைகள் குறிப்பிடப்படாத சமனான பங்குகளின் முதலீடுகள் தொடர்பில் நியாயபூர்வ பெறுமதியில் முக்கியமான அல்லது நீண்டகாலமாக அதன் ஆகுசெலவுக்குக் குறைந்த சொத்துக்கள் அளவு இருப்பதும் சொத்துக்கு பாதிப்பு ஏற்பட்டதாக கருதப்படும் சான்றாகும். அவ்வாறான சான்று விலைகள் குறிப்பிடப்படாத முதலீட்டில் இருப்பின்

பாதிப்பினால் ஏற்பட்ட நஷ்டமானது நிதிசார் சொத்தில் இருக்கும் நிதி மற்றும் மதிப்பிடப்பட்டுள்ள எதிர்கால காசுப்பாய்ச்சல்களுக்கிடையிலுள்ள வித்தியாசம் கருதப்படுதலில் கணிப்பிடப்படுகின்றது. எதிர்கால காசுப்பாய்ச்சல்களினுள் நிகழ்கால சநதைக் கட்டணத்திற்குத் தள்ளுபடி செய்யப்பட்ட நிதியானது அதற்குச் சமனான நிதிசார் சொத்துக்களாக கருதப்படும். இவ்வாறு பாதிப்பினால் ஏற்பட்ட பாதிப்பானது மீள் வெளிக்காட்டலாக இடம்பெற மாட்டாது.

## 2.6 தொகை இருப்புகள்

ஆகுசெலவிற்கேற்ப தொகை இருப்புப் பொருட்கள் காட்டப்பட்டுள்ளன. முதலில் வந்த முதலில் வழங்கிய (FIFO) முறைஅடிப்படையில் ஆகு செலவு தீர்மானிக்கப்படும். கலங்கள், கப்பற்சரக்கு கையாளல் உபகரணங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள், நுகர்வுப் பொருட்கள் போன்று எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய் போன்றவை பட்டியலிடப்பட்ட பொருட்களில் உள்ளடங்கும். பட்டியலிடப்பட்டுள்ள பொருட்கள் பாவனைக்கன்றி மீள் விற்பனைக்குரியதாக மாட்டாது.

## 2.7 வர்த்தக கிடைக்கப்பெறுதல்கள்

கிடைக்கப்பெற வேண்டிய வர்த்தகப் பொருட்கள் என்பது பொதுவான வர்த்தக நடவடிக்கைகளின் போது வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்காக அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிதிகளாகும். வர்த்தகங்கள் கையாளலின் பொதுவான சுற்றின் படி சேர்த்தல்கள் எதிர்பார்க்கப்படுவதுடன் அவை நடைமுறை சொத்துக்களாக வகையீடு செய்யப்படும். ஆரம்பத்தில் கிடைக்கப்பெற வேண்டிய வர்த்தகப் பொருட்கள் கருதப்படுகையில் அதன் நியாயபூர்வ பெறுமதி ஏற்றுக்கொள்ளப்படும். அதாவது இன்வொயிஸில் குறிப்பிடப்பட்ட நிதி மற்றும் பாதிப்புகளுக்கான ஏற்பாடுகள் கழிக்கப்பட்டு ஆரம்ப இன்வோயிஸ் நிதி கணக்கிடப்படும். அந்த நிதித் தொகை குறுகிய காலத்தினுள் கிடைக்கப்பெறுமென எதிர்பார்க்கப்படுவதனால் இவ்வாறு செய்யப்படுவதோடு அந்த நிதியின் காலத்தின் பெறுமதி இங்கு முக்கியமாகாது.

ஏதாவது வர்த்தக கிடைக்கப்பெறுதலொன்றுக்கு பாதிப்பொன்று ஏற்பட்டிருப்பின் பாதிப்பு ஏற்பட்டுள்ளதெனும் விடய மூல சான்று உள்ள சந்தர்ப்பத்தில் அறிக்கை செய்யப்படுவதற்கு உட்படும் காலப்பகுதியின் இறுதியில் குழுவினால் அது தொடர்பில் மதிப்பிடப்படும் வர்த்தக கிடைக்கப்பெறுதலொன்றுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதெனும் விடய மூல ஒன்றுசேர்த்தல் தொடர்பில் கடந்தகால அனுபவத்துடன் ஒன்றுசேர்க்கலாம்மீள் கிடைக்கப்பெற வேண்டிய தாமத கொடுப்பனவுகளின் எண்ணிக்கையின் ஆகக் கூடிய கால எல்லை 28 நாட்கள் ஆகும். பாதிப்பொன்று ஏற்பட்டுள்ளதெனும் ஏதாவது விடய மூல சான்று இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் கிடைக்கப்பெற வேண்டிய வர்த்தகப் பொருட்களில் பாதிப்பேற்பட்டுள்ளதெனவும் அவ்வாறான பாதிப்புகளினால் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் கருதப்படும். முக்கியமான கிடைக்கபெற வேண்டிய வர்த்தகப் பொருட்கள் தனித்தனியாக பாதிப்புகளுக்கு மதிப்பிடப்படும். முக்கியமற்ற கிடைக்கப்பெற வேண்டிய வர்த்தகப் பொருட்கள் தொடர்பில் ஒன்றிணைந்த அடிப்படையின் மீது பாதிப்புகள் மதிப்பிடப்படும்.

கிடைக்கப்பெற வேண்டிய வர்த்தகப் பொருட்கள் தொடர்பான பாதிப்புகள் மதிப்பிடப்படுகையில் பின்வரும் மாதிரி மற்றும் அடிப்படை பயன்படுத்தப்படுகின்றது.

### (அ) தனித்தனியாக மதிப்பிடப்படும் மாதிரி

பாதிப்பினால் ஏற்பட்ட நஷ்டம் கணக்கிடப்படுவதற்காக பின்வரும் கிடைக்கப்பெற வேண்டிய வர்த்தகப் பொருட்களின் வகை தனித்தனியாக மீளாய்வு செய்யப்படுகின்றது.

| | | அடிப்படை |
|---|---|---|
| I. | இலங்கை படைகள் | 12 மாதங்கள் வரை ஏற்பாடுகள் இல்லை<br>12 மாதங்களின் பின்னர் 50% |
| II. | அரசாங்க நிறுவனங்கள் | 12 மாதங்கள் வரை ஏற்பாடுகள் இல்லை |

12 மாதங்களின் பின்னர் 100%

III. சட்ட நடவடிக்கைகளுக்குட்பட்டுள்ள கப்பல்கள் - 100%

IV. கப்பல் முகவர்கள் – தற்காலிகமாக தடைசெய்யப்பட்டுள்ள மற்றும் செயலிழந்த 12 மாதங்கள் வரை- 100%

V. கப்பல் முகவர்கள் – விசேட குறிப்பிடத்தக்க தொகை கொண்ட 12 மாதங்கள் வரை ஏற்பாடுகள் இல்லை (ஒரு மில்லியனுக்கு மேல்)– 12 மாதங்களின் பின்னர் 100%

**(ஆ) ஒன்றிணைந்த மதிப்பீட்டு மாதிரி :**

பாதிப்பினால் ஏற்பட்ட நஷ்டம் கணிப்பிடப்படும் போது பின்வருமாறு கிடைக்கப்பெற வேண்டிய வர்த்தகப் பொருள் வகை ஒன்றாக மீளாய்வு செய்யப்படுகின்றது.
அடிப்படை

கப்பல் முகவர்கள் – விசேடமில்லாத குறிப்பிடத்தக்க தொகை இல்லாத 12 மாதங்கள் வரை ஏற்பாடுகள் இல்லை (ஒரு மில்லியனுக்கு குறைந்த)12 மாதங்களின் பின்னர் 100%

## 2.8 காசு மற்றும காசு சமமதிப்புகள்

கையிருப்பிலுள்ள காசு, வங்கிகளிலுள்ள வைப்புகள், அடிப்படை காலப்பகுதி மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைந்த காலம் கொண்ட குறுகிய கால உயர் மட்ட ஒப்புரவு முதலீடுகள், காசுப் பாய்ச்சல் சம்பந்தப்பட்ட ஒன்றிணைந்த கூற்றில் காசு மற்றும் காசு சம மதிப்புகளுக்குரியதாகும்.

## 2.9 ஈடுபடுத்தப்பட்டமூலதனம்

மூலதனம் என்பது கொழும்பு துறைமுக ஆணைக்குழு, துறைமுக கப்பற்சரக்கு கூட்டுச் சபை, துறைமுக ஒத்துப்பார்த்தல் பாதுகாப்பு சேவைக் கூட்டுத்தாபனம் போன்றவற்றிற்கு சொந்தமாகவிருந்து இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு மாற்றப்பட்டு பொறுப்பளிக்கப்பட்ட சகல சொத்துக்களுக்குரிய நிதியங்களிலுள்ள பணம், அனைத்து கடன்கள், பொறுப்புக்கள் மற்றும் பிணைப்புக்கள் அடங்கிய அசையும் மற்றும் அசையாத சொத்துக்களும் ஆகும்.

## 2.10 நிதிசார்ந்த பொறுப்புக்கள்

குழுவினால் நிதிசார்ந்த பொறுப்புக்கள் வேறு நிதிசார் பொறுப்புக்களின் மீது வகையீடு செய்யப்பட்டுள்ளது. கடனுக்குப் பெறப்பட்ட பொருட்கள் மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவை ஏனைய நிதிசார்ந்த பொறுப்புக்களினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஏனைய நிதிசார் பொறுப்புக்கள் ஆரம்ப சந்தர்ப்பத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவது நியாயபூர்வ பெறுமதி மற்றும் ஆகுசெலவு கொடுக்கல் வாங்கல்களுகல்களுடன் நேரடியாக தொடர்புபடும் பொருட்களுடனாகும். பூர்வாங்கமாக அடையாளங்காணப்பட்ட விடயங்களுக்குப் பின்னர் நடைமுறையிலுள்ள வட்டி முறை பயன்படுத்தப்பட்டு இந்த கடன் தொகை குறிப்பிட்ட காலப்பகுதியினுள் சீர் செய்யப்படுவதற்காக இந்த நிதிசார் பொறுப்புக்கள் கணிப்பிடப்படுகின்றன. ஒப்பந்தத்தின் மீதான பிணைப்புக்கள் விடுவிக்கப்படுகையில் அல்லது இரத்துச் செய்யப்படுகையில் அல்லது காலாவதியானதும் குழுவினால் நிதிசார் பொறுப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

## 2.11 வர்த்தக மற்றும் செலுத்தப்பட வேண்டிய ஏனைய பொருட்கள்

வர்த்தக மற்றும் செலுத்தப்பட வேண்டிய ஏனைய பொருட்கள்என்பது பொதுவான வர்த்தக நடவடிக்கைகளில் வழங்குநர்களிடமிருந்து பெறப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான கொடுப்பனவுகளுக்கான மீள் செலுத்துதல்களாகும். வர்த்தகமொன்றின் பொதுவான இயக்க சுற்றுப் போன்று வர்த்தக மற்றும் ஏனைய

செலுத்தப்பட வேண்டிய பொருட்கள் நடைமுறை பொறுப்புக்களாக வகையீடு செய்யப்பட்டுள்ளது.

வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டிய பொருட்கள் ஆரம்பமாக நியாயமான விலைகளுக்கேற்ப அடையாளங் காணப்படுகின்றது. அதாவது கொடுக்கல் வாங்கல்களிலும் ஆரம்ப இன்வோயிஸுக்குரிய நிதியும் பிற்காலத்தினுள் கணக்கிடப்படுதலாகும். இந்த நிதித்தொகை குறுகிய காலத்தினுள் செலுத்தப்பட எதிர்பார்க்கப்படுவதோடு பணத்தின் காலப் பெறுமதி இங்கு முக்கியமற்றது.

### 2.12 கடன் பெறுதல்கள்

இலங்கை அரசாங்கம் மற்றும் நிதிசார் நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட துறைமுக அபிவிருத்தி கடன் தொகைகள் கடன் பெறப்பட்ட பொருட்களாக குழுவில் உள்ளடக்கப்படும். கடனுக்குப் பெறப்பட்டுள்ள பொருட்கள் ஆரம்ப சந்தர்ப்பத்தில் நியாயபூர்வ விலைக்கமைய ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் செலவு செய்யப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களின் ஆகுசெலவு அதன் தூய பெறுபேறாகும். கடனுக்குப் பெறப்பட்ட பொருட்கள் தொடர்பில் நடைமுறையிலுள்ள வட்டி முறை பயன்படுத்தப்பட்டு கடன் தொகை முறையாக சீர்செய்யப்படுதலின் மூலம் பிற்காலத்தில் முன் கொண்டு செல்லப்படுகின்றது. மிதக்கும் கட்டணத்திற்கேற்ப பெறப்படும் கடன் தொகை அறிக்கை செய்யப்படுதலுக்குட்படும் காலப் பகுதியின் இறுதியில் நடைமுறையிலிருக்கும் வட்டி வகிதம் அதாவது மிதக்கும் வட்டியின் கட்டணம் பயன்படுத்தப்பட்டு கடன் தொகை குறிப்பிட்ட காலப்பகுதியினுள் செலுத்தி முடிக்கப்பட்டதன் பின்னர் கணக்கிடப்படும்.

கடன் தொகை பெறும் வசதிகள் ஆரம்பிக்கப்படுகையில் இருக்கும் கடன் தொகை தயார் செய்யப்படுதலின் கட்டணம், அமைப்பு ரீதியான கட்டணம், தயார் செய்தலின் கட்டணம் மற்றும் முகாமைத்துவக் கட்டணம் போன்றவை கடன் தொகை பெறப்படும் ஆகுசெலவு கட்டணமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

அறிக்கையிடலுக்கு உட்படும் காலப் பகுதியின் இறுதியில் கடன் தொகை குறிப்பிட்ட காலத்தினுள் செலுத்தப்படுவதற்கு செலவாகும் செலவினம் முன் கொண்டு செல்லப்படுதலின் கணிப்பீடு செய்யப்படுவது கொடுக்கல் வாங்கல்களில் எழும் வெளிநாட்டு நாணய இலாபம் மற்றும் நஷ்டம் மீதாகும். இவை மொத்த வருமான கூற்றில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

### 2.13 கடன் பெற்றுக்கொள்ளலின் ஆகுசெலவு

கடன் பெற்றுக்கொள்ளலின் ஆகுசெலவானது பொறுப்பேற்றல் மற்றும் பெறுமதியான சொத்துக்களின் நிர்மாணம் தொடர்பில் நேரடியாகத் தொடர்புபடுகின்றது. இந்த சொத்துக்கள் அவை எதிர்பார்க்கப்படும் பணிகளுக்காக குறிப்பிடத்தக்க காலம் செல்லும் மேலும் இவை அந்த சொத்துக்களினது ஆகுசெலவில் சேர்க்கப்படுவதோடு அந்த சொத்துக்கள் அவை பயன்படுத்தப்பட எதிர்பார்க்கும் பணிகளுக்காக முடியுமானளவு பயன்பெற காலம் எடுக்கும்.

ஏனைய சகல கொள்வனவு செய்தலின் ஆகுசெலவானது நிறைவுபெற்ற வருமான கூற்றில் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு இவை தொடர்பில் செலவு செய்யப்பட்ட காலம் கணக்கிடப்படும்.

### 2.14 அரசாங்க உதவிக் கொடுப்பனவுகள்

நிதி அல்லாத உதவிக் கொடுப்பனவுகள் அடங்கலான அரசாங்க உதவிகள் நியாயமான பெறுமதிக்கமைய ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் அந்த உதவிகள் பெற்றுக்கொள்ளப்படுதலின் பின்னர் குழுவினால் சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் அனுசரிக்கப்படுகின்றனவெனும் நியாயமான சான்றுபடுத்தல் இருக்கும் சந்தர்ப்பமொன்றின் போது அவ்வாறு செய்யப்படும்.

ஆகுசெலவுக்குரிய அரசாங்க உதவிக்கொடுப்பனவுகள் பின்னுரிமை செய்யப்படுவதோடு பூரண வருமான கூற்றின் மூலம் ஏற்றுக் கொள்ளப்படும். இதுவானது நஷ்டஈடு செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கும் ஆகுசெலவுக்கு ஏற்றவாறு உரிய காலத்தில் கவனத்திலெடுக்கப்படும்.சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்களுக்குரிய அரசாங்க உதவிக்கொடுப்பனவுகள் அரசாங்கத்தினால் ஒத்தி வைக்கப்பட்ட உதவிக்கொடுப்பனவுகளாக நடைமுறை சாராத வரவுகளில் சேர்க்கப்படும் . இவை பூரண வருமான கூற்றில் அந்த வருமான சொத்துக்களில் எதிர்பார்க்கும் ஆயுட்காலம் அடிப்படையிலான நேர் கோடாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

நிதிசாராத உதவிக் கொடுப்பனவுகள் நிதிசாராத சொத்துக்களினது நியாயபூர்வ விலைகளுக்கமைய கணக்கிடப்படுவதோடு கொடுப்பனவுகள் மற்றும் சொத்துக்களின் நியாயபூர்வ பெறுமதி அதற்கேற்ப கணக்கு வைக்கப்படும்.

### 2.15 நடைமுறை மற்றும் பின்னுரிமை வரிப் பொறுப்புக்கள்

உரிய காலப்பகுதியின் வரிகளுக்காக செலவு செய்யப்படும் நிதியோடு நடைமுறையற்ற மற்றும் பின்னுரிமை வரிகள் ஒன்றுசேர்க்கப்படுகின்றன. ஏனைய பூரண வருமானங்களில் ஏற்றுக்கொள்ளப்படும் விடயங்களுக்குரிய அளவு தவிர்ந்த பூரண வருமான கூற்றில் வரிகளாக ஏற்றுக்கொள்ளப்படும். இந்த சந்தர்ப்பத்தில் வேறு பூரண வருமானம் ஏற்றுக்கொள்ளப்படுகையில் வரியும் ஏற்றுக்கொள்ளப்படும்.

தற்போது அமுலில் இருக்கும் வருமான வரிக் கட்டணங்கள் அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் முடிவில் வரிச் சட்டம் அடிப்படையில் கணக்கிடப்படும். அதன்போது அதிகாரசபையுடன் தொடர்புடைய துணை நிறுவனங்கள் மற்றும் உழைக்கும் வரி செலுத்தக்கூடிய வருமானம் கணக்கிடப்படும். அதிகாரங்களுக்கு வரி செலுத்தப்பட எதிர்பார்க்கும் நிதி தகுந்தவாறு முகாமைத்துவத்தினால் நிர்வகிக்கப்படும்.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களினது வரி அடிப்படை மற்றும் அவை நிதிசார் கூற்றுக்களில் முன்கொண்டு செல்லப்படுகையின் மாற்றத்தின் மூலம் எழும் தற்காலிக ஏற்றத்தாழ்வுகளின் மீது பின்னுரிமை வரிப் பொறுப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். சொத்து ஒன்றின் அல்லது வரவு ஒன்றின் அடிப்படை அங்கீகரித்தலின் போது எழும் சந்தர்ப்பங்களில் பின்னுரிமை வரிப் பொறுப்புக்கள் கணிப்பிடப்பட மாட்டாது. மேலும் கொடுக்கல் வாங்கல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் வர்த்தக தொடர்பு தவிர்ந்த ஏனைய கொடுக்கல் வாங்கல் கணிப்பீடு அல்லது செலுத்த வேண்டிய வரி அல்லது நட்டம் கணிப்பீட்டுடன் தொடர்புபடும். அறிக்கை செய்யப்படுதலுக்கு உட்படும் காலப்பகுதியின் முடிவில் சட்ட உரிமையாக்கப்பட்ட வரி அளவுகள் பயன்படுத்தப்பட்டு பின்னுரிமை வரிப் பொறுப்புக்கள் நிர்ணயிக்கப்படும். உரிய பின்னுரிமை வரிப் பொறுப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் போது அல்லது பின்னுரிமை வரிப் பொறுப்புக்கள் முடிவுற்றதன் பின்னர் பயன்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும்.

எதிர்கால வரிகளில் கிடைக்கப்பெறும் இலாபம் தற்காலிக மாற்றங்களுக்கு தாக்கம் ஏற்படுத்தும் போது பின்னுரிமை வரிப் பொறுப்பு சொத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

சட்டரீதியாக செயற்படுத்தக்கூடிய உரிமையொன்று இருக்கையில் பின்னுரிமை வரிச் சொத்துப் பொறுப்புக்கள் ஒன்றுக்கொன்றுடன் ஈடுசெய்யப்படும். தற்போது இருக்கும் வரிப் பொறுப்புக்கள் மற்றும் வருமானத்திற்கு பின்னுரிமை வரிச் சொத்துக்கள் பொறுப்புக்கள் அந்த வரி அதிகாரங்களினால் அமுல்படுத்தப்பட்டிருக்கையில் இவ்வாறு செய்யப்படும்.

### 2.16 ஊழியர்களுக்கான அனுகூலங்கள்

குழுமத்திற்கான அனுகூலங்கள் மற்றும் சம்பந்தப்படும் கொடுப்பனவு முறை தொடர்பில்குறித்த திட்டங்கள் உள்ளன.

**அ) குறித்த பங்களிப்புத் திட்டம்**

குறித்த கொடுப்பனவுத் திட்டமானது பின்னரான சேவை அனுகூல திட்டமொன்றாக இருப்பதோடு இதன் கீழ் குழுவினால் வேறு நிறுவனமொன்றுக்கு குறிப்பிட்ட கொடுப்பனவு செலுத்தப்படுகின்றது. மேற்கொண்டு செலுத்தப்படுவதற்கான சட்டரீதியான அல்லது ஏனைய குறிப்பிட்ட பொறுப்புக்கள் நிறைவேற்றுவதற்கு குழு பொறுப்பு வகிக்காது. இந்த நிதி செலுத்தப்பட வேண்டிய காலம் வரும்போது ஊழியர்களின் அனுகூலமாக இக்கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளப்படும்.

ஊழியரின் மொத்தச் சம்பளத்தில் 15% ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் 3மூ ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் குழுவினால் செலுத்தப்படும்.

**ஆ) குறித்த அனுகூல திட்டம்**

அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் முடிவில் குறித்த அனுகூல திட்டத்தின் தற்போதைய பெறுமதியானது குழுவின் பொறுப்பாகவிருக்கும், குறித்த அனுகூல திட்டம் வீச்சு அலகு முறை பயன்படுத்தப்படும் சுயாதீனமாக தயாரிக்கப்பட்டு பெறுமதியின் மீது வருடாந்தம் கணிப்பிடப்படுகின்றது. நிகழ்கால மற்றும் சென்ற காலப்பகுதிக்கான சேவைகளுக்காக ஊழியரினால் உழைக்கப்பட்ட மதிப்பிடப்பட்டுள்ள எதிர்கால அனுகூலங்கள் கழிக்கப்படுவதன் மூலம் அனுகூல பொறுப்பின் நிகழ்கால பெறுமதி நிர்ணயிக்கப்படுகின்றது..

அனுபவரீதியான சீர்செய்தல்கள் மற்றும் ஆயுள் கணிப்புவகை வழிகாட்டல்களின் மாற்றங்களினால் எழும் ஆயுள் கணிப்பு வகையின் கிடைக்கப்பெறுதல்கள், நட்டங்கள் அவை தொடர்படும் மொத்த வருமானக் கூற்றில் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஓய்வு பெறுதலின் பொறுப்புகளுக்கு வெளியிலிருந்து கிடைக்கப்பெறும் நிதி பயன்படுத்தப்பட மாட்டாது.

**இ) குறுகிய கால ஊழியர் அனுகூலம்**

ஊழியரினால் சம்பந்தப்பட்ட சேவைகளுக்கு வழங்கும் நிதி கழிக்கப்படுவதன் மூலம் குறுகிய கால ஊழியர் அனுகூல பொறுப்புக்கள் கணிக்கப்படுகின்றன.

**2.17 ஏற்பாடுகள் மற்றும் சடுதியான பிணைப்புகள்**

அளவுரீதியான குறைத்தல்கள், சட்டரீதியான வேண்டுகோள் மற்றும் ஏனைய செலவினங்களுக்கான ஏற்பாடுகள் ஏதாவதொரு சென்றகால நிகழ்வொன்றின் பயனாக சட்டரீதியானதும் பிரயோசனமுள்ள பொறுப்பாக ஏற்றுக்கொள்ளப்படும். அந்த நிதியானது நம்பிக்கையூட்டும் வகையில் மதிப்பிடப்படுவதன் மூலம் குழுவிற்குரிய பொருளாதார வளங்கள் வெளியே செல்லப்பட முடியும்.

அறிக்கை செய்யப்படும் திகதிக்குரிய மிகவும் நம்பிக்கையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நிகழ்கால பொறுப்புக்கள் செழுமையாக்கப்படுவதற்குத் தேவையான மதிப்பிடப்படும் செலவுக்கான ஏற்பாடுகள் கணிப்பிடப்படும். மேலும் நிகழ்கால பொறுப்புக்கள் தொடர்பான இடர்நேர் மற்றும் நிச்சயமற்ற சந்தர்ப்பங்களும் இதனுள் அடங்கும்.

வளங்கள் வெளியே செல்லலின் தன்மை இல்லையெனில் அனைத்து சடுதியான பிணைப்புக்கள் நிதிசார் கூற்றுக்களின் குறிப்பில் காட்டப்படும்.

**2.18 வருமானம் இனங்காணுதல்**

கிடைக்கப்பெற்றுள்ள அல்லது கிடைக்கப்பெறக் கூடிய சாத்தியத்திற்குரிய நியாயமான பெறுமதி வருமானம் கணக்கிடப்படுகையில் கவனத்திற்கொள்ளப்படும் இவ்வாறான நிறைவேற்றப்பட்ட சேவைகளுக்காக கிடைக்கப்பெற வேண்டிய நிதியானது. கழிக்கப்பட

வேண்டிய தூய நிதிப் பெறுமானத்தில் சேர்க்கப்பட்ட வரி மற்றும் தேச நிர்மாண வரி போன்ற விடயங்களின் கீழ் இவை குறிப்பிடப்பட்டுள்ளன. வருமானத்திற்குரிய நிதி நம்பிக்கையூட்டும் வகையில் கணிப்பிடப்படுவதன் மூலம் எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் குழுவை நோக்கிச் செல்லும் நிலையில் குழுவினால் வருமானம் ஏற்றுக்கொள்ளப்படும்.

வருமானம் ஏற்றுக்கொள்ளப்படும் பின்வரும் வழிகாட்டல்கள் ஒவ்வொரு அடையாளம் காணப்படும் சேவைகளின் வகைகளுக்கேற்ப பயன்படுத்துவது குழுவினால் அனுசரித்து செல்லப்படும்.

**அ) தரையிறக்கல் மற்றும் ஒப்படைத்தல் சேவைகள்**

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிப் பொருட்களின் கையாளல் தொடர்பில் இக்குழுவினால் ஏற்றுதல், இறக்குதல் களஞ்சியப்படுத்தல் போன்ற சேவைகள் நிறைவேற்றப்படுகின்றன. இந்த சேவைகள் விற்பனை சம்பந்தப்பட்ட வருமானம் அவை நிறைவேற்றப்பட்ட காலப்பகுதிக்கேற்ப கணிப்பிடப்படுகின்றது. மேலும் பூர்த்தி செய்யப்பட்ட பணி அல்லது கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற சேவைகளின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன.

**ஆ) கப்பலோட்டம் மற்றும் தொடர்புபடும் சேவைகள்**

இலகுவான சேவைகள், நுழைவுக் கட்டணம் , காலாவதியாகும் கட்டணம், வழிகாட்டிக் கட்டணங்களிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானம் அவை கிடைக்கப்பெறும் இடத்திற்கேற்ப அடையாளம் காணப்படுகின்றது. அதாவது கப்பல் வருகை தரும் இடமாகும். அந்த சேவைகள் நிறைவேற்றப்பட்ட காலப்பகுதிக்கேற்ப கப்பலோட்டம் மற்றும் தொடர்புபடும் சேவைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் ஏற்றுக்கொள்ளப்படும் சம்பந்தப்பட்ட பணி அல்லது கொடுக்கல் வாங்கல் நிறைவடைதலின் மீதும் நிறைவேற்றப்பட்ட குறிப்பிட்ட சேவைகள் மதிப்பிடப்படுதலின் அடிப்படையிலும் இது அமைந்திருக்கும்.

**இ) கப்பல் சுமை**

கொள்கலன் மற்றும் மரபுரீதியான கையாளல் சேவைகளுடன் தொடர்புடைய கப்பல் சுமை வருமானம் அந்த சேவைகள் நிறைவேற்றப்பட்ட காலப்பகுதிக்கேற்பவாறு ஏற்றுக்கொள்ளப்படும். சம்பந்தப்பட்ட பணி அல்லது கொடுக்கல் வாங்கல் நிறைவடைதலின் மீதும் நிறைவேற்றப்பட்ட குறிப்பிட்ட சேவைகள் மதிப்பிடப்படுதலின் அடிப்படையிலும் இது அமைந்திருக்கும்.

**ஈ) அரச இறைமைக் கட்டண வருமானம்**

உரிய உடன்பாட்டில் ,அடங்கிய ஏற்பாடுகளுக்கேற்ப அவை ஒன்றுசேரும் அடிப்படையின் மீது அரச இறைமைக் கட்டண வருமானம் ஏற்றுக்கொள்ளப்படும். மொத்த பொருளாதார கொள்கலன் அளவு தொடர்பில் உடன்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்காக உடன்பட்ட “இருபது சம அலகுகளின்” கட்டணங்களுக்கேற்ப எஸ்.ஏ.ஜீ.ரீ முனைய நிறுவனத்திலிருந்து கிடைக்கப்பெறும் இறைமைக் கட்டணம் நிர்ணயிக்கப்படும்.

**உ) வட்டி வருமானம்**

பயனான வட்டி முறை பயன்பாட்டின் மீதான வட்டி வருமானம் ஏற்றுக்கொள்ளப்படும்.

**ஊ) பங்கிலாப வருமானம்**

கொடுப்பனவு கிடைக்கப்பெறுதல் பற்றியதான உரிமை நிலைநிறுத்தப்பட்டதன் பின்னர் பங்கிலாப வருமானம் ஏற்றுக்கொள்ளப்படும்.

**எ) குத்தகை மற்றும் வாடகை வருமானம்**

முதலீட்டுச் சொத்துக்களிலிருந்து கிடைக்கப்பெறும் குத்தகை மற்றும் வாடகை வருமானம், குத்தகை காலப்பகுதியினுள் ஒன்று சேர்ந்த நிதி அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்படும்.

**ஏ) சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்கள் விற்கப்படுகையில் கிடைக்கப்பெறும் இலாப நஷ்டங்கள்**

முன்கொண்டு செல்லப்படும் நிதியோடு திருத்தம் செய்யப்பட்டதன் முழு வருமானம் பற்றிய கூற்றின் ஏற்றுக்கொள்ளலிற்கு அமைய இவ்வாறான விற்கப்படுகையில் கிடைக்கப்பெறும் இலாபம் அல்லது நஷ்டம் நிர்ணயிக்கப்படும்.

**2.19 செலவினம்**

கையாளல் மேற்கொள்ளப்படுகையில் ஏற்படும் அனைத்து செலவினங்களும் அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் இலாபத்தினுள் ஒன்றுசேர்க்கப்படும்.

**2.20 அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் பின்னரான சம்பவ நிகழ்வு**

அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் பின்னர் நிகழும் அனைத்து பொருட்களுக்குரிய பொறுப்புக்கள் தொடர்பான மாற்ற நிகழ்வுகள் கவனத்திற் கொள்ளப்பட்டு அதற்குத் தேவையான திருத்தங்கள் அல்லது தெரிவித்தல்கள் நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன.

**2.21 பொறுப்புக்கள்**

அனைத்து பொருட்களுக்குரிய பொறுப்புக்கள் இனங்காட்டப்பட்டு அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**2.22 முக்கிய கணக்குகளின் மதிப்பிடல்கள் மற்றும் தீர்மானங்கள்**

நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையின் போது முகாமைத்துவத்தினால் சொத்துக்கள்,பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம் கணிக்கப்படுதல், ஏற்றுக்கொள்ளப்படுதலின் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் வழிகாட்டிகள் கவனத்திலெடுக்கப்படுகின்றன.

2.21.1 நிதிசார் கொள்கைகள் பயன்படுத்தப்படுகையின் பின்வருவன சில முக்கியமான தீர்மானங்கள் ஆகும். இவை நிதிசார் கூற்றுக்களில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

**(அ) பின்னுரிமை வரிச் சொத்துக்களை ஏற்றுக்கொள்ளல்**

எதிர்கால வரிகளுக்குட்படக் கூடிய வருமானத்தின் சாத்தியத்தன்மை மதிப்பீடு செய்தல் மற்றும் பின்னுரிமை வரிச் சொத்துக்கள் பயன்படுத்தலின் அடிப்படையாகும்.

2.22.2 சொத்துக்கள்,பொறுப்புக்கள், செலவினம் ஏற்றுக் கொள்ளல் மற்றும் கணித்தலின் மீது முக்கிய தாக்கம் ஏற்படும் மதிப்பீடுகள் மற்றும் வழிகாட்டிகள் பற்றியதான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) தேய்மான சொத்துக்கள்பற்றியதான பயனான ஆயுட்காலம்**

முகாமைத்துவத்தினால் அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியினுள் தேய்மானமடையும் சொத்துக்களினது பயனான ஆயுட்காலம் மதிப்பிடப்படுதல் மீளாய்வு செய்யப்படும். சொத்துக்களினது எதிர்பார்க்கும் பொருளாதார பயன்பாடு மீது இது அமைந்திருக்கும். இந்த மதிப்பிடல்களின் நிச்சயமற்ற தன்மை தொழில்நுட்ப காலப்பகுதிகளுடன் தொடர்புபடும். இந்த தொழில்நுட்ப காலப்பகுதிக்கமைய காலாவதியாகும் மென் பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்களினது பயன்பாடு மாற்றமடையலாம்.

**(ஆ) வரைவிலக்கணமளிக்கப்பட்ட அனுகூல திட்டம்**

ii. சலுகை உடன்படிக்கையின் பிரகாரம் HIPG கம்பனியின் பங்கு மூலதனத்தின் 85% சைனா மேர்சன்ட் போர்ட் கம்பனியினால் வாங்கப்பட்டுள்ளதோடு 2017.12.31 ஆம் திகதி வரை ரூபா 104,960,332,400 தொகை கிடைக்கப்பெற வேண்டியுள்ளது. படாத மதிப்பீடு செல்லுபடியற்றது).

iii. ஹம்பாந்தோட்டை துறைமுகத்துடன் தொடர்புடைய அசையா சொத்துக்களின் குத்தகை வாடகை உரித்துக்கள் சலுகை உடன்படிக்கை நிபந்தனையின் படி HIPG மற்றும் HIPS கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

போட் கம்பனி விலைக்கு வாங்கியதோடு ரூபா 104,960,332,400 2017.12.31 திகதிக்கு கிடைக்கப்பெறுதல் வேண்டும்.

குத்தகை வாடகை உரித்துக்களைக் ஹம்பாந்தோட்டை இன்டர்நெஷனல் குரூப் ஹம்பாந்தோட்டை இன்டர்நெஷன் போர்ட் சேர்விசஸ் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டன.

2. 2017 டிசெம்பர் 12 ஆம் திகதிய பணிப்பாளர் சபையின் இல PA/HD/28 தீர்மானத்தின் படி பின்வரும் விடயங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

i. இலங்கை துறைமுக அதிகாசரபையின் பட்டியலிடப்பபட்ட பொருட்கள் HIPS கம்பனிக்கு பொறுப்பளிக்கப்படுவதற்கு

ii. வெவ்வேறான ஒப்பந்தங்கள் மீதான ஆனால் குதைத்தகை வாடகை பிரதேசத்தினுள அமைந்துள்ள இலங்கை துறைமுக அதிகார சபையினால் அபிவிருத்திச் செய்யப்பட்டுள்ள அசையா சொத்துக்களை பொறுப்பளிப்பதற்கு

iii. அரசாங்க காணிகள் குத்தகை வாடகை உரித்துகள் விலைமதிப்பு திணைக்களத்தினால் உத்தேச குத்தகை வாடகை பயன்பாட்டில் பெறப்பட்ட பெறுமானம் மீது HIPG மற்றும் HIPS கம்பனிகளுக்கு வழங்குவதற்கு

**53 சொத்துக்கான பயன்படுத்தக்கூடிய ஆயுட்காலம் தொடர்பாக மீளாய்வு**

மிதக்கும் மற்றும் கையாளல் உபகரணங்கள் இ பணியாளர்களின் உத்தியோகப்பூர்வ இல்லங்கள் மற்றும் ஏனைய கட்டடங்கள்இ கணனி மென் மற்றும் வன் பொருள்கள் மற்றும் வாகனங்களின் பயன்படுத்தக்கூடிய ஆயட்காலம் வருடத்தினுள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளதோடு புத்தகங்களில் தூய பெறுமதி அதற்கேற்ப சீர்செய்யப்பட்டுள்ளது. இலங்கை துறைமுக அதிகார சபையின்

**54 ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் கொடுக்கல் வாங்கல்கள் நிறைவு செய்யும் திகதி**

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் நிதிக் கூற்றுக்கள் சலுகை உடன்படிக்கை அமுலாகும் திகதியான 2017.12.09 வரை நடைப்பெற்ற கொடுக்கல்வாங்கல்கள் கவனத்திலெடுக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

**55 ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் மூலதன சொத்துக்களின் ஆயுட்காலம்.**

HIPG மற்றும் HIPS கம்பனிகளிடம் 99 காலப்பகுதி குத்தகை வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள சொத்துக்களின் மதிப்பிடப்பட்டுள்ள ஆயுட்காலமானது குத்தகை வாடகையில் கிடைக்கப்பெறும் வருமானம் இக்காலப்பகுதியில் செலுத்தப்படுவதால் 100 வருடங்களாக கருதப்படுகின்றன.

**56 ஹம்பாந்தோட்டை துறைமுக பிரதேசத்துள் அமையப்பெறாத காணிகளுக்கான நட்டஈடு செலுத்துதல்**

நட்டஈடு செலுத்தப்பட்டுள்ளது. குறித்த காணி முதலீட்டுச் சபைக்குரியதால் இதுவானது இலங்கை துறைமுக அதிகார சபையின் புத்தகங்களில் மூலதனமிடப்படவில்லை.

**57 காலி துறைமுக அபிவிருத்தி செய்திட்டம் (SLP-85 கடன்)**

14,495 மில்லியன் யென் JICA கடன் தொகையில் 458 மில்லியன் யென் காலி துறைமுக தொடர்பிலான சாத்திய வள ஆய்வை மேற்கொள்வதற்கு ஈடுப்படுத்தப்பட்டுள்ளதோடு குறித்த தொகை இதுவரை மூலதனமிடப்படவில்லை.

**58 முதலீட்டுச் சொத்துக்களின் நியாயப்பூர்வ பெறுமதி தீர்மானிக்கப்படாமைக்கான காரணம்**

முதலீட்டுச் சொத்துக்கள் என்பது துறைமுக உட்கட்டமைப்பு வசதிகளாகும். பிரதான துறைமுகத்திலிருந்து கடல்சார் அபிவிருத்திப் பணிகள் மற்றும் அமைவுகள் உள்ளடங்கும். அண்மைக்காலமாக இந்நிலையான துறைமுக அபிவிருத்தி செய்திட்டங்கள் எதுவும் நடைமுறையில் இல்லை. எனவே இந்த முதலீட்டுச் சொத்துக்கள் சந்தை பெறுமானத்தைக் கணிப்பிடுவதற்கு தர்காீதியான அடிப்படை இல்லாததால் இருக்கும் தகவல்களுக்கேற்ப ஆகுசெலவு முறை பயன்படுத்தப்படும்.

**59 பிரதான அபிவிருத்தி செய்திட்டங்கள்**

91,651,500.00 அமெரிக்க டொலர் தொகைக்கான திருத்த வைப்பானது கிழக்கு கொள்கலன் முனைய கடன் தொகை செலுத்தப்படுவதற்கும் ஜயா கொள்கலன் முனையத்தின் ஆம் கட்டத்தின் பாரந்தூக்கிகள் கொள்வனவு செய்வதற்கும் பேணிச்செல்லப்படுகின்றது.

**60 சொத்துக்கள் சீர்ச்செய்யும் கணக்கு**

சொத்துக்கள் சீர்ச்செய்யும் கணக்கு என்பது மூலதனமிடப்படும் வரை திகதியை வைத்துக்கொள்வதற்கு வழங்கப்படும் தற்காலிக கணக்கெடுத்தலாகும். பொருட்கள் சம்பந்தப்பட்ட பகுதியிடம் வெளியோர்கும் வரை மற்றும் மூலதனமிடப்படுவதற்கு நிதி பகுதியிடம் ஆவணமொன்றை கிடைக்கப்பெறும் வரை சொத்துக்களை சீர்செய்யும் கணக்கிலிருந்து மீதி பேணிச்செல்லப்படும்.

**61 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் ஒப்பீடு தொடர்பான தகவல்கள்**

2017ஆம் ஆண்டின் திகதி உரித்துகளின் ஹம்பாந்தோட்டை உள்ளடங்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளதோடு கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. 2017.07.29 ஆம் திதியின் சலுகை உடன்படிக்கை பிரகாரம் ஹம்பாந்தோட்டை துறைமுகம் அரச- தனியார் சூட்டுரிமை அடிப்படையில் இலங்கை மேற்கொள்கிறது. இதனால் 2018/ 2017 திகதி உரித்துக்களுள் மிகவும் சிறந்த ஒப்பீட்டை மேற்கொள்வதற்கு ஹம்பாந்தோட்டை 2017 ஆண்டின் நிதிக் கூற்றுக்களிலிருந்து துறைமுகம் நீக்கப்பட்டுள்ளது.

2018 டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்கானது

## 46 தொடர்புபடும் தரப்பினர்களை வெளிப்படுத்துதல்

இலங்கை பொது திறைசேரி , அரசாங்கத்துடன் தொடர்புபடும் நிறுவனங்கள் ', இணை கம்பெனிகள் , துணை கம்பனிகள் மற்றும் பிரதான முகாமைத்துவ அலுவலர்கள் அதிகாரசபையுடன் தொடர்புபடும் தரப்பினர்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 46.1 பிரதான முகாமைத்துவ அலுவலர்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் 24 ஏற்ப (LKA 24) " தொடர்புப்படும் தரப்பினர்களை வெளிப்படுத்துதல் , திட்டமிடுதல் ,ஆலோசனை மற்றும் நேரடியாகவும் மறைமுகமாகவும் நிறுவனங்களின் பணிகளை நிருவகிக்கும் பொறுப்புடைய அலுவலர்கள் பிரதான முகாமைத்துவ அலுவலர்கள் ஆவார்கள். அதன் படி நிறைவேற்று மற்றும் மற்றும் நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்கள் பிரதான முகாமைத்து அலுவலர்களாக வகையீடு செய்யப்பட்டுள்ளனர்.

| பிரதான முகாமைத்துவ அலுவலர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் பின்வருமாறு | 2018 | 2017 |
|---|---|---|
| பணிக்கொடை மற்றும் ஏனைய குறகிய கால சலுகைகள் | 38,888,689 | 32,138,677 |
| நிலுவை மீதி - கடன் மற்றும் முற்கொடுப்பனவு | | - |

### 46.2 சம்பந்தப்படும் தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்

அதிகாரசபையினால் சம்பந்தப்பட்ட விசேட அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கள் விபரங்கள் பின்வருமாறு.

| நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பணிப்பாளர்களின் பெயர்கள் - முகவர்களின் பெயர் | கொடுக்கல் வாங்கல்களின் தன்மை | கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி | செலுத்த வேண்டியுள்ள மீதி | கிடைக்கப்பெற்றவை |
|---|---|---|---|---|---|---|
| இலங்கையின் பொதுத் திறைசேரி | பிரதான பங்களிப்பு | | வழங்கப்பட்ட கடன் | | | |
| | | | மீள் செலுத்தப்பட்ட கடன் | 5,179,100,598 | | |
| | | | செலுத்தப்பட்ட வட்டி | 1,432,492,758 | | |
| அரசுடன் தொடர்படைய நிறுவனங்கள் | | | இலங்கை துறைமுக அதிகார சபையுடன் கப்பல் முகவர் நிலைய கையாளல்கள். | | | |
| இலங்கை சுங்கம் | தொடர்புபடும் நிறுவனம் | | | 311,180.00 | - | |
| | | | - | - | - | - |
| மீன்பிடி மற்றும் நீரியில் வள அபிவிருத்தி அமைச்சு | தொடர்புபடும் நிறுவனம் | | - | - | - | - |
| வ-ப கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் தகவல் ஆராய்ச்சி நிறுவனம் | தொடர்புபடும் நிறுவனம் | | - | - | - | - |
| அரசுடன் சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்கள் | தொடர்புபடும் நிறுவனம் | | வழங்கப்பட்ட சேவைகள் | | | |
| | | | வழங்கப்பட்ட சேவைகளுக்கான நிதி செலுத்துல் | | | - |
| | | | துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சிற்கான எரிபொருள் வழங்குதல் | 1,824,239 | | 347,078.73 |
| வர்தக கப்பல் செயலக பணிப்பாளர்நாயகம் | | | வர்த்தக செயலகத்திற்கு எரிபொருள் வழங்குதல் | 141,183 | | |
| இலங்கை துறைமுக மற்றும் ஆலொசனை தனியார் கம்பனி | | | கப்பல் எண்ணெய் வழங்குவதற்கான 02 கலங்களை பதிவு செய்யும் கட்டணம் | 141,183 | | 25,608.30 |
| | | | நிறுவை பாலங்களை பதிவுச்செய்யும் கட்டணம் | 100,000 | | |
| | | | வருடாந்த தொன்னளவுக்கான செலுத்த வேண்டிய கட்டணம் | 311,180 | | |
| இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | | | இலங்கை துறைமுக அதிகாரசபையுடனான கப்பல் முகவர் நிறுவனங்களின் கையாளல் | | | |
| வ/ப லங்கா உர கம்பனி | | | இலங்கை துறைமுக அதிகாரசபையுடனான கப்பல் முகவர் நிறுவனங்களின் கையாளல் | | | |
| இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் | | | இலங்கை துறைமுக அதிகாரசபையுடனான கப்பல் முகவர் நிறுவனங்களின் கையாளல் | | | |
| நில அளவை திணைக்களம் | | | அளவைக் கட்டணம் | 8,625 | 1,007,199 | |
| விலைமதிப்பு திணைக்களம் | | | விலைமதிப்பு கட்டணம் | 174,730 | 2,676,800 | |
| இலங்கை துறைமுக மற்றும் ஆலோசனைக் தனியார் கம்பனி | துணைக் கம்பனி | | பெற்றுக்கொள்ளப்பட்ட துப்பரவு சேவைக்கான கட்டணம் | 35,088,429 | 3,862,330 | - |
| | | | சம்பள கொடுப்பணவுகள் | 93,093,026 | 31,468,001 | |
| | | | பெற்றுக்கொள்ளப்பட்ட சேவைகளுக்கான கொடுப்பனவுகள் | 109,687,525 | 10,985,151 | 255,466.77 |
| | | | கப்பல் கையாளல்கள் | 29,726,197 | 3,069,081 | |
| | | | கிடைக்கப்பெற வேண்டிய பங்கிலாபங்கள் | | | |
| | | | காலிமுகதிடலில் கோபுர மேடையை புணரமைத்தல் | - | | |
| வ-ப ஜய கொள்கலன் முனைய கம்பனி | இணைக் கம்பனி | | செலுத்தப்பட்ட நிர்வாகம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின | 293,440,088 | 34,366,364 | - |
| | | | கிடைக்கப்பெற்ற பங்கிலாபம் | 860,000 | | |
| | | | எரிபொருள் வழங்குதல் | 1,190,881 | | 90,576.40 |
| | | | மருந்து வகைகளின் விநியோகம் | 59,801 | | 86,226 |
| | | | தொலைப்பேசி கட்டணம் | 600,000 | | 150,000 |
| வ-ப சவுத் ஏஷியா கேட்வே டேர்மினல்ஸ் தனியார் கம்பனி | துணைக் கம்பனி | | கிடைக்கப் பெற்ற வாடகை | 495,977,115 | - | 41,094,440 |
| | | | கிடைக்கப் பெற்ற இறைமை கட்டணம் | 1,154,499,262 | - | 107,398,457 |
| | | | கிடைக்கப்பெற்ற பங்கிலாபம் | 862,683,694 | - | 0 |
| | | | வழங்கல் மற்றும் பராமரிப்பு சேவைகள் | 825,000 | - | 75,000 |
| | | | | | - | |
| வ-ப இலங்கை நிலக்கரி தனியார் கம்பன | துணைக் கம்பனி | | ஆண்டினுள் எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் மேற்கொள்ளப்படவில்லை | | - | |
| | | | | | - | |
| | | | | | - | |
| கொழும்பு சர்வதேச கொன்கலன் முனைய தனியார் கம்பனி | துணைக் கம்பனி | கலாநிதி பராக்ரம திசாநாயக்க | கிடைக்கப்பெற்ற குத்தகை - வாடகை | 1,447,840,698 | - | |
| | | திரு.பி.ஜி.தசனாயக்க | கிடைக்கப்பெற்ற இறைமைக் கட்டணம் | 1,983,185,107 | - | 108,722,250 |
| | | திருமதி சிரானி வன்னியாராச்சி | கிடைக்கப்பெற்ற மாறுப்படும் வட்டி | 36,669,050 | - | |
| | | | CICT கம்பனியின் முற்கொடுப்பணவு கட்டணம் | 103,534,286 | - | - |
| | | | துறைமுகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள உபகரணங்களின் மாதாந்த பராமரிப்பு | 1,650,000 | - | 150,000.00 |
| | | | கிடைக்கப்பெற்ற பங்கிலாபம் | 1,373,772,086 | | |
| மாகம்புர துறைமுக முகாமைத்துவ கம்பனி | துணைக் கம்பனி | திரு நளின் ஏ எஸ் விக்ரமசிங்ஹ | செலுத்த வேண்டிய நிர்ருவாக கட்டணம் | | 71,819,156 | 5,800,921 |
| | | திருமதி சிரானி வன்னியாராச்சி | * பின்வரும் செலவீனம் கழிக்கப்பட்டதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் சீர்திருத்தப்பட்டுள்ளன. | | | |
| | | | சம்பளம் | | | |
| | | | நீர் | | | |
| | | | மின்சாரம் | | | |
| | | | ஏனையவை | | | |
| | | | ஏனையவை | | | |
| கொழும்பு டொக்யார்ட்ட கம்பனி | பங்கு முதலீடு | | இலங்கை துறைமுக அதிகார சபையுடனான கப்பல் கிடைக்கப்பெற்ற பங்கிலாபம். | 9,481,712.15 | | 72.11 |
| வ-ப ஹம்பாந்தோட்டை இன்டர்நெஷனல் போர்ட் சேர்விசஸ் கம்பனி | | கலாநிதி பராக்ரம திசாநாயக்க | கடலகவியலாளர்களுக்கு செலுத்தப்பட்ட சம்பளம் | | | 4,306,510 |
| | | திரு நளின் ஏ. எஸ் விக்ரமசிங்ஹ | | | | |
| வ-ப ஹம்பாந்தோட்டை இன்டர்நெசனல் போர்ட் குறுப் கம்பனி | | கலாநிதி பராக்ரம திசாநாயக்க | இழுவைக்கரை சேவைகள் | 394,812,657.73 | | |
| | | திரு நளின் ஏ. எஸ் விக்ரமசிங்ஹ | இறைமை கட்டணம் | | | 5,028,366.24 |

**நிதி இடர்நேர் முகாமைத்துவம்**

நிதிக் கூற்றுக்களின் பாவனை காரணமாக அதிகாரசபைக்கு பின்வரும் இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டியேற்படும்.

1. கடன் இடர்பாடு
2. ஒப்புரவு இடர்பாடு
3. சந்தை இடர்பாடு (நிதி மற்றும் வட்டி விகித இடர்நேர்)

அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்கள் சமனான பங்குகளிலான முதலீடுகள் (ஆவண மற்றும் ஆவணப்படுத்தப்படாத), கடன் முறிகளின் மீதான முதலீடுகள், காலத்திற்கேற்ற வைப்புக்கள், நிதி மற்றும் நிதிசார் சந்தை முதலீடுகள் போன்றவற்றைக் கொண்டிருக்கும். காலத்திற்கேற்ற வைப்புக்கள், நிதிசார் சந்தைகளிலான முதலீடுகளின் பிரதான நோக்கம் இயக்கங்களுக்கான ஒப்புரவினை அதிகரித்தலும் பேணிச் செல்வதும் ஆகும். சமனான பங்குகளிலான மற்றும் கடன்முறி காப்புறுதிகளிலான முதலீடுகள், மூலோபாய முதலீடுகளாக இருப்பதோடு வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெறுதல்கள் போன்ற வேறு நிதிசார் ஆவணங்களும் அதன் வியாபார நடவடிக்கைகளின் போது நேரடியாக எழும் வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவையும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் வசமுள்ளன.மேலும் துறைமுக விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்காக இலங்கை அரசாங்கத்திடமிருந்தும் நிதி நிறுவனங்களிடமிருந்தும் பெறப்பட்டுள்ள கடன்களுக்கான வட்டிகள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

**1. கடன் இடர்பாடு**

கடன் இடர்பாடு என்பது வாடிக்கையாளரொருவர் உடன்படிக்கை மீதான பொறுப்புக்களை செலுத்தத் தவறும் பட்சத்தில் , அதிகாரசபைக்கு ஏற்படக் கூடிய நிதிசார்ந்த நஷ்டம் கடன் இடர்பாடாகும். இலங்கை படைகள், ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் முதலீட்டு கடன் முறிகள் உள்ளிட்ட வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டியவற்றிலிருந்து பிரதானமாக இது எழுகின்றது.

**வியாபார கிடைக்கப்பெறுதல்கள்**

இலங்கை துறைமுக அதிகாரசபையானது கப்பல் முகவர்கள் மற்றும் அரச நிறுவனங்களோடு பிரதானமாக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. சென்ற கால அனுபவமும் கப்பல் முகவர்களினது நிதி சார்ந்த சான்றுறுதி போன்ற ஏனைய காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டு கப்பல் முகவர்களின் கடன் நிலைமையை முகாமைத்துவம் மதிப்பிடுகின்றது. இதற்குப் புறம்பாக முகாமைத்துவ குழுவிலும் பணிப்பாளர் சபை கூட்டத்திலும் இருக்கும் அடிப்படையின் மீது செலுத்துவதற்குள்ள நிலுவைகளும் மேற்பார்வை செய்யப்படுகின்றன.

வர்த்தக கிடைக்கப்பெறுதல்கள் தொடர்பில் ஏற்படும் நஷ்ட மதிப்பீடுகளில் காண்பிக்கப்படும் பாதிப்பேற்படுத்துதல்களுக்கான ஏற்பாடுகள் (நிதிசார் கூற்றுக்களின் 2.7 ஆம் குறிப்பு விபரத்தை பார்க்கவும்) இலங்கை துறைமுக அதிகார சபையினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. விசேட வாடிக்கையாளர்களுக்கு வெவ்வேறாக மதிப்பிடப்படுதலில் அவர்களுக்கு தனியாக ஏற்படும் பாதிப்புகளுக்கான நஷ்டங்கள் விசேடமில்லாத வாடிக்கையாளர்களுக்கான ஒட்டு மொத்த பாதிப்புகளின் ஏற்பாடுகள் பிரதான காரணிகளாகும். செலுத்துதல் முறையின் வரலாற்று தரவுகளைக் கொண்டு ஒட்டுமொத்த பாதிப்பு ஏற்பாடுகளின் நஷ்டங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. ஏற்படுத்தப்பட்ட பாதிப்பேற்படுத்தும் கொள்கைக்கேற்ப பாதிப்பேற்படுத்தும் நஷ்டங்கள் அளவீடு செய்யும் பொருட்டு இலங்கைப் படைகள், ஏனைய அரச நிறுவனங்கள், வழக்கு நடவடிக்கைகளுக்கு உட்பட்டுள்ள கப்பல் முகவர்கள் மற்றும் விசேட கப்பல் முகவர்கள் தொடர்பில் தனிப்பட்ட வகையில் கலந்தாலோசிக்கப்பட்டன. ஏனையவை ஒட்டுமொத்தமாகவும் கலந்தாலோசிக்கப்பட்டன.. வியாபார கிடைக்கப்பெற வேண்டியவை மற்றும் பாதிப்பேற்படுத்தும் நஷ்டங்களுக்கான ஏற்பாடுகளின் விபரங்களுக்கு தயவு செய்து நிதிசார் கூற்றுக்களின் 12 ஆம் குறிப்பைப் பார்க்கவும்.

**ஏனைய நிதிசார் சொத்துக்கள்**

காலத்திற்கேற்ற வைப்பு நிதி, காசு,காசு சம மதிப்புக்கள் மற்றும் கடன் முறிகளின் மூலதன முதலீடுகளினால் அதிகாரசபை எதிர்கொள்ளும் ஏனைய நிதிசார் சொத்துக்களிலிருந்து எழும் கடன் இடர்பாட்டினுள் இது அடங்கும். இந்த நிதிசார் ஆவணங்களில் முன்கொண்டு வரும் நிதிக்குச் சமனான உச்ச வெளிப்பாட்டுடன் தரப்பினர்களினது உடன்பாடுகளின் புறக்கணித்தல்களின் மீது எழும் கடன் இடர்நேர் நிலைமையினை அதிகாரசபை நிர்வகிக்கின்றது. அரச நிதி நிறுவனங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுடன் பிரதானமாக அதில் நிதி ஈடுபடுத்துதலின் மூலம் இந்த நிதிசார் ஆவணங்கள் தொடர்பில் அதிகாரசபை அதன் கடன் இடர்நேர் நிலைமையினை முகாமைத்துவம் செய்கின்றது.

## 2. ஒப்புரவு இடர்பாடு

அதிகாரசபைக்குரிய நிதிசார் பொறுப்புக்களை நிறைவேற்றும் ஆற்றல் இல்லாமல் போகுதல் ஒப்புரவு இடர்பாடு எனப்படும். பொதுவான மற்றும் எதிர்பாராத சந்தர்ப்பங்களில் பொறுப்பேற்க முடியாத நஷ்டம் எதிர்நோக்காமல் அல்லது அதிகாரசபையின் புகழ் நாமத்திற்கு பாதிப்பேற்படுத்தாத முறையில் கவனம் எடுக்க முடியுமான சகல சந்தர்ப்பங்களிலும் உரிய நேரத்தில் நிதியை செலுத்தப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் செலுத்தப்படுவதற்கு போதுமானளவு நிதி வைத்திருத்தல் அதிகாரசபையின் ஒப்புரவு முகாமைத்துவம் செய்யும் முறையாகும்.

வருடந்தோறும் இயக்க காசுப் பாய்ச்சல் மற்றும்( மீண்டு வரும்.'. வரவு செலவு) மூலதன வரவு செலவுகளின் முன்மொழிவுகள் தயார் செய்யப்படுகின்றன. இயக்க தேவைப்பாடுகளுக்குப் போதுமான நிதி அதிகாரசபையில் உள்ளதென்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு மீண்டு வரும் வரவு செலவு மற்றும் மூலதனம் ஆகிய இரண்டும் ஒப்புரவு தேவைப்பாடுகளும் நிதிப் பகுதியினால் கண்காணிக்கப்படுகின்றன. அறிக்கைகள் தயாரிக்கப்படும் காலப்பகுதியின் இறுதியில் ரூபா 37,870,049,694.00 (2017: ரூபா 23,260,284,628.21 விற்கு அதிகாரசபையினால் காலத்திற்கேற்ற வைப்புக்கள், குறுகிய கால அரசாங்க பிணைமுறிகள் மற்றும் ஏனைய ஒப்புரவு சொத்துக்கள் பேணிச் செல்லப்பட்டன.

உடன்பாடுகளின்படி முதிர்வடையும் திகதியில் அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் இறுதி நாளின் கால எல்லை அடிப்படையாகக் கொண்ட அதிகாரசபையின் நிதிசார் பொறுப்புக்களினது முதிர்ந்த பகுப்பாய்வுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன. உடன்பாட்டின் மீதான கழிவு கிடைக்கப்பெறாத காசுப் பாய்ச்சல்கள் அட்டவணையின் பெறுமானங்களில் தெரிவிக்கப்படுகின்றன.

| நிதிசார்ந்த பொறுப்புக்கள் | 2018 டிசெம்பர் 31 | | | 2017 டிசெம்பர் 31 மீள்குறிப்பிடப்பட்ட | | |
|---|---|---|---|---|---|---|
| | ஒரு வருடத்திற்கு குறைந்த | ஒரு வருடத்திற்கு கூடிய | மொத்தம் | ஒரு வருடத்திற்கு குறைந்த | ஒரு வருடத்திற்கு கூடிய | மொத்தம் |
| கடன் வாங்குதல் அரசாங்கம் | 6,645,377,816 | 59,690,100,248 | 66,335,478,064 | 5,198,526,722 | 54,924,342,666 | 60,122,869,388 |
| கடன் வாங்குதல் நிதி நிறுவனங்கள் | 1,960,389,294 | 10,924,411,551 | 12,884,800,845 | 1,555,871,084 | 11,360,327,710 | 12,916,198,794 |
| வர்த்தக மற்றும் ஏனைய கடனாளிகள் | 1,478,725,009 | - | 1,478,725,009 | 105,914,892,043 | - | 105,914,892,043 |
| **மொத்தம்** | **10,084,492,118.84** | **70,614,511,799** | **80,699,003,918** | **112,669,289,849** | **66,284,670,376** | **178,953,960,225** |

**3. சந்தை இடர்பாடு**

அதிகாரசபையின் வருமானத்திற்கு அல்லது நிதிசார் ஆவணங்களில் கொண்டு வரப்பட்ட தடுத்து வைக்கப்பட்டுள்ள பெறுமானத்திற்கு தாக்கமேற்படுத்தும் வெளிநாட்டு பரிமாற்ற விகிதங்கள் மற்றும் வட்டி விகிதங்கள் போன்ற சந்தை விலைகள் மாற்றமடையும் நிலை சந்தை இடர்பாடாகும்.

**3.1 நிதி இடர்பாடு**

அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியினுள் இலங்கை மத்திய வங்கியானது அ.டொலருக்கு சார்பாக இலங்கை ரூபாவினை மிதக்க இடமளித்தலின் பின்னர் இலங்கை ரூபாவிற்கு சார்பாக அ.டொலரின் பெறுமதியின் ஏற்றத்தாழ்வினால் அதிகாரசபைக்கு நிதி இடர்நேர் நிலைக்கு முகம்கொடுக்க வேண்டியேற்படும்.கம்பனியின் அநேக கொடுக்கல் வாங்கல்கள் அதில் பயன்படுத்தப்படும் நிதி அலகான இலங்கை ரூபாவினால் நடைபெறுகின்றன. ஆனால் துறைமுக விரிவாக்கல் திட்டங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் சில வங்கிகளினது நிலுவைகள்,கப்பல் முகவர்களிடமிருந்து பெறவேண்டியவை (வ/ப APL இலங்கை தனியார் நிறுவனம்) போன்ற வட்டியுடனான கடன் பெறுதல் வெளிநாட்டு நாணய (யப்பான் யென் மற்றும் அமெரிக்க டொலர்) பயன்பாட்டில் நடைபெறுகிறது.

அமெரிக்க டொலர் மிதப்பதன் பயனாக 2018 ஆண்டின் அறிக்கை செய்யப்படும் காலப் பகுதியில் அமெரிக்க டொலருக்கு சார்பாக இலங்கை ரூபா தேய்வடைந்ததனால் கையாளல்களுக்கான தாக்கம் ரூபா 11,316,830,420.00 ஆக இருந்ததோடு இதுவானது வ/ப APL இலங்கை தனியார் கம்பெனிக்கு வழங்கப்பட்ட சேவைகள், இன்வோயிஸ் இடுதல் மற்றும் பெறப்பட்ட கடன் மீள் செலுத்தப்படுதலில் ஈட்டப்பட்டது. ஆனால் ஒரேயொரு நிதி அலகு ஊடாக நடாத்திச் செல்லப்பட்ட நிதி வைப்புக்கள் மூலம் மீள் செலுத்துதலின் பெறப்பட்ட கடன் மீள் செலுத்துதல் மற்றும் நிதியோட்டத்தின் தாக்கம் குறைக்கப்படுவதற்காக அதிகார சபையினால் ஒரேயொரு நிதி அலகு பயன்படுத்தப்படுகின்றது.

வட்டியுடனான கடன் மற்றும் வெளிநாட்டு நாணய மூலம் காட்டப்பட்டுள்ள கடன் பெறுதல் பற்றியதான தகவல்களுக்கு தயவு செய்து நிதி கூற்றின் இல.21 மற்றும் 22 ஐ பார்க்கவும்.

**வட்டி இடர்நேர்**

அரச முறிகள், வங்கி வைப்புக்கள் நிலையானதும் தொடர் வட்டியுடனான கடன் பெறுதல் தொடர்புபடும் சந்தை வட்டி விகிதத்தின் வித்தியாசங்கள் அதிகார சபையின் வட்டி இடர்நேருக்கு உட்படும்.

ரூபா 60,660,366,547/= (2017 : ரூபா 54,209,363,742/=) அதிகார சபையின் வட்டியுடனான கடன் மற்றும் பெறுதல்களின் வட்டிகளினது விகிதங்களுக்கேற்ப கணக்கிடப்படுவதுடன் ஏனைய நிதியான ரூபா 18,559,912,362 /= (2017 ரூபா 18,829,704,439/=) இன் வட்டி நிலையான வீகிதத்திற்கேற்ப கணக்கிடப்படும்.

அரச வங்கிகள் மற்றும் அரசுடனான வைப்புக்கள் அடங்கலான நிதி மற்றும் வங்கி மீதிகள் அதிகாரசபைக்கு உண்டு. அதிகாரசபையினால் முனைப்பாக வட்டி விகித நகர்வுகள் மேற்பார்வை செய்யப்படுதலின் ஊடாக வட்டி இடர்பாடு கண்காணிக்கப்படுகின்றது.

| கடன் | ரூபா 2108 | ரூபா 2017 |
|---|---|---|
| மாற்றமுறும் செலாவணி விகிதம் | | |
| கொழும்பு துறைமுகத்தை விஷ்தரித்தல் (தெற்க துறைமுகம்) | 47,775,565,702 | 41,293,164,949 |
| முனைய ட்ரக் வண்டி (மலேசியாவின் எக்சிம் வங்கி) | | |
| இலங்கை வங்கி – கிழக்க கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்தல் | 8,933,941,975 | 9,960,970,082 |
| மக்கள் வங்கி நிலையான செலாவணி விகிதம் | 3,950,858,870 | 3,955,228,712 |
| கொழும்பு துறைமுகம் அபிவிருத்தி திட்டம் | 18,559,912,362 | 18,829,704,439 |

**2018.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்கானது**

| கடன் பெயர் | கடன் வழங்கும் நிறுவனம் | நாணயம் | வட்டி விகிதம் | கடன் தொகை | 2108.12.31ஆம் தகதிக்கான | கடன் பெறுதலின் செலவினம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | கடன் நாணயத்தில் | நிலுவை | ரூபா |
| SLP-23 | | JPY | 2.50% | 5,703,407,055 | 703,806,807 | |
| SLP-27 | | JPY | 2.50% | 10,432,338,189 | 2,145,615,895 | |
| SLP-30 | | JPY | 2.60% | 19,962,268,331 | 5,747,909,062 | |
| JBIC SLP-33 | JAICA | JPY | 2.60% | 6,828,220,432 | 2,808,713,965 | |
| SLP-41 | | JPY | 2.60% | 4,878,185,478 | 2,407,897,002 | |
| SLP-46 | | JPY | 2.60% | 2,644,187,565 | 2,501,573,645 | |
| SLP-67 i | | JPY | 1.80% | 1,354,512,318 | 1,416,457,620 | |
| SLP-67 ii | | JPY | 0.75% | 217,445,997 | - | |
| SLP-85 | | JPY | 0.30% | 14,495,000,000 | 679,476,457 | |
| ஆசிய அபிவிருத்தி வங்கி - 2319 | ஆசிய அபிவிருத்தி வங்கி | US $ | Libor+0.6% | 300,000,000 | 47,366,459,644 | |
| சூரியவெவ விளையாட்டரங்கை நிர்மாணித்தல் | மக்கள் வங்கி | LKR | AWPLR+2.5% | 3,950,858,870 | 3,950,858,870 | |
| கிழக்கு கொள்கலன்கள் முனையம் | இலங்கை வங்கி | US $ | 6 Months Libor+4.25% | 80,000,000 | 8,933,941,975 | |
| | | | **மொத்தம்** | | **78,662,710,942** | |
| | | ஒன்று சேர்ந்த வட்டி | | | 557,567,967 | |
| | | | | | **79,220,278,909** | |
| | | குறிப்பு 24 | கடன் பெறுகைகள் - இலங்கை அரசு | | 66,335,478,064 | |
| | | குறிப்பு 25 | பெறுகைகள் - நிதி நிறுவனங்கள் | | 12,884,800,845 | |
| | | | | | **79,220,278,909** | |

டிசெமடபர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கானது







இயக்கம் மற்றும் ஏனைய செலவினம்
ரூபா. மில்லியன்
50,000
45,000
40,000
35,000
30,000
25,000
20,000
15,000
10,000
5,000
0
-5,000
2018 ஆம் ஆண்டின் செலவினம் ரூபா. மில்லியன்
2017ஆம் ஆண்டின் செலவினம் ரூபாய.மில்லியன்
அதிகரிப்பு / (குறைவடைதல்)
%
வேதனங்கள், சம்பளம் ,கொடுப்பனவுகள்
மேலதிக நேரம்
எரிபொருள், மின்சாரம் ,நீர்
சொத்துக்கள் பராமரித்தல்
ஏனையவை
வெளிநாட்டு கடன் மீதான வட்டி
அந்நிய செலாவணி மாற்றம்
தேய்மானம்
செலவினம்

பீஓஎஸ்/ஏ/எஸ்எல்பீஏ/1/2018/03 2019 மே 31

தலைவர்,
இலங்கை துறைமுக அதிகாரசபை

**இலங்கை துறைமுக அதிகாரசபையின் 2018 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடுகள் தொடர்பிலான 2018 இன் இல : 19 ஆம் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

.....................................................................................................................................

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம் தெரிவித்தல்

இலங்கை துறைமுக அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 வரை உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்களின் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், சாராம்சமான முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2018 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் இல : 19 ஆம் தேசிய கணக்காய்வு சட்டத்தினதும் 1971 இன் இல : 38 ஆம் நிதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரமும் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆம் பிரிவின் பிரகாரம் எனது அறிக்கை உரிய நேரத்தில் பாராளுமன்ற சபையில் முன்வைக்கப்படும். அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கமாட்டேன். அபிப்பிராயம் தெரிவிப்பது தொடர்பில் அடிப்படைப் பிரிவில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயத்தின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் பற்றியதில் கணக்காய்வு அபிப்பிராயமொன்றுக்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமானதும் உகந்ததுமான கணக்காய்வு சான்றுகள் என்னால் பெற முடியவில்லை.

### 1.2 அபிப்பிராயம் தெரிவிப்பதற்கான அடிப்படை

(அ) ஹம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணம் தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த வெளிநாட்டுக் கடன்களில் 2017 நவம்பர் 30 ஆம் திகதி வரை அதிகாரசபையின் கணக்குகளில் எஞ்சியிருந்த ரூபா.147,746 மில்லியன் கடன் நிலுவையை பொதுத் திறைசேரியின் உடன்பாட்டுடன் அல்லது அமைச்சரவையின் அங்கீகாரமின்றி அதிகாரசபை நிதிக்கூற்றுகளிலிருந்து நீக்கியிருந்ததோடு அதன் காரணமாக அரசாங்கத்தின் எந்தவொரு கணக்கினுள்ளும் குறித்த கடன் தொகை உள்ளடக்கப்படாதிருந்தது. பொதுத்திறைசேரியின் வெளிநாட்டு வள திணைக்களத்தின் ஆவணங்களின்படி 2018 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை குறித்த கடன்களின் நிலுவைத்தொகை ரூபா 179,546 மில்லியன் ஆகும். ஆயினும் மீளாய்வாண்டு முடியும் வரையிலும் கூட இக்கடன் கணக்கிடப்படுவது தொடர்பில் இரண்டு தரப்பினர்களுக்கிடையிலும் உடன்பாடு ஏற்படவில்லை.

குறித்த கடன் தொகை தொடர்பில் 2017 நவம்பர் 30 வரையிலான காலப்பகுதிக்கு கணக்கிடப்பட்டிருந்த வெளிநாட்டு செலாவணி பரிமாற்ற நட்டமான ரூபா 31,544 மில்லியன் தொகை அதிகாரசபையின் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருந்ததோடு 2017 நவம்பர் 30 இருந்து 2018 டிசெம்பர் 31 வரையில் வெளிநாட்டு செலாவணியின் ஒன்றுதிரண்ட நட்டமான ரூபா 28.396 மில்லியன் தொகையானது எந்தவித கணக்கொன்றிலும் உட்சேர்க்கப்படாமலிருந்தது. இதன்படி 2018 டிசெம்பர் 30 திகதி வரை குறித்த கடன் தொகையின் ஒன்றுதிரண்ட வெளிநாட்டு செலாவணி பரிமாற்ற நட்டம் ரூபா 59,940 மில்லியன் ஆகும்.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இல: 07 இன் 20 ஆம் பந்தியின் படி காசோட்டக் கூற்று தயாரிக்கப்படும் போது நிதி சாராத அனைத்து விடயப் பொருட்களும் வரிக்கு முன்னரான இலாபத்துடன் சீர் செய்யப்படுதல் வேண்டும். ஆனால் மீளாய்வாண்டில் அதிகாரசபையின் காசோட்டக் கூற்று தயாரிக்கப்படும் போது நிதிக்கூற்றுகளில் நிர்வாக செலவினத்தின் கீழ் காட்டப்பட்டிருந்த அறவிட முடியாத மற்றும் ஐயுறு கடன் தொடர்பில் ஒதுக்கீடு செய்யப்படடிருந்த ரூபா 113,638,189 சீர்செய்யப்பட்டிருக்க வில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 16 இன் 51 ஆம் பந்தியின் படி நிலையான சொத்துக்களின் பயனுறுதியான ஆயுட்காலம் மற்றும் சிதைவுப்பொருளின் பெறுமானம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு வித்தியாசம் ஏற்படுமாயின் குறித்த வித்தியாசத்தை இலங்கை கணக்கீட்டு நியம இல: 8 இன் பிரகாரம் கணக்குகளில் சீர் செய்யப்பட வேண்டியிருந்தும் அதிகார சபைக்கு சொந்தமான 2019 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 86,019 மில்லியன் கொண்ட தூய பெறுமதிச் சொத்துக்கள் 06 வகையின் கீழ் மீளாய்வுக்கு உட்படுத்தப்படவில்லை.

(ஈ) ஹம்பாந்தோட்டை துறைமுக நிர்மாண செய்திட்டத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொடர்பில் அதிகாரசபை 2017 ஆண்டில் செலுத்தியுள்ள ரூபா 5056 மில்லியன் தொகை அடங்கலாக 2018 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 5149.9 மில்லியன் தொகை பொதுத் திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற வேண்டியுள்ளதாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கண்காய்வுக்கு உட்படும் திகதி வரை குறித்த தொகை அதிகாரசபைக்கு கிடைக்கப்பெறவில்லை.

(உ) 2017 நவம்பர் மாதத்திலிருந்து இயக்க நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்த மாகம்புர முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பனியினால் தனியார் வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட அமெரிக்க டொலர் 24 மில்லியன் கடன் தொகையை குறித்த கம்பனி செலுத்தாதிருந்ததோடு இந்த அறிக்கையிடப்படும் திகதி வரை கடனை அடைப்பதற்கு கம்பனியிடம் போதுமானளவு பணம் இருக்கவில்லை. ஆயினும் கடன் தொகை தொடர்பில் பிணையாளரான இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராக அமெரிக்க டொலர் 22.3 மில்லியன் நிலுவைத் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு வழக்கு தொடருவதாகத் தெரிவித்து குறித்த வங்கியினால் அதிகார சபைக்கு 2019 ஏப்ரல் 02 ஆம் திகதி கோரிக்கைப்பத்திரமொன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. மேலும் இது தொடர்பில் நிகழாவற்றுக்கான வைப்புக்கள் அதிகாரசபையினால் ஒதுக்கப்படவும் இல்லை.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான முகாமைத்துவத்தினதும் துணைத் தரப்பினர்களினதும் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப தயாரிப்பதும் நியாயமான முறையில் முன்வைப்பதும் மற்றும் மோசடிகள் அல்லது பிழைகள் காரணமாக ஏற்படக்கூடிய போதுமான பிழையான கூற்றுக்களிலிருந்து தவிர்ந்து நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படக் கூடிய வகையில் தேவையான உள்ளக நிர்வாகங்களைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது அதிகாரசபையினை தொடர்ச்சியாக பேணிச் செல்லக் கூடிய ஆற்றலைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருப்பதோடு முகாமைத்துவம் அதிகாரசபையினை முடிவுறுத்துவதற்கு எதிர்பார்ப்பின் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதிருக்கும் போது இயக்கங்களை நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுப்பதை தவிர்ந்த தொடர்ச்சியான நிலைநிற்றலின் அடிப்படை மீது கணக்கு வைத்தல் மற்றும் அதிகாரசபையின் தொடர்ச்சியான நிலைநிற்றலுக்குரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடு தொடர்பான பொறுப்பானது நிர்வகிக்கும் தரப்பினர்களினால் வகிக்கப்படுகின்றன.

2018 இன் இல: 19 ஆம் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) உப பிரிவின் படி அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலத்துக்குரிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் முறையாக புத்தகங்களையும் அறிக்கைகளையும் பேணிச் செல்லல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பிலான கணக்காய்வாளரின் பொறுப்பு**

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப நடாத்தப்படும் கணக்காய்வின் அடிப்படையில் அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவது எனது பொறுப்பாகும். எனினும் அபிப்பிராயம் தெரிவிப்பதற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்டிருக்கும் விடயங்கள் காரணமாக இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராமொன்றிற்கான அடிப்படையினை வழங்குவதற்குரிய போதுமான மற்றும் தகுந்த கணக்காய்வு சான்றுகள் என்னால் பெற முடியவில்லை.

**2. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடுகள் பற்றியதான அறிக்கை**

2018 இன் இல: 19 ஆம் கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் கணக்காய்வுத் தேவைப்பாடுகள் தொடர்பிலான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

2018 இன் இல : 19 ஆம் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் படி கணக்காய்வுக்கு தேவைப்படும் அனைத்து தகவல்களையும் தெளிவுபடுத்தல்களையும் என்னால் பெற முடியாதிருந்ததோடு எனது விசாரணையில் தோன்றுகின்றவாறு அதிகார சபையினால் சரியான நிதி அறிக்கைகள் பேணிச் செல்லப்பட்டுள்ளதனை என்னால் நிச்சயிக்க முடியவில்லை.

2018 இன் இல: 19 ஆம் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (111) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் படி அதிகாரசபையினால் முன்வைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் சென்ற வருடத்துடன் நேரொத்ததாக இருக்கின்றன.

2018 இன் இல: 19 ஆம் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் படி என்னால் கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ள இந்த நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை.

பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் மீதும் வரையறுக்கப்பட்ட போதுமான விடயங்களினுள்ளும் பின்வரும் கூற்றுக்களை வெளியிடக் கூடியதான எதுவும் எனது அவதானிப்புக்கு உட்படவில்லை.

- 2018 இன் இல: 19 ஆம் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் படி அதிகாரசபையின் நிர்வாக சபையின் உறுப்பினரொருவருக்கு அதிகாரசபையுடன் தொடர்புபடும் ஏதாவது உடன்படிக்கையொன்று தொடர்பில் நேரடியாகவோ அல்லது வேறு முறையிலோ பொதுவான வர்த்தக நிலைக்கு அப்பாற்பட்ட தொடர்புள்ளமை.

- 2018 இன் இல : 19 ஆம் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் படி பின்வரும் அவதானிப்புகள் தவிர்ந்த சம்பந்தப்பட்ட ஏதாவது எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட வேறு ஏதாவது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு மாறாக செயற்பட்டுள்ளமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் அல்லது நிர்வாக சபையினால் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் தொடர்பானது | விபரம் |
|---|---|
| (அ) 1971 இன் இல : 31 ஆம் நிதிச்சட்டம் II ஆவது பந்தி மற்றும் 2003 யூன் 02 ஆம் திகதிய இல : பீஈடி/ 12 ஆம் அரச வர்த்தக முயற்சி சுற்றுநிருபத்தின் 8.2.2 பிரிவு | 2018 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை அதிகாரசபையினால் நிலையான மற்றும் குறுகியகால வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 35,935 மில்லியன் தொகை தொடர்பில் நிதி அமைச்சரின் உடன்பாடு கிடைக்கப் பெற்றிருக்க வில்லை. |
| (ஆ) 1971 இன் இல : 38 ஆம் நிதிச்சட்டம் 10 (5) பிரிவு | அரச கூட்டுத்தாபனமொன்றில் ஏதாவது ஆண்டில் மிகுதியாக ஏதும் இருப்பின் சட்டத்திலுள்ள கழித்தல்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் எஞ்சியவை ஒன்றிணைந்த நிதியத்தில் வைப்பிலிடப்படுதல் வேண்டும். ஆயினும் 2016 இருந்து 2018 வரையிலான ஆண்டுகளில் அதிகாரசபை பெற்றிருந்த கூட்டுமொத்த தூய இலாபமான ரூபா. 18,607.12 மில்லியன் தொகை ஒன்றிணைந்த நிதியத்தில் வைப்புச் செய்யப்படாமலிருந்தது. மேலும் நீண்டகால வாடகை அடிப்படை மீது தனியார் பிரிவிடம் வழங்கப்பட்டிருக்கும் தெற்காசிய நுழைவாயில் முனையம் (SAGT) மற்றும் கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையம் (CICT) போன்றவற்றில் இயக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் இரண்டு கம்பனிகளிடமிருந்து 2016 இருந்து 2018 வரை அதிகாரசபை அறவிட்டிருந்த ஒட்டுமொத்த ரூபா 5,989 மில்லியன் தொகை வாடகைக்கட்டணம் மற்றும் குறித்த காலப்பகுதிக்கு இறைமைக்கட்டணமாக அறவிடப்பட்டிருந்த ஒட்டுமொத்த ரூபா 7,617 மில்லியன் தொகையும் மேற்குறித்த இலாபத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த வருமானங்கள் துறைமுகத்தின் நேரடியான இயக்க வருமானங்கள் அல்லவென அவதானிக்கப்பட்டுள்ளது. |
| (இ) 2015 மே 25 ஆம் திகதிய மற்றும் இல : பீஈடி / 2015 ஆம் அரச வர்த்தக தொழில்முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 2.3 மற்றும் 3.1 பிரிவுகள் | மாதிரிப்பரிசோதனையில் வெளிப்படுத்தப் பட்டுள்ளவாறு சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு மாறாக 135 உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த எரிபொருள் கொடுப்பனவாக மீளாய்வாண்டின் டிசெம்பர் மாதத்தில் மாத்திரம் 10,764 லீட்டர் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. |
| (ஈ)2016 ஏப்ரல் 29 ஆம் திகதி கொண்ட இல் : பீஈடீ /03/2016 அரச வர்த்தக தொழில்முயற்சிகள் சுற்றுநிருபம் | உழைக்கும் போது செலுத்தும் வரி தனிப்பட்ட சம்பளத்திலிருந்து கழித்து வழங்கப்பட வேண்டியிருந்தும் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு குறித்த பணம் அதிகாரசபையின் |

| | |
|---|---|
| | நிதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. 2018 ஆண்டில் அவ்வாறு செலுத்தப்பட்டுள்ள ரூபா 479 மில்லியன் தொகையும் அடங்கலாக 2011/2012 மதிப்பீட்டாண்டில் இருந்து 2018 டிசெம்பர் மாதம் வரையில் ஒட்டுமொத்தமான ரூபா. 2,841 மில்லியன் தொகை உழைக்கும் போது செலுத்தும் வரி அதிகார சபையின் நிதியில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) 2011 மார்ச் 07 ஆம் திகதி உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள 2015 இன் யூலை 06 ஆம் திகதி கொண்ட இல : எஸ்ஈசீ / 2015 /05 ஆம் சுற்றுநிருபம். | அரச நிறுவனங்களில் சேவையிலுள்ளோருக்கு போனஸ் பணம் கொடுக்கப்படும் போது அதன் மீது உழைக்கும் போது செலுத்தும் வரி கழிக்க வேண்டியிருந்தும் குறித்த வரி உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாது அதிகாரசபையின் நிதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) 2002 இன் நவம்பர் 28 ஆம் திகதி கொண்ட இல : ஐஏஜ / 2002 / 2 ஆம் திறைசேரி சுற்றுநிருபம் | அதிகாரசபைக்கு சொந்தமான ஆகு செலவு ரூபா 452 மில்லியன் தொகை கொண்ட கணனிப் பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பில் புறம்பான நிலையான சொத்து ஆவணம் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (எ) 2018 இன் இல : 19 ஆம் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின 40 (1) மற்றும் (3) ஆம் பந்தி, 2009 அக்டோபர் 01 ஆம் திகதி கொண்ட இல : டீஎம்ஏ / 2009 இன் (3) ஆம் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்கள சுற்றுநிருபம் மற்றும் இலங்கை அரசாங்கத் துறையின் நிறுவனங்களுக்கான உள்ளக கணக்காய்வு நியமங்கள் இல: 1110.A1 | உள்ளக கணக்காய்வின் சுயாதீனத்தன்மை பாதுகாக்கப்படும் பொருட்டு உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் நிர்வாக சபையில் முன்வைக்கப்பட வேண்டியிருந்தும் அதிகாரசபையின் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் ஒவ்வொரு பிரிவுத் தலைவருக்கும் வழங்கப்பட்டிருந்தன. |
| (ஏ) 2003 இன் யூன் 02 ஆம் திகதிய பீஈடி / 12 ஆம் அரச வர்த்தக முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.3.1 ஆம் பிரிவு.<br><br>(ஐ) 2018 இன் யூலை 18 ஆம் திகதி கொண்ட நிதி மற்றும் ஊடக அமைச்சின் இல: 03 /2018 ஆம் சுற்றுநிருபம். | அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறை 2019 ஏப்ரல் 30 வரையிலும் அங்கீகரித்து கொள்ளப்பட்டிருக்க வில்லை.<br><br>சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு மாறாக 2018 ஆண்டில் அதிகாரசபையின் 560 உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் தலா ரூபா 17,700 இருந்து ரூபா 31,150 வீதம் சம்பளம் அதிகரிக்கப்பட்டிருந்தது. |

- 2018 இன் இல: 19 ஆம் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகளுக்கேற்ப அதிகாரசபையின் அதிகாரங்கள், பணிப்பொறுப்புக்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு ஏற்றவாறு செயற்படாமை.

- 2018 இன் இல: 19 ஆம் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகளுக்கேற்ப பின்வரும் அவதானிப்புகள் தவிர்ந்த அதிகாரசபையின் சொத்துக்களை சிக்கனமாகவும், செயற்திறனான முறையிலும்,

பயனுறுதியான வகையிலும் காலப்பகுதியினுள் சம்பந்தப்பட்ட சட்டதிட்டங்களுக்கேற்ப கொள்வனவு செய்து பயன்படுத்தப்படாமை.

உயர் பாதுகாப்பு வலயமாக பெயரிடப்பட்டிருக்கும் துறைமுக வளவினுள் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு அனைத்து வாயில்கள் மற்றும் பிணையிடப்படும் களஞ்சியங்களுக்கு 2017 ஆண்டில் மூலதன வரவு செலவு திட்டத்தில் ரூபா 60 மில்லியன் செலவில் அவதானிப்பு கமெரா தொகுதி (CCTV) பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2018 ஆண்டில் இதற்கு ரூபா 150 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் எதிர்பார்க்கப்பட்டவாறு குறித்த பணியானது மீளாய்வாண்டு முடிவடையும் வரையிலும் கூட நிறைவு செய்யப்பட வில்லை. இதனால் பாதுகாப்பு தொடர்பிலான பிரச்சினையொன்றின் போது தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாமல் போகும் இடரை புறக்கணிக்கவும் முடியாது.

**3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்**

(அ) சேவைகள் வழங்கப்பட்டதன் பின்னர் கடன் காலப்பகுதி (Credit period )முடிவடைய முன்னர் செலுத்தி முடிக்கப்பட வேண்டியிருந்தும் 2018 டிசெம்பர் 31 திகதி வரையில் இருந்த கப்பல் முகவர் கடனாளிகளின் நிலுவையில் கடன் காலப்பகுதி 30 நாட்கள் தாண்டிய மொத்த கப்பல் முகவர் கடனாளிகளின் நிலுவையாக ரூபா 793,273, 839/- இருந்தது. இது கப்பல் முகவர் கடனாளியின் மொத்த நிலுவையில் 28% ஆகும்.

(ஆ) அதிகாரசபைக்கு சொந்தமான கொழும்பு துறைமுகத்தில் அமைந்துள்ள 6,400 மெற்றிக் தொன் கொள்ளளவு கொண்ட பழைய 10 எண்ணெய்த்தாங்கிகள் 2015 ஆண்டிலிருந்து குறை பயன்பாட்டு நிலையில் இருந்துள்ளன.

(இ) 2018 டிசெம்பர் 31 திகதி வரை அதிகாரசபையின் அங்கீகார ஆளணித் தொகைக்கு மேலதிகமாக 1782 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மேலும் அதிகாரசபையின் இயக்க நடவடிக்கைகளுக்கு ( Operations) நேரடியாக தொடர்புபடும் பிரிவுகளில் 384 ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் இருந்தன. இதேபோன்று அதிகாரசபையின் இயக்க நடவடிக்கைகளில் நேரடியாக தொடர்புபடாத 15 பிரிவுகளில் 574 ஊழியர்கள் மிகையாக இருந்தனர். ஆயினும் 2018 ஆண்டில் ஊழியர்கள் மிகையாக இருந்த பிரிவுகளின் ஊழியர்களுக்கு ஒட்டுமொத்தமாக ரூபா 971 மில்லியன் தொகையின் மேலதிக நேர கொடுப்பனவு அடங்கலாக ரூபா 4,688 மில்லியன் தொகை ஊழியர்களின் மேலதிக நேர கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) ஹம்பாந்தோட்டை துறைமுக வளவினுள் குவித்து வைக்கப்படடிருக்கும் அதிகாரசபைக்குரிய 100,000 கன மீட்டர் அளவான உடைக்கப்பட்ட சிறு கற்களும், (Crusted Aggregate) 11,250 கன மீட்டர் அளவான கருங்கல் தூள் Quarry Dust) மற்றும் 90,000 கன மீட்டர் அளவான பாறாங்கற்களும் (Rock Boulders) ஹம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்துடன் தொடர்புடைய சீன ஒப்பந்தக்காரரின் உள்நாட்டு முகவருக்கு இலவசமாக கொடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்டுள்ள பொருட்களின் ஆரம்ப விற்பனை விலையை அடிப்படையாக வைத்து பெறுமதி கணக்கிடப்படும் போது அதிகாரசபைக்கு சுமார் ரூபா 26,479,581 நட்டம் ஏற்படுமென அவதானிக்கப்பட்டுள்ளது. மேற்படி இலவசமாக கருங்கற்கள் வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட பணிப்பாளர் சபையின் தீர்மானம் கணக்காய்வில் முன்வைக்கப்படவில்லை.

(உ) கொழும்பு துறைமுகத்தில் தற்போது கொள்கலன்களை கையாளும் முனையங்களில் ஆழம் (Draft) 14.25 மீட்டருக்கு மேற்பட்ட கப்பல்கள் வரக்கூடிய ஒரேயொரு முனையமாக கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையம் மாத்திரம் இருப்பதோடு அதன் வருடாந்த பரிமாணம் 2.4 மில்லியன் இருபது சம அலகுகளாகும். 2018 ஆண்டில் குறித்த முனையத்துக்கு ஆழம் 14.25 மீட்டருக்கு மேற்பட்ட 308 கப்பல்கள் வந்துள்ளதோடு மொத்தமாக 2.6 மில்லியனுக்கு

மேற்பட்ட இருபது சம அலகுகள் கையாளப்பட்டுள்ளன. இதுவானது ஆகக் கூடிய பரிமாணத்தையும் தாண்டிய நிலையென அவதானிக்கப்பட்டுள்ளது. அதன்படி குறித்த முனையத்தில் கொள்கலன் கையாளல் 2017 ஆண்டை விட 12% அதிகரித்திருந்ததோடு எதிர்காலத்திலும் முனைய சேவைகளுக்கான கிராக்கிகள் அதிகரிக்குமானால் முனைய சேவைகள் வழங்குவதிலான சிக்கல்களுக்கு கொழும்பு துறைமுகம் முகம் கொடுக்குமெனவும் அவதானிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் கொழும்பு துறைமுகம் விரிவாக்கும் செய்திட்டம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கிடையில் ஏற்படுத்தப்பட்ட கடன் உடன்படிக்கையின் மூலம் நிதியை ஏற்படுத்தி வருடாந்தம் 800,000 கொள்கலன் அளவுகளின் பரிமாணம் கொண்டதும் நிர்மாண ஆகுசெலவு ரூபா 11,168 மில்லியன் தொகை கொண்டதும் 18 மீட்டர் ஆழம் மற்றும் 440 மீட்டர் நீளமானதுமான கிழக்கு கொள்கலன் முனையத்தின் நிர்மாணப் பணிகள் 2016 ஏப்ரல் மாதம் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும் கப்பற்சரக்குகளை கையாள்வதற்குத் தேவையான கென்ட்ரி பாரம்தூக்கிகள் உள்ளடங்கலான உபகரணங்களைக் கொள்வனவு செய்து இந்த முனையத்தின் கையாளல் பணிகளை ஆரம்பிப்பதற்கு 2019 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் அதிகாரசபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் இருந்தது.

(ஊ) 2011 ஆண்டில் இலங்கை சுங்கத்துக்கு தெரியப்படுத்தாது இறக்குமதி செய்யப்பட்ட 27 பாரம்தூக்கிகள் தொடர்பில் ரூபா 1,580 மில்லியன் தொகை சுங்கத்தண்டப் பணமாக சுங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்தது. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 165 ஆம் பிரிவின் பிரகாரம் கட்டண குறைப்பு தொடர்பில் சுங்க புலனாய்வுத் தீர்ப்பு மீது நிதியமைச்சரிடம் மேன்முறையீடொன்றை மேற்கொள்ளக் கூடியதாக இருந்ததும் அதிகாரசபையினால் அவ்வாறானதொரு மேன்முறையீடு முன்வைக்கப்படவில்லை. இது தொடர்பில் கணக்குகளில் ரூபா 1,577.7 மில்லியன் தொகை நிகழாவற்றிற்கான வைப்பாக ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த விடயம் தொடர்பில் அதிகார சபை மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கு நிராகரிக்கப்பட்டு அதன் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றின் கட்டளைக்கு எதிராக உயர் நீதிமன்றில் மேன்முறையீடு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(எ) 2018 ஏப்ரல் 24 ஆம் திகதி கொண்ட இல : PE/PS/ JCTL / GEN /2018 அதிகாரசபையின் தலைவருக்கு பிரதியொன்று சகிதம் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சுக்கு அனுப்பப்பட்ட அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் கடிதத்திற்கமைய அதிகாரசபையின் பூரண உரித்துக்கள் கொண்ட ஜய டேர்மினல்ஸ் கம்பனியிலிருந்து 2017 ஆண்டு வரையில் பங்கிலாபமாக ரூபா 56,299,347 பெற்று அதிகாரசபை ஊடாக பொதுத் திறைசேரிக்கு அனுப்புமாறு வேண்டப்பட்ட போதிலும் இதுவரை சம்பந்தப்பட்ட அனுப்புதல்கள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஏ) 2018 செப்டெம்பர் 04 ஆம் திகதி கொண்ட இல : PE/EN/ PEV/REQ /2018 கடிதம் மூலம் அரச வர்த்தக திணைக்களம் அரச தொழில்முயற்சிகளினது பங்கிலாப பங்களிப்பாக ரூபா 350 மில்லியன் தொகையை ஒன்றிணைந்த நிதியத்திற்கு பெற்றுத்தருமாறு அதிகாரசபைக்கு அறிவித்திருந்தும் குறித்த தொகையை அனுப்பி வைப்பதற்கு அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்தது.

**டப்லியு பீ. சீ. விக்ரமரத்தின**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

# அமைப்பு விதி தொடர்பான தகவல்கள்

**பெயர்**

இலங்கை துறைமுக அதிகாரசபை

**நிறுவனத்தின் நிலைமை**

1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டவிதிகளின் பிரகாரம் கொழும்பு துறைமுக ஆணைக்குழு துறைமுக கப்பல் சரக்கு கூட்டுச்சபை துறைமுக ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவைகள் கூட்டுத்தாபனம் என்பவற்றினை ஒன்றிணைத்து 1079 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி துறைமுக அதிகாரசபை நிறுவப்பட்டது.

**அமைப்பு விதியிலுள்ள அம்சங்கள்**

தேசிய பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பினை வழங்கும் நிறுவனமாக இலங்கை துறைமுக அதிகாரசபை விளங்குகின்றது. வருமானத்தினை ஈட்டிக்கொள்ளல் மற்றும் சேவைகளை வழங்குதல் போன்ற செயல்பாடுகளில் முதன்மை நிலையிலுள்ள நிறுவனம் என்ற வகையில் அதிகாரசபை ஆற்றும் பணியின் மூலமாக உயர்நிலை சேவையில் பூரணமாக தனது பங்களிப்பினை அது செலுத்துகின்றது. பல்வேறு வகைகளில் அதனுடன் பங்களிப்புச் செய்யும் நிறுவனங்கள் மற்றும் துறைமுக பாவனையாளர்களுடன் காணப்படுகின்ற முனைப்பான தொடர்பு அதன் இயக்க வளர்ச்சிக்கு முக்கிய காரணியாக அமைகின்றது. இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய தொழிற்பாட்டு அம்சங்கள் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- நிலைத்திருக்கும் தன்மை
- காலத்திற்கேற்றதும் பிழைகளற்றதும்
- சாதனைக்குரிய உத்தரவாதம்
- குழு உணர்வு
- அர்ப்பணிப்பு
- உற்பத்தித்திறனை அடையாளங் காணுதல்
- பூரணமான செயலாற்றுகை

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள் அதிகாரசபையின் அனைத்து ஊழியர்கள் தொடர்பிலும் பராமரித்துச் செல்லல் பிரதான நிறைவேற்றுநராக முகாமைத்துவப் பணிப்பாளரினதும் சிரேட்ட முகாமைத்துவ ஆளணியினரினதும் பொறுப்பாகும்.

**தலைமை அலுவலகம்**

**கொழும்பு துறைமுகம்**

இல : 19, சைத்திய வீதி
கொழும்பு - 01
தொ.பே.இல : (+94 11) 2421201, 2421231
தொ . நகல் : (+94 11) 2440651

**காலி துறைமுகம்**

கிலொசன்பார்க் இறங்குதுறை
மாகாலி
காலி
தொ.பே.இல (+94 91) 2232213, 2234936

**திருகோணமலை துறைமுகம்**

புதிய நிர்வாக கட்டடம்
சீனக் குடா
திருகோணமலை
தொ.பே.இல : (+94 26) 2222460

**வங்கியாளர்கள்**

இலங்கை வங்கி (பிரதான வங்கி)
மக்கள் வங்கி
ஹற்றன் நஷனல் வங்கி

**கணக்காய்வாளர்**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
இல:306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்லை.

**இணையத்தளம்**

**www.slpa.lk**